783
3-04



ஹஜ்ரத்

கௌதுல் அஃலம்

6 - FEB 1958
MADRAS

இரண்டாம் பாகம்

அறிஞர் மு. கரீம் கனி,
ஆர். பி. எம். கனி,
எழுதியது.

ஹஜ்ரத்
கௌதுல் அஃலம்

இரண்டாம் பாகம்

அறிஞர் மு. கரீம் கனி,
ஆர். பி. எம். கனி,
எழுதியது.

முதல் பதிப்பு: ஆகஸ்டு, 1954.
உரிமைப் பதிவு.

விலை மூன்று ரூபாய்

கிடைக்குமிடம்:
ஆர். பி. எம். கனி பி. ஏ., பி. எல்.,
128, மூர் தெரு, சென்னை - 1.

ராஜன் எலக்டிரிக் பிரஸ், சென்னை—1.

முன்னுரை

கருணையுள்ள ரஹ்மானின் கிருபையாலும், ஹஜ்ரத் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்களின் துஆ பரக்கத்தாலும், "ஹஜ்ரத் கௌதுல் அஃலம்" இரண்டாம் பாகம் வெளிவந்துள்ளது.

இதில் ஆண்டகை அவர்களின் அரிய ஆத்மஞான உபதேசங்களைத் தரும் "புதூஹுல் கைப்" முடிவடைந்துவிட்டது. முதல் பாகத்தின் கடைசியில் முப்பது மகாலாக்களும், அதிலுள்ள ஹஜ்ரத் அவர்களின் ஜீவிய சரிதையில் முப்பதாம் பக்கத்தில் இருபத்தோராம் மகாலாவும், அறுபத்து ஏழு, அறுபத்து எட்டாம் பக்கங்களில் எழுபத்தொன்பதாம், எண்பதாம் மகாலாக்களும் வந்துள்ளன. "புதூஹுல் கைப்" உபதேசங்களை மேலாழ்ந்தவாரியாக நோக்கினல் அவற்றில் ஒன்றில் வருவதுதான் மற்றவற்றில் திருப்பித் திருப்பிக் கூறப்படுகிறதோ என்பதுபோல் தோன்றலாம். ஆனல், அவற்றைக் கவனமாகப் படித்தால் ஒரே நோக்கை அடிப்படையாகக்கொண்ட பல்வேறு அரிய விஷயங்கள் ஒவ்வொரு மகாலாவிலும் பேசப்படுவதைக் காணலாம். அவற்றைப் பன்முறை கவனமாகப் படித்து உண்மையுணர முயல வேண்டும். ஸுபுஹுத் தொழுகைக்குப் பின் படித்து வருவது நலம்.

"பத்ஹுர் ரப்பானி"யில் முதல் பாகத்தில் இடமின்மையால் நிறுத்தப்பட்ட 5, 10, 12, 17, 18 ஆகிய பிரசங்கங்களுடன் 19 முதல் 28 வரையுள்ள பிரசங்கங்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் 23, 25, 26, 27, 28 ஆகிய ஐந்து தவிர மற்றவை அறிஞர் மு. கரீம் கனி

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டவை. பிரஸ்தாப ஐந்தும் காயல்பட்டினம் மௌலவி எம். முஹம்மது ஹஸன் ஆலிம் காதிரி அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டவை. இந்த அறிஞருடைய மொழிபெயர்ப்பும் ஜீவன் ததும்பியதாகவும், நடையோட்டமுள்ளதாகவும் இருப்பதை அன்பர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். இவ்விருவர்களுடைய மொழிபெயர்ப்பு நடையிலும், போக்கிலும் சில்லறை மாறுதல்களையும் திருத்தங்களையும் செய்துள்ளேன். அறிஞர் மு. கரீம் கனி அவர்களுக்காகவும் கனம் ஆலிம் சாஹிப் அவர்களுக்காகவும் அன்பர்கள் துஆ இறைஞ்சும்படி வேண்டிக்கொள்கிறேன்.

இந்நூலில் ஆங்காங்கே திரு குர்ஆன், ஹதீஸ் வசனங்கள் வரும் இடங்களில் அவற்றின் கருத்தைத் தரவே முயலப்பட்டுள்ளது. 'புதூஹுல் கை'பில் திரு குர்ஆன் வசனங்கள் வருமிடங்களில் பிறைக் கோடுகளுக்குள் முறையே அத்தியாய, ஆயத்து எண்கள் தரப்பட்டுள்ளன.

இதை அச்சிட்டதிலும், மொழிபெயர்த்ததிலும் காணக்கூடிய சிறு பிழைகளை அன்பர்கள் மன்னிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாம் வல்ல எங்கள் ரப்பே, மனிதன் குறைகளுள்ளவன்தான். அதிலும் நானோ எதற்கும் பயனற்ற ஒரு பதர். எனினும், என் மூலம் நீ வெளியிட நாடிய இந்த அரிய தமிழ் நூலில் நான் அறியாமல் செய்துள்ள பிழைகளை, இந்நூலின் நன்னோக்கம் கருதி நீ பொறுத்தருள்! இதைப் படிக்கும் அன்பர்களின் இதயங்களில் உன்னைப் பற்றிய ஞான ஒளியைப் பிரகாசிக்கச் செய்தருள்! இது போல ஆண்டகை அவர்களின் மற்ற உபதேசங்களையும் தமிழில் வெளியாக்க உதவி புரிந்தருள்! ஆமீன்.

ஆர். பி. எம். கனி.

புதூஹுல் கைப்

ஹஜ்ரத் அவர்களின் முன்னுரை

ஹஜ்ரத் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களின் புத்திரர் ஷைகு ஈஸா அபூ அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள், 'புதூஹுல் கைப்' என்ற இந்நூலுக்குத் தமது மாண்புமிக்க தந்தையார் அவர்கள் கூறியதாக ஒரு முன்னுரையை உதவியுள்ளார்கள். ஹஜ்ரத் கௌதுல் அஃலம் அவர்கள் சொன்ன அந்த முன்னுரையாவது :

முதலாவதாகவும் முடிவானதாகவும், புறமானதாகவும், அகமானதாகவும் உள்ள சகல புகழும் ரப்புல் ஆலமீனான அல்லாஹ்வுக்கே உரியனவாகும். அவன் சிருஷ்டிகளின் எண்ணிக்கையளவும், அவன் வார்த்தைகளின் வரம்பளவும், அவன் ஸ்தானத்தின் கனமளவும், அவன் இஷ்டத்தின் எல்லையளவும், ஜோடியாகவும், தனியாகவும் உள்ள சகலவற்றின் எண்ணிக்கையளவும், உலர்ந்த, காய்ந்த வஸ்துக்களினளவும், நம் ரப்பு படைத்துப் பரப்பியுள்ள சகலவற்றினளவும் சகல புகழும் அவனுக்கே உரியனவாகும். படைத்துப் பின்னர் சம்பூர்ணமாக்கிய, வஸ்துக்களை அவற்றின் அளவுக்கேற்பப் படைத்துப் பின் அவற்றுக்கு வழிகாட்டிய, கருணையும் பரிவும் காட்டுகின்ற, உண்பதும் குடிப்பதும் தருகின்ற, நல்ல கெட்ட அதிர்ஷ்டத்தை உண்டாக்குகின்ற, நன்கொடைகளை நிறுத்தி வைக்கின்ற பின்னர் கொடுக்கின்ற அந்த ரப்புக்கே சகல புகழும். யாருடைய கட்டளையால் ஏழு பலமான வானங்களும் நிற்கின்றனவோ, மலைகள் தமது இடத்தோடு பிணையப்பட்டனவாயும், பூமி தன் யதாஸ்தானத்தினதாயும் உள்ளனவோ, யாருடைய கருணையால் ஒருவரும்

ஏமாற்றமடைய நேராதோ, யாருடைய திட்டத்திலும், அமைதியை நிலைநாட்டலிலும், கண்ணியத்திலும் கட்டளையிலும் இருந்து ஒருவரும் தப்ப முடியாதோ, யாருடைய சேவையில் எவரும் வெறுப்படைய நேராதோ, யாருடைய பாக்கிய அனுக்கிரஹத்தை எவரும் அடைவதற்கில்லை என்ற நிலைமையில்லையோ அந்த ரப்புக்கே சகல புகழும்! அவன் பரிவு காரணமாக அவனைப் புகழ்கிறோம்; அவன் தரும் பாதுகாவல் காரணமாக அவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

அடுத்து அவனது காத்தமுன் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் மீது, அவர்கள் கொண்டு வந்ததைப் பின்பற்றுவோர் வழிகாட்டப்படவும், அதைப் புறக்கணிப்போர் வழிதவறிக் கெட்டழியவுமாக உள்ள சத்தியத்தின் சத்திய நபியின் மீது, உலகை விலக்கி, உன்னதமான அவன் நேசத்தை நாடிய அவர்கள் மீது, அவனுடைய சகல ஜீவராசிகளிலுமிருந்து, அவன் சிருஷ்டி முழுமையிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, தாம் தோன்றியதுடன் சத்தியம் வரவும் அசத்தியம் மறையவும், தம் ஒளியால் உலகமே பிரகாசமடையவும் செய்த அந்த நபி பெருமான் (ஸல்) அவர்கள் மீது ஸலாமத்துண்டாவதாக!

அவர்கள் மீது மீண்டும் நாம் ஸலவாத்துக் கூறுவோமாக! அவர்கள் வமிசத்தினரிலும் சஹாபாக்களிலும், உம்மத்துக்களிலும் உள்ள பரிசுத்தவான்கள்மீது, தம் செயலின் மூலம் தம் ரப்புக்கு மிகச் சிறந்தவர்களாக உள்ள, தம் சொல்லில் மிகவும் நேர்மையான, அவன் பாதையைப் பின்பற்றுவதில் மிகமிகச் சரியான அவர்கள் மீது அல்லாஹ்வின் அனுக்கிரஹங்களும், பாக்யமும் இறங்குவதாக! அடுத்து, நமக்கு உணவும் குடிப்பும் தந்துதவி, நன்மைகளை அருளி, பாதுகாத்துக் காப்பாற்றி, ஜீவன் தந்து, நமக்குத் தொல்லை தருவனவற்றை நம்மை

விட்டகற்றி—இவை யாவையும் நம்மீது கொண்ட கருணையாலும் அளவற்ற பரிவாலும், அருளனுக்கிரஹத் தாலும் மட்டுமே செய்யும்—சிருஷ்டித்துப் பரிபக்குவப் படுத்துபவனுக்கு நம் வேண்டுதல்களும் துஆக்களும் உரியனவாகட்டும்! நமக்கு நம் சொல்லி லும், பகிரங்க, அந்தரங்கச் செயல்களிலும் நம் அடக்கத் திலும், கஷ்ட நிலையிலும், சுகமான, வசதியான சந்தர்ப் பத்திலும் அவன் நிரந்தரமான பாதுகாவல் அளிப்பது அவன் திருச்சித்தப்படியேயாம். தான் விரும்பிய எதையும் முற்றும் செய்பவன் நிச்சயமாக அவனே; தான் எண்ணிய எதையும் நடக்கும்படி அவன் உத்தர விடுகிறான்; மறைவானவை யாவையும் அவன் அறிவான்; பாவங்கள் பிழைகள் யாவையும், பணிவான செயல் கள், தன் அருகிலாகும் நிலைகள் சகலவற்றையும் அவன் அறிவான்; சகல கூச்சல்களையும் அவன் கேட் கிறான்; தான் விரும்பியவர்களின் துஆக்களைத் தயக்கமோ தகராறோ இன்றி அவன் ஏற்கிறான்.

"அல்லாஹ்வின் அருட்கொடைகளை எண்ணிப் பார்க்கத் துணிந்தால், உங்களால் அவற்றை எண்ணி முடிக்க இயலாது" என்று அல்லாஹு ஸுப்ஹானஹு கூறியுள்ளதுபோல, இப்போது அல்லும், பகலும் சகல நேரத்திலும், ஓய்வின்றி அல்லாஹ்வின் அனுக் கிரஹங்கள் அவன் அடியார்கள்மீது இறங்கிக் கொண்டே இருக்கின்றன. "பாக்கியங்களில் நின்றும் உங்களிடமுள்ள அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து வந்தவையே" என்று அவன் வேறோர் இடத்தில் கூறி யுள்ளானன்றோ! எனவே, இப்பாக்கியங்களை எண்ணி விவரிக்க எனக்குச் சக்தியோ, நாவோ, இதயமோ போதாது. எண்ணிக்கைகள் அவற்றை எட்டிப்பிடிக்க முடியாது. மானிட சிந்தனைகளாலோ உள்ளங்களாலோ அவற்றைப் பற்றிப்பிடிக்க இயலாது; இதயங்களோ,

நாவோ அவற்றை வருணிக்க முடியாது. ஆகவே அவன் பாக்கியத்தால் நாவு வருணிக்க இயன்ற, பேச்சு வன்மை வெளியிட அனுமதித்த, விரல்கள் எழுத முடிந்த, வருணனு சக்தி வருணிக்க இடம் தந்த சில வார்த்தைகளே இந்நூலில் உள்ளன. மறைவான உலகத்தின் உணர்ச்சி யூட்டலால் எனக்கு வெளியிடப்பட்ட வார்த்தைகள் என் இதயத்துள் இறங்கி அதை நிறைத்தன. சகஜமான நிலைமை மீண்டதும் அவை இதயத்தின் மேல்பரப்புக்கு வந்தன. சத்தியத்தைத் தேடுவோர்க்கு இவ்வார்த்தைகள் வழிகாட்டியாக உதவுமாறு, இவற்றைச் சரியான வடிவில் வெளியிட ஜனங்களின் ரப்பான அல்லாஹ்வின் அருளனுக்கிரஹமும் கருணையும் உதவியுள்ளன.

அவ்விதம் வெளியிடப்பட்டவையே இங்குத் தரப் பட்டுள்ளன.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

1

உன் நப்ஸை விட்டும் விலகு; அதிலிருந்து தூரப் பட்டவனாகு; அதற்கு அன்னியனாய் இரு; சகலவற்றை யும் அல்லாஹ்விடம் ஒப்படைத்துவிடு; உன் இதய வாயிலிலே அவனுடைய வாயில் காப்போனாய் இரு! அவன் உள்ளே விடலாம் என்று அனுமதித்துள்ளவை களை மட்டும் உட்செல்ல அனுமதித்து, அவன் தடுத் துள்ளவை உட்புகாதபடி பாதுகாத்து அவன் கட்டளை களைப் பேணிவா! உன் உடல் இச்சை, உன் இதயத்துள் புக இடமளியாது இருந்துவா! அவ்விதம் உடலினுட் புகாதபடி கவனிக்கப் பெரும் போராட்டம் தேவைதான்; சகலவித நிலைகளிலும் அதற்குப் பணியாதிருக்க அதிக மும் கஷ்டப்பட வேண்டியதுதான். ஆனால் அதை உள்ளே விடுவது என்பதோ அதற்குப் பணிவதும், அத னுடன் உடன்பட்டிருப்பதுமாகிவிடும். எனவே, அல்லாஹ் வின் சித்தத்திலில்லாத எதுவும் நடக்க வேண்டும் என்று எண்ணாதே! அல்லாஹ்வின் சித்தமல்லாத, உன் சித்தம் எதுவும் உடல் இச்சையால் உண்டாவதுதான்; அது மூடர்கள் உலவ வேண்டிய வனாந்தரமாகும்; அவ்வனாந் தரத்தில் நீயும் உலவத் துணிந்தால் அஃது உனக்கு

மரணத்தை உண்டாக்குவதாயும், அல்லாஹ்வின் பார்வையிலிருந்து உன்னை அப்பாலாக்குவதாயும், அவனுக்கும் உனக்குமிடையில் திரையிடுவதாயும் ஆகிவிடும். சதாவும் அவன் ஏவல்களின்படி நடந்தும், அவன் விலக்கல்களை ஒதுக்கியும், அவன் கட்டளையுள்ளவற்றின்படி நடப்பதில் அவனிடம் முற்றும் சரணடைந்தும், அவன் சிருஷ்டிகளில் எதையும் அவனுடன் சம்பந்தப்படுத்தாமலும் இருந்துவா! உன் சித்தமும், உன் ஆசையும், உன் இச்சைகளும் அவன் சிருஷ்டிகளே. எனவே, நீ இணைவைப்பவனாகும் விதம் எதையும் சித்தத்தில் கொள்வதோ, எதிலும் ஆசை வைப்பதோ, இச்சித்து அனுபவிப்பதோ கூடாது. "தன் ரப்பைச் சந்திக்கும் நம்பிக்கை வைக்கும் யாரும் நற்செயல்கள் புரியவேண்டும்; தன் ரப்புக்குச் செய்யும் சேவையில் வேறு யாருக்கும் பங்கு உண்டாகும்படியாக இடம் கொடுக்கக் கூடாது" (18: 110) என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

இணைவைப்பதென்பது விக்ரஹ வணக்கம் மட்டுமன்று; உடல் இச்சையின்படி நடப்பதும், இம்மைக்குரிய எதையும் அல்லாஹ்வோடு சேர்த்துப் பேசுதலும் கூட இணைவைப்பதுதான். ஏனெனில், அல்லாஹ்வையன்றி வேறு எதுவும் அல்லாஹ் ஆகாது. அவனையல்லாத எதிலும் நீ ஈடுபட்டிருக்கும்போது, நீ அந்தப் பொருளை அவனோடு இணைவப்பவனாகிறாய் என்பதில் ஐயமில்லை. எனவே, எச்சரிக்கையாய் இரு; அயர்ந்துவிடாதே! அஞ்சு; பாதுகாப்புணர்ச்சியுடனிருந்துவிடாதே! தேடு; அலக்ஷியபாவத்தோடு இருந்துவிடாதே! அப்படியானால்தான் நீ பாதுகாப்புப் பெறமுடியும். உனது எந்த நிலையையும், அந்தஸ்தையும் உன் நப்ஸின் காரணமாக உண்டானது என்று கூறாதே! இதில் எதையும் உன் நப்ஸுக்காகத் தேடவேண்டாம்! நீ எந்த நிலையிலோ, அந்தஸ்திலோ வைக்கப்படின் அது

பற்றிப் பிறரிடங் கூறவேண்டாம். தினே திேன மாறி வரும் சந்தர்ப்பங்களிடையில் அல்லாஹ்வின் அருளனுக்கிரஹம் நவநவமான வழிகளில் வெளிவருவதாய் இருக்கிறது. தன் அடியார்களுக்கும் அவர்கள் இதயங்களுக்கும் இடையில் அல்லாஹ் குறுக்கிடுகிருன். நீ பேசும் விஷயம் உன்னைவிட்டு அகற்றப்பட்டதாயும், நீ நிரந்தரமானது சாச்வதமானது என்று எண்ணிக்கொண்டுள்ளது மாறுதலடைந்து, நீ அவற்றைப்பற்றி யாரிடம் பெருமை பாராட்டிக்கொண்டாயோ அவர்கள் முன்பே நீ தலைகவிழவும் நேரலாம். இந்த ஞானத்தை நீ உன் அகத்திலேயே வைத்திருந்து, பிறரிடம் இதைக் கூருது இருப்பது நலமாகும். இப்படியிருக்கையில் நீ எண்ணியுள்ளபடி பிரஸ்தாப விஷயம் நீடித்ததாயின் அது அல்லாஹ்வின் நன்கொடை என்று அறிந்துகொள்; அந்நிலையில் அதற்கு நன்றி தெரிவிக்கச் சக்தியைக் கேள்; இறைவனிடமிருந்து அதிகமான அருளனுக்கிரஹத்தைக் கேட்டுப் பிரார்த்தனை செய். அப்படியின்றிப் பிரஸ்தாப விஷயம் நீடியாது மாறிவிடின், உன் ஞானத்தில் அதனுல் முன்னேற்ற முண்டாகும்; மனத்தினில் ஒளியுண்டாகும்; உஷாரான நிலை ஏற்படும். அல்லாஹ் சொல்கிருன்: "(முந்திய வேதங்களில்) நாம் எவ்வசனங்களை எடுத்துவிடவோ, மறக்கப்பட்டுப் போகவோ விரும்பினேமோ, (அவற்றுக்குப் பதிலாக) அவைபோன்ற அல்லது அவற்றைவிடச் சிறந்தவற்றை (இவ்வேதத்தின் மூலம்)த் தருகிருேம். நிச்சயமாக அல்லாஹ் சகல வஸ்துக்களின்மீதும் அதிகார முடையவன் என்பதை நீர் அறியீரா?" (2:106) என்று.

எனவே, எந்த ஒரு விஷயத்திலும் அல்லாஹ் சக்தியற்றவன் என்று கருதாதே! அவன் கட்டளைகளிலோ, நடைமுறைகளிலோ குறை காண முயலாதே! அவன் வாக்குறுதியில் ஐயமடையாதே! இவ்விஷயத்தில் ரஸூ

லுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அழகான முன்மாதிரி யுள்ளது. அவர்களுக்கு வெளியாக்கித் தரப்பட்ட (திரு குர்ஆன்) ஆயத்துகளும் அத்தியாயங்களும் அநுஷ்டா னத்தில் அமுலாக்கப்பட்டன.

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும் இறைவனுக் கும் இடையிலிருந்த அகவிஷயங்கள், ஞானம், மகாம்கள் சம்பந்தப்பட்டவரை, அவர்கள் தங்கள் இதயம் குழப்ப மாய் இருப்பதாகக் கூறுவதும், தினமும் எழுபது தடவை-சில சமயங்களில் நூறு தடவை அல்லாஹ்வின் பாதுகாவலைத் தேடுவதுமுண்டு; அதன் பயனாய் அவர்கள் ஒரு நிலையிலிருந்து மற்றொன்று, அதிலிருந்து மற் றொன்று என்று பல நிலைக்களுக்குக் கொண்டுசெல்லப் படுவதுமுண்டு. அல்லாஹ்வின் சமீபத்தை எய்துவதிலும் அவர்கள் ஒரு நிலைமையைவிட்டு இன்னொன்று, அதைவிட்டு மற்றொன்று என்று நிலை மாறுவது உண்டு. அவர்கள் மகாம்கள் மாறுவது வெளியில் தெரியாது. அதற்கேற்ப அவர்களைப் போர்த்திருக்கும் ஜோதியுடை யும் மாற்றப்படும்; ஒவ்வொரு படி முன்னேறுதலும் முந் திய படியை இருண்டதாக்கும்; அவன் கட்டளைகளுக்கு அடிபணிவதில் முந்திய படியில் அத்தனை தூரம் ஒழுங் காய் இருக்கவில்லை என்றும் தோன்றும். இதனால் அவர் கள் அல்லாஹ்வின் பாதுகாவலை எப்படித் தேடுவது என் பதுபற்றியும் அல்லாஹ்வின் வழிகாட்டுதலை அடைவ துண்டு; ஓர் அடியானுக்குச் சகல நிலைமைகளிலும் உயர் வானது பாதுகாப்புத் தேடி, அல்லாஹ்வின் பக்கமே திரும்பியிருப்பதுதான். இப்படிப் பாதுகாவல் தேடு வதில் தன் பாவத்தையும் குற்றத்தையும் ஒப்புக்கொள் கின்ற நிலைமை உண்டாகிவிடுகிறது. தன் வாழ்வின் சகல நிலைகளிலும் ஓர் அடியானிடம் இவ்விரண்டு குறைகளும் இருந்தே வரும்; ஏனெனில், ஆதி பிதாவான ஆதம் அலைஹியிடமிருந்து யாவரும் பெறும் பிதுர்ராஜ்ஜிதமாக

இவை விளங்குகின்றன. வாக்குறுதியையும் ஒப்பந்தத்தையும் பற்றிய நினைவை மறதி இருள் கௌவியதால், அவர்களின் (ஆதம் அலைஹி) ஆத்மீக நிலையின் தெளிவும் மறைவுண்டது. சாந்தி நிலையத்திலேயே வாழ்ந்து ரஹ்மானும் ரஹீமுமான நேசனின் அருகிலேயே இருக்கவேண்டும் என்ற ஆசை அவர்களிடம் மிகைப்பட்டது. சாந்தியுடையவும், பாக்யத்துடையவும் செய்தியுடன் கண்ணியமிக்க மலக்குகள் தம்மிடம் வரவேண்டும் என்றும் அவர்கள் விரும்பினார்கள். அதனால் அவர்கள் சித்தம் இறைவனின் சித்தத்தோடு மோதிற்று; அவர்கள் சித்தம் உடைந்து நொறுங்கிற்று; அதுவரை அவர்கள் இருந்த முதல் தரமான ஸ்தானம் மறைந்தது; அதுவரை இருந்த அல்லாஹ்வுக்கு அருகிலிருப்பதும் போய்விட்டது. அதுவரை அவர்களிடமிருந்த ஈமான் ஒளி இருளாக மாற்றப்பட்டு, அவர்கள் ஆத்மாவின் பரிசுத்தமும் இருண்டதாக்கப்பட்டது. பின்னர் ஆதம் அலைஹி அவர்களின் தவறு, அவர்களுக்கு நினைவூட்டப்பட்டது; தம் பாவத்தையும் தவற்றையும் அவர்கள் உணருமாறு செய்யப்பட்டுத் தங்கள் குற்றத்தையும், பரிபூரணமற்ற நிலையையும் ஒப்புக்கொள்ளுமாறும் போதிக்கப்பட்டது. அப்போது ஆதம் (அலை) அவர்கள் கேட்டார்கள்: "எங்கள் ரப்பே, நாங்கள் எங்கள் ஆத்மாவுக்கே அநியாயம் செய்துவிட்டோம். நீ எங்களை மன்னித்து எங்களிடம் கருணை காட்டாவிட்டால் நிச்சயமாக நாங்கள் கைசேதமடைந்தவர்களாகி விடுவோம்" என்று. அதன் பின் அவர்களுக்கு வழிகாட்டும் ஒளியும், பச்சாத்தாப ஞானமும், அதன் பயனாய் உண்டாகும் சத்தியத்துவ ஞானமும் உண்டாயின. அல்லாஹ் கருணைக் கண் கொண்டு நோக்கியதால் அவர்கள் பச்சாத்தாபப்பட முடிந்தது. அதன் பின் ஆதம் (அலை) அவர்களின் நோக்கம் வேறு ஒன்றாக மாற்றப்பட்டது; அவர்களுக்கு விலாயத்தின் உயர்ந்த

ஸ்தானம் அளிக்கப்பட்டது. இம்மையிலும் மறுமையிலும் அவர்களுக்கு உயர்ந்த ஸ்தானம் நல்கப்பட்டது. இவ்விதமாக, இவ்வுலகம் அவர்களுக்கும் அவர்களின் வழித்தோன்றல்களுக்கும் வசிக்குமிடமாகவும், மறுவுலகம் அவர்கள் திரும்பிப் போய் நிரந்தரமாகத் தங்குமிடமாகவும் ஆகிவிட்டன.

இதுபோல் அல்லாஹ்வின் மஹ்பூபான ரஸூலுல்லாஹ் முஹம்மது (ஸல்) அவர்களையும், அவர்களின் மாபெரும் மூதாதையான ஆதம் (அலை) அவர்களையும் - அல்லாஹ்வின் நேசர்களான இவ்விருவரையும்-நீயும் உன் குற்றத்தை ஒப்புக்கொள்ளுவதற்கும், பாவங்களிலிருந்து அல்லாஹ்வின் பாதுகாப்பைத் தேடுவதற்கும், வாழ்க்கையின் சகல நிலைகளிலும் பணிவைக் கைக்கொள்வதற்கும், உன்னால் எதுவும் இயலாது என்பதை உணர்வதற்கும் உன் முன்மாதிரியாகக் கொள்ளவேண்டும். (ஏழாம் மகாலா)

2

நிச்சயமாக அல்லாஹ்வும் உன் 'தான்' என்ற தன்மையான நப்ஸும், தவிர வேறு எதுவுமே இல்லை. நீ அல்லாஹ்விடம் முறையிடுபவன்; உன் நப்ஸோ அவனுக்கு எதிராக நிற்பது. ஆனால், உண்மையில் சகலமுமே அவனுக்குக் கீழ்ப்பட்டவையானபடியால், அவனால் சிருஷ்டிக்கப்பட்ட அந்த நப்ஸும் அவனுக்குக் கீழ்ப்பட்டதுதான். மனிதனின் நப்ஸோ தானே முடிவுகளை உண்டாக்கிக் கொள்கிறது; அவற்றால் தவறான நம்பிக்கைகளும், உணர்ச்சிகளும், போக இச்சையும் உண்டாகிவிடுகின்றன. இந்த நப்ஸை நீ எதிர்த்துப் போராடி சத்தியத்தின் பக்கம் சேர்ந்தால், நீ அல்லாஹ்வுக்கு உரியவனாவாய்; 'தன்னை' விட்டும் தப்பியவனாவாய். தாவூது நபி (அலை) அவர்களிடம்

அல்லாஹ் சொன்னான்: "தாவூதே, நான் உம் தடுக்க இயலாத புகலிடமாவேன்; எனக்காக உம் நப்ஸுக்கு அகப்படாதவராக நீர் ஆவதன் மூலம்தான் நீர் உண்மை யான சேவைக்கு உரியவராவீர்" என்று. அப்படியானால் தான் அல்லாஹ்விடம் காட்டும் நட்புரிமையும், அவனுக் குச் சேவை செய்வதும் உண்மையானவை யாகும். அப்படியானால் தான் புனிதமானவற்றில், இன்பம் பயப் பவற்றில் உனக்குரிய பங்கு கிடைக்கும். அப்படியானால் தான் நீ அருமையானவனாகவும், கௌரவமானவனா கவும் ஆவாய்; யாவும் உன் சேவகர்களாகும்; உனக்குப் பணிவிடை புரியும்; உன்னைக் கண்டஞ்சும். ஏனெனில், அவை யாவும் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டவை; அவன் சித்தப்படி நடப்பவை; அவன் தானே அவற்றைச் சிருஷ்டித்து வெளியாக்கியவன்! அவனுக்குக் கடப் பாடுடைய தன்மையை அவை இவ்விதம் காட்டிக் கொள்ளும். அல்லாஹ் சொல்கிறான்: "அவன் பெருமை களால் அவனைப் போற்றாதது எதுவுமில்லை; ஆனால், நீ அவற்றின் பிரார்த்தனையை அறியாதிருக்கிறாய்" என்று. அதாவது இப்பிரபஞ்சத்திலுள்ள சகல பொருள்களும் அவன் சாந்நித்யத்தை உணர்ந்து அவன் உத்தரவுக்குப் பணிகின்றன! அல்லாஹு ஸுப்ஹானஹு வத்த ஆலாவும் சொல்கிறான்: அப் போது அதனிடமும், உலகினிடமும் அவன் கேட்டான்: "நீங்கள் இஷ்டப்பட்டு வருகிறீர்களா, இஷ்டப்படாமல் வருகிறீர்களா" என்று; அவை கூறின: "நாங்கள் இஷ்டப்பட்டே வருகிறோம்" என்று.

இவ்விதம் சகல சேவையுமே நப்ஸையும் அதன் இச்சைகளையும் எதிர்த்துப் போராடுவதிலிருந்தே தொடங்குகின்றன. அல்லாஹ் சொல்கிறான்: "உங்கள் கீழான இச்சைகளுக்கு இணக்கமாகாதீர்கள்; ஏனெ னில், அவை உங்களை அல்லாஹ்வின் பாதையிலிருந்தும்

வழி தவற வைத்துவிடும் தன்மையன" என்று. மேலும் அவன் சொல்கிறான்: "உங்கள் கீழான இச்சைகளை வெறுத்தொதுக்குங்கள்; ஏனெனில், என் ராஜ்யத்தில் எனக்கு இணக்கமற்றவை காமக் குரோதாதிகளை யன்றி வேறு எவையு மன்று" என்று.

அபூ எஸீது பிஸ்தாமியைப் பற்றிய பிரஸித்தி வாய்ந்த ஒரு சம்பவமுண்டு. அவர்கள் தம் கனவில் அல்லாஹ்வைக் கண்டார்கள். அப்போது: "உன்னை அடைவது எப்படி?" என்று கேட்டார்கள். "உன் நப்ஸின் ஆதிக்கத்தை உதறிவிட்டு என்னிடம் வா" என்று அல்லாஹ் பதில் சொன்னான். அதன் பின் அப்பெரியார், பாம்பு தன் சட்டையைக் கழட்டி விட்டு வெளியாவது போல, 'தான்' என்பதை விட்டும் வெளியானதாகச் சொல்கிறார்கள். எனவே, சகல விஷயங்களிலும், சகல நிலைகளிலும் நீ உன் நப்ஸை எதிர்த்துப் போராட வேண்டும். அதனால் நீ பக்தியான நிலையிலிருப்பின், மக்களின் ஹராமானவற்றிலிருந்தும், அவர்களின் சந்தேகாஸ்பதமானவற்றிலிருந்தும், அவர்களிடமிருந்து உதவி பெறுவதிலிருந்தும், அவர்களை நம்பியிருப்பதிலிருந்தும், அவர்களுக்கு அஞ்சுவதிலிருந்தும், இவ்வுலகப் படாடோபங்களில் அவர்களிடமுள்ளவற்றைக் கேட்பதிலிருந்தும் உன் நப்ஸை எதிர்த்துப் போராடு. இவ்விதமாக நீ ஜனங்களிடமிருந்து எந்தச் சம்மானத்தையோ, வெகுமதியையோ, தருமத்தையோ, கடனையோ எதிர்பார்க்காதிரு. இவ்வுலக வசதிக்குரிய சகல வஸ்துக்களின் தேவையை விட்டும் நீ விடுபட்டவனாய் இரு. உனக்கு ஒரு பணக்கார உறவினன் இருந்து, அவன் இறந்தால் அவன் சொத்து உனக்குக் கிடைக்கும் என்ற நிலைமை இருப்பின், அவன் மரணமடைய வேண்டும் என்று நீ விரும்பக்கூடாது. எனவே, நீ பெரும் முயற்சி செய்து சிருஷ்டிகளை விட்டு அப்பா

லாகி, திறக்கவும் மூடவுமாக இருக்கும் ஒரு வாயிலாக வும், சில சமயம் கனி தந்து, சில சமயம் காய்க்காத ஒரு தருவாகவும் அவர்களை நீ கருதவேண்டும். இவ்வித மாகும் நிலைமை ஒருவனால் திட்டமிடப்பட்டு நடத்தாட்டி வைக்கப்படுகிறது. அவன்தான் அல்லாஹ் ஆகும். உன் ரப்புல் ஆலமீனின் ஏகத்துவத்தில் நீ பூரண ஈமான் கொள்வதற்காகவே அவன் இவ்விதம் ஆக்கியுள்ளான்.

அதே சமயம் மனித முயற்சியின் அந்தஸ்தையும் மறந்துவிடாதே! எல்லாம் விதிவசம் என்று மூலையில் குந்திக்கிடக்கும் கூட்டந்தனில் ஒருவனாகிவிடாதே! எச் செயலும், அல்லாஹ்வினளவிலன்றிப் பூர்த்தியாவதில்லை என்பதையும் மறந்துவிடாதே! அவற்றைப் போற்றிக் கொண்டாடிக்கொண்டு அல்லாஹ்வை மறந்துவிடவோ, சகல மானிடச் செயல் முறைகளும், அல்லாஹ்வைத் தவிர வேறு எதனாலும் வருகின்றன என்று சொல்லவோ செய்யாதே! அப்படிச் சொன்னால் எல்லாம் மனிதன் கைக்குள் அடங்கியவைதான் என்று கூறும் நிராகரிப் போர் கூட்டத்தில் சேர்ந்தவனாகிவிடுவாய். சகல செய லாற்றல்களும் சிருஷ்டியில் அல்லாஹ்வுக்கு உரியவை; முயற்சியில் மனிதனுக்குரியவை என்று வேண்டுமானால் நீ கூறலாம். நன்கொடைகளையும் தண்டனைகளையும் பற்றிய பெரியார்கள் பேச்சுகளில் இத்தகைய அபிப்பிராயமே காணப்பட்டுள்ளது.

அவர்கள் (ஜனங்கள்) சம்பந்தப்பட்ட அல்லாஹ் வின் கட்டளைகளையும் நிறைவேற்றிவா! அவன் ஏவலால் அவர்களிடமிருந்து உனக்குரிய பங்கை ஒதுக்கிக்கொள். இவ்வரம்பை மீறவேண்டாம். ஏனெனில், அல்லாஹ்வின் உத்தரவு நீடித்து நிற்பது; உன்னையும் அவர்களையும் அது சீர்தூக்கி நீதி வழங்குவது; நீயே உனக்குத் தீர்ப்புத் தந்துகொள்ளாதே! நீ அவர்களோடு (ஜனங்களோடு) இருப்பது அல்லாஹ்வின் உத்தர்வால்தான். இவ்வுத்

தரவு இருளிலுள்ளது; அந்த இருளில் ஒரு விளக்கோடு புகு! அந்த விளக்கே நீதிபதியுமாகும். அதுதான் அல்லாஹ் அருளிய கலாம் ஷரீபும், நபி பெருமானின் திருவாக்கியங்களேயும் நடைமுறையையும் காட்டும் ஹதீஸ் ஷரீபுமாகும். இவை இரண்டுக்கும் புறம்பான விஷயங்களில் இறங்காதே! உன் உள்ளத்தில் ஏதாவது எண்ணம் அல்லது உதிப்பு உண்டானல், அதைத் திரு குர்ஆன் ஹதீஸ்களின் முன் நிறுத்தி ஆராய்ந்து பார். உனக்குண்டான எண்ணமோ, உதிப்போ அவற்ருல் விலக்கப்பட்டதாய் இருப்பின் (அதாவது வட்டி வாங் கலாம், விபசாரம் புரியலாம், நேரிய ஒழுக்கமற்றவர் களோடு நட்புப் பூணலாம் என்பன போன்ற பாவகரமான விஷயம் உன் சிந்தையிலோ உதிப்பிலோ தோன்றி யிருப்பின்) அந்த எண்ணத்தையோ உதிப்பையோ அகற்றி அதை விட்டு விலகிக்கொள். அதை ஏற்காதே! அதன்படி நடவாதே! அது இப்லீஸ் லஃனத்துல்லாஹ் வின் தூண்டுதலால் உண்டானது என்ற நம்பிக்கையில் உறுதியாய் இரு. இவ்விரு மூலங்களிலும் உனக்குத் தோன்றிய எண்ணம் அல்லது உதிப்புக்கு வெறும் அனு மதி மட்டும் இருப்பின் (அதாவது உண்ணுவது, அருந்து வது, உடுப்பது, மணமுடிப்பது போன்ற ஆகுமான காரி யங்களேச் செய்வதற்கான எண்ணமாகவோ உதிப் பாகவோ இருப்பின்) இதையும் ஏற்காது ஒதுக்கிவிடு! இந்த எண்ணம் அல்லது உதிப்பு உன் நப்ஸின் வேட் கையால் உண்டாகியுள்ளது என்பதை உணர்ந்து, அதை நீ எதிர்த்து ஒதுக்கவேண்டிய அவசியத்தை உணர்.

இப்படியுமின்றி உன் எண்ணத்திலோ உதிப்பிலோ கண்ட விஷயத்துக்கு கலாம் ஷரீபிலும், ஹதீஸிலும் விலக்கலோ, அனுமதியோ இன்றிச் சந்தேகாஸ்பதமான நிலைமை உண்டானல், அது நீ புரிந்துகொள்ள இயலாத ஒன்ருய் இருக்குமாயின் (உதாரணமாக ஒரு குறிப்பிட்ட

இடத்துக்கு நீ செல்லவேண்டும் என்றோ, ஒரு குறிப்பிட்ட பெரியாரை நீ போய்க் காணவேண்டும் என்றோ உன் எண்ணத்திலோ உதிப்பிலோ தோன்றியிருந்து, அல்லாஹ் உனக்குத் தந்த அறிவைக்கொண்டு யோசிக்குங்கால் அப்படிப் போவதற்கோ, சந்திப்பதற்கோ அவசியமில்லாதிருந்தால்) அவ்விஷயத்தில் நீ பொறுமையுடன் இரு; அவசரப்படாதே! 'அஃது அல்லாஹ்விடமிருந்து நமக்குக் கிடைத்த உத்தரவா, நாம் அதன்படி நடக்கத் தான் வேண்டுமா?' என்று நிதானமாகச் சிந்தனை செய். இவ்விஷயத்தில் எம்முடிவுக்கும் வருமுன் காத்திரு. அதே எண்ணம் அல்லது உதிப்பை மீண்டும் ஏற்படும்படி செய்வது அல்லாஹ்வின் வழக்கம். அல்லது ஞானவான்களுக்குக் காட்டுவதுபோல அவன் ஓர் அடையாளத்தைக் காட்டுவான். அந்த அடையாளம் அவ்லியாக்களிலும், அப்தால்களிலும் மிகுந்த ஞானவான்களாக உள்ளவர்களுக்கே புரியக்கூடியதாய் இருக்கும். இவ்விஷயம்பற்றி நீ கொஞ்சமும் அவசரப்படவே கூடாது. ஏனெனில், அதன் பலாபலன்களைப் பற்றி நீ ஏதும் அறியாய். அதில் சோதனை ஏதும் உள்ளதா, அழிவுப் பாதை உள்ளதா, உன்னைச் சோதிக்க ஏதாவது மறைவானதை அல்லாஹ் அதில் வைத்திருக்கிறானா என்பதொன்றும் உனக்குத் தெரியாது.

எனவே, அல்லாஹ்வே உன்னுள் அதைச் செய்ய வருகும் வரை நீ பொறுமையாய் இருக்கவேண்டும். இவ்விதம் அச்செயல் தெளிவாக அல்லாஹ்வினுடையதானதும், அதன் பின் உனக்கு ஏதாவது சோதனை எதிர்ப்பட்டாலுங்கூட, நீ அதிலிருந்தும் பாதுகாப்பாக மேலே கொண்டுசெல்லப்படுவாய். காரணம் அல்லாஹுத்த ஆலா, தன் செயலான ஒன்றுக்கு உன்னைத் தண்டிக்க மாட்டான். ஒரு விஷயம் நடப்பதில் நீயாகவே

பங்கெடுத்துக்கொண்டால்தான் தண்டனை இருப்பின் நிச்சயமாக அது கிடைக்கும்.

நீ சத்தியத்துவ நிலையை, விலாயத்துடைய நிலையை எய்திவிட்டால், உன் இச்சைகளை எதிர்த்துப் போராடு; அவன் கட்டளைகளுக்கும் பூரணமாகக் கீழ்ப்படிந்து நட. அப்படிக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது இரு வகைப்படும்: முதலாவதாக, உன் உலக ஜீவியத்துக்குத் தேவையான அளவு மட்டும் இவ்வுலகிலிருந்து நீ வஜீபனம் எடுத்துக்கொள்ளலாம்; புலனுணர்வுக்குரிய இன்பங்களில் திளைக்க நீ துணியக் கூடாது; உன் கடமைகளைச் சரிவரச் செய்து வெளிப்படையான, மறைவான பாவங்களை விட்டு ஒதுங்கிக்கொள்ள வேண்டும். இரண்டாவதான வகை மறைவான கட்டளைக்குக் கீழ்ப்படிவது சம்பந்தமானது. இதன் மூலம் அல்லாஹ் தன் அடியான் ஒன்றைச் செய்யவோ செய்யாமலிருக்கவோ ஏவல் விலக்கலை அருளுகிறான். இக்கட்டளை ஷரீஅத்தில் இப்படி அப்படி என்று எவ்வுத்தரவும் இல்லாத, அதாவது ஹராம் என்றோ, ஹலால் என்றோ எதுவும் சொல்லப்படாத விஷயங்கள் சம்பந்தப்பட்டதாய் இருக்கலாம். இதில் அடியான் தன் இஷ்டப்படி நடக்கப் பூரண சுதந்தரமுண்டு. இதற்கு 'முபாஹ்' என்று பெயர். இத்தகைய நிலையில் அடியான் தானாகவே எதுவும் செய்துவிடக்கூடாது. இது சம்பந்தப்பட்ட உத்தரவுக்காகக் காத்திருக்க வேண்டும். ஓர் உத்தரவு வந்ததும் அடியான் அதற்கு அடிபணிந்து நடப்பான். இவ்விதம் அவன் செயலும், ஓய்வும்கூட அல்லாஹ்வுக்கு அர்ப்பணிக்கப்பட்டவையாகிவிடும். ஒரு விஷயம் பற்றி ஷரீஅத்தில் ஓர் உத்தரவிருப்பின் அவன் அவ்வுத்தரவுப்படியே நடப்பான். ஷரீஅத்தில் அவ்வித உத்தரவு இல்லாமலிருப்பின் மறைவான உத்தரவின்படி நடப்பான். இவற்றின் மூலமே அவன் சத்தியத்துவத்தை எய்துபவனாக உறுதிப்படுத்தப்படுவான்.

இந்த மறைவான உத்தரவுமின்றி அல்லாஹ்வின் செயல் மட்டுமே இருப்பின் தன்னை விட்டுக்கொடுத்த நிலையிலிருக்க வேண்டும். சத்தியத்தின் சத்தியமான நிலையை, அதாவது முற்றும் மூழ்கிவிட்ட நிலையை அல்லது 'பனா' என்ற நிலையை நீ அடைந்து விட்டால் அதுதான் அப்தாலின் நிலை என்பதை உணர். அப்தால்கள் அவனுக்காக உடைந்த இதயம் உடையவர்களாய் இருப்பார்கள். இந்நிலை மஃரிபாவின் முற்றிய ஞானமடைந்தவர்களுக்கு, ஸாலிஹீன்களுக்கு, குதுபுகளுக்கு, ஜனங்களின் பாதுகாவலர்களாகவும், மேல்பார்வையாளர்களாகவும் உள்ளவர்களுக்கு, ரஹ்மானின் பிரதிநிதிகளுக்கு, அவன் நேசர்களுக்கு உரியதாகும். இத்தகைய விஷயங்களில் உத்தரவுக்குக் கீழ்ப்படிதலென்பது, உன் நப்ஸுக்கே விரோதமாகப் போகவேண்டியதாகவும், எந்தத் திறனிலும், சக்தியிலும் நம்பிக்கை வைக்காதிருப்பதாகவும், இவ்வுலகையோ மறு உலகையோ பற்றிய எவ்விஷயத்தும் எந்தச் சித்தமும் அற்றவனாக ஆவதுமாகும். இவ்விதம் நீ ராஜ்யத்தினுடையவன்றி, ராஜாவின் அடியானவாய்; ஊனுடம்பின் ஆசைக்கன்றித் தெய்வ உத்தரவுகளுக்கு அடிமையாவாய். அதாவது தாதியின் கைக் குழந்தை போலும், குளிப்பாட்டுபவர் கை மையித் போலும், வயித்தியன் முன் படுத்திருக்கும் நோயாளி போலும், — ஏவல் விலக்கல்களுக்குப் புறப்பான சகல விஷயங்களிலும் — ஆகிவிடுவாய். (பத்தாம் மகாலா)

3

நீ வறுமையிலும் மிடிமையிலும் கஷ்டப்படுகையில், உனக்கு மணம் செய்து கொள்ளும் ஆசை உண்டாகிறது; ஆனால், உனக்கு அதற்கான வசதியில்லை; எனவே, அந்த ஆசையை உன்னுள் உண்டாக்கிய சக்திக்கு உரியவனை அல்லாஹ்விடமிருந்து உதவியை எதிர்பார்த்தவனாகப்

பொறுமையுடன் காத்திரு; அப்போது (அந்த ஆசையை உன்னை விட்டு அகற்றுவதன் மூலமோ அல்லது) அதற்கான வாய்ப்பையும் வருவாயையும் நன்கொடையாகத் தந்து, போதுமான அளவுக்கு உனக்கு ரிஜ்க் கிடைக்க அனுக்கிரஹித்து, இம்மையிலும் மறுமையிலும் அந்தப் பாரத்தை நீ எளிதாகச் சுமக்கும்படி செய்வதன்மூலமோ அவனே உனக்கு உதவுவான். அதுவரை நீ கொண்டிருந்த பொறுமைக்காகவும், அவன் அனுக்கிரகத்தில் திருப்தி காட்டியதற்காகவும், அல்லாஹ் உன்னைப் பொறுமையாளன், நன்றிவிஸ்வாச முடையவன் என்றழைப்பான்; அதனால் அவன் உன் பரிசுத்தத்தையும் சக்தியையும் அதிகரிப்பான். நீ மனத்திருப்தி கொள்ளும்படி, அவன் செய்த அருளனுக்கிரஹத்தின்படி தக்தீரி விருப்பின், உன் பொறுமை நன்றியறிதலாக மாறும்; ஹக்குதஆலா தன்னிடம் நன்றி விஸ்வாசமுடையவர்களுக்குத் தன் நன்கொடைகளை அதிகரிப்பதாக வாக்களித்துள்ளான். அவன் சொல்கிறான்: "நீங்கள் நன்றி விஸ்வாச முள்ளவர்களாயின், நிச்சயமாக நான் அதிகமும் அருள்வேன்; நீங்கள் நன்றி விஸ்வாச மற்றவர்களாயின் என் தண்டனை கடுமையானதாகவே இருக்கும்" என்று.

அது (மணம் அல்லது செல்வம்) உனக்குத் தக்தீரில் விதிக்கப்படாதிருப்பின், நீ அதைப்பற்றி அக்கரையற்றவனாகி, உன் நப்ஸ் அதை விரும்பினாலும் விரும்பாவிடினும், உன் எண்ணத்திலிருந்தே அதை விரட்டிவிடவேண்டும். இதில் நீ உன் ஸபுரைப் பற்றிப்பிடித்தவனாக, உன் இச்சையை எதிர்த்து ஷரீஅத்தின் கட்டளையைப் பற்றிப்பிடித்தவனாக நிற்க வேண்டும். இறைவனின் திருவுளச் சித்தத்தில் திருப்தியுற்றவனாய், அதே நிலையில், அல்லாஹ்வின் அருளினாலும் கொடையினாலும், நம்பிக்கைவைத்தவனாய் இருந்து வரவேண்டும். "ஸபுருடை

யவர்களுக்கு மட்டுமே அளவின்றிப் பரிபூரணமாக அவர்களின் சம்மானம் திருப்பியளிக்கப்படும்'' என்று அல்லாஹ்வே கூறியுள்ளான். (பதின்மூராம் மகாலா)

4

அல்லாஹு ஸுப்ஹானஹுவத்த ஆலா உனக்குச் செல்வத்தைத் தந்ததும், நீ அதனால் அவனுக்குப் பணிவதிலிருந்தும் கவனந் திருப்பப்பட்டவனானால், அது காரணமாக இம்மை மறுமை இரண்டினாலுமே அவனை நீ காணமுடியாதவாறு, உன் முன் திரையையிட்டுவிடுகிறான். உனக்குச் சம்மானந் தந்தவனிடம் நன்றி காட்டாது, தரப்பட்ட பொருளின் கவனத்திலேயே நீ மூழ்கிக் கிடப்பதற்குத் தண்டனையாக, அவன் உனக்குத் தந்த சம்மானங்களையே பறித்து, உன் நிலையையே மாற்றி, உன்னைத் தரித்திரனாக்குவதும் அவன் செய்யக்கூடிய காரியந்தான். ஆனால் நீ அவனுக்குப் பணிவதில் ஈடுபட்டு அச்செல்வத்தைப் பற்றிய அக்கரையற்றவனாய் இருப்பின், அதை அல்லாஹ் உனக்கு ஏகபோகமாக விட்டுவிடுவதுடன், ஓர் அணுக்கூட அதில் குறைவு வரவும் இடந்தரமாட்டான். செல்வம் உன் அடிமை; நீ உன் ரப்பின் அடிமை. எனவே, இவ்வுலகில் அவனுடைய அன்புப் பாதுகாவலிலும், மறுமையில் கவுரவத்தோடும், சுகத்தோடும், நிரந்தரமான சுவர்க்கத்திலும், ஸித்தீகீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்களுடைய கூட்டத்தில் நீ வாழ வேண்டும். (பன்னிரண்டாம் மகாலா)

5

எந்தப் பாக்கியத்தையும் நீயாகக் கைப்பற்றிக் கொள்ளவோ, எந்தத் துயரையும் ஒதுக்கிக்கொள்ளவோ எம்முயற்சியும் செய்யவேண்டாம். பாக்கியம் உனக்குத் தக்தீரில் இருப்பின், நீ அதைத் தேடினாலும் தேடாவிட்டாலும் அஃது உன்னை வந்தடையும். நீ விரும்பினாலும்

விரும்பாவிடினும் துயரம், விதிக்கப்பட்டிருப்பின், அது வும் உன்னை வந்தடையவே செய்யும். உன் தொழுகை மூலமோ உன் சகிப்புத்தன்மை, பொறுமை ஆகிவற் றாலோ அதை ஏற்று, உன் ரப்பின் அருளை அடையப் பெறு.

நீ சகல விஷயங்களிலும் அவனுக்குப் பணிந்தவனாகி அவன் தன் வேலையை உன் மூலம் செய்யும் நிலைமை உண்டாக வேண்டும். உனக்கு ஒரு பாக்கியமுண்டானால் நன்றிசெலுத்துவதில் ஈடுபடு! உனக்கு ஒரு துயரம் உண்டானால் ஸபுருடன் இரு; அல்லது ஸபுரை வருவிக்க வும், அல்லாஹ்வின் உறவைத் தேடவும் அவன் மகிழ்ச் சியை அடையவும் பழகிக் கொள்; அல்லது அவன் பாக் கியத்தை இதில் உணர முயல்; அல்லது இதன் மூலம் உன்னால் சாத்தியமான அளவுக்கு, உனக்குத் தரப்பட் டுள்ள ஆத்மீக நிலைகளின் உதவியால், அவனோடு இணைந் தவனாகி, நிலைமையிலிருந்து நிலைமைக்குப் புறட்டி எடுக்கப் பட்டவனாய் பணிந்து பிரயாணஞ்செய்து நீ உத்தரவிடப் பட்டுள்ளபடி தோழமை கொள்ள முயன்றால் அந்த மாபெரும் நேசனை அடையலாம்.

அப்போது நீ உனக்கு முன்பு வலித்தீகின்கள், ஷுஹ தாக்கள், ஸாலிஹீன்கள் ஆகியோரால் அடையப்பெற் றுள்ள ஸ்தானத்தில் நிறுத்தப்படுவாய். அதாவது நீ அல்லாஹ்வுக்கு மிகவும் அருகிலுள்ளவனாவாய். அங் கிருந்துகொண்டு உனக்கு முன்பு அங்கே, அல்லாஹு ஜல்ல ஜலாலஹூவிடம் சென்று அவனுக்கு அருகி லாகி, அவனிடமிருந்து சகலவிதப் பாதுகாவல்களையும், வசதிகளையும், கண்ணியங்களையும், பாக்யங்களையும் அடைந்துள்ள நல்லடியார்களின் நிலைமையைக் காண முடியும். இந்நிலையில் எந்தத் துயரம் ஏற்படினும் நீ அதன் வழியைத் தடை செய்வதோ, உன் துஆ வினால் அதை மடக்குவதோ, அது வருவதுபற்றிச்

சங்கடப்படுவதோ அவசியமில்லாமலாகிவிடும்; ஏனெனில் நரகாக்கினியைவிட அதன் நெருப்பு ஒன்றும் கடுமையானதாய் இருக்கப் போவதில்லை. "நிச்சயமாக நரக நெருப்பு 'மூமினே, விரைவில் அப்பால் செல்; உன் ஒளி என் தணலை அவிக்கிறது' என்று மூமினிடங் கூறும்" என்பதாக மானிடருள் மகாசிரேஷ்டர், இம்மாநிலம் சுமப்பவர்களி லெல்லாம், வானம் கவிந்துள்ளவர்கள் யாவரிலும் உன்னதமானவர்களான நம் பெருமான் (ஸல்) அவர்கள் கூறியதாகக் காணப்படுகிறது.

எனவே, நரகாக்கினியை அவிக்கும் மூமினின் ஒளியன்றோ இவ்வுலகிலும் அவனிடம் மிளிர்வதாய் விளங்குகிறது! இந்த ஒளியன்றோ அல்லாஹ்வுக்கு அடிபணிபவர்களை அவ்விதம் பணியாதவர்களிலிருந்தும் பிரித்துக் காட்டுகிறது! அதே ஒளி துயரத் தீ அணுகுவதை அணைக்கட்டும்; உனக்கு நேரவிருக்கும் தீங்கு நெருப்பை உன் சகிப்புத்தன்மையினுடையவும் அல்லாஹ்வுடன் இணைந்திருப்பதுடையவும் தன்மை அணைக்கட்டும்.

அத்துயரம் உன்னை நசுக்குவதற்காக வருவதன்று; உன்னைச் சோதித்து, உன் ஈமானின் உறுதியை ஊர்ஜிதஞ்செய்து, உன் நம்பிக்கைகளின் அடிப்படையை உறுதியாக்கி, உன்னைப்பற்றி உன் இறைவன் கொண்டுள்ள அன்பான எண்ணங்கள்பற்றிய நற்செய்தியை உள் அந்தரங்கத்தில் புகுத்துவதற்காகவே அது வருகிறது என்பதை நீ உணர்வாய். "மிக மிக நிச்சயமாக உங்களில் தம்மை மிகவும் கடுமையான முயற்சியில் ஈடுபடுத்துபவர்களையும், சகிப்புத்தன்மையுடையவர்களையும், அறிந்து அதை வெளிப்படுத்தும்வரை சோதிப்போம்" (47: 31) என்று அல்லாஹ் கூறியுள்ளான். இவ்விதம் அல்லாஹ்விடம் நீ கொண்டுள்ள நம்பிக்கை நிரூபணமாகி, அவன் வேலையுடன் நீ பூரணமாக இணைந்தவனாகிய நிச்சயத்துவம் உண்டானதும் — இது அவன் தந்த சக்தியின்

துணையாலும் அவனுடைய தயாளமான உதவியாலும் சாத்தியமானதும் — நீ சதா ஸபுருடனும், அவனுடன் முற்றும் இணைந்தவனாயும், அவனுக்குப் பூரணமாகக் கீழ்ப்படிபவனாகவும் இருந்து வரவேண்டும். அல்லாஹ்வின் ஏவல் விலக்கல்களுக்கு முரணாக உள்ள எதுவும் உன்னிடமோ பிறரிடமோ உண்டாக இடங்கொடாதே! அவன் கட்டளை எதுவும் வந்தால் கவனத்தோடு அதைச் செவிசாய்த்துக் கேள்; அதன்படி உடனே நட; ஓய்ந்திருக்காது செயலாற்று; அல்லாஹ்வின் கட்டளை வந்தபின் செயலற்றுக் கிடவாதே; அதை நிறைவேற்றுவதில் உன் சக்தியையும் முயற்சியையும் ஈடுபடுத்து!

உன்னால் அக்கட்டளையை நிறைவேற்ற முடியாதிருப்பின் அல்லாஹ்வின் உதவியை நாடு. அவனிடம் புகலிடந்தேடு! அவன் முன் பணிவுடன் கிடந்து, அவன் மன்னிப்பை வேண்டு! அவன் கட்டளையை உன்னால் நிறைவேற்ற இயலாது, அவனுக்குப் பணிவதன் மூலம் கிடைக்கும் கண்ணியத்தை எய்தவிடாது தடுக்கப்படுவதன் காரணம் யாது என்று கண்டுபிடிக்க முயற்சி செய். அவனுக்குப் பணிவதில் நீ முறை தவறி நடந்து கொண்டமையாலோ, நீயாகக் கற்பித்துக் கொண்டவற்றின் தீமையாலோ ஒருக்கால் இந்நிலை உண்டாகி இருக்கலாம். அல்லது அகந்தையோ, உன்னால் எதுவும் முடியும் என்ற எண்ணமோ, எல்லாம் உன்னால்தான் நடக்கிறது என்ற உணர்வோ, உன் நப்ஸையோ, சிருஷ்டியையோ அவனுடன் இணைவைத்ததோ இந்நிலை உண்டாகக் காரணமாகியிருக்கலாம். அதனால் அவன் தன் வாயிலிலிருந்து உன்னை அப்பாலாக்கி, அவனுக்குப் பணிவிடை செய்வதிலிருந்தும் விரட்டியடித்துத் தன் பலத்தின் உதவியை உனக்குக் கிடைக்காது செய்து, தன் அருள் நோக்கை உன்னை விட்டுத் திருப்பிக்கொண்டு, உன்னிடம் கோபமடைந்தவனாய், உனது இவ்வுலகப் போராட்டங்களிலும்

இச்சைகளிலும் நீ ஈடுபட்டு உழல்பவனுய்க் கிடக்கச் செய்துவிடுவான். இத்தகைய ஒழுக்கம் அவனை நீ மறக்கும்படி செய்வதையும், உன்னைப் படைத்து ஊட்டி, பற்பல அருட்கொடைகளை அருளியவனிடமிருந்து அப்பாலாகும்படி செய்வதையும் நீ உணரவில்லையா? அல்லாஹ்வைத் தவிர உள்ள இத்தகையவை உன்னை அவனிடமிருந்து பிரித்துவிடாதபடி விழிப்புடனிரு! அல்லாஹ் அல்லாத சகலமுமே அவனுக்குப் புறம்பானவைதாம். எனவே வேறு எதையும் அவனுக்குப் பிரதியாக ஏற்காதே! அவன் தனக்காகவேயன்றோ உன்னைப் படைத்துள்ளான்! அவன் உத்தரவுகளையன்றி வேறு எதற்கும் நீ செவி சாயாதே! அப்படிச் செவி சாய்த்து உன் ஆத்மாவுக்கு அனியாயமிழைத்தவனுகாதே; நரக நெருப்புக்குப் பலியாகாதே! அப்போது நீ பச்சாத்தாபப்படுவதால் பயனிருக்காது; அப்போது உதவி கேட்டுக் கதறினுலும் உதவி வராது; அல்லாஹ்வை நீ திருப்திப்படுத்த நினைப்பாய்; ஆனுல், நடைபெருது. நீ மீண்டும் உலகத்துக்கு வந்து திருந்திக்கொள்ள விரும்புவாய்; ஆனுல், அதற்கு வாய்ப்பிருக்காது.

உன் ஆத்மாவின்மீது கருணைகொள்; அதனிடம் அன்பாய் இரு; உன் இறைவனுக்குச் சேவைசெய்யச் சகல திறன்களையும் – உன் அறிவையும், ஆற்றலையும், ஈமானையும், ஆத்ம ஒளியையும், ஞானத்தையும் உபயோகப்படுத்து; விதிவசத்தின் இருளின் இடையில் உள்ள உன் சுற்றுப்புறத்தை இவற்ருல் எழும் வெளிச்சத்தால் ஒளி பெறச் செய். அல்லாஹ்வின் ஏவல் விலக்கல் பற்றிய கட்டளைகளைப் பற்றிப்பிடித்துக்கொள்; இவற்ருல் வழி நடத்தாட்டப்பட்டு உன் இறைவனை நோக்கிச் செல்லும் வழியில் முன்னேறு; இவையல்லாத சகலவற்றையும் அவனிடம் ஒப்படைத்துவிடு; உன்னைச் சிருஷ்டித்து, வளரச் செய்த அவனிடம் நன்றிக் குறைவாய் நடந்து

கொள்ளாதே! அவன் கட்டளைக்கு அப்பாற்பட்ட எதற்கும் ஆசைப்படாதே! அவன் தடுக்காத எதையும் கெட்டதாகவும் கருதாதே! முந்திய நோக்கத்தை மனத்தில் கொண்டு இருவுலகிலும் திருப்தியுடையவனாய் இருந்து வா! இவ்விதம் நீ விரும்பும் சகலமும் முந்திய லக்ஷியத்துக்கும், நீ வெறுக்கும் யாவும் பிந்திய லக்ஷியத்துக்கும் இணைந்தனவாய் இருக்க வேண்டும். அவன் கட்டளைகளுக்கு நீ இணக்கமானவனானதும், இப்பிரபஞ்சம் முழுவதுமே உனக்குத் தலை சாய்க்கும்; அவன் தடுத்துள்ளவற்றை நீ உதறித் தள்ளியதும் வேண்டாத சகலமும் நீ எங்கிருப்பினும் உன்னைக் கண்டோடும். அல்லாஹ் தன் வேதங்கள் பலவற்றில் இவ்விதம் கூறியுள்ளான்: "ஆதமுடைய மக்களே, நான்தான் அல்லாஹ். என்னையன்றி வணக்கத்துக்குரியது வேறு எதுவுமில்லை. நான் எந்த ஒரு வஸ்துவையும் ஆகுக என்றதும் அது உண்டாகி விடுகிறது. எனக்குக் கீழ்ப்படியுங்கள். அதன் மூலம் ஒரு வஸ்துவை ஆகுக என்றதும் ஆகிவிடும்படியான சக்தியுடையவர்களாக உங்களை நான் ஆக்கிவிடுவேன்." மேலும் அவன் சொல்லியுள்ளான்: "ஹே பூமியே, எனக்குச் சேவை செய்பவர்கள் யாரோ அவர்களுக்கு நீ சேவை செய்! உனக்குச் சேவை செய்பவர்கள் யாரோ அவர்களைக் கவலையுள் ஆழ்த்திவிடு!" என்று.

எனவே, அவனுடைய விலக்கல்கள் உன்னிடம் வருகையில் நீ உன் அங்கங்கள் தளர்ந்த, களைப்படைந்த உடலால் எதும் செய்ய இயலாத நிலையையடைந்த, இதயம் வெந்துவிட்ட, உயிரற்ற உடலுடைய, ஒருவனைப் போல், ஜீவனற்றவனைப்போல், இவ்வுலக இச்சைகளற்றவனாய், சகலவற்றிலிருந்தும் துண்டிக்கப்பட்டவனாய், மிருக இச்சைகள், மிருக ஜீவன் எதுவுமே இருக்கிறது என்று கூறத்தக்க அறிகுறியற்றவனாய், இருண்ட மண்டபம் போலும், பாழடைந்து மேல்தளம் இடிந்து

கிடக்கும் கட்டடம் போலும் ஆகிவிடவேண்டும். 'உன் செவிகள் பிறவிச் செவிடனுடையவை போல் செவிடாகவும், உன் கண்கள் பிறவிக் குருடுபோல் மூடியவையாயும், உன் உதடுகள் முற்றும் அழுகி வீங்கியவை போலும், உன் நாவு அசையாததாகவும், உன் பற்கள் அடித்தூரில் சீழ்பிடித்துக் கெட்டுப் போனவை போலும், உன் கரங்கள் வாதம் அடித்து எதையும் எடுக்கச் சக்தியற்றவை போலும், உன் கால்கள் முடங்கி, நடுக்கமெடுத்து புண்கள் நிறைந்தவைபோலும், உன் ஆண் குறி எந்தச் சக்தியுமற்றது போலும், உன் வயிறு எப்போதும் நிறைந்ததாய், உணவின் தேவையே இல்லாததாய் இருப்பது போலும், உன் சித்தம் கலங்கியது போலும், உன் உடல் மரணித்து அடக்க ஸ்தலத்துக்கு எடுத்துச் செல்ல ஆயத்தமாய்க் கிடப்பதுபோலுமான நிலைமையில் நீ இருந்து வரவேண்டும்.

அல்லாஹ்வின் விலக்கல்கள் வருகையில் நீ எப்படி மரணித்தவன்போல் உடலை அசைக்கச் சக்தியற்றவன் போல் கிடக்கிறாயோ, அப்படியே அவன் ஏவல்கள் வருகையில் நீ அதைக் கேட்டு, உடனுக்குடன் அதை நிறைவேற்ற வேண்டும். எனவே, இந்த ஷர்பத்தைக் குடித்து இந்த நிவர்த்தியைப் பெறு! அதன் மூலம் நீ உடல் சதையின் இச்சைகளிலிருந்தும், பாவங்களெனும் வியாதிகளிலிருந்தும், ஆசைகளின் விலங்குகளிலிருந்தும் விடுபட்டுப் பரிபூரண ஆத்மீக சுகம் பெறுபவனுவாய். (பதின்மூன்றும் மகாலா)

6

ஜனங்களிடத்தில் நீ சதமென நம்பிக்கை வைப்பதும், பிறரின் திறனிலும், வழிவகைகளிலும், வருவாயிலும் அக்கரை காட்டுவதும் போல் வேறு எதுவும் உன்னை அல்லாஹ்வின் அருளையும் ஆசியையும் பெறாது தடுப்பதில்லை. ஜனங்களை நம்பி நீ வாழத் துணிவது நபி பெரு

மான் (ஸல்) அவர்களால் அனுஷ்டிக்கப்பட்ட ஜீவித முறைப்படி நடக்கத் தடையாய் வந்து சேர்கிறது. நீ ஜனங்களுடன் இருக்கும்வரை, அவர்கள் வெகுமதிகளை யும், உதவிகளையும் எதிர்பார்த்து, அவர்கள் வாயிலில் ஆவலுடன் காத்துக்கிடக்கும்வரை, அல்லாஹ்வின் சிருஷ்டிகளை அவனுக்கு இணைவைப்பவனாகி விடுகிறாய். அதற்காக நபி பெருமான் (ஸல்) அவர்களின் குண ஒழுக்கப்படியான ஜீவியம் நடத்த வகையற்றவனாய் அதாவது இம்மையின் ஹலாலான சம்பாத்தியத்துக்கு மார்க்கமற்றவனாய்த் தண்டிக்கப்படுவாய்.

ஜனங்களை நம்பி வாழ்வதையும், அவர்களை இறைவ னுடன் இணைவைப்பதையும் விட்டொழித்த பின் நீயாகப் பொருளீட்ட முயன்று, உன் சொந்த உழைப்பில் வாழ்பவனாய், உழைப்பையே நம்பியவனாய் அதிலேயே திருப்தியுற்றவனாய் ஆன பின்னும், உன் இறைவனின் அருளை மறந்தவனாய் இருந்தால், நீ 'குப்ர்' ஆனதையே செய்பவனாகிறாய்; உன்னுடைய இந்தக் 'குப்ர்' முந்திய 'குப்'ரைவிடமிகவும் நாசூக்கானது. அதற்கும் அல்லாஹ் உன்னைத் தண்டிப்பான். தன் அருட்கொடைகளி லிருந்து உன்னை அப்பாலாக்குவான்; உன்னோடு நேரடித் தொடர்பு எதுவும் வைக்கமாட்டான்.

இந்நிலையை விட்டு விலகி உன்னகத்திலிருந்து 'குப்'ரை அகற்றியதும், உன் சம்பாத்தியத்தையும், திற மையையும், சக்தியையும் நீ நம்பி இருந்ததை விடுத்து அல்லாஹ்வே ஜீவனம் அருளுபவன், சுகத்தின் காரணங் களை உண்டாக்குபவனும், சம்பாதிக்கப் பலமளிப்பவ னும், சகல நல்லவற்றின்மீதும் சக்தியை அளிப்பவனும் அவன்தான்; ஜீவிதம் அவன் வசமேயுள்ளது என்பதை நீ உணர்ந்ததும், சில சமயம் ஜனங்களிடம் சோதனையான நேரத்தில் நீ கேட்பதன் மூலம் உனக்குத் தேவை யானதைக் கிடைக்கச் செய்கிறான். சில வேளைகளில்

நீ அவனிடம் நேரடியாகக் கேட்டதற்காகக் கிடைக்கச் செய்கிறான்; மற்றும் சில சமயம் உன் உழைப்புக்கு ஊதியமாக அதைக் கிடைக்க வைக்கிறான்; வேறு சில சந்தர்ப்பங்களில் காரண காரியங்களை நீ உணராவண்ணம் தானாகவே அவன் அருட்கொடைகளாக நீ அடையும் படி செய்கிறான்.

உனக்கும் அந்த அல்லாஹுத்த ஆலாவின் அருட் கொடைக்கும் இடையிலுள்ள திரையை அவன் அகற்றி, உனக்குத் தேவையான சமயம், உன் தேவைக்கேற்ற அளவில் தன் நல்லருளால் உனக்கு உதவி, நோயாளிக்கு உற்ற நண்பனான வைத்தியன் போல் அவன் நடந்து கொள்கையில் நீ அவன் முன் விழுந்து, அவன் பாதகாவ லில் ஆகி, அவனையன்றி வேறு எதனிடமும் மனம் திரும் பாதபடி காவல் தேடியதும், அவனும் தன் அருட் கொடைகளால் உனக்குத் திருப்தியளிக்கிறான்.

இவ்விதமாக உன் இதயத்திலிருந்து சகல நோக்கங் களையும், சகல ஆசைகளையும், சகல இன்பங்களையும், சகல லக்ஷியங்களையும் அவன் அகற்றியதும் அவன் நோக்கமன்றி வேறு எதுவும் உன் இதயத்தில் இருப்ப தில்லை. இதனால் அவன் உனக்காக ஒதுக்கியுள்ள பங்கு - உன்னை விட்டுத் தப்பமுடியாத அப்பங்கு - வேறு யாருக் காகவுமன்றி உனக்காகவென்றே இருக்கும் பங்கு - உன்னை வந்தடையவேண்டுமென்று அவன் நாடினால், உன்னில் அதற்கான பற்றுதலை உண்டாக்குகிறான்; அதை யும் உன்னை நோக்கி முடுக்குகிறான்; அதன் பயனாய் உனக் குத் தேவையுள்ள சமயம் அது உன்னை வந்தடையும். அப்போது அதற்காக நன்றியளிக்க உனக்கு அவன் பல மளிக்கிறான். அவ்வுதவி அவனிடமிருந்தே வருகிறது என்று தெரியக்கூடிய ஞானத்தையும் உனக்குத் தரு கிறான்; நீ அவனிடம் நன்றி காட்டுவதற்காகவே அது உனக்குத் தரப்பட்டது என்ற ஞானத்தையும் அருளு

கிறான். இதன் மூலம் ஜனங்களை விட்டு அதிகமும் விலகியிருக்கவும், அவனையன்றி மற்றவை உன் உள்ளத்தில் புகாதபடி தடுத்துக்கொள்ளவும் நீ கொள்ளும் எண்ணத்தைப் பலப்படுத்துவான்.

உன் ஞானம் வலுப்படுத்தப்பட்டு, நிச்சயத்துவம் உறுதியாகி, உன் இதயம் விரிவடைந்து, ஒளிபெற்று அதன் மூலம் அவனுக்கு நீ அருகிலிருப்பதும், அவன் முன் உனக்குள்ள அந்தஸ்தும், உன் நம்பிக்கையும், அவன் இரகசியங்களைப் பாதுகாக்கும் உன் தகுதியும் அதிகமானதும், உனக்கு ஒரு நற்சயிக்கினையாகவும், உன் கண்ணிய உயர்வின் அறிகுறியாயும் அருளப்பட்ப் போகும் அருட்கொடைகள் எப்போது உன்னை வந்தடையும் என்ற ஞானம் உனக்குக் கிட்டிவிடும். இது அவனிடமிருந்து வரும் ஒரு கருணையின் செயலாகவும், அன்பான காரியமாகவும், வழிகாட்டுதலாகவும் இருக்கும். அல்லாஹ் சொல்கிறான்: "இஸ்ராயீலின் சந்ததிகளுக்கு நாம் அதை ஒரு வழிகாட்டியாக்கினோம். நம் கட்டளைகளைப் பொறுமையுடனும், நமது அறிவிப்புகள் வெளியாகுமென்று நிச்சமான உறுதியுடனும் இருந்த ஒரு கூட்டத்தாரை அவர்களுக்கு வழிகாட்டும் தலைவர்களாக ஆக்கினோம்." (32 : 23, 24) என்று.

மேலும், "நம்முடைய வழியில் நடக்கச் சிரமப்பட்டு முயற்சி செய்பவர்களைப் பொறுத்தவரை, நம் வழிகளில் அவர்கள் செல்வதற்காக நாம் நிச்சயம் அவர்களுக்கு வழி காட்டுவோம்" (29 : 69) என்றும் அல்லாஹ் கூறியுள்ளான்.

அல்லாஹு ஸுப்ஹான ஹுவத்த ஆலா மேலும் சொல்லியுள்ளான்: "மேலும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; அவன் கற்றுத் தருவான்; பிரபஞ்சத்தையே அடக்கியாளும் சக்தியைத் தந்தருள்வான்; இதற்குக் குழப்பமற்ற தெளிவான அனுமதியையும், சூரியன்

போன்று பிரகாசமான அறிகுறிகளையும், சகல இனிய வற்றையும்விட இனிமையான வார்த்தைகளையும், கொஞ்சமும் ஐயத்துக்கு இடமற்ற தெளிவான உண்மையான வெளியீட்டையும், மிருக இச்சையின் தூண்டுதல்களிலிருந்தும், சபிக்கப்பட்ட ஷைத்தானுடைய ஊசாட்டங்களிலிருந்தும் விடுபட்ட பாதுகாவலையும் தந்தருள்வான்.''

மேலும் அல்லாஹ், தன் வேதமொன்றில் கூறியுள்ளதாவது: ''ஆதமுடைய மக்களே, நான் தான் அல்லாஹ். என்னையன்றி வணக்கத்துக்குரியது வேறு எதுவுமில்லை. நான் எந்த ஒரு வஸ்துவையும் 'ஆகுக' என்றதும் அது உண்டாகிவிடுகிறது .எனக்குக் கீழ்ப்படியுங்கள்; அதன் மூலம் நீங்களும் ஒரு வஸ்துவை 'ஆகுக' என்றதும் அஃது உண்டாகிவிடும்படியான சக்தியுடையவர்களாக உங்களை நான் ஆக்கிவிடுவேன்.'' ஆதமுடைய மக்களில் பல நபிமார்களுக்கு, வலிமார்களுக்கு, விசேஷ அருள்பெற்ற நல்லடியார்களுக்கு அவன் இவ்விதச் சக்தியைக் கொடுத்திருக்கிறான். (பதினாறும் மகாலா)

7

அல்லாஹ்வை நெருங்கி, அவன் கவர்ச்சியாலும் உதவியாலும் அவனுக்கு அருகில் ஆகும்போது- அதாவது நீ சிருஷ்டியையும், உன் ஆசையையும், நோக்கத்தையும் விட்டு அப்பாலாகி அவன் செயலிலும் நோக்கத்திலும் இணைந்தவனாகி, அதில் அவன் உத்தரவோ, செயலோ, கட்டளையோ இன்றி உன்னிடமோ உன் மூலமோ எந்த அசைவுமே இல்லாது ஆகும் அந்த சந்நிதான நிலை எய்தியதும், 'பனா' என்ற நிலையை நீ அடைந்துவிடுகிறாய். ஆனால், அவனோடு ஐக்கியப்பட்டிருப்பது என்பது, அவன் சிருஷ்டிகள் எதனுடனும் ஒரு குறிப்பிட்ட, ஆனால் புரிந்துகொள்ளாத முறையில்

ஐக்கியப்பட்டிருப்பதைப் போன்றன்று. "எதுவும் அவனுக்கு இணையானதாய் இல்லை; அவன் யாவையுங் கேட்பவன் ; பார்ப்பவன்."

சிருஷ்டியாளனை ரப்பு, தன் சிருஷ்டியால் உண்டான எதற்கும் உவமையானவனாகவோ, ஜாடையுடையவனாகவோ இல்லாது, சகலவற்றிற்கும் மேற்பட்டவனாய் இருப்பதால் அவனோடு ஐக்கியப்பட்ட அனுபவமுடையவர்கள், தாம் அதை உணர்ந்த காரணத்தால், அவனோடு ஐக்கியமாவது என்ன என்பதையும் அறிவார்கள். இவர்களிலுள்ள ஒவ்வொருவரும்கூடத் தமக்கேயுரிய, மற்றவர் கண்டிராத முறையில் வேறுபட்ட அனுபவத்தையே இதில் கண்டிருப்பார்கள்.

நபிமார்களிலும், ரஸூல்மார்களிலும், அவ்லியாக்களிலும் ஒவ்வொருவருக்கும் மற்ற யாருக்கும் தெரியாத ஒரு ரகசியம் தெரிந்திருந்தது. இதனால் சிற்சில சமயங்களில் முரீதுக்குக் தெரிந்திருந்த ஓர் அந்தரங்கம் ஷைகுக்குத் தெரியாதிருந்தது. முரீது தன் ஷைகு அடைந்த ஆத்மஞான உயர்வை எய்தியவரான நிலையிலுங்கூடத் தன் ஷைகுக்குத் தெரிந்த ஓர் இரகசியம் அவருக்குத் தெரியாதிருக்கும். ஷைகின் ஆத்மஞான நிலையை முரீது அடைந்ததும், அவர் ஷைகிடமிருந்து துண்டிக்கப்பட்டதும் அல்லாஹ் அவருடைய மேல் பார்வையாளனாகிறான். அவன் அவரைச் சிருஷ்டிகளிலிருந்தே முற்றும் துண்டித்துவிடுகிறான்.

இரண்டு ஆண்டுகள் குழந்தைக்குப் பாலூட்டிவிட்டுப் பிறகு நிறுத்திவிடும் தாதியைப் போன்றிருக்கிறார் ஷைகு. கீழான ஆசைகளும் மனித நோக்கங்களும் மறைந்த பின்னர் சிருஷ்டிகளோடு எத்தொடர்பும் இருப்பதில்லை. கீழான ஆசைகளும், நசுக்கப்பட வேண்டிய நோக்கங்களும் தன்னை ஆட்கொண்டிருக்கும்வரைதான் முரீதுக்கு ஷைகின் உதவி தேவையாய் இருக்கிறது. இந்த

ஊனுடம்பின் பலஹீனங்கள் போனபின், முரீதிடம் எந்த அப்பழுக்கும், குறைபாடும் இருக்காதாகையால், அவருக்கு ஷைகு தேவையற்றவராகிவிடுகிறார்.

இவ்விதம் நாம் விவரித்தபடி நீ அல்லாஹ்வுக்கு நெருக்கமானதும், அவனுக்குப் புறம்பான யாவற்றினிடமிருந்தும் பாதுகாப்புப் பெற்றவனாகிவிடுவாய். அவனிடமன்றி வேறு ஜீவிதத்தையே காணமாட்டாய். உனக்கேற்படும் லாபத்திலோ, நஷ்டத்திலோ, வெகுமதியிலோ, அது கிட்டாமையிலோ, அச்சத்திலோ, நம்பிக்கையிலோ, பாதுகாப்புத் தேடுவதற்குரியவனான, அச்சப்படுவதற்குரியவனான ஹக்குத்த ஆலாவையே காண்பாய். ஆகவே, சதா அவன் செயல்களையே நோக்கிக் கொண்டிரு! இவ்வுலக, மறுவுலக அவன் சிருஷ்டிகள் சகலவற்றிலுமிருந்து துண்டிக்கப்பட்டவனாக அவனுக்குக் கீழ்ப்படிதலிலேயே சதா அவன் உத்தரவுகளை எதிர்பார்த்துக்கொண்டிரு. அவன் சிருஷ்டிகள் எதனிலும் உன் இதயம் ஈடுபட இடங்கொடாதே!

சிருஷ்டிகள் அனைத்தும் ஒரு மனிதன் என்று வைத்துக்கொள்; அம்மனிதனை மாபெரும் ராஜ்யமுள்ள, பல மிக்க, பராக்கிரமம் பொருந்திய, சர்வசக்தி வாய்ந்த ஓர் அரசன் கைது செய்கிறான் என்றும் வைத்துக்கொள். அதே அரசன் அம்மனிதனின் கழுத்திலும், கால்களிலும் விலங்கிட்டு, வேகமும், ஆழமும் பொருந்திய அகன்ற ஓர் ஆற்றின் கரையிலே ஒரு விருக்ஷத்தோடு சேர்த்து அவனைக் கட்டிப்போட்டு, யாரும் நெருங்க முடியாத ஒரு சிம்மாசனத்தில் அந்த அரசன் அமர்ந்துகொண்டு, தன்னைச் சுற்றிலும் அம்புகளும், வில்களும், ஈட்டிகளும், மற்றும் விவரிக்க முடியாத பற்பல ஆயுதங்களும் குவிந்து கிடக்க, அவற்றிலிருந்து அவன் விரும்பிய ஆயுதத்தை எடுத்துக் கட்டிப்போடப்பட்டுள்ள அந்த மனிதன் மீது வீசிக்கொண்டே யிருக்கிறான் என்றும் வைத்துக்கொள்.

இவற்றை யெல்லாங்கண்ட பின்னும் ஒருவன் தன் கவனத்தை அரியாசனத்துள்ள அரசனிடஞ் செலுத்தாது, அவனிடம் அச்சங்காட்டாது, நம்பிக்கை கொள்ளாது, கட்டிப்போடப்பட்ட மனிதனுக்குப் பயப்படவும், அவனிடம் நம்பிக்கை வைக்கவும் செய்வானாயின் அத்தகையவனை யாராவது பாராட்டுவார்களா? அவனை மூடன், அறிவற்றவன், கிறுக்கன், மிருகம் என்று அறிவுடையார் இகழார்களா?

எனவே, கண்ணிருந்தும் குருடனாகாமல், அல்லாஹ்வின் பாதுகாவலைத் தேடு. சேர்ந்த பின்னும் பிரிக்கப்படுவது போலும், அருகிலிருந்த பின்னும் அப்பாலகற்றப்பட்டது போலும், வழிகாட்டுதலிலிருந்த பின்னும் வழி தவறியது போலும், நம்பிக்கை கொண்ட பின்னும், நம்பிக்கை யற்றுப்போனது போலும் ஆகிவிடாதே!

உலகம் நாம் குறிப்பிட்ட ஆற்றைப் போன்று ஓடிக் கொண்டேயிருக்கிறது. நாளுக்கு நாள் அதன் பிரவாகம் அதிகரிக்கிறது. மனித இனத்தின் மிருக இச்சைகளும், போகங்களும் அதில் வந்து சேர்ந்து அதை மேலும் மேலும் பிரவாக மெடுத்தோடச் செய்கின்றன. அம்புகளும் மற்ற ஆயுதங்களுமோ வெனின், அவைதாம் மனித இனத்துக்குத் தக்தீர் எனும் விதி வசம் கொண்டு வரும் சோதனைகளாகும். இவ்வுலக வாழ்வின் தலையாய அம்சம் மனிதனுக்குச் சோதனைகளும், கஷ்டங்களும், துயரங்களும், போராட்டங்களும் ஏற்படுவதாகவே இருக்கிறது. அவர்கள் பாக்கியமாகவும், போகமாகவும் கருதுபவைகூடத் துயரங்களால் சூழப்பட்டே யிருக்கின்றன.

இவ்விஷயத்தை எந்த அறிவாளியும் கூர்ந்து கவனிக்கும் போது, சத்தியத்துவத்தின் ஞானம் ஒரு சிறிதேனும் அவனுக்கு இருக்குமாயின், ஆகிரத்தில் வரப் போகிறதை யன்றி வேறு உண்மையான வாழ்க்கையே

இல்லை என்பதைப் புரிந்து கொள்வான். "ஆகிரத்தின் வாழ்க்கையை யன்றி வேறு வாழ்க்கை இல்லை" என்று தான் நம்பெருமானார் (ஸல்) அவர்களும் அருளி யுள்ளார்கள்.

குறிப்பாக இஃது ஒரு மூமின் விஷயத்தில் முற்றும் உண்மையாகும். அதனால்தான் நம் பெருமான் (ஸல்) அவர்கள் திருவுள்ளமானார்கள்: "இவ்வுலகம் மூமினுக்குச் சிறைச்சாலையாகவும் காபிருக்குச் சுவர்க்கமாகவும் இருக் கிறது" என்று. "நன்மையாளன் தடைகளுக்குட்பட்ட வன்" என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்நிலையில் இவ்வுலகில் சுக வாழ்க்கை வாழ்வ தென்பது எப்படிச் சாத்தியமானது? எப்படித் தான் அதை விரும்ப முடியும்? எனவே, உண்மையான இன்பம் அல்லாஹு ஸுப்ஹான ஹுவத்த ஆலாவுடன் முற்றும் தொடர்பு கொண்டவனாக ஆவதன் மூலமே, அவனோடு இணைந்து நடப்பதன் மூலமே, அவன் முன் பூரணமாகச் சரணாகதி யடைந்துவிடுவதன் மூலமே சாத்தியமானதாகும். நீ இதைச் செய்கையில் இவ்வுலகி லிருந்து விடுபட்டவனாவாய். அப்போது உன்மீது அல்லாஹ் கருணையையும், சுகத்தையும் அன்பையும், வளத்தையும், நன்மைகளையும் சொரிவான். (பதினே ழாம் மகாலா)

8

எனது பிரிவு அறிவுரை இது: உனக்கு நேரும் சங்கடம் எதைப் பற்றியும், நீ நண்பனோ பகைவனோ எவனிடமும் முறையிடாதே! இச்சோதனையை உண் டாக்கியதற்காக உன் ரப்பைக் குறை கூறாதே! உனக்கு நேரும் நன்மையை நீ தெரியப்படுத்தலாம்; அதற்காக நீ காட்டக்கூடிய நன்றியை வெளியிடலாம். அதிலும் உன் நன்றியை வெளியிடுவதற்காக ஒரு பொய்யைச் சொல்வதைவிட, உன் வெளிரங்க நிலைமை பற்றிய குறை

பாட்டை விளம்பரப்படுத்துவதைவிட உண்மையானதைச் சொல்லிவிடுவது நல்லது. அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பெறுதவன் யார்? சர்வ சக்தனுன அல்லாஹுத்த ஆலா சொல்கிறுன்: "அல்லாஹ்வின் அருட்கொடைகளை எண்ணிப் பார்க்கத் துணிந்தால், உங்களால் அவற்றை எண்ணி முடிக்க முடியாது" (14:34) என்று. உன்னிடம் அவன் அருட்கொடைகள் எத்தனை இருக்கின்றன! ஆனல் நீ அவற்றை உணர்வதில்லை. சிருஷ்டிகளிலுள்ள எதனுலும் நீ ஆறுதல் பெற்றவனுக ஆகிவிடாதே! அவற்றில் பற்றுதல் வையாதே! உன் நிலையை யாரிடமும் சொல்லவும் வேண்டாம்! சர்வ புகழுக்கும் சக்திக்கும் உரிமையாளனுன அல்லாஹ்விடமே நீ பற்றுதல் கொள்ள வேண்டும்; அவனிடமே ஆறுதல் தேட வேண்டும்; அவன் மீது நீ கொண்டுள்ள குறைபாடுகளை அவனிடமே தெரிவி.

வேறு யாரையும் நீ எதிர்நோக்க வேண்டாம்! ஏனெனில், வேறு எதிலும் நல்லது-கெட்டது, கைப்பற்றல்-கைவிடல், கௌரவம்-அகௌரவம், ஏற்றம்-இறக்கம், வறுமை-வளம், அசைவு-ஸ்தம்பிதம் ஆகியவை இல்லை. யாவுமே அல்லாஹ்வால் சிருஷ்டிக்கப்பட்டவை; இவற்றின் இயக்கம், அவன் உத்தரவையும் அனுமதியையுங் கொண்டு நடப்பதாய், அவன் கைக்குள் அடங்கியதுதான். அவன் குறித்துள்ள காலம்வரை அவை இயங்கும். அவன் நிர்ணயித்துள்ள கால அளவு வரையே யாவும் தரிபட்டிருக்கும். அவன் முன்னரேயே செய்தவை முன்பேயுள்ளவை என்றோ, பின்பு செய்தவை பின்பு உண்டானவை என்றோ கூறிவிடமுடியாது. உனக்கு ஏதாவது சங்கடமுண்டாக்க அல்லாஹ் நாடுவானேயாகில், அவனைத் தவிர வேறு யாராலும் அதைத் தடுக்க முடியாது. அவன் நன்மை செய்ய நாடுவானுகிலும் அதையும் யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

நீ வசதியுடனும் கொஞ்சம் சௌகரியமாகவும் இருந்து கொண்டு, இவற்றில் இன்னும் அதிக வசதியும் சௌகரியமும் பெறவேண்டுமென்ற அவாவில்-உனக்குத் தரப்பட்டுள்ள வசதி, சௌகரியங்களின் தன்மையைப் பற்றிக் கண்ணை மூடிக்கொண்டு முறையிட்டால், அல்லாஹ் உன்னிடம் கோபமடைவான்; உன்னிடமுள்ள வசதியையும் சௌகரியத்தையும் பறித்துவிடுவான். உன் முறையீட்டிலுள்ள நிலையை அல்லாஹ் உண்மையாக்குவதோடு உன் தொல்லைகளை அதிகமாக்கித் தன் தண்டனையையும், உன் மீதுள்ள வெறுப்பையும், கோபத்தையும் அதிகரிக்கச் செய்வான்; அவன் பார்வையை விட்டும் கீழே விழும்படியும் செய்வான்.

எனவே, உன் உடல் சதை கத்தியால் துண்டங்களாக்கப்படினும், உன்னால் முடிந்தவரை குறை கூறாது எச்சரிக்கையாய் இருந்து கொள்! உன்னைக் காப்பாற்றிக் கொள்! அல்லாஹ்வுக்கு அஞ்சு! அல்லாஹ்வுக்கு அஞ்சு! அல்லாஹ்வுக்கு அஞ்சி நட! நீ தப்பிக்கொள்! தப்பிக் கொள்! உஷார்! உஷார்!

ஆதமுடைய மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளில் மிகப் பல அவர்கள் இறைவனை ரப்பைப் பற்றிக் குறை கூறுவதால் வருவனவேயாகும். யாராயினும் அவன் மீது குறைகூறுவதென்ன நியாயம்? அவன் கருணையாளர்களுக்கெல்லாம் கருணையாளன்; நீதிபதிகளுக்கும் உன்னதமான நீதிபதி; பொறுமையின் பொக்கிஷம். அருள் சொரிபவன்; தன் அடியானிடம் அன்பாய் இருப்பவன்; தன் அடியானுக்குப் பாசமான உறவினனையும், பொறுமையும், அன்பும், பரிவும் மிகுந்த வைத்தியனையும் விளங்குகிறான். பாச மிக்க அன்பு இதயம் கொண்ட ஒரு தந்தையிடமோ தாயிடமோ நீ குறை காண முடியுமா?

நம் பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: "ஒரு தாய் தன் மகனிடம் காட்டுவதைவிட அதிகமாக

அல்லாஹ் தன் அடியானிடம் கருணை காட்டுபவனாய் இருக்கிறான்" என்று. ஹே ஏழையே, உயர்ந்த பக்ஷ நல்லொழுக்கமுடையவனாய் இரு! துயரம் நேர்கையில், உன் பொறுமையெல்லாம் எல்லை கடந்துவிடினும் பொறுமையுடனிரு! உள மகிழ்ச்சியுடன் அல்லாஹ் வுக்கு அடிபணிவதன் மூலம் பொறுமையைப் பற்றிப் பிடித்தவனாய் இரு! அவனிடம் காட்டும் இசைவையும், மனப் பூர்வமான பணிவையும் பற்றிப்பிடித்தவனாய் இரு! இன்னும் அதிகத் அதிருப்தியும் சமாதானமும் அடைந்தவனாகு!

நீ இன்னும் வாழ்க்கையிலிருக்கக் கண்டால் அதை விட்டும் மறைந்து போ! இவ்விதம் நீ மறைந்துவிட்டால், ஹே தேடற்கரிய மாணிக்கமே, நீ எங்கே கிடைப் பாய்? எங்கே உன்னைத் தேடுவது? நீ அல்லாஹ்வின் இவ்வார்த்தைகளைக் கேள்விப்பட்டதில்லையா: "யுத்தம் புரிவது நீங்கள் வெறுக்கும் காரியமாய் இருந்தும், உங்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ளது. ஒரு விஷயம் நன்மை யானதாய் இருந்தும் நீங்கள் அதை வெறுக்கலாம்; ஒரு விஷயம் உங்களுக்குத் தீமையானதாய் இருந்தும் அதை நீங்கள் விரும்பலாம். அது (பற்றிய நன்மை தீமை) அல் லாஹ்வுக்குத் தெரியும்; உங்களுக்குத் தெரியாது." (2:216)

வஸ்துக்களின் உண்மையான நிலை உனக்குத் தெரியாததாகச் சுருட்டப்பட்டிருக்கிறது; அதிலிருந்து உன் பார்வை திரையிடப்பட்டுள்ளது. எனவே, அதை விரும்புவதிலோ வெறுப்பதிலோ முறை தவறி நடந்து கொள்ளவேண்டாம். 'ஸாலிஹ்' என்ற முதல் படியை நீ அடைந்துவிட்டவனாய் இருப்பின் ஷரீஅத்தின்படி ஒழுகி வா! 'விலாயத்' நிலையில் அவன் உத்தரவுகளுக்கு அடிபணிந்து நட. இந்த இரண்டாவது நிலையில் ஆசை யின் வாழ்க்கையிலிருந்தும் மரணித்தவனாய் இரு. இந்

நிலைக்கு மேலே செல்லவேண்டாம். அல்லாஹ்வின் செயல்கண்டு திருப்தியடை. அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள். அப்போது கடைசி நிலைகளான அப்தால், கௌது, வலித்தீக் ஆகியவற்றுள் மறைந்துபோவாய். விதி வசத்தின் பாதையில் தடை போடாதே; குறுக்கிடாதே; குறை கூறுவதிலிருந்து உன் நப்ஸையும், உன் இச்சையை யும், அப்பாலாக்கு; உன் நாவை அவ்விதம் செய்ய விடாது அடக்கிக்கொள்.

இதை நீ செய்த பின்னர், விதிவசம் நல்லதாய் இருப்பின், உன் இறைவன் அதிகமான நன்மையை அருளுவான்; மகிழ்ச்சிகரமான சந்தோஷ வாழ்க்கை யைத் தருவான். அது கெட்டதாய் இருப்பின், அத னிடையில் அவன் உன்னைப் பாதுகாப்பான்; நீ அவ னுக்குப் பணிந்து நடப்பதன் மூலம் அவன் எந்தக் குறை பாட்டுக்கும் உன் மீது இடமில்லாது செய்வான். அந்த விதிவசமும் முதிர்ந்த நேரமும் உன்னை விட்டகலும் வரை அதிலேயே உன்னை வைத்திருப்பான். இரவு விடிந்து பகலாவது போல, பனிக்காலத்தின் குளிர் மறைந்து வசந்தம் வருவதுபோல உன்னை மகிழ்ச்சிகர மான நிலைக்கு இட்டுச் செல்வான். இதில் உனக்கு ஓர் உதாரணமுள்ளது; இதிலிருந்து நீ ஒரு பாடங் கற்றுக் கொள்ளவேண்டும்.

மேலும் மனிதனின் அகத்தில் பல வகைப் பட்ட பாவங்களும் குற்றங் குறைகளும் நிறைந்திருப் பதால் அல்லாஹ்வின் தோழமைக்கு அவன் லாயக் கற்றவனாய் இருக்கிறான். இப்பாவங்களின் அசுத்தத்தை அவன் முற்றும் கழுவிக்கொண்டாலன்றி அவன் அல்லாஹ்வின் நட்பைப் பெற இயலாது. ஒரு சாதா' ரண அரசனோடு நெருங்கிப் பழகவே ஒருவன் துர்நாற் றத்தையும், அழுக்கையும், மாசுகளையும் அகற்றியவனாக வரவேண்டியதிருக்கும்போது, தான் எனும் அகந்தையி

லிருந்து தன்னைப் பரிசுத்தம் செய்பவன் மட்டுமே அல்லாஹ்வின் சந்நிதானத்தை முத்தமிட முடிவதில் வியப்பில்லையல்லவா! இவ்விதம் கஷ்டங்கள் உன்னைப் பரிசுத்த மாக்குபவையாகவும், பாப நிவர்த்தியடையச் செய்பவையாகவும் இருக்கின்றன. நபி பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: "ஒரு வருஷம் செய்த பாவத்துக்கு ஒரு நாள் ஜுரம் பாவ நிவர்த்தியருளுவதாய் இருக்கிறது" என்று. (பதினெட்டாம் மகாலா)

9

நீ நம்பிக்கைத் திடம் குறைந்தவனாய் இருக்கும்போது உனக்களிக்கப்படும் வாக்குறுதி நிறைவேற்றப்படுகிறது; உன் நம்பிக்கை குகராமலும், உன் உறுதி குலையாமலும் இருப்பதற்காக இவ்விதம் நிறைவேற்றப்படுகிறது. ஆனால், இந்த நம்பிக்கையும் உறுதியும் பலப்பட்டு, உன் இதயத்தில் வேரூன்றியதும் அவன் வார்த்தைகளால், "நிச்சயமாக இன்று நம் சந்நிதானத்தில் நீர் கண்ணியமும், நம்பிக்கை விஸ்வாசமும் பெற்றுவிட்டீர்" (12 : 54) என்று விளிக்கப்படுவாய்.

இவ்விதம் பன்முறை நீ விளிக்கப்படுவாய்; அதன் பின் நீ தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள்ளும் தேர்ந்தெடுக்கப்பட்டவனாய் ஆவாய். உன் சித்தம் என்று ஒன்றும், உன் நோக்கம் என்று ஒன்றும், நீ விரும்பும் உன் செயல் என்று ஒன்றும் இல்லாமலும், நீ காணும் சமீபத்துவம் என்று ஒன்றும், நீ வேட்கும் ஸ்தானம் என்று ஒன்றும் இல்லாமலும் உள்ள நிலைமையை அடைந்துவிடுவாய்.

பின்னர் எத்திரவமும் தங்காத ஓர் ஓட்டைப் பாண்டம்போல் ஆகிவிடுகிறாய்; அதனால் எந்நோக்கமும், பழக்கமும், இம்மை அல்லது மறுமைபற்றிய எந்த முடிவும் உன்னில் தங்காதபடியும், அல்லாஹு ஸுப்ஹானஹு வல்லாத சகலவற்றிலிருந்தும் துப்புரவானவனாகவும், அல்லாஹ்வைக்கொண்டு திருப்தியுற்றவனாகவும், அல்

லாஹ்றவின் திருவுளப் பொருத்தம் வாக்களிக்கப்பட்டவனுகவும், அல்லாஹ்றவின் சகல செயல்களாலும் பாக்யமும் இன்பமும் அடைபவனுகவும் நீ இருப்பாய்.

அப்போது உனக்கு ஒரு வாக்களிக்கப்படும்; நீ அதனுல் திருப்தியடைகையில், சித்தத்தின் எந்த அடையாளமாவது உன்னிடம் காணப்படாவிட்டால், அதைவிட உயரிய மற்றொரு வாக்குறுதி உனக்குத் தரப்படும். அது அதிகக் கண்ணியமானதாகவும், மனத் திருப்தியளிப்பதாகவும் இருக்கும்; ஞானத்தின் கதவுகள் உன் முன் திறக்கப்படும்; தெய்வீக விவகாரங்களிலும், ஞானத்தின் உண்மையிலும், முந்திய வாக்குறுதியைப் பின்வந்த வாக்குறுதியாக மாற்றியதன் ஆழ்ந்த நோக்கத்திலும் நீ தெளிவு பெறுவாய். உன் புதிய அந்தஸ்தில் உன் 'ஹால்' எனும் ஆத்ம நிலையைப் பாதுகாத்தல் அதிகரிப்பதையும் உணர்வாய்.

மேலும், மர்மங்களைப் பேணும் பொறுப்பு ஒப்படைக்கப்படும் ஆத்மீக அந்தஸ்தை அடையப் பெறுவாய்; உன் இதயம் விரிவுபடுவதையும், உன் உள்ளம் அதிக வெளிச்சம் பெறுவதையும், உன் நாவன்மை அதிகரிப்பதையும், அதிகமான ஞானமும் அன்பும் உன்னில் நிலை நிறுத்தப்படுவதையும் உணர்வாய். இதன் மூலம் ஜனங்கள் உன்னை நேசிப்பார்கள்; ஜின்னுகளும் மனிதர்களும், இம்மை மறுமையிலுள்ள சகலரும் உன்னிடம் அன்பு பாராட்டுவார்கள். நீ அல்லாஹ்றவின் அன்பனுனதும், அல்லாஹ்றவுக்கு உட்பட்ட மக்கள் யாவரும் அவன் உன்னிடம் கொள்ளும் அன்பைத் தாங்களும் உன்னிடம் காட்டுவார்கள்; அவன் காட்டும் வெறுப்பையும் அவர்களும் காட்டுவார்கள்.

எந்த விஷயத்திலும் ஆசையற்ற இந்த அந்தஸ்தை நீ அடையும்படி செய்யப்படுவாய். அதன்பின் நீ எதையாவது விரும்பும்படி செய்யப்பட்டு, அந்த ஆசையை

விட்டும் அப்பாலாக்கப்படுவாய்; அதைவிட்டும் தூரமாக்கப்படுவாய்; மறுமையில் அதைவிட மேலானதும் அல்லாஹ்வுக்கு மிகவும் அருகிலாக்குவதுமான ஒன்று அதற்குப் பகரமாகத் தரப்படும். அது சுவர்க்கத்தில் உன் கண்களைக் குளிரச் செய்வதாய் இருக்கும்.

இந்த நிலையற்ற, துன்பம் நிறைந்த உலகில் நீ அதைக் கேட்கவோ, இச்சிக்கவோ, நாடவோ செய்யாது படைத்து வெளிப்படுத்தும், தரும், தராது நிறுத்தும், இப்பூமியின்மீது அருட்கொடைகளைப் பரப்பிய, வானை உயரமாக ஆக்கிய ரப்பின் பக்கமே கவனம் செலுத்தியவனாய் இருப்பின், அதற்கு இணையான ஒன்று உனக்கு அளிக்கப்படும்; அல்லது அதைவிடக் கீழான ஒன்று உனக்கு அளிக்கப்படும். முதலில் நீ அதை விட்டு அப்பாலாக்கப்பட்டு, அதற்குப் பகரமானது மறுமையில் ஸ்திரமாக்கப்பட்டபின், நான் முன்னர் விவரித்த நிலைமையில் இது தரப்படலாம். (பத்தொன்பதாம் மகாலா)

10

உன் முயற்சி முழுமையையும் சேர்த்து, அல்லாஹு ஸுப்ஹானஹூவுக்கு அடிபணியாதிருப்பதிலிருந்தும் அப்பாலாகு. சத்தியத்துடன் அவன் வாயிலைப் பற்றிப் பிடி. அவனுக்கு அடிபணிவதில் உன் சக்தி முழுவதையும், திறமை முழுவதையும் ஈடுபடுத்து; மிகுந்த பணிவுடனும், தாழ்மையுடனும், மௌனமாயும், தலை தாழ்த்தியும் வேண்டுதல் விடுத்து, தௌபாச் செய்து அவனுக்கு அடிபணி; உன் மிருக இச்சைக்கு இடமளியாது, இம்மை மறுமைக்கான சம்மானம் எதையும் கேளாது உயர்ந்த அந்தஸ்தை வேட்காது அவனுக்கு அடிபணி. நீ அவன் அடியான்; அடியானும் அவனுடைய சகலமும் அவன் எஜமானனுக்கே உரியவை. அவனுக்கு எதிராக எந்த அடியானும் எதையும் விரும்ப முடியாது என்பதை நிச்சயமாய் உணர். நல்லொழுக்கம் பயின்று

உன் எஜமானனைக் குறை சொல்லாமல் இருந்துவா! அவன் சகலவற்றையும் ஒரு நிர்ணயத்தில் வைத்துள்ளான். அவன் முன்னால் வைப்பதை யாரும் பின்னால் தள்ள ஒண்ணாது; அவன் பின்னால் வைத்திருப்பதை யாரும் முன்னால் தள்ளவும் முடியாது. உன் விவகாரங்களில் அல்லாஹ் இவ்விதமே நடந்து கொள்கிறான். மறுமையில் உனக்குச் சாஸ்வதமான இருக்கையை அவன் தந்துள்ளான்; உன்னை அதன் எஜமானனாக்கியுள்ளான். மறுமையில் அவன் உனக்குத் தரப்போகிற நன்கொடைகளோ, எந்தக் கண்ணும் காணாததும், எந்தச் செவியும் கேளாததும், எந்த இதயமும் உணராததுமான தன்மையுடையவையாகும். அல்லாஹ் சொல்கிறான்: "கண்களைக் குளிர வைப்பவற்றில், அவர்கள் செய்ததற்குச் சம்மானமாக வைக்கப்பட்டுள்ளதை எந்த ஆத்மாவும் அறிந்து கொள்ள முடியாது" (32:17). அதாவது, இம்மையில் கட்டளைகளை நிறைவேற்றுவதில் முற்ற முயன்று, விலக்கல்களை ஒதுக்குவதில் அபாரமான சகிப்புத்தன்மை காட்டி, அவனால் கட்டளையிடப்பட்டுள்ளவைகளில் தம்மை முற்றும் அவனிடமே ஒப்படைத்து, அவன் செயல்கள் யாவிலும் மனப்பொருத்தம் காட்டுவோருக்கு இத்தகைய நன்கொடைகள் காத்திருக்கின்றன.

ஆனால் உலகச் செல்வங்கள் அளிக்கப்பட்டு, அவற்றுக்கு எஜமானனாக்கப்பட்டு, அவனால் ஆசீர்வதிக்கப்படுபவர்கள் நிலையோ, தண்ணீர் தங்காத, மரம் புல்பூண்டு வளராத எதுவுமே முளைக்காத வரண்ட நிலம் போன்றதாகும். இந்நிலத்தில் அல்லாஹ் பலவகை உரங்களையிட்டுப் பயிர் பச்சைகள் செழித்து வளரச் செய்துள்ளான். அதன் மூலம் இம்மையின் சுகபோகங்கள் உண்டாகியுள்ளன. ஆனால், இந்நிலத்தில் ஈமான் மரமும் நற்செயல்களென்னும் செடிகளும் வளரவேண்டும். அப்படி வளராவிடில், அப்பூமி காய்ந்து அதிலுள்ள சகலமும்

கருகிவிட இருக்கின்றன. அல்லாஹு ஸுப்ஹான ஹுவத்த ஆலா அது நன்கு செழித்து நல்லமுறையில் வளர்வதை விரும்புகிறான்.

செல்வனிடம் ஈமான் எனும் விருக்ஷம் இவ்விதம் பலமான வேர் பிடிக்காததாயும், பலஹீனமானதாயும் இருக்கும். தர்வேஷின் ஈமானைப்போல் அது பலமான தன்று. ஆனால், நான் முன்பே குறிப்பிட்ட பலமான ஈமான் உள்ள அடியானுக்கோ தேவையானது வேறு எதுவுமில்லை. அல்லாஹ் நேசிப்பதை அடையவும், அவன் அன்பால் திருப்தியுறவும் அவன் உனக்கும் நமக்கும் சக்தியைத் தந்தருள்வானாக! இவ்வுலகச் செல்வம் பெற்றிருப்ப வனின் வசதிகள் பறிக்கப்படுகையில் அவன் ஈமான் வரண்டு அவன் நிராகரிப்பவனாகி, முனாபிகுகள், காபிர் கள், முஷ்ரிகுகளின் கூட்டத்தில் சேர்ந்தவனாகி விடு வான். இச்செல்வனுக்கு அல்லாஹ் அளவற்ற பொறுமை யையும் சகிப்புத்தன்மையையும், நிச்சயத்துவத்தையும், ஞானத்தையும், பல் வகையான ஆத்மீக ஒளியையும் அளித்து அவன் ஈமானைப் பலப்படுத்தினால்தான் அந்தச் செல்வன் கடைத்தேறுவான். அப்போது அவன் தன் செல்வம் முழுவதும் மறையினும் அது பற்றிக் கொஞ்சமும் வருந்தமாட்டான். (இருபத்து நான்காம் மகாலா)

11

நீ புடமிடும் சிட்டியுள் இருக்கையிலேயே, உன் நப்ஸைக் கொன்றுகொண்டிருக்கையிலேயே, உன் இச்சை களுடன் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும்போதே, உன் நோக்கங்களை அகற்றமுயன்று கொண்டிருக்கை யிலேயே, இம்மை மறுமையின் பிரதிபயனை எதிர் பார்த்து நம்பிக்கை கொண்டிருக்கும் போதே - இவையா வற்றின் சின்னங்களும் உன்னிடம் வெளிப்படையாகத் தெரியும் போதே, நீ சுகத்தையும், மகிழ்ச்சியையும், பாதுகாப்பையும், அமைதியையும், பாக்யத்தையும் கவலை

யின்மையையும் வேட்கிறாய்! ஹே அவசரக்காரனே, சற்று நிதானி, மெதுவாக நட! ஹே எதிர்பார்ப்பவனே, உனது இந்நிலை நீடிக்கும்வரை கதவு மூடியே தான் இருக்கும் என்பதை உணர். ஓர் அடிமை தன்னை மீட்டுக்கொள்வதற்கான ஒப்பந்தம் அது; ஒரு காசு பாக்கியிருப்பினும் நீ விடுபட்டுவிட முடியாது. இம்மையின் ஓர் ஈச்சங்கனியையாவது சுகிக்கும் ஆசையோ, உன் மற்ற இச்சைகளோ, நோக்கமோ, தவிப்போ, இம்மை மறுமைக்குரிய எதையாவது காணும் வேட்கையோ இவற்றில் ஏதாவது ஒன்றேனும் உன்னிடம் இருக்கும்வரை நீ தன்னைப் பனுவாகும் வாயிலுக்கு வெளியில் நிற்பவன்தான் என்றாகிவிடும். நீ முற்றும் பூரணமாகப் பனுவாகி, நீ வைக்கப்பட்டுள்ள புடச் சிட்டியை விட்டு வெளியிலெடுக்கப்பட்டு முழுவதும் பக்குவப்பட்டவனாகியதும், உனக்கு ஆபரணங்களும் உயரிய ஆடைகளும் அணிவிக்கப்பட்டு மாபெரும் அரசனிடம் அழைத்துச் செல்லப்படுவாய். அங்கே, "நிச்சயமாக, நம் சந்நிதானத்தில் நீர் கண்ணியமும், நம்பிக்கை விஸ்வாசமும் பெற்றுவிட்டீர்" (12 : 54) என்று விளிக்கப்படுவாய்.

அதன் பின் சகல சுகபோகங்களும் உனக்குத் தரப்படும்; பரிவு காட்டப்படும்; அவன் அருட்கொடையால் உணவும் பானமும் ஊட்டப்படும்; நீ அருகிலாக்கப்பட்டு ரகசியங்களைப் பற்றிய ஞானம் உனக்கு வழங்கப்படும். அந்த ரகசியங்கள் உன்னிடமிருந்து மறைவானவையாய் இரா. இவற்றிலிருந்து உனக்குத் தரப்படுபவற்றால், எந்த வஸ்துவின் தேவையுமற்றவனாக ஆக்கப்படுவாய்.

பல தினுசுகளான பொன் நாணயங்கள் காலையிலிருந்து மாலைவரை, மருந்துக் கடைக்காரர் தொட்டு, காய்கறிக் கடைக்காரர்வரை, கசாப்புக் கடைக்காரர் தொட்டு செம்மான்வரை, பலசரக்குக் கடைக்காரர்

தொட்டு தோட்டிவரை சகல தொழிலுடைய ஜனங்களிடமும் கைமாறிக்கொண்டே இருக்கின்றன. இவர்களில் சிலர் மிக உயர்ந்த அந்தஸ்தினர்; சிலர் தாழ்வாகக் கருதப்படுபவர்கள். பிறகு இந்தத் தங்க நாணயங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு, உருக்கப்பட்டு, கம்பியிழுக்கப்பட்டு, தகடாக்கப்பட்டு, ஆபரணங்களாகச் சமைக்கப்படுகின்றன. அவை பளபளப்பாக்கப்பட்டுப் பரிமளமும் பூசப்படுகின்றன. பிறகு அவை உயரிய அந்தஸ்திலுள்ள இடங்களில் குடி புகுகின்றன. பொக்கிஷ அறையில் பூட்டப்படுகின்றன. அல்லது ஒரு மணப்பெண்ணை அலங்கரிக்கின்றன. ஒரு வேளை இந்த மணப்பெண், பெரிய அரசனின் மகளாகவும் இருக்கலாம். இவ்விதமாகத் தங்கம் செம்மானிடமிருந்து–உருக்கி, நசுக்கப்பட்டபின் – அரசனின் சந்நிதிக்கே போய்விடுகிறது. ஹே ஈமானுள்ளவனே, இது போலவே தக்தீரின் அமுலுக்கு உட்படுகையில் பொறுமை காட்டி, வாழ்க்கையின் சகல வித நிலைமைகளிலும் அவன் கட்டளைகளுக்கு உளப்பூர்வமாக உடன்பட்டு வந்தால், இம்மையிலேயே நீ உன் இறைவனுக்கு அருகிலாக்கப்பட்டு, அவனைப் பற்றிய ஞானம் அளிக்கப்பட்டவனாய், மற்றும் பல ஞானங்களையும் மர்மங்களையும் உணர்ந்தவனாய், மறுமையில் சாந்தி நிலையத்திலே நபிமார்கள், ஸித்தீகீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள் ஆகியோருடன் வைக்கப்படுவாய். அவன் அருகே, அவன் வீட்டில், அவன் பரிவை உணர்பவனாய் இருப்பாய். எனவே, பொறுமையுடனிரு; அவசரப்படாதே! தக்தீரின் போக்கின்படி நடந்து கொள்; அவனுக்கு எதிராகப் புகார் கூறாதே! அவ்விதம் புகார் சொல்லாதிருப்பின், அவன் மன்னிப்பின் தன்மையையும், அவனைப் பற்றிய ஞானத்தின் இனிமையையும், அவன் பரிவையும், அருட்கொடையையும் நீ உணரமுடியும். (இருபத்து எட்டாம் மகாலா)

12

“மிடிமை நிராகரிப்பில் கொண்டு சேர்க்கலாம்” என்று நம்பெருமான் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அதாவது, அல்லாஹ்வின் அடியான் அவனிடம் நம்பிக்கை கொண்டு, தன் விவகாரங்களை யெல்லாம் அவனிடம் ஒப்படைத்துவிடுகிறான்; அவன் இலகுவில் தந்துவிடும் இரணத்தில் நம்பிக்கை கொண்டுள்ளான்; தனக்கு எது வரவிருக்கிறதோ அது வந்தே தீரும், எது வராதோ அது ஒருக்காலும் வரப்போவதில்லை என்ற உறுதியான நம்பிக்கையுடையவனாய், “அல்லாஹ்விடம் கடப்பாடு உடையவர்களாக அவனுக்குப் பயந்து நடப்பவர்களுக்கு அல்லாஹ் ஒரு வழி விடுகிறான். அவர்கள் எதிர்பார்க்க இயலாத இடத்திலிருந்து அவர்களுக்கு இரணந் தருகிறான்; அல்லாஹ்விடம் நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்கு அவனே போதுமானவனாய் இருக்கிறான்” (65 : 2,3) என்ற திடமான நம்பிக்கையுடனிருக்கிறான்.

இப்படிச் சொல்பவன் சுகமான - வசதியான நிலையிலிருக்கையில் இவ்விதம் பேசுகிறான் ; துயரத்தாலும் வறுமையாலும் அல்லாஹ் தன்னைச் சோதிக்கையில் அல்லாஹ்விடம் பணிந்து மீண்டும் மீண்டும் முறையிடுகிறான் ; ஆனால், அல்லாஹ் அவற்றை அகற்றுவதில்லை; எனவே, நபிபெருமான் (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளபடி “மிடிமை நிராகரிப்பில் கொண்டு சேர்க்கலாம்” என்ற நிலையை எய்திவிடுகிறான். அல்லாஹ்வால் பரிவுடன் நடத்தப்படுபவன் விஷயத்தில் அவனுடைய துயரத்துக்குக் காரணமாய் இருப்பது எதுவோ அது அகற்றப்பட்டு, அவனுக்குச் சுகமும் வளமும் நல்கப்படுகின்றன; அவன் அல்லாஹ்வைப் புகழ்ந்து நன்றி செலுத்தும் சக்தியும் அருளப்படுகிறது. அம்மனிதன் தன்னை வந்தடையும்வரை இந்த வசதியை அல்லாஹ்

அவனுக்கு அளித்தே வருகிறான். அல்லாஹ் அந்த அடியானைச் சோதனை செய்ய நினைக்கும்போது, அவனுடைய துயரங்களையும் மிடிமையையும் அகற்றுது விட்டு வைக்கிறான்; ஈமானின் உதவியையும் நிறுத்தி விடுகிறான். இவ்வித நிலையில் அவன் அல்லாஹ்வின்மீது குறை காண்கிறான்; அவன் தன் வாக்கைக் காப்பாற்ற வில்லை என்று பழித்துரைக்கிறான். எனவே, அல்லாஹ் விடம் நம்பிக்கையற்ற காபிராக - அவன் அறிகுறிகளை நிராகரித்தவனாக, தன் இறைவனிடம் கோபங்கொண்டவனாக அவன் மரணிக்கிறான். இத்தகையவனைப் பற்றியே ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் "நிச்சயமாகக் கியாமஃ நாளில் யாவரிலும் கடுமையாகத் தண்டிக்கப்படுபவன் யார் எனின், இம்மையில் மிடிமையையும் மறுமையில் தண்டனையையும் பெறுபவன்தான். இத்தகைய நிலைமையிலிருந்து அல்லாஹ் நம்மைக் காப்பாற்றுவானாக!" என்று கூறியுள்ளார்கள்.

இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள மிடிமை அல்லாஹ்வை மறக்கும்படி செய்யும் மிடிமையாகும். இதிலிருந்தே அவர்கள் அல்லாஹ்வின் பாதுகாப்பைத் தேடியுள்ளார்கள். அல்லாஹ் குறிப்பிட்டுத் தேர்ந்தெடுப்பவனுக்கு அவன் தன் அன்பர்களுள், நேயர்களுள் ஒருவனாக, நபிமார்களின் வாரிஸ்களில் உள்ளவனாக, தன் வலிமார்களின் தலைவனாக, தன் அடியார்களில் அறிவாளிகளுள், அவர்களின் மத்தியஸ்தர்களுள், தம் எஜமானிடம் செல்லும் வழியைக் காட்டுவோருள் ஒருவனாக உள்ளவனுக்கு, அல்லாஹ் மலையளவு பொறுமையைத் தருகிறான்; மகிழ்வுடன் அடிபணிவதில் கடலளவு உணர்ச்சியைத் தருகிறான்; அல்லாஹ்வின் செயலில் பூரணமாய் இணைந்து நிற்க வைக்கிறான். அதன் பின் அவன் மீது தன் நன்கொடைகளை ஏராளமாக அருளுகிறான்; அல்லும் பகலும், ஏகாந்தத்திலும், பலரிடை இருக்கும்

போதும், சில சமயங்களில் மறைவாக, சில சமயங்களில் பகிரங்கமாகத் தயாளமான கவனத்துடன் அவனை ஊட்டி வளர்க்கிறான். பலவகையான அன்புமாரிகளை அவன் மீது சொரிகிறான்; அவன் மரணிக்கும்வரை இது நீடிக்கிறது. (இருபத் தொன்பதாம் மகாலா)

13

"(என் நோக்கம் நிறைவேற) நான் என்ன செய்வது, எவ்வழியைப் பின்பற்றுவது?" என்று எத்தனை தடவைதான் நீ வினவுவாய்? எனவே, நீ உள்ள இடத்திலேயே உன்னை இருக்கும்படி செய்த ரப்பிடமிருந்து ஒரு வழி காட்டப்படும்வரை, நீ இருக்கும் இடத்திலேயே இரு, வரம்பு மீறாதே என்று உனக்குக் கூறப்படுகிறது. "மூமின்களே, பொறுமையுடனிருங்கள்; சகிப்பதில் (பிறரைவிட) அளவு மீறியவர்களாய் இருங்கள்; உறுதியுடனிருங்கள்; அல்லாஹ்வுக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமையில் விளிப்புடனிருங்கள்" (3 : 200) என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

ஹே மூமினே, பொறுமையுடனிருக்கும்படியும், பொறுமையுடனிருப்பதில் நீங்கள் ஒருவருடன் ஒருவர் போட்டியிடும்படியும், உறுதியுடனும், எச்சரிக்கையாகவும் இருக்கும்படியும் அவன் உத்தரவிட்டுள்ளான். இதைக் கடமையாகக் கொள்ள வேண்டாமா? பொறுமையைக் கைவிடக்கூடாது என்பதற்காகவே, "அல்லாஹ்வுக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமையில் விழிப்புடனிருங்கள்" என்று மேலும் அவன் எச்சரிக்கிறான். இவ்விதம் பொறுமையாலேயே நலமும், பாதுகாப்பும் உண்டாகுபவையாய் இருக்கின்றன. "உடலுக்குத் தலை எத்தனை பிரதானமோ, ஈமானுக்குப் பொறுமை அத்தனை பிரதானமாகும்" என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். ஒவ்வொன்றுக்கும் ஓர் அளவுப்படி வெகுமதியுண்டு; ஆனால், பொறுமைக்கான

வெகுமானமோ அளவிட முடியாதது என்றும் சொல்லப் பட்டுள்ளது. "நிச்சயமாகப் பொறுமையுடையவர்கள், அளவின்றித் தங்கள் வெகுமதியைப் பெறுவார்கள்" (39 : 10) என்று திரு குர்ஆனில் சொல்லப்பட்டுள்ளது.

எனவே, பொறுமை விஷயத்தில் உன் கடமையில் விளிப்புடனிருந்து, அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள வரம்பில் முழுக் கவனமும் உள்ளவனாய் இருந்தால், அவன் என்ன தருவான் என்பதைத் தன் கிதாபில் வாக்களித்துள்ளான். அதாவது: "அல்லாஹ்வுக்குத் தான் செய்யவேண்டிய கடமையில் விளிப்புடனிருப்பவனுக்கு அல்லாஹ் ஒரு வழியை ஏற்படுத்தித் தருவான். மேலும், அவன் நினையாத புறத்திலிருந்து அவனுக்கு 'ரிஜ்க்' அளித்தருள்வான்" (65 : 2, 3). அல்லாஹ்விடம் தவக்குல் கொண்டுள்ளவர்களுடன் சேர்ந்து, ஒரு வழியுண்டாகும்வரை பொறுமையுடனிரு. "அல்லாஹ்விடம் தவக்குல் வைப்பவர்களுக்கு அவன் போதுமானவனாய் இருக்கிறான்" (65 : 3) என்று அல்லாஹ்வே வாக்களித்துள்ளானன்றோ !

பிறருக்கு நன்மை செய்வோரின் கூட்டத்தில் சேர்ந்து, பொறுமையுடனும், அல்லாஹ்விடம் நம்பிக்கையுடனும் இருந்து வா ! ஏனெனில், "நிச்சயமாகப் பிறருக்கு நன்மை செய்வோருக்கு நாம் வெகுமதியளிக்கிறோம்" என்று அல்லாஹ் கூறியுள்ளதுபோல, அவன் அதற்கும் நன்கொடையருளுவான். பிறருக்கு நன்மை செய்வோரை, நிச்சயமாகத் தான் நேசிப்பதாக அல்லாஹ்வே சொல்லியுள்ளானதலால், இந்நற்பண்புகளுக்காக அவன் உன்னை நேசிப்பான்.

இவ்விதமாகப் பொறுமையே சகல சற்குணங்களுக்கும் மூலஸ்தானமாய் இருக்கிறது ; இம்மை மறுமைக்கான சகல பாதுகாப்புக்கும் அதுவே மூலஸ்தானமாய் இருக்கிறது ; அதன் மூலம் மூமின் அல்லாஹ்வின் சித்

தத்துக்குத் தன்னை அர்ப்பணித்து, அதை மனப் பொறுத்தஞ் செய்துகொண்டு, அல்லாஹ்வின் செயலுடன் ஐக்கியப்பட்ட நிலையை எய்திவிடுகிறான்; இந் நிலையே 'பதாலியத்' அல்லது 'கைபத்' எனப்படும். எனவே, அதை இழந்துவிடாது எச்சரிக்கையாய் இரு; இம்மை மறுமையிலும் ஈடேற்றமடையவும், இவ்விரண்டின் வளமும் நிலைக்கவும் இது அவசியமாகும். (முப்பதாம் மகாலா)

14

ஒருவன் மீது உனக்கு அன்போ, துவேஷமோ உண்டானால், அவன் நடத்தையைத் திருகுர்ஆன், நபி பெருமான் (ஸல்) அவர்களின் ஸுன்னத் ஆகிய இரண்டையும் முன்னிறுத்திப் பரிசோதனை செய்! இவற்றின் முன் நீ வெறுக்கும் அவனுடைய நடத்தை வெறுக்கக் கூடியதாய் இருப்பின், அல்லாஹ்வுடையவும் அவன் ரஸூலுடையவும் அபிப்பிராயத்துடன் நீ இணங்கியவனாய் இருப்பது குறித்து மகிழ்ச்சியடை. அப்படியின்றி அவற்றின் முன்னிலையில் அவன் நடத்தை சரியானதாய் இருப்பின்-அந்நிலையில் நீ அவனிடம் பகைமை பாராட்டின் - உன் கீழான ஆசைகளுக்கு நீ அடிமைப்பட்டவனாய் இருக்கிறாய் என்பதை உணர். உன் கீழான ஆசைகள் காரணமாய் நீ அவனை வெறுக்கிறாய். அவ்வெறுப்பால் அவனுக்கு அநீதி இழைக்கிறாய். அல்லாஹுத்தஆலாவுக்கும் அவன் ரஸூலுக்குமே இதில் மாறு செய்கிறாய். எனவே, அல்லாஹ்வின் பக்கல் திரும்பு; உன் துவேஷத்துக்காக வருத்தப்படு; அம்மனிதனிடமும், மற்றும் அல்லாஹ்வின் நேயர்கள், வலிமார்கள், அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டோர், அவன் அடியார்களுள் பக்திமான்கள் ஆகியோரிடமும் நீ அன்பு கொள்ளச் செய்யுமாறு அல்லாஹ்விடம் வேண்டுதல் செய்; அம்மனிதனிடம் அன்பு செலுத்துவதில் அல்லாஹ்வுக்கு இணங்கியவனாய் நடந்துகொள்

நீ அன்பாய் இருப்பவன் விஷயத்திலும் இதேவிதம் தான் நீ நடந்துகொள்ள வேண்டும். அதாவது, அவனுடைய நடத்தையைத் திரு குர்ஆன், ஹதீஸ் ஆகிய இரண்டையும் முன்னிறுத்திச் சோதனை செய்து பார்! இவற்றின் முன் அவன் நல்லவனாயின், நீ அவனிடம் அன்புகொள்வது சரியே; ஆனால், அவன் இவற்றின் முன் சரியற்றவனாயின், நீ அவனிடம் அன்பு காட்டக்கூடாது; உன் கீழான இச்சை மூலம் நீ அவனிடம் அன்புகொள்ளக்கூடாது. அதுபோல உன் கீழான ஆசை மூலம் நீ யாரையும் வெறுக்கக்கூடாது. உன் கீழான இச்சையை எதிர்க்கும்படி நீ வன்மையாக உத்தரவிடப்பட்டுள்ளாய். அல்லாஹ் சொல்கிறான்: “கீழான இச்சையின் வழி நிற்காதீர்; அப்படி நிற்பின் அது உம்மை அல்லாஹ்வின் பாதையைவிட்டு வழி தவறும்படி செய்துவிடும்; அதற்கிடங்கொடுக்கவேண்டாம்” (38 : 26) என்று. (முப்பத்தோராம் மகாலா)

15

“நான் யார் மீது அன்பு கொண்டிருந்தாலும் அது நீடிப்பதில்லை. விலகுவதாலோ, மரணத்தாலோ, பகைமையாலோ, பாழாவதாலோ, பண நஷ்டத்தாலோ, பிரிவு எங்களிடையே புகுந்து விடுகிறது” என்று எத்தனையோ தடவை நீ கூறி வந்துள்ளாயல்லவா! ஹே அல்லாஹ்வின்மீது ஈமான் கொண்டவனே, உன்மீது நன்கொடைகளைச் சொரிந்துள்ள, உன் விஷயத்தில் அக்கறை காட்டியுள்ள, உன்மீது அதிகமான கவனங் காட்டியுள்ள அல்லாஹ்வும் பொறுமையுடையவன்தான் என்பதை நீ அறியாயா? இதை நீ கேள்விப்பட்டதில்லையா? அவன் உன்னைத் தனக்காகவே படைத்துள்ளான்; நீயோ அவனையன்றி வேறு யாருக்கோ உரித்தானவனாக விரும்புகிறாய். அவன் வசனங்களை நீ செவிமடுத்ததில்லையா?

"அவன் அவர்களிடம் அன்பு கொண்டிருப்பான்; அவர்களும் அவனிடம் அன்பு கொள்வார்கள்" (5 : 54) என்றும், "எனக்குப் பணிபுரிவதற்கன்றி (வேறு எதற்காகவும்) நான் ஜின்களையும் மனுவையும் படைக்கவில்லை" (51 : 56) என்றும் அவன் கூறியுள்ளானல்லவா!

"அல்லாஹ் ஓர் அடியானிடம் அன்பு கொள்ளும் போது அவனைச் சோதனைக்குள்ளாக்குகிறான்; அப்போது அவன் சகிப்புத்தன்மை காட்டினால், அவனை அல்லாஹ் கவனித்துக் கொள்கிறான்" என்று நம் பெருமான் (ஸல்) அவர்கள் கூறியுள்ளதையும் நீ கேள்விப்பட்டதில்லையா? "அல்லாஹ்வின் ரஸூலே, அவன் கவனித்துக் கொள்வது எதை?" என்று நம் பெருமான் (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது. அவர்கள் சொன்னார்கள்: "அவனுக்கு அல்லாஹ் எந்தச் செல்வத்தையும் குழந்தைகளையும் விட்டு வைப்பதில்லை" என்று.

ஏனெனில் அந்த அடியானுக்குப் பணமோ, அவன் அன்பு கொண்டுள்ள குழந்தை குட்டிகளோ இருப்பின், அவன் தன் இறைவனிடம் கொள்ளும் அன்பு பிரிவுபட்டதாகிவிடுகிறது; பிறகு அது குறைந்து சிதறிவிடுகிறது; பிறகு அல்லாஹ்வுக்கும் மற்றோர்க்குமிடையே அது விநியோகமாகிவிடுகிறது. அல்லாஹ்வோ தனக்கு எந்தப் பங்காளியும் ஏற்பட விடுவதில்லை. அவன் அதில் பொறுமையுள்ளவன்; சகல வஸ்துக்களின்மீதும் ஆதிக்கம் உள்ளவன்; யாவற்றின் ஆட்சியும் அவன் வசமே. ஆகவே, அவன் தன் கூட்டாளியாக வரக்கூடியதை அழித்து, பூண்டறுத்துவிட்டுத் தன் அடியானின் இதயம் முழுவதையும் பூர்ணமாகத் தனக்கே யுரியதாக்கிக் கொள்கிறான். அப்போதுதான், "அவன் அவர்களிடம் அன்பு கொண்டிருப்பான்; அவர்களும் அவனிடம் அன்பு கொள்வார்கள்" என்ற திருமறை வாக்கியத்தின் உண்மை தெளிவுபடும்.

அல்லாஹ்வின் பங்காளிகளை விட்டும் மனைவி, மக்கள் சொத்து, சுகம், ஆட்சி, அதிகார வேட்கை, அதிசயங்கள் நிகழ்த்தும் ஆத்மீக நிலைகளையடையும் ஆசை, தெய்வப் பூங்காவையடைதல், அவனுக்கு அருகிலாதல் எனும் அவாக்களாகிய உருவங்களை விட்டும் உள்ளத்தைச் சுத்தப்படுத்தவேண்டும். எந்த நோக்கமும் எந்த ஆசையும் உள்ளத்தில் இருக்கக்கூடாது. அப்போது இதயம் எந்தத் திரவமும் தங்காத ஓட்டைப் பாண்டம் போலாகிவிடும். ஏனெனில் அல்லாஹ்வின் செயலால் அஃதுஇப்போது உடைந்ததாகிவிடும். அங்கே எந்நோக்கமாவது வளர்ந்தால் அல்லாஹ்வின் செயலும் பொருமையும் அதை உடைத்துவிடுகின்றன. அதன்பின் கண்ணியம், திறம், மரியாதை எனும் திரைகள் அதைச் சுற்றித் தொங்கவிடப்படுகின்றன. அத்துடன் மகத்துவம், பலம் எனும் அகழ்களும் தோண்டப்படுகின்றன.

இவ்விதமாக எதைப்பற்றிய எந்த ஆசையும் இதயத்தை நெருங்கமுடியாது. சொத்து, குழந்தைகள், மனைவி, நண்பர்கள், அற்புதங்கள், அதிகாரம், எதையும் விளக்கும் ஆற்றல் முதலியவைபற்றிய ஆசைகள் எதுவும் இந்நிலையில் இதயத்துக்கு எத்தீங்கும் செய்யமுடியாது. இவை இதயத்துக்கும் புறம்பிலிருக்குமாதலால், இவற்றால் அல்லாஹ்வின் பொருமையுண்டாவதுமில்லாது போகிறது. அதற்குப் பகரமாய் இவை யாவும் அல்லாஹ்வால் தன் அடியானுக்கு அருள்களாகவும், அவன் அன்பின் ஆசியின் அறிகுறியாகவும், அவனை அடைபவர்களுக்கு அவன் தரும் நலமாகவும் ஆகிவிடும். இவ்விதம் இத்தகைய அடியார்கள் கண்ணியப்படுத்தப்பட்டு, கருணை மாரிக்கு ஆளாக்கப்பட்டு, அல்லாஹ் அருளும் இக்கண்ணியமெனும் மூலதனத்தால் பாதுகாப்புப் பெற்றவர்களாகின்றனர். அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் அவர்களின் பாதுகாவலனாய், கண்காணிப்பாள

ளுய், புகலிடமாய், ஆறுதல் நல்குபவளுய் இருக்கிருன். (முப்பத்து இரண்டாம் மகாலா)

16

மனிதர்களில் நான்கு வகையானவர்களுண்டு. இவர்களில் முதலாம் வகையினனுக்கு நாவும் இதயமும் கிடையாது. மிகவும் சாதாரணமான அந்தஸ்தும், மந்தமதியும், கீழ்த்தரமான போக்கும் உடைய இவன் அல்லாஹ்வின் முன் எந்த இடமும் பெருதவனுய், தன்னில் நன்மையானதும் எதுவும் இல்லாதவனுய் இருந்து வருகிருன். இத்தகையவனை அல்லாஹ் தன் கருணையால் பொதிந்து தன்னிடத்தில் ஈமான் கொள்ளுமாறு வழிகாட்டி, இவன் உடலின் அங்கங்களைத் தனக்குக் கீழ்ப்படிவதில் அசையச் செய்தாலன்றி இவன் வெறும் மனிதப் பதராகவே இருப்பான். இவனைப்போன்ற ஒருவனுய் ஆகாதபடியும், இவனுடன் பழகாதபடியும், இவனைக் கவனியாதபடியும் எச்சரிக்கையாய் இருந்து கொள். இவனை யொத்தவர்கள் அல்லாஹ்வின் கோபாக்கினிக்கும் தண்டனைக்கும் ஆளாகுபவர்களாவர்; இவர்கள் நரக நெருப்பில் வாசஞ்செய்பவர்களாவர். இவர்களிடமிருந்து, நாம் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுவோமாக! நீயோ தெய்விக ஞானம் உடையவனுகி, நன்மையானவற்றைப் போதிப்பவனுய், மார்க்க வழிகாட்டியாய், அதன் தலைவர்களுள், அழைப்பாளர்களுள் ஒருவனுய்த் திகழ வேண்டும். எனவே, எச்சரிக்கையுடன் அவர்களை அணுகி, அல்லாஹ்வுக்கு அடிபணியுமாறும் அல்லாஹ்வுக்கு மாருகப் பாவம் செய்வதனுல் வரும் கேடுகளை விளக்கியும் உபதேசிக்கக்கடவாய். இதன் மூலம் அல்லாஹ்வின் பாதையில் நீ போராடுபவனுகி, நபிமார்களுக்கும் ரஸூல்மார்களுக்கும் உரிய சம்மானங்களுக்கு உரியவனுக முடியும். அலீ (ரலி) அவர்களிடம் நம் பெருமான் (ஸல்) அவர்கள்

மொழிந்ததாவது: "உமது வழிகாட்டுதல் மூலம் அல்லாஹ் ஒருவனுக்கு வழி காட்டியருளினால், அது உமக்குச் சூரியன் உதிப்பதால் வரும் நன்மையைவிட அதிக நன்மையை அளிப்பதாய் இருக்கிறது" என்று.

இரண்டாம் வகையான மனிதனுக்கு நாவு உண்டு; ஆனால், இதயம் இல்லை. இவன் பிறரை அல்லாஹ்வின் பாதைக்கு அழைக்கிறான்; ஆனால், இவன் அதை விட்டு ஓடுகிறான். பிறரிடமுள்ள குறைகளைக் கண்டிக்கிறான்; ஆனால், இவன் அதுபோன்ற ஒரு குறையைத் தன்னகத்தேயே வைத்துக்கொண்டிருக்கிறான். பிறரிடம் தான் பக்திமான் என்று காட்டிக்கொள்கிறான்; ஆனால், பெரும் பாவங்களைச் செய்து அல்லாஹ்வைப் பழிக்கிறான். இவன் தனியாய் இருக்கும்போது, உடையுடுத்திய ஓநாய் ஆகவே இருக்கிறான். இவனைப்பற்றித்தான் நம்பெருமான் (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள். "மிகவும் அதிகம் அச்சப்படவேண்டியதும், என் உம்மத்துகளில் நான் மிகவும் கவலைப்படுவதும் தீய கல்விமானைப் பற்றித்தான்" என்று அவர்கள் மொழிந்துள்ளார்கள். இத்தகைய அறிவாளியிடமிருந்து நாம் அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடுவோமாக! இவனை விட்டும் நீ விலகிக்கொள்வதுடன், இவன் சொல்லினிமையால் கவரப்பட்டு இவன் வசமாகி விடாதபடி இருப்பதற்காக இவனைக் கண்டாலே அப்பால் ஓடி விடு! அப்போதுதான் இவன் பாப நெருப்பு உன்னைச் சுடாது; இவன் அந்தரங்கத்தின் துர்நாற்றம் உன்னைக்கொல்லாதுவிடும்.

மூன்றாம் வகையான மனிதனுக்கு இதயம் உண்டு, நாவில்லை. அவன் ஒரு மூமின். தன் சிருஷ்டிகளை விட்டும் அல்லாஹ் அவனை மறைத்துள்ளான். அவனைச் சுற்றியும் தன் திரைகளைத் தொங்கவிட்டுள்ளான்; அவன் நப்ஸின் கோளாறு எது என்று அவனே காணும்

திறமையையும் அவனுக்குக் கொடுத்துள்ளான்; அவன் இதயத்தில் வெளிச்சமுண்டாக்கி, ஜனங்களுடன் கலப்பதால் விளையக்கூடிய விஷமங்களையும், பேசிக்கொண்டே இருப்பதால் வரக்கூடிய தீங்குகளையும் அவன் அறியும்படி செய்துள்ளான். மௌனமாக மூலையில் ஒதுங்கி இருப்பதே பாதுகாப்பு என்பதை அவன் உணர்கிறான். "மௌனமாக இருப்பவன் நித்யப் பதவியை அடைகிறான்" என்று நபி பெருமான் (ஸல்) அவர்களும் மொழிந்துள்ளார்கள். மேலும், "அல்லாஹ்வுக்குச் சேவை செய்வது பத்துப் பகுதிகள் என்றால், நிச்சயமாக அவற்றில் ஒன்பது பகுதிகள் மௌனமாய் இருப்பதாகவே இருக்கின்றன" என்றும் அவர்கள் மொழிந்துள்ளார்கள்.

இவ்விதம் அல்லாஹ்வின் அந்தரங்கத்தில் இவன் அவன் தோழனாயும், பாதுகாவல் பெற்றவனாயும், அளவிலா ஞானமுடையவனாயும், கருணையாளனான ரஹ்மானின் அருள் பெற்றவனாயும், சகல நலன்களையும் அடைந்தவனாயும் இருப்பான். எனவே, நீ இத்தகையவனுடன் நட்புப் பூணவேண்டும்; அவனோடு கலந்துறவாடவேண்டும்; அவனுக்குச் சேவை செய்யவேண்டும்; அவனுக்குண்டாகும் தேவைகளை உடனுக்குடன் கவனித்து, அவனுக்கு வசதி தருபவற்றைத் தந்து, அவன் அன்பைப் பெறவேண்டும். இவற்றை நீ செய்தால் அல்லாஹ் உன்னிடம் அன்பு கொள்வான். தன் தோழர்கள், பக்திமான்கள் கூட்டத்தில் உன்னையும் சேர்த்துக் கொள்வான். அவன் திருவுளச் சித்தமுண்டாயின் அவன் ஆசிகளையும் உன்மீது சொரிவான்.

நான்காம் வகை மனிதன் கண்ணியமெனும் உடையணியப்பட்டு, மறைவான உலகுக்கு அழைக்கப்படுபவனாவான். "கல்வி கற்று, அதன்படி ஒழுகி, அக்கல்வியைப் பிறருக்குப் போதிப்பவன் மறைவான உலகுக்கு அழைக்கப்பட்டு மகத்துவமுடையவனாக்கப்படுகிறான்" என்று

ஹதீஸ் குதுஸியில் கூறப்பட்டிருப்பது போல இவன் மறைவான உலகுக்கு அழைக்கப்படுகிறான்.

இவன் அல்லாஹ்வின் ஞானத்தையும் அடையாளங்களையும் பெற்றவனாயும், இவனுடைய இதயம் அல்லாஹ்வின் ஞானத்திலுள்ள அரிய விஷயங்களைப் பெறுவதாயும், பிறருக்கு அறிவிக்கப்படாத விஷயங்கள் அல்லாஹ்வால் தனக்கு அறிவிக்கப் பெற்றவனாயும் இருப்பான். அல்லாஹ் இவனைத் தேர்ந்தெடுத்து, தன் பக்கம் இழுத்துக் கொண்டு, இவனுக்கு வழிகாட்டி, தன்னை நோக்கி இவனை உயர்த்தி, இந்த இரகசியங்களை ஏற்குமளவுக்கு இவன் இதயத்தை விரிவாக்கித் தன் நோக்கிற்காக இவனைப் பாடுபடுபவனாக்குவான். அல்லாஹ்வின் அடியார்களை நேர்மையின் பாதையில் அழைத்து, தீய செயல்களால் வரும் தண்டனையைப் பற்றி எச்சரித்து, அவர்களிடையில் அல்லாஹ்வுக்காக வாதாடி, வழிகாட்டியாகவும், நேர்மையான வழிகாட்டப்பட்டவனாயும், மத்தியஸ்தம் ஏற்கப்படும் மத்தியஸ்தனாகவும், சத்தியவானாகவும், பிறரின் உண்மைகளை ஆராய்ந்து பார்ப்பவனாகவும், அல்லாஹ்வின் அருள்பெற்ற நபிமார்கள் ரஸூல்மார்களின் பிரதிநிதியாகவும் இவன் விளங்குவான்.

எனவே, இவன்தான் மானிடவர்க்கம் அடையக் கூடிய உச்சமான, முடிவான ஸ்தானத்தை அடைந்தவனாவான். இதற்குமேல் நபித்துவமன்றி, வேறு ஸ்தானங் கிடையாது. இத்தகையவனை எதிர்க்காதபடியும், அவன் வெறுப்புக்கு ஆளாகாதபடியும், அவனைவிட்டு விலகாதபடியும், அவனிடம் பகைமை பாராட்டாதபடியும், அவனை ஏற்காது ஒதுக்காதபடியும், அவன் சொல்வதையும் எச்சரிப்பதையும் கவனிக்கும்படியும் உன்னை நீ தயார் செய்துகொள். இத்தகையவன் சொல்வதற்குச் செவிமடுப்பதிலும் அவன் நட்பைப் பெறுவதிலுமே பாதுகாப்பு உண்டு; அவனை விலக்குவதால் - அல்லாஹ்

சக்தியையும் உதவியையும் அருளினாலன்றி-வழி தவறவும் அழிந்து படவும் இடமுண்டாகும்.

உனக்காக நான் மானிடரை (நான்கு வகையின ராக)ப் பிரித்துக் காட்டியுள்ளேன். கவனிக்கும் மனமிருப் பின் நீயே உன்னுள் நோக்கு! உன் ஆத்மாவைக் காக்கும் எண்ணமிருப்பின், அவனிடம் பற்றுதலிருப்பின் இங்குச் சொல்லப்பட்டுள்ளபடி நடக்கப் பழகிக்கொள். அல்லாஹ் நேசிப்பதன் பக்கல், அவனுக்குத் திருப்தி யளிப்பதன் பக்கல் இம்மையிலும் மறுமையிலும், நாமும் நீயும் சென்றடையுமாறு அல்லாஹ் அருள்புரிவானாக! (முப்பத்து மூன்றும் மகாலா)

17

உன் இறைவனிடம் நீ கோபம் கொள்வதும், அவன் மீது குறை கூறுவதும், அவனை நிந்திப்பதும், அந்த ஹக்குதஆலா நீதியோடு நடக்கவில்லை, ரிஜ்க் அளிப்பதி லும் துயர்களை நீக்குவதிலும் தாமதம் செய்கிறான் என்று பழிப்பதும் விசித்திரமாய் இல்லையா? ஒவ்வொரு சம்ப வத்துக்கும் உரிய நேரம் ஒன்று உண்டு. ஒவ்வொரு துயரத்துக்கும் படவேண்டிய கால அவகாசம் ஒன்று உண்டு என்று நீ அறியாயா? இவற்றை முந்தவோ பிந்தவோ முடியாது. துயரம் அனுபவிக்கவேண்டிய காலம் சுகம் அனுபவிப்பதற்கு உரியதாகவும் கஷ்டமான நேரம் வசதியானதாகவும் ஆகாது. உயர்ந்த ஒழுக்கத் தைக் கடைப்பிடி. மௌனமாகவும் பொறுமையாகவும், மனப்பூர்வமான பணிவோடும் உன் இறைவனின் போக்கை அறிந்த தன்மையோடும் இருந்து வா! அல் லாஹ்விடம் கோபம் கொண்டதற்காகவும் அவன் செயல் குறித்து அவன்மீது குறைகூறியதற்காகவும் தவ்பா செய்துகொள்!

அல்லாஹ்வின் சந்நிதியில் ஒருவருக்குச் சேர வேண்டியதைப் பூரணமாகக் கோருவதற்கோ, இயற்கை

யின் உந்துதலால் அவன் அடியார்களிடையில் பரஸ்பரம் ஏற்படுவது போன்ற தொடர்புகளில் பாவம் செய்யாது பதில் அடி கொடுப்பதற்கோ இடமே கிடையாது. அவனு கிய சர்வ சக்தியும் பொருந்திய ஏகன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். பொருள்களையும் அவற்றின் நன்மை தீமைகளையும் அவனே படைத்துள்ளான். எனவே, அவற்றின் தொடக்கத்தையும் முடிவையும் நோக்கத்தை யும் பலாபலன்களையும் அவனே அறிவான். அவனுகிய ஜல்ல ஜலாலஹு தன் செயல்களில் மகா விவேகமுட னும் வஸ்துக்களை அமைப்பதில் உறுதியுடனும் இருப்ப தால் அவன் செயல்களில் எந்த முறனையும் காணமுடிய வில்லை. அவன் எந்தக் காரியத்தையும் ஓர் அர்த்த மின்றிச் செய்ய மாட்டான். எந்தப் பெருளையும் ஒரு நோக்கமின்றி விளையாட்டுக்காகப் படைக்க மாட்டான். அவன் செயல்களில் குற்றம் குறை காண்பது சரியன்று. அவன் சித்தத்துக்கு இணங்கி நடப்பதில் நீ தளர்ச்சி அடைந்து இருப்பதால், உதவி வருவதற்காகக் காத் திருப்பதும் மனமுவந்து பணிவதும் அவன் சித்தத் தில் மூழ்கிவிடுவதும் நலம். தக்தீரின் உரிய நேரம் வந்து காலத்தின் போக்கால் சோதனைகள் நேர் எதிர் மாற்ற மாகி - அதாவது குளிர் காலம் கடந்ததும் வேனிற் காலம் வருவது போலும், இரவு நகர்ந்ததும் பகல் வரு வது போலும் - நல்ல நிலைமை வரும்வரை மேலே சொன்னபடி பொறுமையாய் இரு.

இருள் அதிகரித்து வரும் மாலை வேளையில் பகலின் வெளிச்சத்தைக் கேட்டால் கிடைக்குமா ? அதற்குப் பகரமாய் இரவின் இருள் அதிகரித்துக் கொண்டே வந்து, சூரிய உதயத்துக்குரிய நேரம் வந்ததும் நீ கேட் டாலும் கேட்கா விட்டாலும், விரும்பினாலும் விரும்பா விட்டாலும் பகலின் வெளிச்சம் உண்டாகி விடுகிற தல்லவா ! எனவே, அந்தச் சூரிய உதய நேரத்தில்

இரவு திரும்பவேண்டும் என்று நீ பிரார்த்தித்தால் அது நிறைவேறுமா? எனினும், அகாலமான ஒன்றை நீ கேட்கிறாய். இதனால் நீ வருந்திப் புலம்பித் தலைகுனியவே நேரும். எனவே, இவ்வாறான போக்கை விடுத்து, உன் இறைவனிடத்தில் நம்பிக்கை வைத்துப் பொறுமையைக் கைக்கொண்டு அவன் சித்தத்துக்கு இணங்கி நடந்து வா! உனக்குரியது உன்னிடமிருந்து பறிக்கப்பட மாட்டாது. உனக்குரியதல்லாதது உன்னிடம் தரப்படவும் மாட்டாது. என் நம்பிக்கையின்படி இது இப்படித்தான். எனினும், அல்லாஹ்விடம் நீ கேட்டு, துஆ இரந்து, அவனிடம் மன்றாடி, அவனுக்குக் கீழ்ப்படிந்து அவன் கட்டளைகளை நிறைவேற்றி வந்தால் "என்னை அழையுங்கள்; நான் உங்கள் பிரார்த்தனைகளை ஏற்பேன்" (40 : 60) என்றும், "அல்லாஹ்வின் உதவியைப் பெற அவனை நாடுங்கள்" (4 : 32) என்றும் அல்லாஹ் கூறியுள்ளபடியும் மற்றும் இது போன்ற திரு குர்ஆன் வசனங்கள், நபி பெருமான் (ஸல்) அவர்களின் வாக்கியங்களின்படியும் உரிய நேரத்தில் உன் பிரார்த்தனை ஏற்கப்பட்டு உரிய நேரத்தில் அவன் நாடும் போது நீ கேட்பது கிடைக்கலாம்.

உன் பிரார்த்தனை ஏற்கப்படுவது தாமதமாவது குறித்து அவன்மீது குறை கூறாதே! நீ பிரார்த்தனை செய்வதில் தளர்ச்சி அடையாதே! இதனால் உனக்கு லாபம் இல்லாவிட்டாலுங்கூட நஷ்டமில்லை. உன் பிரார்த்தனையை அல்லாஹ் உடனடியாக இம்மையில் ஏற்காவிட்டாலும், மறுமையில் அதற்குரிய வெகுமதியை உனக்குத் தரவே செய்வான். கியாம நாளிலே தன் கையிலிருக்கும் விதிவசப் பட்டோலையில் தான் இனம் காண முடியாத சில நற்செயல்கள் குறிக்கப்பட்டிருப்பதை ஒரு நல்லடியான் பார்ப்பானென்றும், அவை அவன் உலகில் இருந்தபோது செய்த பிரார்த்தனைக்குப் பகர

மாகத் தாமதித்து அளிக்கப்பட்ட நன்கொடை யென அப்போது அவனிடம் கூறப்படுமென்று ஹதீஸில் சொல்லப்பட்டுள்ளது. எனவே, அவனிடம் எதையும் பிரார்த்திக்கும் போது அவனுடைய தவ்ஹீதில் கண்டிப்பான ஈமான் கொண்டு, அவனை நினைவுகூர்வதும் மற்றும் யாரிடத்திலிருந்தும் எதையும் கேட்காதிருப்பதும் உன் தேவையை அவனை யன்றிப்பிறரிடம் சொல்லா திருப்பதும் உன் ஆத்மீக நிலையின் அரிச்சுவடியாக இருக்கட்டும்! சகல சந்தர்ப்பங்களிலும் அல்லும் பகலும், ஆரோக்கியத்திலும், பிணியிலும், தொல்லையிலும், போகத்திலும், கஷ்டத்திலும் சுகத்திலும் கீழே கண்ட இரண்டு நிலைமைகளில் ஏதாவதொன்றில் நீ இருப்பாய்:

(1) குளிப்பாட்டுபவர் கையில் கிடக்கும் மையித்தைப் போலும், பாலூட்டும் தாதியிடம் கிடக்கும் குழந்தையைப் போலும், குதிரைமீது வரும் விளையாட்டுக்காரனால் அடிக்கப்படுவதற்காகக் கிடக்கும் போலோ பந்தைப் போலும், நீ ஏதும் கேளாது, மனத் திருப்தியும், பொருத்தமும் கொண்டவனாய், அவனிடம் சரணடைந்து இருப்பாய். தக்தீர் தன் விருப்பப்படி உன்னைத் திருப்பும். அது பாக்யமானதாய் இருப்பின், நீ நன்றியும், புகழும் தெரிவிப்பாய்; அதற்காக அல்லாஹ் ஜல்லஜலாலஹுவிடமிருந்து அதிகமான பாக்யம் உண்டாகும். "நிச்சயமாக நீங்கள் நன்றியுடனிருப்பின், உங்களுக்கு நான் அதிகமாக அருளுவேன்" (14:7) என்று அல்லாஹ்வே கூறியுள்ளான். தக்தீர் தருவது பாக்யமானதாய் இன்றிக் கஷ்டமானதாய் இருப்பின், அதை ஏற்று அல்லாஹ் தரும் பலத்தின் உதவியால் பொறுமையுடன் இருந்து வருவாய். "நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்" (2:153) என்று அல்லாஹ்வே கூறியுள்ளதுபோல, உன் பொறுமை காரணமாக உனக்குக் கருணையையும் பாக்யத்தையும் அருளுவான். அதாவது

அவன் பொறுமையுடையவர்களுக்குத் தன் உதவியையும் பலத்தையும் அனுப்புவான். "நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவினால் அவன் உங்களுக்கு உதவுவான்; உங்கள் பாதங்களை ஸ்திரப்படுத்தி வைப்பான்." (47 : 7)

உன் கீழான உணர்ச்சிகளை எதிர்த்துச் சாடி, அவனைப்பற்றிக் குறை கூறுவதைக் கைவிட்டு, உன் விஷயத்தில் அவன் செய்வதுபற்றி அதிருப்தி யடையாமல், அல்லாஹ்வுக்காக உன் நஃப்ஸுக்கே நீ பகைவனாகி, அது தன் குப்ராலும், பித்அத்தாலும் தலைதூக்குகையில் உன் வாளால் அதை வெட்ட ஆயத்தமாயிருந்து, உன் பொறுமையாலும், மனப்பொருத்தத்தாலும் அதன் தலையைத் துண்டித்து அவன் செயலிலும், வாக்குறுதியிலும் பூரணத் திருப்தி கொண்டவனாய் இருந்து வந்தால் அல்லாஹ் உன் உதவியாளனாவான். உனக்குக் கிடைக்கக்கூடிய கருணைக்கும் பாக்யத்துக்கும் இதோ அவன் வார்த்தைகள் விவரந் தருகின்றன: "ஸபுருடன் இருப்போர்க்கு நன்மாராயங் கூறும்; தங்களுக்கு ஒரு துயர் உண்டானால் 'நாங்கள் நிச்சயமாக அல்லாஹ்வுக்குரியவர்கள், நிச்சயமாக அவனிடமே மீளவேண்டியவர்கள்" என்று இந்தப் பொறுமையாளர்கள் கூறுவார்கள். இவர்கள்மீது தான் இவர்கள் இறைவனின் அநுக்கிரஹங்களும் கருணையும் இறக்கப்படுகின்றன; இவர்களே நேரான வழியைப் பின்பற்றுவோராவர்" (2 : 155, 156, 157).

(2) அப்படியின்றேல், அல்லாஹ்வின் முன் தொழுகிறந்து பணி; அவன் கட்டளைகளுக்குப் பணிந்து நட. அல்லாஹ்வை அழை. அதுவே ஒரு காரியத்தை உரிய முறையில் செய்வதாகும். ஏனெனில் அவனே அவனிடம் கேட்கும்படி சொல்கிறான். அவன் பக்கம் திரும்பு; அவனிடம் வேண்டுதல் விடுப்பதையே உன் மனம் ஆறுதல் பெற மார்க்கமாக்கிக்கொள்; அதையே அவனிடமிருந்து உன்னிடம் வரும் தூதனாக்கிக்கொள்.

அதையே அவனோடு தொடர்புகொள்ளும் ஒரு மார்க்கமாகக் கொள். ஆனால், உன் பிரார்த்தனை ஏற்கப்படுவதற்கு உரிய காலம் வரும்வரை அது ஏற்கப்படாமல் இருப்பதற்காக அவன் மீது குறை கூறவோ, கோபம் கொள்ளவோ கூடாது. இரு நிலைகளின் - வேண்டுதல் விடுப்பதன், குறை கூறுவதன் - வித்தியாசங்களை நன்கு உணர். எனவே, வரம்பு மீறுவோர் கூட்டத்தில் சேர்ந்துவிடாதபடி விழிப்புடனிரு. அப்படி வரம்பு மீறினால் அவன் உன்னை ஹதம் செய்துவிடுவான்; அதுபற்றி அவன் கவலைகொள்ளமாட்டான். இதற்கு முன்பு பல ஜனங்களை, இம்மையில் அவர்கள் துயர்களை அதிகரித்துக் கடைசியில் அழித்தான்; மறுமையிலும் தண்டனையை விதித்தான். அதை மறவாதே. அல்லாஹு அக்பர்! ஹே என் நிலையை உணர்ந்தவனே, உன்னையே பூரணமாக நம்பியுள்ளேன். (முப்பத்து நான்காம் மகாலா)

18

உன் மரணத்துக்குப் பிறகுள்ள வாழ்வை முதலீடாகவும், இவ்வுலக வாழ்வை அதன் லாபமாகவும் கருது. முதலில் மரணத்துக்குப் பின்புள்ள வாழ்வுக்கானதைத் தேடிக்கொள். அதன்பின் நேரமிருப்பின் இவ்வுலகிற்கான தேவைகளை, உன் ஜீவனோபாயங்களைத் தேடு. இவ்வுலக வாழ்வை முதலீடாகவும் மறுவுலக வாழ்வை லாபமாகவும் கருதாதே! மறுவுலக வாழ்வுக்காகப் பின்னர் நேரம் கிடைத்தால் கவனித்துக்கொள்ளலாம்; அப்போது உன் ஐங்காலத் தொழுகையைத் தொழுதுகொள்ளலாம் என்று இருந்து விடாதே! உனக்கோ களைப்பேற்பட்டு நித்திரை வந்தால் யாவையும் போட்டுவிட்டுப் பிரேதம் போல் இரவில் தூங்கிப் போகிறாய்; பகலில் உன் மிருக இச்சைக்கும், மிருக ஆசைக்கும், ஷைத்தானுக்கும் பணிந்து, மறுமையை இம்மைக்

காக விற்று உன் நப்ஸுக்கு அடிமையாகி, அது உன்மீது சவாரி செய்யும் மிருகமாகிப் பொழுதைப் போக்கிவிடுகிறாய். நீயோ உன் நப்ஸை அடக்கி, அதன்மீது சவாரி செய்து அதை வசமாக்கி, பாதுகாப்பான பாதையில் அதை இட்டுச்சென்று, அதன் இறைவனுக்கு அதை அடிபணிந்ததாக, நிரந்தரமான வாழ்க்கைக்கு நடத்தாட்டிச் செல்ல வேண்டியவனுவாய். ஆனால், அதன் தூண்டுதலுக்குப் பலியாகி நீ அநியாயமாக நடந்துகொள்கிறாய்; அதன் கடிவாளத்தை அதனிடமே ஒப்படைத்துவிட்டாய்; அதன் கீழான ஆசைகளிலும் அனுபோகங்களிலும் அதைப் பின்தொடர்ந்தாய்; அதன் ஷைத்தானுடனும், விகாரத்துடனும் நீ கூட்டுச் சேர்ந்துகொண்டுள்ளாய். அதனால் இம்மையிலும் மறுமையிலுமுள்ள சிறந்தவற்றை நீ இழந்தவனுகி விட்டாய். இவை இரண்டிலுமே நீ நஷ்டவான்தான். இதனால் இறுதித் தீர்ப்பு நாளிலே நீ மானிடரில் பரம தரித்திரனுகவும், மார்க்கத்தில் மகத்தான நஷ்டவாளியாகவும் - அதைப் பின்பற்றுததால், இவ்வுலகில் உனக்கு உரியதை இழந்தவனுகவும் - காணப்படுவாய். ஆனால், அதனுடன் நீ மறுமையின் பாதையில் நடந்திருப்பாயானால், அதை உன் முதலீடாக வைத்துப் பயன்படுத்தியிருப்பாயானால் இம்மையிலும் மறுமையிலும் லாபமடைந்தவனுய் இருந்திருப்பாய்; இவ்வுலகில் உனக்கு விதிக்கப்பட்ட நல்லவை யாவும் மரியாதையோடு உன்னை வந்தடைந்திருக்கும்; நீ மதிப்புக்கும் பாதுகாப்புக்கும் உரியவனுய் காத்திருப்பாய். "மறுமை பற்றிய நாட்டத்தால் இம்மையில் அல்லாஹ் மகிழ்ச்சியளிக்கிறுன்; ஆனால், இவ்வுலக வாழ்வுபற்றிய நாட்டத்தால் மறுமையில் மகிழ்ச்சியளிக்கப்படுவதில்லை" என்று நம் பெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். இது வேறு எப்படித்தான் இருக்கமுடியும்? மறுமை பற்றிய நாட்டம் என்பது அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து நடப்

பதாகும். ஏனெனில், நாட்டம் (நிய்யத்) தான் சேவையின் ஆத்மாவும் ஜீவனுமாகும். எனவே, இவ்வுலக வாழ்க்கையை வெறுத்தொதுக்கி, மறுமையின் ஸ்தானத்தைத் தேடுபவனாகி அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்தால், அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டோரில் ஒருவனாவாய்; மறுமைக்குரிய சுவர்க்கமும் அல்லாஹ்வுக்கு அருகிலாதலும் கிட்டும். உலகம் உன் சேவைக்காகக் காத்து நிற்கும். அதில் உனக்காக ஒதுக்கப்பட்டது பூரணமாக உனக்குக் கிடைக்கும். ஏனெனில் யாவுமே ரப்பில் ஆலமீனான அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டவைதாம். இம்மையின் வாழ்வில் மூழ்கியவனாக, மறுமையைப் பற்றிய அக்கரையற்று இருந்தால் ரப்பு உன் மீது கோபமடைவான். மறுமையின் நல் வாழ்வை நீ இழப்பாய்; இவ்வுலகம் உனக்குப் பணியாது; உனக்குரிய பங்கு கிடைப்பதிலும் தொல்லைகளும், தடைகளும் உண்டாகும். ஏனெனில், மறுமையும் இம்மையில் உனக்கு ஒதுக்கப்பட்ட பங்குமே அல்லாஹ்வுக்குரியவைதாம். அவனுக்கு உன் மீது கோபம் வந்தால் அவன் இவற்றையும் சரியாகக் கிடைக்க விடமாட்டான். அவனுக்குப் பணியாத யாரையும் அவன் இவ்விதமே செய்கிறான்.

“இம்மையும் மறுமையும் இரு மனைவியரைப்போல; ஒருத்தியை நீ மகிழ்விக்க எண்ணினால், மற்றவள் உன்னிடம் கோபமாகிறாள்” என்று நம்பெருமான் அருளிய ஹதீஸ் ஒன்று உண்டு. “நிச்சயமாக உங்களில் இவ்வுலக வாழ்வை விரும்புபவர்களும் உண்டு; மறுமையை விரும்பும் மற்றோருமுண்டு” என்று திரு குர்ஆனில் கூறப்பட்டிருக்கிறது. இவர்கள் முறையே இவ்வுலகின் குழந்தைகள் என்றும், மறு உலகின் குழந்தைகள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவ்வுலகிலிருக்கும்போது, இவ்விரு கூட்டத்துக் குழந்தைகளிலும் நீ எந்தக் கூட்

டத்துக் குழந்தைகளைச் சேர்ந்தவனாய் இருக்கப் போகிறாய்? நீ மறுமையை யடைகையிலோ அங்கே ஒரு கூட்டம் சுவர்க்கத்திலும், ஒரு கூட்டம் நரகிலும் இருப்பதைக் காண்பாய். அப்போது ஒரு பகுதி மக்கள், அல்லாஹ்வின் வார்த்தைகளில் சொல்லுவதுபோலப் பதினையாயிரம் ஆண்டுகள் எனத் தகும் அத்தனை நீண்ட நேரம், நிறுத்தப்பட்டவர்களாய் கேள்வி கணக்குகளுக்கு உள்ளாவார்கள். அதே சமயத்தில் இன்னொரு பகுதி மக்கள் உணவு உண்ணுமிடத்தில் கூடியிருப்பார்கள். அவர்கள் முன் நல்ல உணவும், 'பழங்களும், பனிக்கட்டியைவிட வெண்மையான தேனும் வைக்கப்பட்டிருக்கும். "அவர்கள் சுவர்க்கத்திலுள்ள தமது வாசஸ்தலங்களை நோக்கிக் கொண்டே இருப்பார்கள். தாங்கள் கொடுக்கவேண்டிய கணக்குகளிலிருந்து விடுபட்டதும் அவர்கள் சுவர்க்கத்துள் நுழைவார்கள். இவ்வுலகில் ஒரு மனிதன் எப்படி வெகு சகஜமாகத் தன். வீட்டை நோக்கிப் போவானோ, அப்படியே அவர்களும் வெகு சாதாரணமாக அவர்களுடைய வாசஸ்தலங்களை நோக்கிச் செல்வார்கள்'' என்று ஹதீஸில் கூறப்பட்டுள்ளது. இவர்கள் இம்மையை உதறித் தள்ளி, மறுமையையும் தம் எஜமானனையும் அடையும் முயற்சிலேயே தம்மை ஈடுபடுத்தியவர்களாய் இருந்தபடியாலேதான் இவர்களுக்கு இந்த அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது. மற்றக் கூட்டத்தினரோ இம்மையையும் அதனோடுள்ள ஆசாபாசங்களையும் பற்றிப்பிடித்துக் கொண்டு, மறுமையைப் பற்றி அலக்ஷியமாகி, அது பற்றிக் கவனமே செலுத்தாது, கியாம நாள் பற்றிய சிந்தனையே அற்று, வரப்போகிற நாட்களில் தங்கள் போன்றார்க்கு என்னென்ன நேர விருக்கின்றன என்ற திரு குர்ஆன், ஹதீஸ் எச்சரிக்கைகளையும் கவனியாது இருப்பதால் பலவிதமான தொல்லைகளுக்கும் சங்கடங்களுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். எனவே, நீ உன் ஆத்மாவை அன்போடும் கருணையோடும் நோக்கு; இவ்விரு கூட்டத்தினரு

டைய நிலையிலும் சிறந்ததை உன் ஆத்மாவுக்குப் பெற்றளி; தீய நண்பர்களிடமிருந்தும், ஜின்னுகளிலும் மனிதரிலும் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியாதவர்களிடமிருந்தும் அதை அப்பாலாக்கு. அல்லாஹ்வின் கலாம் ஷரீபையும் ஸுன்னத்தையும் உன் வழிகாட்டியாகக் கொள்; இவ்விரண்டையும் கவனமாகக் கற்று, சிந்தித்து இவற்றின்படி நட. பேராசையாலும் வெறும் பேச்சாலும் ஏமாற்றத்துக்கு ஆளாகாதே! "ரஸூல் கொண்டு வந்துள்ளதை மனமுவந்து ஏற்றுக் கொள்ளுங்கள்; அவர்கள் விலக்கியதை நீங்களும் ஒதுக்கி விடுங்கள்; அல்லாஹ்வுக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமையில் விழிப்போடிருங்கள்!" (59 : 7) என்று அல்லாஹ் சொல்லியுள்ளான். அவர்கள் கொணர்ந்ததன்படி நடப்பதில் தவறிவிடாமலிருக்கும் பொருட்டு, அவர்கள் நடந்ததற்கு எதிரிடையாக நடவாதே! செயல்களிலும் சேவையிலும் உன் நப்ஸின் இஷ்டப்படியான, அல்லாஹ்வுக்கு மாறான காரியங்களைச் செய்யாதே! நேரிய பாதையை விட்டு விலகிய ஒரு கூட்டத்தினரைப் பற்றி அல்லாஹ் குறிப்பிடுகையில், "மடாலயத் துறவை நாம் அவர்கள்மீது கடமையாக விதிக்கவில்லை; எனினும், அல்லாஹ்வைத் திருப்தி செய்வதாக நினைத்துக்கொண்டு அவர்கள் அதை உண்டு பண்ணிக் கொண்டார்கள்" (57 : 27) என்று கூறுவதைக் கவனித்துப்பார்! எனவே, அவன் தன் ரஸூலைப் பரிசுத்தப்படுத்தி அவர்களைப் பொய்மையின் பக்கலிலிருந்து அப்பால்ாக்கி வைத்தான். "அவர் தன் இஷ்டப்படி எதையும் பேசவில்லை; அவருக்கு அருளப்பட்ட வஹிகளேயன்றி இவை வேறல்ல"' (53 : 3,4) என்று அல்லாஹ் கூறியுள்ளான். அதாவது: "அவர் கொண்டுவந்த யாவும் என்னிடமிருந்து வந்தவைதாம். அவை அவர் உள்ளத்திலிருந்தோ, அவர் இஷ்டத்தாலோ உண்டானவையல்ல; ஆகவே அவற்றைப் பின்பற்றுங்கள்" என்று

பொருள்படும்படி இந்த ஆயத்தில் பேசியுள்ளான். "நீங்கள் அல்லாஹ்வை நேசிக்கிறீர்களா? அப்படியாயின் என்னைப் பின்பற்றுங்கள்; (அப்போது) அல்லாஹ் உங்களை நேசிப்பான் என்று கூறும்" (3 : 31) எனவும் அவன் கூறியுள்ளான். இதனால் சொல்லிலும் செயலிலும் அவர்களைப் ' பின்பற்றுவதுதான் அன்புப் பாதையில் நடப்பது என்பது தெளிவாகிறது.

"தாபமடைவது என் பாதை; அல்லாஹ்விடம் நம்பிக்கை கொண்டிருப்பது என் நிலை" என்று நம் பெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். எனவே, நீ அவர்கள் அனுஷ்டானத்துக்கும், நிலைக்கும் இடையிலுள்ளாய். உன் ஈமான் பலஹீனமாய் இருப்பின், அவர்கள் அனுஷ்டானமான தாபமடைவதைப் பின்பற்று; உன் ஈமான் பலமுடையதாய் இருந்தால், அல்லாஹ்விடம் நம்பிக்கை கொண்டிருப்பதான உன் நிலையை நீ யடை. "அல்லாஹ்விடமே நீ தவக்குல் வைக்க வேண்டும்" என்று அல்லாஹு ஸுப்ஹான ஹுவத்த ஆலா கூறியுள்ளான். "அல்லாஹ்வை நம்புபவர்களுக்கு அல்லாஹ் போதுமானவனாய் இருக்கிறான்" (65 : 3) என்றும், "நிச்சயமாகத் தன்னிடம் நம்பிக்கை வைப்போரை அல்லாஹ் நேசிக்கிறான்" (3 : 159) என்றும் அவன் கூறியுள்ளான். எனவே, தன்னிடம் நம்பிக்கை வைக்கும்படி அவன் உத்தரவிடுகிறான். நபிபெருமான் (ஸல்) அவர்களை அதைப் பற்றிப்பிடிக்கும்படி அவன் உத்தரவிட்டதுபோல, நீயும் அதைப் பற்றிப்பிடித்தவனாய் இருக்க வேண்டும் என்று அவன் வற்புறுத்துகிறான். "நம் அனுமதி இல்லாத எந்த ஒரு காரியத்தையும் எவனொருவன் செய்யினும் அவன் ஒதுக்கப்படுவான்" என்று ஹதீஸில் வந்துள்ளது. இது ஜீவனம், செயல்கள், வார்த்தைகள் யாவுக்குமே பொருந்தும். நமக்கு அவர்களைத் தவிர நாம் பின்பற்றத்தக்க வேறு ரஸூல் இல்லை;

திரு குர்ஆனையன்றி நாம் ஒழுகுவதற்கு வழிகாட்டியாகக் கொள்ளக்கூடிய கிதாப் வேறு இல்லை. எனவே, இவை இரண்டையும் மீறாதே! அப்படி மீறினால் நீ அழிவதுடன் உன் இச்சைகளும், ஷைத்தானும் உன்னை வழி தவறச் செய்துவிடும். "அல்லாஹ்வின் பாதையிலிருந்து உம்மை வழி கெடுத்துவிடாமலிருக்கும் பொருட்டு இச்சைகளின் போக்கில் நடவாதிரும்" (38:26) என்கிறது திரு குர்ஆன். எனவே, அல்லாஹ்வின் கிதாபிலும், அவன் ரஸூலின் அனுஷ்டானத்திலும் தான் பாதுகாவல் உண்டு. மற்ற யாவும் அழிவையே உண்டாக்குவன. இவ்விரண்டின் உதவிகொண்டுதான் அல்லாஹ்வின் அடியான் விலாயத், பதாலியத், கௌதிய்யத் ஆகிய நிலைகளுக்கு உயர்கிறான். (முப்பத்து ஆறும் மகாலா)

19

மூமினே, உன் அண்டை வீட்டான் உண்பதையும், குடிப்பதையும், உடுப்பதையும், மணப்பதையும், வசிப்பதையும், செல்வத்தில் திளைப்பதையும், தன் எஜமானன் அளித்ததை அனுபவிப்பதையும் கண்டு நீ ஏன் பொறாமை கொள்கிறாய்? அதனால் உன் ஈமான் பலஹீனப்படுவதை நீ அறியாயா? அதனால் உன் எஜமானனின் பார்வையில் நீ மதிப்புக் குறைந்தவனாகி அவன் வெறுப்புக்கு ஆளாவதை நீ உணரவேண்டாமா? "பொறாமைக்காரன் நம் பாக்கியத்தின் பகைவன்" என்ற அல்லாஹ்வின் வாக்கை நபி பெருமான் (ஸல்) அவர்கள் வெளியிட்டுள்ளதை நீ கேள்விப்பட்டதில்லையா? "நெருப்பு விறகை உண்பது போல, நிச்சயமாகப் பொறாமை நற் பண்புகளை உண்டுவிடுகிறது" என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் கூறியுள்ளதை நீ அறியாயா?

அப்படியிருக்க, வறியவனே, எதற்காகப் பொறாமை கொள்கிறாய்? உனக்குக் கிடைக்காதது அவனுக்குக்

கிடைத்ததற்காகவா? அவனுக்கு அல்லாஹ் ஒதுக்கிய பங்குக்காக அவன்மீது பொறாமை கொள்கிறாய் என்றால், "அவர்களிடையில் இம்மை வாழ்க்கைக்குரிய ரிஜ்கை நாம் பகிர்ந்தளிக்கிறோம்" (43:32) என்ற அவன் வாக்கின்படியே உனக்கும் பகிர்ந்து தரப்படுகிறது என்பதை நீ உணரவேண்டும். அல்லாஹ் விசேஷமாக அளித்துள்ள, அவனுக்குரிய பங்காகப் பகிர்ந்து கொடுத்துள்ள செல்வத்தை அல்லாஹ்வின் நன்கொடையாகப் பெற்று அனுபவிக்கும் ஒருவன்மீது நீ பொறாமை கொள்வது நிச்சயமாக அநீதியானதுதான். அந்தப் பங்கில் வேறு யாருக்கும் உரிமையில்லை என்பதை நீ உணரவேண்டாமா? இப்படிப் பொறாமைப்படும் உன்னை விடப் பெரிய மூடனும் தரித்திரனும் வேறு யாரும் இருக்க முடியுமா? உனக்குத் தரப்பட்ட பங்குக்காக நீ அவன்மீது பொறாமைப்படுகிறாய் என்றால் நீ முற்றும் அறியாமை குடிகொண்டவன் என்பதையே அதன் மூலம் காட்டிக் கொள்கிறாய். ஏனெனில், உனக்குரிய பங்கு மற்றொருவருக்கு மாற்றப்படவோ, தரப்படவோ மாட்டாதல்லவா! அல்லாஹ் அத்தகைய அநீதியைச் செய்வதே இல்லை. "என்னுடைய கட்டளை என்னிடம் மாற்றப்படுவதில்லை; என் அடியார்களிடம் நான் அநீதியாய் நடந்துகொள்வதில்லை" (50:29) என்று அல்லாஹ் கூறுகிறான். உனக்கு விதித்ததை உன்னைவிட்டு அகற்றி வேறு யாருக்கும் கொடுத்துவிடும் அளவுக்கு நிச்சயமாக அல்லாஹ் அநீதிக்காரனல்ல. அப்படி எண்ணுவது உன் அறியாமையைக் காட்டுவதுடன், உன் சகோதரனுக்கும் நீ அநீதியிழைப்பதாகும். அவன்மீது நீ பொறாமை கொள்வதைவிட இப்பூமியைக் கண்டே நீ பொறாமைப் படலாமே! ஏனெனில் இதில் பல்வகையான தங்கம், வெள்ளி, ரத்னம், வைரக் கற்கள், முந்திய நாளைய ஆத், ஸமூது போன்ற மன்னர்கள், சக்கரவர்த்திகளின் செல்வங்கள் யாவும் மறைந்து கிடக்கின்றனவல்லவா!

ஓர் அரசன் பெரும் படையுடனும், ராஜ்யத்துடனும், தன் ராஜ்யம் முழுவதிலுமுள்ளவர்களை அதிகாரஞ் செய்து, வரி வசூல் முதலியவை செய்துகொண்டும், தன் நன்மைக்காகப் பிரஜைகளைப் பயன்படுத்திக்கொண்டும் பலவகையான இன்பங்களுடன் வாழ்க்கை நடத்திக்கொண்டும் இருக்கிறான். இத்தகைய மன்னனைக் கண்டு பொறாமைப்படாமல் இவனிடமுள்ள ஒரு நாயைக் கண்டு - அரசனின் ஒரு நாய்க்குக் கீழ் உள்ள ஒரு நாயைக் கண்டு - அந்த நாய்க்கே தொண்டு செய்து அது விட்டுச் செல்லும் எச்சிலை உண்டு வாழும் ஒரு நாயைக் கண்டு ஒருவன் பொறாமைப்படுகிறான்; அதனுடன் பகைமை பாராட்டுகிறான்; அது சாகவேண்டும், அது செத்தபின் அதன் ஸ்தானத்தில் தான் இருக்கவேண்டும் என்று விரும்புகிறான் என்றால் எப்படியிருக்கும்! இத்தகைய பொறாமைக்காரனாகவே நீ இருந்து வருகிறாய். இத்தகையவனைவிட, இத்தனை காலத்திலும் ஒரு பெரும் மூடன்-அறிவிலி இருந்திருக்க முடியுமா?

வறியவனே, அல்லாஹ் தனக்கு அளித்துள்ளவற்றில் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடவாமல், அல்லாஹ்வுக்குச் செய்யவேண்டிய கடமையில் தவறினால் உன் அண்டை வீட்டானும், அவன் ஏவல் விலக்கல்களின்படி ஒழுகாததற்காகக் கியாம நாளில் நீளமான கணக்குச் சொல்லவேண்டியதிருக்கும் என்பதை நீ அறியாயா? அப்போது கிடைக்கும் தண்டனையால் அவன், இப்போது தனக்குத் தரப்பட்டுள்ள சுகபோகங்களில் ஒரு துளியேனும்கூடத் தனக்குத் தரப்படாமல் இருந்திருப்பின் நலமாய் இருந்திருக்குமே. எந்தச் சுகத்தையும் போகத்தையும் தான் அனுபவிக்காமல் இருந்திருக்கக் கூடாதா என்று வருந்துவான். ஹதீஸில் இது பற்றிச் சொல்லப்பட்டுள்ளது என்ன என்று உனக்குத் தெரியாதா? "கியாம நாளில் சங்கடக்காரர்கள் அனுபவிக்

கும் தண்டனைகளைக் காண்பவர்களில், தமது உடலி லிருந்து கத்திரியால் சதையை மட்டும் பிய்த்து எடுத்து விட்டால்கூட நலமே என்று எண்ணும் கூட்டத் தாரும் நிச்சயமாக இருக்கவே செய்வார்கள்'' என்கிறது ஹதீஸ். எனவே, உன் அண்டை வீட்டான் கியாம நாளில் தனக்கு வருகிற தண்டனையைக் காணும்போது, தான் கொடுக்கவேண்டிய நீண்ட கணக்கையும், தான் இம் மையில் அனுபவித்த சுகத்துக்குப் பகரமாய் அன்றையக் கொதிக்கும் வெயிலில் ஐம்பதினாயிரம் ஆண்டுகள் நின்று துடிக்கவேண்டிய திருப்பதையும் பார்க்கும்போது, அதே சமயம் நீ இவற்றை யெல்லாம் விட்டு விலகி அல்லாஹ் வின் இருக்கையின் நிழலிலே ஒதுங்கியிருப்பதையும், நீ இம்மையில் காட்டிய சகிப்புத்தன்மைக்கும், பொறு மைக்கும், கஷ்டங்களிடையிலும் மனத்திருப்தியுட னிருந்தமைக்கும் பகரமாக உனக்கு அங்கே நல்ல பானங் களும், உணவும், சுகமும், மகிழ்வும் இருப்பதையும் காணும்போது, இம்மையில் தானும் உன் நிலையிலேயே இருந்திருக்கக்கூடாதா என்று (உன் அண்டை வீட் டான்) ஏங்குவான். எனவே, துயரங்களை எதிர் நோக்கு வதில் சகிப்புத்தன்மையும் பொறுமையுங் காட்டி, அவன் பாக்யங்களுக்காக நன்றி விஸ்வாசத்துடனிருந்து, ரப்பில் ஆலமீனிடம் தம் விவகாரங்களை ஒப்படைத்து முற்றும் சரணடைந்த அடியார்களின் கூட்டத்தில் நாமும் நீயும் சேருமாறு அல்லாஹ் அருள்புரிவானாக! (முப்பத் தேழாம் மகாலா)

20

அல்லாஹ்வின் வேலையை உண்மையுடனும், உளப் பூர்வமாகவும் நிறைவேற்றுபவன், அவனல்லாதவை பற்றி அல்லும் பகலும் அஞ்சி ஒதுங்கியவனாகவே இருப்பான். தௌஹீதைப் பிரகடனப்படுத்தி, அவனுடன் எதையும் இணை வையாது உன்னைத் தாக்க வரும் - ஆனால், கொல்

லாது புண்படுத்தும் - தக்திரின் அம்புகள் பூரணமாய் உன்னைத் தாக்க இடங்கொடுத்து வா! அல்லாஹ்வுக்காக அழிபவர்கள் அவனிடமிருந்து அதற்கான ஈட்டைப் பெறுவர். (முப்பத்தெட்டாம் மகாலா)

21

அல்லாஹ்வின் உத்தரவின்றி, ஆசையால் தூண்டப்பட்டு எதையும் எடுத்துக்கொள்வது கடமையை விட்டு வழுவுவதும், சத்தியத்தை எதிர்ப்பதுமாகும்; ஆசையால் தூண்டப்படாது எதையும் எடுப்பது உண்மையுடன் இணக்கமானதும் ஒத்ததுமாகும்; இதை ஒதுக்குதல் உண்மையற்ற பாசாங்குத்தனமாகும். (முப்பத்தொன்பதாம் மகாலா)

22

உன் நப்ஸுக்கு முற்றுமே நீ பகைவனானலன்றி, உன் உடலிலுள்ள சகல அங்கங்களை விட்டும் பிரிந்தவனானலன்றி, உன் ஜீவிதத்திலுள்ள சகல அசைவுகளையும் ஒய்வான நிலைமைகளையும், கேட்பதையும், பார்ப்பதையும், பேசுவதையும், வைத்திருப்பதையும், முயற்சியையும் செயலையும், அறிவையும், மற்றும் உன் ஆத்மீக ஜீவிதம் உண்டாவதற்கு முன்பு உன்னிடமிருந்து வெளிப்பட்ட சகலவற்றையும் விட்டு விலகினாலன்றி ஆத்ம ஞானியர் கூட்டத்தில் சேர்க்கப்படுவாய் என்று எண்ண வேண்டாம். ஆத்ம ஜீவிதம் உன்னுள் ஊதப்பட்டதும், உனக்கும் உன் ரப்புக்கும் இடையில் திரையாக இருந்த இவை யாவும் மறைந்துவிடவேண்டும். அந்நிலையில் நீ பரிசுத்தமான கல்புடையவனாகி, உன் ஆத்மா ரகசியங்களுக்கெல்லாம் ரகசியமானதும் மறைவானவற்றுள்ளெல்லாம் மறைவானதும், அந்தரங்கத்தில் மற்றவற்றை விட்டும் தனியானதுமான நிலையை எய்தியதும், உன் ரப்பைத் தவிர மற்றுள்ள சகலமும் பகையானவைகளாயும்,

திரையானவையாயும் இருப்பதை உணர்வாய். "நிச்சயமாக என் ரப்பில் ஆலமீனையன்றி (மற்ற) இவையாவும் எனக்குப் பகையானவைதாம். (அவன் மட்டுமே என் நேயனாவான்)" (26 : 77) என்று இப்ராஹீம் கலீலுல்லாஹ் (அலை) அவர்கள் சொன்னதுபோன்று நீயும் கூறிவிடுவாய். அவர்கள் விக்ரஹங்களைப்பற்றி இவ்விதம் கூறினார்கள். எனவே, நீ உன் உடலையும் அதன் அவயவங்களையும் பிற சிருஷ்டிகளையும் விக்ரஹங்களாகக் கருதவேண்டும். அவற்றில் எதற்கும் நீ கீழ்ப்படியக்கூடாது; கண்டிப்பாய் அவற்றைப் பின்பற்றக்கூடாது. அப்போது உன்னிடம் ரகசியங்கள் வெளியிடப்படும்; தெய்வ ஞானமும் அதன் அபூர்வமான விஷயங்களும் உன்னுள் உதிப்பாகும். சிருஷ்டிக்கும் சக்தியும், சுவர்க்கத்திலுள்ளவர்களான மூமின்களிடம் காணப்படும் அற்புதங்கள் நிகழ்த்தும் சக்தியும் உனக்கருளப்படும்.

இதன் பின், நீ மறுமையில் உயிர்த்தெழுப்பப்படுவது போன்ற நிலைமையிலாவாய். அல்லாஹ்வின் சக்தி வெளிப்படும் ஒரு கருவியாய் இருப்பாய்; அல்லாஹ்வின் மூலம் கேட்பாய்; அவன் மூலம் பார்ப்பாய்; அவன் மூலம் நடப்பாய்; அவன் மூலம் அறிந்து கொள்வாய்; அவன் மூலம் சுகமும் ஆஸ்வாஸமும் அடைவாய். அவனையல்லாத சகலவற்றின் விஷயத்திலும் குருடாகவும் செவிடாகவும் இருப்பாய். ஏவல் விலக்கல்களை அனுசரித்துச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடப்பின், இதன்மூலம் அவனையன்றி வேறு எதுவும் ஜீவித்திருப்பதையே உணராதவனாவாய். அதன் பின்னும் உன்னிடத்தில் சட்டத்தின் அவசியத் தேவை எதுவும் குறைவாய் இருப்பின் ஷைத்தானின் ஊசாட்டங்களால் நீ அலைக்கழிக்கப்படுகிறாய் என்று உணர். ஷரீஅத்தின் கட்டளைகளின்படி நட; ஷரீஅத்தைப் பற்றிப்பிடித்துக்கொள். கீழான இச்சை

களை விட்டும் ஒதுங்கிவிடு. ஷரீஅத்தால் உறுதி சொல்லப்படாத எதுவுமே குப்ரானது என்பதை உணர். (நாற்பதாம் மகாலா)

23

மானிடனின் மனம் மகிழ்ச்சியான நிலைமை, தொல்லையான நிலைமை என்ற இருவித நிலைமைகளில் ஏதாவது ஒன்றிலேயே இருக்கும்; மூன்றாம் நிலை எதுவுமில்லை. இதனால் அது சங்கடத்திலிருக்கையில் கவலையும், புகாரும், அதிருப்தியும், குறை கூறலும், இறைவன்மீதே குற்றஞ் சாட்டலும், பொறுமை, மனப்பூர்வமான அடிபணிதல், மனப்பொருத்தம் ஆகியவை இல்லாமையும் உண்டாகின்றன. அத்துடன் தீய ஒழுக்கமும், சிருஷ்டிக்கப்பட்டவைகளைச் சிருஷ்டித்தவனுடன் இணைவைத்தலும், கடைசியில் குப்ரும் உண்டாகும். ஆனால், மனிதனின் மனம் மகிழ்ச்சியான நிலையிலிருப்பின் அதில் பேராசை, பிடிவாதம், கீழான போக உணர்ச்சிகள் முதலியவை தலை தூக்குகின்றன. ஓர் ஆசை பூர்த்தியானதும் மறு ஆசை கிளர்ந்தெழும். ஏற்கனவேயுள்ள பாக்யங்களைக் குறைவாக எண்ணும் நிலைமையுண்டாகும். அவற்றில் மனம் குறை காணும். இவற்றைவிடச் சிறந்த – தனக்குரியதாக ஒதுக்கப்படாத – பெரிய சுகத்தை நாடும்; தனக்கு ஒதுக்கப்பட்டதை அலக்ஷியஞ் செய்யும். இதனால் சம்பந்தப்பட்ட மனிதனுக்குப் பலவகையிலும் தொல்லைகள் உண்டாகின்றன. கையிலுள்ளதால் திருப்தியடையாத மனம் தொல்லையில் மாட்டிக்கொண்டு, இம்மையிலும் மறுமையிலும் முடிவில்லாத கஷ்டங்களுக்கும், துயரங்களுக்கும், அழிவுக்கும் ஆளாகிறது. "நிச்சயமாகத் தண்டனைகளுள் மிகவும் துயரந் தருவது, ஒருவன் தனக்காக ஒதுக்கப்படாததைத் தேடுவதற்குத் தரப்படுவதுதான்" என்று கூறப்பட்டிருப்பதற்கொப்ப அது தொலையாத கஷ்டத்தைச் சேர்த்துவிடுகிறது.

இவ்விதம் மனம் கஷ்டத்துக்குள்ளாகையில் அதி லிருந்தும் விடுபடவேண்டும் என்பதன்றி வேறு எதையும் அது விரும்புவதில்லை; சகல சுகங்களையும் ஆசைகளையும், இன்பமானவற்றையும் அது மறந்துவிடுகிறது; இவற்றில் எதையும் வேட்பதில்லை. பிறகு சம்பந்தப்பட்ட நபருக்குச் சுகமும் வசதியுமான வாழ்க்கை வாய்த்ததும், அவன் மீண் டும் அகந்தையும், பொறுமையும், பணிவற்ற தன்மையும், உடையவனாகித், தன் ரப்புக்குக் கீழ்ப்படியாது, தன் பாவ கரமான தொழில்களில் மூழ்கிவிடுகிறான். அதற்கு முன்பு வரை அவன் உட்பட்டிருந்த துயரங்களையும் அவன் ஆளாக்கப்பட்ட தொல்லைகளையும் உடனே மறந்துவிடு கிறான்.

இதனால் அவன் ஏற்கனவே அனுபவித்ததைவிட அதிகமான கஷ்டங்களுக்கு ஆளாக்கப்படுகிறான். அவன் கொஞ்சமும் மாறாது நடந்துவந்த தீய ஒழுக்கத்துக்குத் தண்டனையாக இவ்விதம் செய்யப்படுகிறான். சுகமும் வசதியும் அவனைத் திருத்தமாட்டா என்றானதும், அவ னுக்கு இவ்விதம் தண்டனை வழங்கப்பட்டு மேலும் மேலும் அவன் தன் பாவங்களில் அழுந்தாதபடி செய்யப் படுகிறது.

துயரம் அகற்றப்பட்டதும் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து, கீழ்ப்படிதலும், தனக்கு விதிக்கப்பட் டதை மனமுவந்து ஏற்றலும் உடையவனாக அவன் இருந் திருப்பின் அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் நன்மை யுண்டாகி இருக்கும். அப்போது அவனுக்கு உலக வசதி களும், அல்லாஹ்வின் அருளும், மகிழ்வான வாழ்வும், சுகமும் அதிகரித்திருக்கும்.

எனவே, இம்மை மறுமையில் பாதுகாப்புத் தேடு பவன் பொறுமையையும் மனமுவந்து அடிபணிதலையும் வளர்த்து ஜனங்களுக்கு எதிராய்ப் புகார் செய்வதைத் தவிர்க்க வேண்டும்; தன் தேவையெல்லாம் தன்

ரப்பில் ஆலமீனிடமிருந்தே பெறவேண்டும்; அவனுக்கு அடிபணிவதைக் கடமையாகக் கொண்டு, சுகம் வருவதற்காகக் காத்திருந்து, அவனுக்கே சேவை செய்ய வேண்டும். அவனுடைய சிருஷ்டிகள் சகலவற்றிலுமுள்ள எதையும்விட அவன் சிறந்தவனன்றோ!

அனேகமாக, அவன் பறிப்பது ஒரு நன்கொடையாகவும், அவன் தண்டனை ஒரு பாக்யமாகவும், அவன் அனுப்பும் துயரம் ஒரு நிவர்த்தியாகவும், அவன் வாக்குறுதி ஒரு ரொக்கமாகவும், அவன் வார்த்தை செயலாகவும் இருக்கின்றன. அவன் ஏதாவதொன்றைச் செய்ய நாடினால், அவன் கூறும் வார்த்தையும் கட்டளையும் 'ஆகுக' என்பதுதான்; உடனே அஃது ஆகிவிடுகிறது. ஆகவே அவன் செயல்கள் யாவும் நன்மையானவையாகவும் ஞானத்தையும், அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டவையாகவும் இருக்கின்றன. ஆனால், அவன் தன் அனுவபவத்தின் ஞானத்தைத் தன் அடியான் அறியாத ஒன்றாய்த் தன்னகத்தே வைத்திருக்கிறான். இதனால் அடியான் மனமுவந்து அவனுக்குப் பணிந்து, தன்னை அர்ப்பணித்து, அவன் ஏவல் விலக்கல்களின் படி ஒழுகி அவனுக்குச் சேவை செய்து, அவன் தனக்கு ஒதுக்கியுள்ளதில் மனப்பொருத்தங் காட்டி, சிருஷ்டியை ஊட்டி வளர்க்கும் ஈடுபாடுகளில் மனங் கொள்ளாது இருக்க வேண்டும். இப்படி இருப்பதே சகல ரிஜ்க் ஒதுக்குதல்களின் மூலஸ்தானமாகவும், அவை வெளிப்படும் இடமாகவும், அடிப்படையாகவும் இருக்கிறது. இத்துடன் நடப்பவை பற்றி 'ஏன், எப்படி, எப்பொழுது என்று எதுவும் கேளாது மௌனமாகி அல்லாஹ்வின் செயல்கள், செயலற்ற நிலைகள் பற்றி எதுவும் குறைகூறாது இருந்து வரவேண்டும். இதற்கு ஹதீஸில் ஆதாரமுள்ளது. இந்த ஹதீஸ் அதா இப்னு அப்பாஸ் அவர்களுக்கு அப்துல்லாஹ இப்னு அப்பாஸ் அவர்கள்

கூறியதாகக் காணப்படுகிறது. இதில் இப்னு அப்பாஸ் அவர்கள் கூறுவதாவது: "ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பின்னால் நான் சவாரி போய்க் கொண்டிருந்தேன். அப்போது அவர்கள் சொன்னார்கள், "தம்பி, அல்லாஹ்வுக்கு நீ செய்ய வேண்டிய கடமைகள் விஷயத்தில் பேணுதலுடன் நடந்து கொள்; அல்லாஹ் உன்னைக் கவனித்துக் கொள்வான். அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் விஷயத்தில் பேணுதலுடன் நடந்து கொள்; அப்போது அவனை உன் முன் காண்பாய்" என்று.

ஆகவே, நீ கேட்க வேண்டியதை அவனிடமே கேள். நடக்கவிருப்பதை எல்லாம் எழுதிவிட்ட பேனாவிலும் மை உலர்ந்துவிட்டது. அல்லாஹ் விதிக்காத ஒன்றை உனக்குப் பெற்றுத் தர அவன் அடியார்கள் எவ்வளவு தான் முயன்றாலும் அவர்களால் அது சாத்தியப் படாது. உனக்கெதிராக அல்லாஹ் விதிக்காத தீங் கொன்றை உனக்கு உண்டாக்க, அவன் அடியார்கள் சகலரும் சேர்ந்து முயன்றாலும் அது சாத்தியப்படாது. ஆகவே, அல்லாஹ்வின் கட்டளைகள் விஷயத்தில் ஈமானின் அந்தரங்க சுத்தியுடன் நடந்து கொள்ள முடியுமெனின் அவ்விதம் செய்; அவ்விதம் செய்ய இயலாவிடின், நீ வெறுப்பதில் பொறுமையுடனிரு. அதில் அதிக நன்மையிருப்பதை உணர்.

ஒவ்வொரு மூமினும் ஹதீஸைத் தன் இதயத்தையும், அதன் அக, புற உடையையும், நோக்கையும் பார்க்கும் கண்ணாடியாக ஆக்கிக் கொண்டு சகல செயல்களிலும், அசைவுகளிலும் அதன்படி நடப்பதையே லக்ஷியமாக்கிக் கொள்ளவேண்டும். அதன்மூலமே அவன் இம்மையிலும் மறுமையிலும் பாதுகாப்புப் பெற்றவனாகி, அல்லாஹுத்தஆலாவின் கருணையால் இரு லோகங்களிலும் கண்ணியம் பெற முடியும். (நாற்பத்து இரண்டாம் மகாலா)

24

மானிடரிடம் உதவி கேட்பவன், அல்லாஹ்வைப் பற்றிய தன் அறியாமை காரணமாகவும், ஈமான் பலமின்மையாலும், சத்தியத்துவம், நிச்சயத்துவம் பற்றிய ஞானமின்மையாலும், பொறுமையின்மையாலும் அவ்விதம் செய்கிறான். அப்படிக் கேட்காதிருப்பவன், அல்லாஹ்வைப் பற்றிய அதிகமாக ஞானத்தாலும், தன் ஈமானின் நிச்சயத்துவத்தின் பலத்தாலும், ஒவ்வொரு கணமும் அல்லாஹு ஸுப்ஹானஹுவிடம் கொண்ட நாணத்தாலும் அவ்விதங் கேட்காதிருக்கிறான். (நாற்பத்து மூன்றும் மகாலா)

25

ஆத்ம ஞானம் பெற்றவனின் சகல துஆக்களும் அல்லாஹு ஸுப்ஹானஹுவால் கபூல் ஆக்கப்படுவதுமில்லை; அவனுக்களிக்கப்பட்ட சகல வாக்குறுதிகளுமே உடனுக்குடன் நிறைவேற்றப்படுவதுமில்லை. ஏனெனில் எதிலும் தான் கேட்பது கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவன் அழிவுக்கு ஆளாகி விடக்கூடாதல்லவா! பயமும் நம்பிக்கையும் சேர்ந்தல்லாது மற்றபடி எந்த மஃரிபத்துமோ, மகாமாத்துமோ கிடையாது. இவை இரண்டும் ஒரு பறவையின் இறக்கைகளை யொக்கும்; இவற்றில் ஒன்றில்லாவிடினும் பூரணமாகப் பறக்க இயலாது.

ஒவ்வொரு மகாமையும் பொறுத்தவரை இது உண்மையாகும். ஆனால், அந்தந்த மகாமுக்கு ஏற்பப் பயமும் நம்பிக்கையும் குறைவாகவோ, அதிகமாகவோ இருக்கும். இவ்விதம் மஃரிபாவின் ஞானம் பெற்ற ஒருவன் அல்லாஹ்வின் சமீபத்துவத்தை அனுபவிக்கிறான்; அவன் நிலையிலும் அந்தஸ்திலும் அவன் அல்லாஹ்வையன்றி வேறு எதையும் விரும்புவதில்லை; அவனல்லாத வேறு எதன் பக்கமும் இழுக்கப்படாது, வேறு எதனி

டமும் திருப்திப்படாது, வேறு எதனுலும் மகிழ்ச்சி யடையாது இருப்பான். எனவே, தன் துஆ கபூலாக வேண்டுமென்று கேட்பதோ, தனக்குத் தரப்பட்ட வாக் குறுதி நிறைவேற்றப்பட வேண்டுமென்று வேண்டுவதோ அடியான் செல்லும் பாதைக்கு முரணுனது; அவன் நிலைமையுடன் ஒவ்வாதது.

இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக அல்லாஹ்வின் திட்டங்கள் மூலம் ஓர் அடியான் மயக்கத் தாலோ, நிச்சயமான நம்பிக்கையாலோ வழி தவறி, அல்லாஹ்வை நெருங்குவதில் தான் கொள்ளவேண்டிய நல்லொழுக்கத்தின் அளவை மறந்து, அழிவுக்கு ஆளாகி விடக்கூடாது என்பது. இரண்டாவதாக எதையாவது ஒன்றை அல்லாஹ்வுக்கு இணைவைப்பதற்கு அது ஒப் பாகிவிடக்கூடாது என்பது. ஏனெனில் நபிமார்களைத் தவிர பாவத்திலிருந்து பூரணமாக விடுபட்டவர்கள் இவ்வுலகில் யாருமில்லை. இதனுல்தான் அல்லாஹ் தன் அடியானுக்கு அளிக்கும் வாக்குறுதியை உடனுக்குடன் நிறைவேற்றுவதும், துஆவைக் கபூலாக்குவதுமில்லை. அப்படி நிறைவேற்றிக் கபூல் செய்தால், அல்லாஹ்வின் கட்டளைகளுடன் சம்பந்தமில்லாத வகையில், தன் இயற்கையால் உந்தப்பட்டு அடியான் எதையாவது கேட்டுவிடலாம்; அதனுல் ஷிர்க் (இணைவைத்தல்) உண் டாகிவிடும். பலவித மகாம்களிலும் பலவிதமான ஷிர்க்கு களுக்கு இடமுண்டு. ஆனுல், துஆ ஒரு குறிப்பிட்ட கட்டளைக்கு இணங்கியதாய் இருப்பின், அல்லாஹ்வுக்கு ஒருவனை அருகினிலாக்கும் தொழுகை, நோன்புபோன்ற கடமைகள், மார்க்கக் கடன்கள் சம்பந்தப்பட்டவை களாய் இருப்பின், இவற்றில் அல்லாஹ்வின் கட்டளை களுக்குப் பணிவுகாட்டுதல் இருப்பதால் ஏற்கப்பட இட முண்டு.

26

ஜனங்கள் இருவகைப்பட்டவர்கள் என்பதை அறிந்துகொள். ஒரு வகையினர் இம்மைக்குரிய நலன்களால் பாக்யம் பெற்றவர்களாவர்; மற்றொரு வகையினர் ரப்பு விதித்துள்ள சோதனைகளுக்கு ஆளாகுபவர்களாவர். இம்மையின் பாக்யங்கள் வழங்கப்பட்டவர்கள் அதைச் சுகிப்பதில் பாவ மாசுக்கு ஆளாகாமல் இருப்பதில்லை. இவற்றால் கிடைத்த சுகபோகங்களில் ஒருவன் திளைக்கும்போது, திடீரென அல்லாஹ்வின் உத்தரவு உண்டாகி, வியாதிகள், வேதனைகள், சொத்து, உயிர்ச் சேதங்கள், குடும்பத்தினர், பிள்ளைகுட்டிகள் கஷ்டம் போன்ற துயரங்களாலும், சோதனைகளாலும் அவன் பாதிக்கப்படுகிறான். இதனால்தான் சுகமே அனுபவிக்காதவன் என்ற நிலையை அடைகிறான். சுகத்தையும் அதன் இனிமையையுமே அவன் மறந்து போகிறான். அவன் செல்வ நிலை நீடித்து, ஆண், பெண் குற்றேவல்காரர்களும் பகைவர்களிடமிருந்து பாதுகாப்பும் கிடைப்பின் தனக்கு ஆபத்து என்பதே கிடையாது என்று அகந்தை கொண்டிருக்கிறான். ஆனால், ஆபத்து வந்துவிட்ட பின்னரோ தனக்கு மகிழ்ச்சி என்பதே இல்லையோ என்று மனம் மாழ்கிறான். இவையெல்லாம் தன் எஜமானனைப் பற்றிய அறியாமையாலேயாம்.

தன் எஜமானன் அவன் விரும்பியபடி எதையும் செய்யக்கூடியவன், மாற்றக்கூடியவன், மாறுதலுண்டாக்கக்கூடியவன், இனிமையையும் கசப்பையும், செல்வத்தையும் வறுமையையும், உன்னதத்தையும் அதல பாதாளத்தையும், கண்ணியத்தையும் கேவலத்தையும், ஜீவனையும் மரணத்தையும் உண்டாக்குபவன், ஒருவனை முன்னுக்குத் தள்ளுவான், பின்னுக்கும் தள்ளுவான் என்பதை அவன் அறிந்திருந்தால், இம்மையின் சுகபோகங்களிடையே தான் மெத்த சுகமாய் இருப்பதாக அவன்

ஒருக்காலும் கருதியே இருக்கமாட்டான்; அவைபற்றிப் பெருமை கொண்டுமிருக்கமாட்டான்; துயரம் வந்தணைந்த சமயத்தே நம்பிக்கையிழந்திருக்கவுமாட்டான்.

இவ்விதம் அவன் ஒழுக்கம் தவறி நடந்துகொள்ளக் காரணம் இம்மைபற்றிய அவன் அறியாமைதான். இம்மை என்பது சோதனைகள், கசப்பு, அறியாமை, வருத்தம், இருள் என்பனவற்றால் சோதிக்கப்படுவதற்குரிய இடம்தான் என்பதையும், சோதனையே அதன் பொதுவான நிலவரம், மகிழ்ச்சி அதில் விதிவிலக்கானது என்பதையும் அவன் அறிந்திருக்கவில்லை. இம்மை என்பது ஒரு கரியபோளம் மரம் போன்றது; அதன் முதல் ருசி மிகவும் கசப்பானது; ஆனால், கடைசியில் அது தேன்போல் மதுரமாகிவிடுகிறது. முதலில் அதன் கசப்பை ருசி பார்த்தாலன்றி யாரும் அதன் இனிப்பை அனுபவிக்க முடியாது. அதன் கசப்பில் பொறுமை காட்டினாலன்றி அதன் தேனை அடைய முடியாது. எனவே, இம்மையின் சோதனைகளில் பொறுமை காட்டுபவன் அதன் பாக்யங்களைப் பெற அருகதை யுடையவனாகிறான்.

ஓர் உழைப்பாளி தன் நெற்றி வேர்வையை நிலத்தில் சிந்திய பிறகே, தன் உடம்பைக் கசக்கி உழைத்த பின்பே, தன் மனத்தை அலட்டி, இதயத்தைச் சுருங்க வைத்துப் பாடுபட்ட பிறகே, தன்னைப் போன்றதொரு மானிடனுக்குப் பணி செய்து அவன் ஆணவம் மறைந்த பிறகே அவனுக்குரிய சம்பளம் தரப்படுகிறது. இது போல் ஒருவன் இக்கசப்பை யெல்லாம் பருகிய பின் அவனுக்கு நல்லுணவும், கனிகளும், உடையும், சுகமும், மகிழ்வும் - சிறியவையாயினுங்கூட அதன் பிறகே - கிடைக்கின்றன. இவ்விதம் இம்மை, மேலே கசப்புடன் அடியில் மதுரமான தேன் இருக்கும் ஒரு பாண்டம் போன்றது. இதனால் தேனை உண்ண விரும்புபவன்

மேலே யுள்ள கசப்பை அருந்துமுன் கீழேயுள்ள தேனைப் பருக இயலாது.

அல்லாஹ்ஹு ஸுப்ஹானஹுவின் கட்டளைகளை நிறைவேற்றுவதிலும், அவன் விலக்கியவற்றை விட்டு ஒதுங்குவதிலும், அவன் முன் தன்னைப் பணியவைத்துத் தக்தீரின் கட்டளைகளுக்கு உட்படுவதிலும் ஓர் அடியான் தன் பூரண முயற்சியையும் பயன்படுத்த வேண்டும். இவ்விதம் அவன் அதிலுள்ள கசப்பான பாகத்தை அருந்தியதும், அதன் கனத்தைத் தூக்கிச் சுமந்ததும், தன் கீழான இச்சைகளை எதிர்த்துப் போராடியதும், தன் நோக்கங்களை உதறி எறிந்ததும், இதன் பயனாய் நல் வாழ்வையும், அன்பான கவனத்தையும், சுகத்தையும், கண்ணியத்தையும் அல்லாஹ் அவனுக்கு அருளுகிறான். அல்லாஹ் அவனுடைய பாதுகாவலனாகி, ஒரு சிறு குழந்தைக்குப் பாலூட்டுவது போல அவனுக்கு உண ஆட்டி, அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் எந்தச் சிரமமுமில்லாது கவனித்துக்கொள்கிறான். மேலேயுள்ள கசப்பான பகுதியை உண்டுவிட்டவன் கீழேயுள்ள மதுரமான தேனை உண்பதில் இன்பங்காண்பது போன்று இந்த அடியானும் விளங்குவான்.

ஆனால், அல்லாஹ்வின் அருளைப் பெற்றுவிட்ட அடியான் அதனால் மயங்கி, தான் பூரணப் பாதுகாப்பிலிருப்பதாகவும், அல்லாஹ்வின் சோதனையே உண்டாகாது என்றும் எண்ணவோ, அது சதம் என்று நம்பி அதன் மூலம் நன்றி தெரிவிக்க மறந்துவிடவோ, அதன் கட்டுப்பாடுகளைத் தளர்த்திக் கொள்ளவோ கூடாது. நபி பெருமான் (ஸல்) அவர்கள், “இம்மையின் சுகமான சந்தர்ப்பங்கள் முரடானவை; எனவே நன்றியறிதல் மூலம் அவற்றைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்” என்று அருளியுள்ளார்கள்.

செல்வமளிக்கப்பட்டுள்ளதற்கு நன்றி தெரிவிப்பதென்பது, எல்லையிலாது உதவி புரிபவனும் அதைத் தந்தவனுமான அல்லாஹ்வின் தயாளத்தைப் புகழ்வதும், வாழ்க்கையின் சகல வித நிலைமைகளிலும் தன் அகத்திடமே அதுபற்றிக் கூறுவதும், அவன் தயாளத் தன்மையை உணர்வதுமாகும். ஆனால், அல்லாஹ்வின் தயாளத்தில் தனக்கு ஏதோ பாத்தியதை இருப்பது போல் நினைக்கவோ, அதில் வரம்பு கடந்து நடந்து கொள்ளவோ, அது பற்றிய கட்டளைகளை மீறவோ கூடாது. இதன் பின் ஜக்காத்தையும் மற்றும் தான தருமங்களையும் கொடுக்கும் கடமையை நிறைவேற்ற வேண்டும்; கஷ்டப்படுபவர்களுக்கும் தேவையானவர்களுக்கும் உதவவேண்டும். உடலிலும் அவயவங்களிலும் சுகம் உண்டாகி யிருப்பதற்காக நன்றி தெரிவிப்பது எப்படி யெனின் அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் அவையும் உழைக்கும்படி செய்வதன் மூலமும், பாவகரமான, ஹராமான செயல்களிலிருந்து அவற்றைத் தடுத்துக் கொள்வதன் மூலமுமேயாம்.

இவ்விதமே பாக்கியங்கள் பாழ்படாமல் காப்பாற்றப் படவேண்டும்; காப்பாற்றி அதன் செடியை பண்படுத்தி வளர்க்க வேண்டும்; வளர்த்து அது காய்த்து, அழகிய கனிகள் பழுத்து, மதுரமானவையாய், உண்பதற்கினியவையாய், உண்பதால் சுகம் தருபவையாய், உடலை வளர்ப்பவையாய், பல்வேறு செயல்கள் மூலம் -அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடிபணியும், அவன் நினைவில் நிலைபெறச் செய்யும் செயல்கள் மூலம்- அவற்றின் பயன் உடலிலிருந்து வெளிப்படும்படியாய், மறுமையில் அல்லாஹு ஸுப்ஹானஹுவின் கருணையில் அந்த அடியானைப் புகும்படி செய்பவையாய், சுவனப்பதியிலே நபிமார்கள், ஸித்தீகீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்களின் அழகிய கூட்டத்தில் அவன் சேர்ந்திருக்கும்படி செய்பவையாய் இருக்கவேண்டும்.

ஆனால், ஒருவன் இப்படி நடக்காமல், இந்த வாழ்க்கையின் புறத் தோற்றத்தில் மயங்கி, அதன் போகத்தில் திளைத்து, அந்தக் கானல் நீரின் பளபளப்பிலும், மின்னல் போன்ற தோற்றத்திலும் திருப்தியடைந்து, இவை யாவும் கொடுங் கோடை காலத்துக் காலைக்காற்றின் தன்மையைப் போன்று சதமற்றவை, நல்லபாம்பின் மேல் தோலைப்போன்று மென்மையானவை என்பதை உணராது, அதனுள் உள்ள விஷத்தையும், ஏமாற்றையும், சூட்சியையும் மறந்து, இவை யாவும் தன்னைப் பிடித்துச் சிறைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை என்பதை உணராது இருந்து வருவானாயின் அவன் நிராகரிக்கப்படுவான், விரைவில் அழிந்துபடுவான், கேவலமான தரித்திர நிலையை அடைவான், மறுமையில் கொடிய நரக நெருப்பில் கிடந்துழன்று தண்டனையடைவான் என்று தெரிந்து கொள்ளலாம்.

மனிதனுக்கு ஏற்படும் சோதனைகள் பல திறப்பட்டவை. சிலசமயங்களில் அவை சட்டத்தை மீறியதற்கும், பாவஞ் செய்ததற்கும் தண்டனையாக ஏற்படுவதுண்டு. வேறு சில சமயங்களில் மனிதனிடமுள்ள குறைகளை அகற்றி, அவன் இயல்பைப் பண்படுத்துவதற்காக உண்டாகின்றன. மற்றும் சில சமயங்களில் ஒருவனுடைய ஆத்மீகத்தரத்தை உயர்த்தவும், பல்வேறு மகாம்களையும் ஹால்களையும் அனுபவித்து, ரப்பில் ஆலமீனின் அருளை முன்னரே பெற்ற நல்லடியார்களின் கூட்டத்தில் உயர்த்தப்படுவதற்கும் சோதனைகள் உண்டாவதுண்டு. இத்தகைய சோதனைகள் அழிப்பதற்காக வருவனவல்ல வாதலின் இவற்றின் இடையிலும் ஆறுதல் தண்காற்றும், அருட்கண் பார்வையும் அவர்கள்மீது படுமாறு அவன் செய்கிறான். இச்சோதனைகள் மூலம் அவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களிடமிருந்து ஈமானின் சத்தியத்துவம் வெளிப்படச் செய்து இணைவைப்பதையும், நப்ஸின்

அகந்தையையும், பாசாங்கையும் விட்டு அவர்களை அப்பாலாக்கிப் பலவிதமான இரகசிய ஞானங்களை அவர்கள் அடையுமாறு அருளுகிறான்.

எனவே, இத்தகையவர்கள் அகமும் புறமும் தூய்மையானவர்களானதும், அவர்கள் இதயங்கள் பரிசுத்தமடைந்ததும், தன்னுடைய விசேஷ அருளுக்குரியவர்கள் கூட்டத்தில் அவர்களையும் சேர்க்கிறான்; இம்மையில் அவர்கள் தம் இதயத்தாலும், மறுமையில் தம் உடல்களாலும் அப்பெரியார்களோடு தொடர்பு கொள்ளும்படி அருள்புரிகிறான். இவ்விதமாகச் சோதனைகள் ஷிர்க் எனும் அழுக்கை அகற்றி, ஜனங்களுடனும் இம்மைக்குரிய சாதனங்களுடனும், இச்சைகளுடனும் உள்ள தொடர்புகளை அறுத்தெறிகின்றன. தற்பெருமை, பேராசை, கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்ததற்குப் பிரதியாய்ச் சுவனத்தில் உயர்ந்த பதவிகளையும் நிலைமைகளையும் எதிர்பார்ப்பது போன்ற மாசுகளையும் இச்சோதனைகள் உருகச் செய்கின்றன.

தண்டனையாகச் சோதனைகள் ஏற்படுவதன் அறிகுறி என்னவென்றால், அவை ஏற்பட்டதும் பொறுமை இழந்துவிடுவதும், ஜனங்களிடம் அவை பற்றி முறையிடுவதுமாகும். பரிசுத்தப்படுத்துவதற்கும் பலஹீனங்களை அகற்றுவதற்கும் சோதனைகள் உண்டாவதன் அறிகுறியாவது, பொறுமையை மகிமையுடன் கைக்கொண்டிருத்தலும், நண்பர்களிடமும், அயலகத்தார்களிடமும் எத்துயரையும் வெளிக் காட்டாமையும், கட்டளைகளை நிறைவேற்றுவதிலும் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிவதிலும் கொஞ்சமும் வெறுப்புக் காட்டாமல் இருப்பதுமாகும்.

நிலை உயர்த்தப்படுவதற்காகச் சோதனைகள் உண்டாவதன் அறிகுறியோவெனின், ரப்பில் ஆலமீனை அல்லாஹ்வின் செயல் குறித்து மகிழ்ச்சியும், மனத்திருப்தியும், நிம்மதியும் கொண்டிருப்பதும், இந்தச்

சோதனையில் தன்னை முற்றும் ஈடுபடுத்தி, அஃது அகலுவதற்குரிய காலம் வரும்வரை அதை ஏற்றிருப்பதுமாகும். (நாற்பத்து ஐந்தாம் மகாலா)

27

"என்னுடைய நினைவில் ஈடுபட்டிருந்து, அதனால் என்னிடமிருந்து எதுவுங் கேட்க நேரமில்லாத நிலையில் இருப்பவனுக்கு, என்னிடங் கேட்பவர்களுக்கு நான் கொடுப்பவற்றைவிட அதிகமாகக் கொடுக்கிறேன்" என்று அல்லாஹ் கூறியிருப்பதாக ஹதீஸில் காணப்படுகிறது. இஃது எதனாலெனின், ஒரு மூமினைத் தன் நோக்கங்களுக்காக அல்லாஹ் தேர்ந்தெடுக்கும்போது, அவனைப் பல்வேறு ஆத்மீகப் படிகளைக் கடக்கச் செய்து, பலவிதமான போராட்டங்களாலும் துயரங்களாலும் சோதனை செய்கிறான். செல்வத்தைக் கொடுத்துத் திடீரென அவனை வறியவனாக்குகிறான். பல்வேறு வழிகளையும் மூடி, அவன் ஜனங்களிடம் கை நீட்டிப் பிச்சை கேட்கும் அளவுக்குக் கொண்டு போகிறான். பிறகு பிச்சை கேட்காதபடி செய்து, ஜனங்களிடம் கடன் வாங்கிப் பிழைக்கச் செய்கிறான். பின்னர் கடன் வாங்குவதிலிருந்தும் காப்பாற்றி, தன் ஜீவனத்துக்காக உழைத்துண்ண இடம் தருகிறான். அப்போது அவன் நிலை நபி பெருமான் (ஸல்) அவர்கள் உதாரணத்தைப் பின்பற்றி உழைத்துண்பதாய் இருக்கும்.

பிறகு அவனுக்கு உழைக்கும் வழியும் அடைபட்டு, இல்ஹாம் மூலம் ஜனங்களிடம் பிச்சை கேட்குமாறு ஏவப்படுகிறான். இது சம்பந்தப்பட்டவனால் மட்டும் அறிந்து கொள்ளப்படும் ஓர் இரகசிய உத்தரவாகும். இந்தப் பிச்சை யெடுத்தல் தன்னை வணங்கும் ஒரு வகை இபாதத் ஆகவும், அதைப் புறக்கணிப்பது பாபமாகவும் அல்லாஹ்வினால் ஆக்கப்படுகிறது. இது அம் மனிதன் அகந்தை மறைந்து, நப்ஸ் உடைந்து போகும்

படியான ஆத்மீகப் பயிற்சியாக விளங்குகிறது. அவன் இறப்பது ஷிர்க்கால் அன்று; தெய்வக் கட்டளையால்தான். இதன் பின் அவனை இதைவிட்டுக் காப்பாற்றி ஜனங்களிடம் கடன் வாங்கும்படி கண்டிப்பாக உத்தரவிடுகிறான். முந்திய பிச்சையெடுத்தலைப் போல இதுவும் தப்பமுடியாத ஓர் உத்தரவு தான்.

பிறகு இந்நிலையிலிருந்து அவனை மாற்றி, ஜனங்களிடமிருந்து தனியாக்கித்தன்னிடமிருந்து அவன் கேட்பதற்கேற்ப அவனுக்கு வஜீபவனம் அளித்து வருகிறான். எனவே, அந்த அடியான் எது எதைக் கேட்கிறானோ, அதை மட்டும் அவனுக்குக் கிடைக்கச் செய்கிறான். அவன் மௌனமாய் இருந்தால், துஆக் கேட்காமலிருந்தால் அல்லாஹ் எதையும் கொடுப்பதில்லை.

பிறகு நாவினால் எதையுங் கேட்பதை விட்டும் அவனை விடுவித்து, இதயத்தால் மட்டும் கேட்கும், அப்படிக் கேட்டதும் கொடுக்கும் நிலைக்குக் கொண்டுவருகிறான். அதனால் இந்நிலையில் அவன் நாவினால் கேட்டால் எதுவுங் கிடைப்பதில்லை; ஜனங்களிடம் பிச்சை கேட்டாலும் யாரும் கொடுப்பதில்லை.

இதன் பின் அம்மனிதன் தன்னிடமிருந்தும் பகிரங்கமாகவோ, அந்தரங்கமாகவோ பிச்சையெடுப்பதிலிருந்தும் முற்றும் மறைந்து போகிறான். அப்போது நேர்மையை யுண்டாக்கும், மனிதனைச் சீர்திருத்தும் சகலவற்றையும் அவனுக்குக் கிடைக்கச் செய்கிறான். மற்றும் உண்பதிலும் உடுப்பதிலும் மற்றுமுண்டான தேவைகளிலும் சிறந்தவற்றை அவன் கேளாமலும், அதுபற்றிக் கிஞ்சித்தும் எண்ணாமலும் இருக்கும்போதே அவற்றை அவனுக்குக் கொடுக்கிறான். இதன் பின் அவனைத் தன் தோழனாக்குகிறான். "நிச்சயமாக என் தோழனும், பாதுகாவலனும் அல்லாஹ்வே; அவனே இவ்வேதத்தை வெளியிட்டுள்ளான்; நேர்மையாளர்களோடு அவன்

தோழமை பூணுகிறான்" (7 : 196) என்ற திரு குர்ஆன் வசனத்திற்கேற்ப இந்தத் தோழமை உண்டாகிறது. "என்னிடம் எதுவும் கேட்க நேரமில்லாத நிலையில் இருப்பவனுக்கு, என்னிடங் கேட்பவர்களுக்குக் கொடுப்பதைவிட அதிகமாக நான் கொடுக்கிறேன்" என்று அல்லாஹ் கூறியுள்ளதாக ஹதீஸில் காணப்படும் வாசகம் நிரூபணமாகிறது. இஃது அல்லாஹ்வை நெருங்கும் நிலைமையாகும்; இது சாதாரண அவ்லியாக்களுக்கும் அப்தால்களுக்கும் உரியது. இந்நிலையில் அடியானுக்குச் சிருஷ்டி சக்தி தரப்படுகிறது; அவனுக்குத் தேவையானவை அல்லாஹ்வின் உத்தரவால் கிடைக்கின்றன. இதுபற்றி அல்லாஹ்வின் வேதம் ஒன்றில் அவன் கூறியுள்ளதாவது: "ஆதமுடைய மக்களே, நான்தான் அல்லாஹ்; என்னையன்றி வணக்கத்துக்குரியது வேறு எதுவுமில்லை. நான் எந்த ஒரு வஸ்துவையும் 'ஆகுக' என்றதும் உடனே அஃது உண்டாகிவிடுகிறது. எனக்குக் கீழ்ப்படியுங்கள் அதன்மூலம் நீங்களும் ஒரு வஸ்துவை 'ஆகுக' என்று சொன்னதும் ஆகிவிடும்படியான சக்தியுடையவர்களாக உங்களை நான் ஆக்கிவிடுவேன்." (நாற்பத்து ஆறும் மகாலா)

28

இரவில் விழித்திருந்து தொழும் விழிப்பான நிலைமையைவிடத் தூக்கத்தை விரும்புபவன், கீழான ஒன்றை விரும்புபவனாவான். அஃது அவனை இறந்தவர்களின் கூட்டத்தில் சேர்த்து, சகல தொழில்களையும் அலக்ஷியப் படுத்துபவனாக்குகிறது. காரணம் தூக்கம் மரணத்தின் சகோதரனாகும். தூக்கம் அல்லாஹ்வுக்குப் புறம்பானதாகும்; ஏனெனில், அவன் சகல குறைபாடுகளுக்கும் அப்பாற்பட்டவனல்லவா! இதுபோலவே மலக்குகளுக்கும் நித்திரை இல்லை; ஏனெனில், அல்லாஹு ஸுப்ஹானஹூவுக்கு அருகிலேயே அவர்கள் இருந்து வருகிறார்கள். இதுபோல வானுலகில் வசிப்பவர்

களுக்கும் தூக்கமென்பதில்லை; ஏனெனில், அவர்கள் உயர்த்தப்பட்ட, புனிதமான, கண்ணியம் பொருந்திய இடத்தில் இருப்பவர்கள்; தூக்கம் அவர்கள் நிலையில் குறையை உண்டாக்கிவிடும். இவ்விதம் விழித்திருப்பதில் சகல நன்மையும் இருக்கின்றன; தூங்குவதிலும் வேலை செய்வதில் அலக்ஷியங் காட்டுவதிலுமே சகல தீமைகளும் உள்ளன.

ஆகவே, பேராசையால் அதிகம் உண்பவன் மிதமிஞ்சி உண்கிறான். அதிகம் அருந்துகிறான்; அதிகம் தூங்குகிறான்; அந்த அளவுக்கு, அதிகமான நற்பண்புகள் அவனை விட்டகன்றுவிடுகின்றன. ஹறாமானவற்றில் ஒரு சிறிதேனும் உண்பவன், ஹலாலானதில் அளவுக்கு மிஞ்சிப் பேராசையுடன் உண்பவனை ஒப்பான்; ஏனெனில், ஹறாமானவை ஈமானைக் குழப்பி இருளடையச் செய்கின்றன. ஈமான் இருண்டதும் தொழுகையுமில்லை; இபாதத்துமில்லை; அந்தரங்க சுத்தியுமில்லை. அல்லாஹ்வின் உத்தரவுகொண்டு ஹலாலானவற்றை அமிதமாக உண்பவன், தொழுகையின் மகிழ்ச்சியில் சிறிதளவே உண்டவனாவான். இதனால், ஹலாலானது ஓர் ஒளியுடன் சேர்ந்த ஒளியாய் இருக்கிறது; ஹறாமானது இருளுடன் சேர்ந்த இருளாய் இருக்கிறது; அதில் எந்த நன்மையுமில்லை. எனினும், ஹலாலானதைப் பேராசையுடன், அல்லாஹ்வின் உத்தரவின்றி உண்பது ஒருவகையில் ஹறாமானதை உண்பதை ஒக்கும்; அதனால் தூக்கமே உண்டாகும். (நாற்பத்தொன்பதாம் மகாலா.)

29

ஒன்று நீ அல்லாஹு ஸுப்ஹானஹுவின் அருகில் இல்லாமல் இருக்கிறாய்; அல்லது, அவனுக்கு அருகிலுள்ளாய். உன் நிலைமை இவ்விரண்டில் ஒன்றாகத்தான் இருக்க முடியும்.

நீ அவனை விட்டு விலகியிருப்பின், நீ எப்படிச் சோம்பி யிருக்க முடியும்! உன் பெரும் பங்கையும் பாக்கி யத்தையும், நிலையான கண்ணியத்தையும், பாதுகாப் பையும், இம்மை மறுமைகளின் தேவைகளையும் நீ அடைவதெப்படி? உடனே எழு! உன் ஈரிறக்கை களாலும் விரைந்து பறந்து அவனை நோக்கிச் செல்! இந்த இறக்கைகளுள் ஒன்று சுகங்களையும், ஹரா மான இச்சைகளையும், ஹலாலானவைகளையுங்கூடத் துறப்பதாகும். மற்ற இறக்கை வருத்தத்தையும், சங்கட மானவற்றையும் சகித்துக் கொள்ளலும், கஷ்டமான வேலைகளில் ஈடுபடலும், ஜனங்களைவிட்டும், இம்மை மறுமையின் இச்சைகளை விட்டும் விலகலும், அதன் மூலம் அவன் சந்நிதானத்தை நெருங்குவதில் வெற்றி யடைதலும் ஆகும். இவ்விரண்டு இறக்கைகளுமிருந்து பறந்தால் நீ நாடியதை எய்தலாம். உன் நிலை உயர்த்தப் பட்டுக் கண்ணியப்படுத்தப்படுவாய். அவன் பரிவால் கண்ணியப்படுத்தப் பட்டவர்களின் கூட்டத்தில், அவன் அன்பால் ஈர்க்கப்பட்டவர்களின் கூட்டத்தில், அவன் கருணையையும் அருளையும் பெற்றவர்களோடு நீ சேர்ந் திருந்தால், சிறந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடி; நீ இருக் கும் நிலைமை குறித்து அகந்தை வேண்டாம்; அதனால் நீ உன் கடமையை மறக்கவும் உன் அசலான அகந்தைக்கு ஆளாகவும், அறியாமையிலும் அவசரத்திலும் மூழ்கவும் இடமுண்டாகிவிடலாம். "மனிதன் அதைச் சுமந்தான்; நிச்சயமாக அவன் அவசரக்காரனும், அறியாமையுடையவ னுமாவான்" என்றும், "மனிதன் அவசரக்காரனாய் இருக்கிறான்" என்றும் திருகுர்ஆனில் கூறப்பட்டுள்ளது.

ஜனங்களிலும், இச்சைகளிலும், இஷ்டப்பூர்வமான வற்றிலும், முயற்சியிலும் நீ கைவிட்டவைகளின் பக்கம் மனம் திரும்பாதபடியும், உன்னைக் காத்துக் கொள்; பொறுமை பிழக்காதபடியும், துயரம் வருகையில்

அல்லாஹ்விடம் கொண்டிருந்த மனப்பொருத்தம் மாறு படாமலும் விழிப்புடனிரு. பந்து அடிப்பவனின் முன் - அவனால் அடிக்கப்பட்டுச் சுழல்வதற்காகக் - கிடக்கும் பந்தைப் போலும், குளிப்பாட்டுபவர் கையில் கிடக்கும் மையித்தைப் போலும், தாயின் மடியில் கிடந்து பாலருந்தும் குழந்தையைப் போலும் அவன் முன் நீயும் கிடந்து கொள். அவனல்லாதவற்றின் விஷயத்தில் குருடாகிவிடு. அவனையுன்றி வேறு எதையும் - இருப்பதையோ, கேடானதையோ, நன்மையானதையோ, நன்கொடையையோ, நன்கொடை நிறுத்தப்படுவதையோ எதையும் - நீ காணக்கூடாது. துயரமும் கஷ்டமும் வருத்துகையில் ஜனங்களையும் உலக சம்பந்துகளையும், அல்லாஹு ஸுப்ஹானஹு உன்னை அடிக்கப் பயன்படுத்தும் சவுக்காகக் கருது; நீ மகிழ்வுடனும், சுகத்துடனும், நன்கொடைகள் பெற்றுச் சுகித்திருக்கையில் அவற்றை உனக்கு ஊட்டும் அல்லாஹ்வின் திருக் கரங்களெனக் கருது. (ஐம்பதாம் மகாலா)

30

பக்திமான் தன் பங்காக இருமுறை வெகுமான மடைகிறான். முதலாவதாக அவன் இவ்வுலகைத் துறந்து, பின் தன் ஆசையால், அல்லது தன் நப்ஸின் தூண்டுதலால் மீண்டும் அதன் பக்கம் திரும்பாது, அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கான அளவு மட்டுமே அதன் பக்கல் திரும்பியிருப்பதற்குத் தேவையான சம்மானம் தரப்படுகிறது. அவன் தன் நப்ஸுடன் கொண்டுள்ள பகைமையும், ஆசைகளிடம் கொண்டுள்ள எதிர்ப்பும் ஸ்திரமானதும், சத்தியத்தை உய்த்துணர்பவர்களில், ஆண்டவனின் நேயர்களில் அவனும் ஒருவனாகக் கருதப்படுகிறான்; ஆரிபீன்கள், அப்தால்களின் கூட்டத்தில் சேர்க்கப்படுகிறான். அப்போதே அவன் இவ்வுலகின் பக்கல் திரும்பி அதனுடன் தொடர்பு

கொள்ளும்படி உத்தரவிடப்படுகிறது. ஏனெனில், அப்போது அவனுக்கு அதில் ஒரு பங்குள்ளது; அதை அவன் ஒதுக்கிவிட முடியாது; அது மற்ற யாருக்காகவும் ஒதுக்கப்பட்டதுமன்று. அதை ஒதுக்கி எழுதிய பேனாவின் மையும் உலர்ந்துவிட்டது; அது பற்றிய அல்லாஹ்வின் ஞானம் முன் சென்றுவிட்டது. கட்டளையைப் பூரணமாய் நிறைவேற்றிய பின்னர், அவன் இம்மையில் தனக்குள்ள பங்கை ஏற்கிறான்; அல்லது அல்லாஹ்வின் ஞானம் பற்றிய தகவல் கிடைத்த பிறகு, அவன் உண்டாக்கிய தக்தீரின் கருவியாய் விளங்குவதற்காக இவ்வுலகுடன் தொடர்பு கொள்கிறான்; ஆனால், அதில் அவன் மூழ்கிக்கொள்வதில்லை; அவன் எந்நோக்கமும், ஆசையும், முயற்சியும் செய்வதில்லை. இவற்றுக்காக இரண்டாம் தடவை அவனுக்கு வெகுமான மளிக்கப்படுகிறது. இவற்றையெல்லாம் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தே அவன் செய்வதாலும், அல்லாஹ்வின் செயலுக்கு இணங்கிய வகையில் செய்வதாலும், இரண்டாம் தடவை வெகுமானம் கிட்டுகிறது.

மிகவும் உயர்ந்த நிலையை அடைந்து விட்ட ஒருவருக்கு அப்தால்கள், ஆரிபீன்கள் கூட்டத்தில் இடம் பெற்றுவிட்ட ஒருவருக்கு, அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்பட்டவராகிவிட்ட ஒருவருக்கு, ஜனங்களிடமிருந்தும், தன் நப்ஸிடமிருந்தும், ஆசைகள் நோக்கங்கள், சுகங்கள், இச்சைகள், தன் செயல்களுக்காக வெகுமதியை எதிர்பார்த்தல் முதலிய யாவிடமிருந்தும் மறைந்துவிட்ட ஒருவருக்குத் தன் சகல இபாதத்திலும், பணிவிலும் அல்லாஹ்வின் செயல்களையும், அவன் கருணையையும், ஆசியையும், ஆதரவையும், ஆஸ்வாஸ உதவிகளையும், காணும் ஒருவருக்குத் தான் அல்லாஹ்வின் பணிவான அடியானன்றி வேறல்ல, எஜமானனுக்கெதிராய் அடியானுக்கு எந்த உரிமையுமில்லை,

தன் உடலும், அசைவுகளும், அயர்வுகளும், முயற்சிகளும் தன் எஜமானனுடையவையே என்றெண்ணும் ஒருவருக்கு, அவர் வெகுமதிக்காக ஏதும் செய்யாதிருக்கையில், தன் செயல்களுக்காக வெகுமானம் எதையும் கேட்காமலிருக்கையில் எச்செயலும் தன்னால் நடக்கவில்லை தான் கவைக்குதவாத ஜனங்களுள் ஒருவன், செயல்களைப் பொறுத்தவரை தான் தரித்திரர்களுள் தரித்திரன் என்றெண்ணும் நிலைமையில், அவருக்குச் சம்மானம் தருவது எப்படி என்று கேட்கலாம். அவன் தன் நப்ஸின் சொந்த விவகாரங்களில் கையை உள்ளுக்கிழுத்துக் கொண்டு, மறுமைக்குரிய சுகங்களையும் கேட்காமலும், அதை அனுபவிக்காமலும், அதனால் வரும் சங்கடம் எதையும் அகற்றாமலும் இருக்கும் நிலையில், அல்லாஹ் அவன்மீது தன் அருளைப் பொழிந்து, தன் அன்பாலும், பரிவான பாதுகாவலாலும், கருணையாலும் உணவூட்டுகிறான். இதனால் அவன் தாயின் மடியில் கிடந்து பாலுண்ணும் சிசுவைப்போல் ஆகி, அல்லாஹ்வின் அருள் நிறைந்த பாதுகாப்புக்கும், அவனால் அவன் பெற்றோர் மூலம் தரப்படும் ரிஜ்குக்கும் பாத்திரமாகிறான்.

அல்லாஹ், அவனிடமிருந்து, அவனுடைய சொந்த விஷயங்களிலுள்ள அக்கரையை அகற்றியதும், ஜனங்களின் இதயங்கள் அவன் பக்கம் திரும்புமாறு செய்து, அந்த இதயங்களில் கருணையையும், பரிவையும் புகுத்தி, யாவரும் அவன் மீது பரிவுகாட்டி, பற்றுதல் கொள்ளும் படி அவனுக்கு நலன் தேடுகிறான். இவ்விதம் சகலமும் அல்லாஹ்வையன்றி, அவன் உத்தரவின்றி, அவன் செயலுக்குப் பதிலாகவன்றி, அசையாதவையாகின்றன. அல்லாஹ்வின் அருள், இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு ஊட்டந் தந்து, சகல கஷ்டங்களையும் விட்டு அவனை விலக்கி உதவுகிறது. இதனால்தான், "நிச்சயமாகத் திரு குர்ஆனை இறக்கிய அல்லாஹ்வே என் நேசன்; அவன் நல்லவர்களுடன் நேசம் கொள்கிறான்" என்ற நபி

(ஸல்) அவர்களின் வாக்கும் எழுந்துள்ளது. (ஐம்பத்து ஓராம் மகாலா)

31

ஈமான் கொண்டவர்களின் நேயர்களாகவும், தன்னோடு நேச உறவு பூண்டுள்ளவர்களாகவும், ஆத்ம ஞானத்தைத் தம் உடைமையாக்கிக் கொண்டவர்களாகவும் உள்ள ஒரு கூட்டத்தினரை அல்லாஹ் சோதிக்கிறான். இதன் மூலம் அவர்கள் துஆவுடன் தன் பக்கம் திரும்ப வேண்டும் என்று அவன் விரும்புகிறான். அவர்களிடமிருந்து துஆவை ஏற்பதில் அவனுக்குப் பிரியம் அதிகம். அவர்கள் துஆச் செய்கையில் அவன் மனமகிழ்ச்சியுடன் அதை ஏற்கிறான்; தயாளத்துக்கும், உதாரணத்துக்கும் உரிய பங்கை அளிக்கிறான். ஏனெனில், மூமின் துஆக் கேட்கும்போது இவை இரண்டும் அல்லாஹுத்தா ஆலாவிடம் அதை ஏற்குமாறு கேட்கின்றன; சில சமயங்களில் அது ஏற்கப்பட்ட பின்னும், உடனடியாகத் துஆக் கபூல் செய்யப்படுவதில்லை; அதற்குரிய காலம் வரட்டும் என்று தள்ளிவைக்கப்படுகிறது. எனவே, துயரம் நேரும்போது அடியான் நல்லொழுக்கத்துடன் நடந்து, கட்டளைகளை மறைவாகவோ, பகிரங்கமாகவோ தான் புறக்கணித்த அல்லது ஹராமானவற்றைச் செய்த பாவங்களைச் சிந்தனை செய்து பார்த்துத் தக்தீரின் உத்தரவைக் குறை கூறியதுண்டா என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். இத்தகைய பாவங்களால்தான் இத்தகைய சோதனைகள் ஏற்படுவதுண்டு. எனவே, இத்துயரம் நீங்கிவிட்டால் சரி; இல்லையேல் தொடர்ந்து துஆக் கேட்டு, பணிவு காட்டி, மன்னிப்புக்கேட்டு விடாது முறையிட்டு வரவேண்டும். விடாது முறையிட்டுத் துஆக் கேட்பதற்காகவே அத்துயரம் நேர்ந்தாலும் நேர்ந்திருக்கலாம். தன் துஆ ஏற்கப்படாது காலதாமதம் நேர்வதற்காக ஒருக்காலும் அல்லாஹ்வைக் குறை கூறமட்டும் கூடாது. (ஐம்பத்து இரண்டாம் மகாலா)

32

அல்லாஹ்வின் கட்டளை விஷயத்தில் மனப் பொருத தம் காட்டவோ, அவன் செயலில் மூழ்கிவிடும் திறமை வளரவோ அவனிடம் முறையிடு. இதன் மூலம் பெரும் சுகமும், இம்மையிலேயே உயரிய அந்தஸ்தும் கிடைக்கும். மூமினான அடிமைக்கு அல்லாஹ்வின் அன்பைப் பெறும் மார்க்கமாகவும், அல்லாஹ்வின் பெரிய வாயிலாகவும் இது விளங்குகிறது. எனவே, அல்லாஹ் தான் நேசிப்பவர்களை இம்மையிலும் மறுமையிலும் கடுந்தண்டனைக்குள்ளாக்குவதில்லை. இவ்விரண்டு நற்பண்புகளாலுமே அல்லாஹ்வுடன் தொடர்பு கொள்ளவும் மார்க்கம் உண்டாகிறது. இம்மையின் சுகங்களுக்கான முயற்சிகளிலும், உனக்காக ஒதுக்கப்படாத, அல்லது ஒதுக்கப்பட்ட ரிஜ்க்குக்காக முயற்சிப்பதிலும் மூழ்கிவிடவேண்டாம். உனக்காக ஒதுக்கப்படாத ரிஜ்கை அடையப் பிரயாசைப் படுவது முட்டாள்தனமும், அறியாமையும், மௌடீகமும் ஆகும்; அது தண்டனைகளுளெல்லாம் மகா பெரியதுமாகும். "தக்தீரால் ஒதுக்கப்படாததற்காக முயல்வது தண்டனைகளுள் எல்லாம் மகா பெரியதாகும்" என்று கூறப்பட்டுள்ளதல்லவா!

அஃது உனக்காக ஒதுக்கப்பட்டிருப்பினும் அதற்காக முயன்றால், அதே நினைவாய் இருந்தால் சத்தியத்திலும், விஸ்வாசத்திலும், அன்பிலும் பிளவுண்டவனாயும் பேராசைக்காரனாயும் ஆகிவிடுவாய்; அல்லாஹு ஸுப்ஹானஹு அல்லாத எதன் விஷயத்திலும் மூழ்கிவிடுதல் ஷிர்க்கான செயலாகும். உலக இன்பத்துக்காகவே முற்றும் முயல்பவன் அல்லாஹ்விடம் கொள்ளும் நேசமும் அன்பும் மனப்பூர்வமானவையாய் இருக்க முடியாது. எனவே, அல்லாஹ்வையல்லாததை அவனிடம் நாடுபவன் பொய்யனாவான்.

இதுபோல் தன் செயலுக்குப் பிரதிபயனை எதிர் பார்ப்பவனும் அந்தரங்க சுத்தியற்றவன். 'ருபூபிய்யா' (பிரபஞ்சத்தையே நிர்வகித்து ஊட்டி வளர்க்கும் அல்லாஹ்வின் குணங்கள்) தனக்கு உரிய அளவுக்கு உண்டாகவேண்டும் என்று எண்ணி அல்லாஹ்வுக்குப் பணிந்து சேவை செய்பவனே அந்தரங்க சுத்தியுள்ளவனாவான். இத்தகையவன், இறைவனின் எஜமானத்துவத்தையும் தகுதியையும் அறிந்தவனாய், நற்செயல்கள் புரிவதும், அவனுக்குப் பணிவதும் அவசியம் என்பதை உணர்ந்தவனாய், தன் சகல அசைவுகளுடனும், நிச்சலன நிலைகளுடனும், சகல முயற்சிகள் போராட்டங்களுடனும் தன் எஜமானனுக்கே உரியவன் என்பதை உணர்ந்தவனாய் அவனுக்குப் பணிந்து சேவை செய்து வருகிறான். இவன் வேறு எவ்விதமிருக்க முடியும்? நாம் ஏற்கனவே வேறோர் இடத்தில் கூறியுள்ளபடி அவனுக்குப் பணி செய்யும் சகல செயல்களும், அல்லாஹ்வின் ஆசியாகவும், அவன் தன் அடியானுக்குத் தரும் சலுகையாகவும் விளங்குகின்றன. ஏனெனில், இவற்றைச் செய்யத் தன் அடியானுக்குச் சக்தியளித்து, அதை முடிக்கச் செய்பவன் அவனேயன்றோ!

எனவே, அவனுக்கு நன்றி தெரிவிப்பதில் சுறுசுறுப்புக் காட்டுதல், அச்செயல்களுக்காகப் பிரதிபிரயோஜனத்தையும் வெகுமதிகளையும் எதிர்பார்ப்பதையும் விட மேலானதாகும்.

இவ்வுலகில் பெரும்பாலான மக்கள் பணமும் பொருளும் பெருகப் பெருக, சுக போகங்கள் அதிகரிக்க அதிகரிக்க, தடையின்றிச் செல்வம் வந்து குவியக் குவியத் தங்கள் ரப்பின்மீது கசப்புக் கொண்டவர்களாய், தமக்குத் தரப்படாத சுகங்களுக்காக நன்றி கெட்டவர்களாய் நடந்து கொள்வதைக் காணும் நீ, இம்மையின் சுக போகங்களுக்காக எங்ஙனம் முயலமுடியும்? இத்தகைய

வர்கள் தங்களிடமுள்ள செல்வம் சிறியதென்றும், மிகவும் குறைவானதென்றும், பிறர்க்குரிய இம்மைப் பொருள்களே பெரியவை, அழகானவை என்றும், அவை தமக்குரியவையல்ல எனத் தெரிந்தும் அவற்றை எப்படியும் அடையவேண்டும் என்றும் முயற்சி செய்பவர்களாகவல்லவா இருக்கிறார்கள்! இதில் அவர்கள் வாழ்நாளே வீணுகிறது; அவர்கள் சக்தியும் விரயமாகிறது. அவர்கள் முதுமையடைகின்றனர்; அவர்கள் சொத்து தொலைகிறது; உடல் தளர்கிறது; நெற்றியிலே வியர்வை சொட்டுகிறது. அவர்கள் வாழ்க்கைப் பட்டியலே அவர்கள் செய்த பாவங்களாலும், பிறர் உடைமைகளைப் பறிக்க முயன்ற பெருங் குற்றங்களாலும், அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமையாலும் இருண்டிருக்கிறது. இதனால் நாடியவை கைகூடாது, இம்மையையும் மறுமையையும் இழந்தவர்களாய், தங்களுக்குத் தரப்பட்டவைகளுக்காகத் தங்கள் ரப்புக்கு நன்றி செலுத்தாத காரணத்தால், அவனுக்குக் கீழ்ப்படியாத காரணத்தால், அவன் உதவியை இழந்தவர்களாய் இவ்வுலகை விட்டு மறைகின்றனர். பிறர் உடைமையால் பங்குபெற முயன்றது முடியாது போய், இம்மை மறுமை வாழ்வும் நஷ்டமாகின்றன. எனவே, அவர்கள் ஜனங்களில் மிகவும் கடையர்களாகவும் அறிவிலிகளாயும், கீழ்த்தரமானவர்களாயும் ஆகிவிடுகின்றனர்.

தக்தீரின் உத்தரவுடன் மனப்பொருத்தங் காட்டி, அவன் நன்கொடையில் திருப்தியுற்று, சிறந்த ஒழுக்கத்துடன் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்திருந்தால், இம்மையில் அவர்களுக்குரிய பாக்கியங்களின் பங்கு அவர்கள் முயலாதபடியே அவர்களை வந்தடைந்திருக்கும். அல்லாஹூ ஸுப்ஹானஹூவின் அருகே அடைந்து, விரும்பியவைகளைப் பெற்றிருக்கலாம். அவன் கட்டளையில் திருப்திகொண்டு, அவன்

திருச்சித்தத்தில் ஐக்கியமாகி, தொழுகையில் ஈடுபட்டு, அவன் விரும்பியதையும் நாடியதையும் செய்து முடிக்கும் பலத்தையும், ஆத்மீக ஆரோக்கியப் பாதுகாவலையும் அடைந்தவர்கள் கூட்டத்தில் ரஹ்மான் எம்மையும் உன்னையும் சேர்த்தருள்வானாக! (ஐம்பத்து மூன்றாம் மகாலா)

.33

மறுமையை விரும்புபவன் இம்மை விஷயத்தில் அக்கறையற்றவனாயும், அல்லாஹ்வை விரும்புபவன் மறுமை விஷயத்திலும் அக்கறையற்றவனாயும் இருக்க வேண்டும். இவ்விதம் அவன் மறுமைக்காக இம்மை வாழ்வை ஒதுக்கவேண்டும்; அல்லாஹ்வுக்காக மறுமை வாழ்வை ஒதுக்கவேண்டும். இம்மைக்குரியவற்றில் எதன் மீதாவது அவன் இதயத்தில் ஆசை இருக்கும்வரை, அதன் சுவைகளில் எதிலேனும் நாட்டமிருக்கும்வரை, உண்பது, குடிப்பது, உடுப்பது, மணப்பது, வசிப்பது, வாகனங்களிலேறுவது, அதிகாரம், ஆட்சி முதலியவற்றின் சுகபோகங்களிலும் பற்றுக்கொண்டிருக்கும்வரை, ஐங்காலத் தொழுகைக்கும், ஹதீஸ் சொல்வதற்கும், திரு குர்ஆனை உரிய உச்சரிப்புகளோடு ஓதுவதற்கும் பதிலாகப் பல்வேறு வகைக் கல்விகளையும் சட்ட ஞானங்களையும் கற்க முயல்வதிலும் ஈடுபட்டிருக்கும்வரை, தன் தரித்திரம் ஒழிய வேண்டும், வளம் உண்டாகவேண்டும், துயரம் அகலவேண்டும், சுகம் வரவேண்டும், சகலவற்றிலும் சங்கடங்கள் அகன்று, நன்மைகள் உண்டாக வேண்டும் என்ற ஆவல் இருக்கும் வரை அவன் நிச்சயமாகப் பக்தி யுள்ளம் படைத்தவனே அல்லன். இவை ஒவ்வொன்றிலும் மனிதனின் நப்ஸுக்கு ருசியும் இன்பமும், உடல் போகத்துக்கு இணைவும், மனத்திற்குச் சுகமும் உள்ளன. இவை இம்மைக்குரியவை. இவற்றிலேயே ஈடுபட்டு, நிம்மதியும், திருப்தியும் அடைய மனம் எண்ணும்.

ஆனால், மனத்தகத்திலிருந்து இவை சகலவற்றை யும் வெளிப்படுத்தி, இவற்றை அகற்றிக் கொள்ளத் தன்னைத் தயாராக்கிக்கொண்டு, இவற்றை அழித்தொழிப் பதிலும் தரித்திரத்திலும் இன்பங் கண்டு, ஒரு பேரீச் சங்கனியை வாயில் வைத்துச் சுவைக்கும் ஆசைகூட இல்லாதுபோய், இம்மையில் தனக்கு எதுவுமே தேவை யில்லை என்ற நிலைமையை எய்தவேண்டும். இதில் வெற்றி யடைந்து மனம் சம்பூர்ணமாகச் சுத்தமானதும் சகல துயரமும் கவலையும் மனத்தை விட்டகலும்; அல்லாஹ்ற வுடன் நேசமும் நல்வாழ்வும் சுகமும் உண்டாகும். இது பற்றியே நபி (ஸல்) அவர்கள், "இம்மையைப் பற்றிய அக்கறையற்றிருத்தல், மனத்திற்கும் உடலுக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது" என்று அருளியுள்ளார்கள். ஆனால், அவன் இதயத்தில் இம்மைக்குரிய கவர்ச்சி ஏதேனும் ஏற்பட்டால், துயரங்களும், துக்கங்களும், அச்சமும் அங்கே நிரந்தரமாய்க் குடிகொள்ளும்; அவன் கீழான நிலையையடைவான்; அல்லாஹ்றவிடமிருந்தும் கன மாகத் திரையிடப்படுவான். எனவே, இம்மையின் பற்று முற்றும் அகன்று, சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட் டாலன்றி இவை யாவும் அகற்றப்படமாட்டா.

அதன்பின் மறுமையின் விஷயத்தில் அக்கறையற்ற வனாகி, உயர்ந்த மகாம்களையும், பதவிகளையும், அழகிய கன்னியரையும், வீடு, மாளிகை, உயர்ந்த ஆடை, ஆபரணங்களையும், வாகன வசதிகளையும், உயர்ந்த உணவு, பானம், மற்றும் மூமின்களான தன் அடியார்களுக் காக அல்லாஹ்ற வைத்துள்ளவை அனைத்தையும் விரும் பாது ஒதுக்கவேண்டும்.

தன் செயல்களுக்காக அல்லாஹ்ற ஜல்லஜலாலுஹு விடமிருந்து இம்மையிலும் மறுமையிலும் எந்தப் பிரதி யுபகாரத்தையும், சம்மானத்தையும் ஒருக்காலும் எதிர் பார்க்கக்கூடாது. இதன் பின்னரே தன் கணக்கை

அல்லாஹ் அவனுடைய கருணையும், பரிவும் கொண்டு நோக்குவதைக் காண்பான். எனவே, அல்லாஹ் அவனைத் தன் அருகில் ஈர்த்துத் தன் பரிவைச் சொரிவான்; பலவிதமான பரிவுகள் மூலமும் நல்லுதவிகள் மூலமும் அவன் தன்னை அறியுமாறு செய்வான்; அவன் தன் நபிமார்கள், ரஸூல்மார்கள், அவ்லியாக்கள், ஸித்தீக்குகள், ஷுஹதாக்கள் விஷயத்தில் இவ்விதமே நடந்துவந்துள்ளான். எனவே, அடியான் தன் வாழ்நாள் முழுவதும் தினேதினே அபிவிருத்தியடைந்து வருகிறான். அதன்பின் அவன் மறுமைக்கு மாற்றப்பட்டு, "எந்தக் கண்களும் கண்டிராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த மானிட மனத்திலும் பட்டிராத" வற்றைச் சகல அறிவையும் கடந்த, எந்த விளக்கமும் பூரணமாக்க இயலாத நிலையை அனுபவிக்குமாறு செய்யப்படுகிறான். (ஐம்பத்து நான்காம் மகாலா)

34

வாழ்க்கையின் சுகபோகங்கள் மும்முறை ஒதுக்கப்படுகின்றன. ஆரம்பத்தில் அல்லாஹ்வின் அடியான் தன் அறியாமை இருளில் மனம் போன போக்கில் போய் விடுகிறான்; பல்வேறு சந்தர்ப்பங்களிலும், தன் ரப்புக்குச் சேவை செய்வது எப்படி என்ற மனப்பான்மையே இல்லாது, தன்னைக் கட்டுப்படுத்த மார்க்கக் கடிவாளமும் எதுவும் இல்லாது, அவன் உத்தரவால் வரம்பு மீறுமல் இருக்கக்கூடிய நிதானமும் இல்லாது, தன் இயற்கையான தூண்டுதல்களின்படியும் இச்சைகளின்படியும் தாராளமாய் நடந்துகொள்கிறான். அவன் இப்படியிருக்கும் போது அல்லாஹ் அவன்மீது கருணைக் கண்கொண்டு நோக்குகிறான். அவனைக் கண்டிக்க ஜனங்களிலிருந்து தன் அடியாரும் நேர்மையானவருமான ஒருவரை அனுப்புகிறான்; அவன் இதயத்திலும் அவனைக் கண்டிக்கும் ஒரு நிலையை உண்டாக்குகிறான். இவ்விரண்டு கண்டனங்களும்

அவன் நப்ஸின்மீதும், இயற்கையின்மீதும் வெற்றி கொள்கின்றன. அவை அவன் மனத்தில் எதிரொலிக்கின் றன. அப்போது, தன் இயல்பெனும் வாகனத்தின்மீது அவன் சவாரி செய்வது, சத்தியத்தை அவன் எதிர்ப்பது போன்ற அவனுள் உள்ள குறைபாடுகள் யாவும் அவனுக்குத் தெளிவுபடுகின்றன. இதனால் அவன் தன் நடவடிக்கைகளிலெல்லாம் அல்லாஹ்வின் சட்டத்தின் பக்கல் திரும்புகிறான்."

இவ்விதம் அல்லாஹ்வின் அடியான் அல்லாஹ்வின் சட்டப்படி நடக்கும் முஸ்லிமாகித் தன் இயல்பிலிருந்து மறைந்து உலகின் ஹராமான பொருள்களையும் ஐயத் துக்கு இடம்பாடுள்ளவற்றையும், ஜனங்களின் உதவியை யும் ஒதுக்கிவிடுவான். உண்பது, உடுப்பது, மணப்பது, வசிப்பது, மற்றுமுண்டான தன் விவகாரங்கள் சகல வற்றிலும் உண்மையாக அனுமதிக்கப்பட்ட, ஹலாலாக் கப்பட்டவற்றை மட்டுமே ஏற்பான். தேக ஆரோக்கியத்தின் அடிப்படையைப் பாதுகாப்பதற்கும், அல்லாஹ்வுக்குப் பணியப் பலம் பெறுவதற்கும், அதன் மூலம் தனக்கு ஒதுக்கப்பட்ட பங்கைப் பெறுவதற் கும் இஃது அவசியமானதாய் இருக்கிறது. இம்மைக் குரிய சாதனங்கள் கிடைத்து அதன் அனுபவம் பெறும்வரை அதைவிட்டு விலகுவதற்கில்லை. தன் வாழ்க்கையின் சகல நிலைமைகளிலும் அனுமதிக் கப்பட்ட ஹலாலான பொருள்கள் 'என்ற வாகனதி களிலேயே பிரயாணஞ் செய்கிறான். அதன் மூலம் விலாயத் ,எனும் உச்சத்தையும், ஸித்தீகீன்கள், ஷுஹதாக்களின் கூட்டத்தையும் அடைகிறான். அல்லாஹ்வின் அனுமதிகொண்டு உண்கிறான்.

எனவே, உன் நப்ஸை உதறிவிட்டு வா; நீ சிருஷ்டி யாளனை நாடினால் உன்சுகபோகங்களையும், சிருஷ்டியையும் ஒதுக்கிவிடு; இம்மையுடையவும் மறுமையுடையவும் பாத

ரட்சைகளை புறக்கணித்து விடு; இனி சிருஷ்டிக்கப்படப் போகும் சகல ஜீவியங்களையும், பொருட்களையும் விட்டும் ஆசைகளை விட்டும் வெளியாகு. யாவற்றிலிருந்தும் மறைந்துபோ! தௌஹீது மனத்தில் நிற்க, ஷிர்க்கை ஒதுக்கிவிட்டதற்கும் நோக்கத்தில் அந்தரங்க சுத்தி யடைந்தமைக்கும் மகிழ்ச்சியடை. பின்னர் மகிழ்ச்சி யுடன் தலைகுனிந்தவனாய் தெய்வ சமீபத்துவத்தில் நுழை. வலது பக்கம் மறுமையின்" வாழ்வையோ, இடது பக்கம் இம்மையின் வாழ்வையோ, ஜனங்களையோ, சுகபோகங்களையோ நோக்காதே!

அடியான் இந்நிலையை அடைந்ததும், அங்கே இவன் இருப்பது ஊர்ஜிதமானதும், அல்லாஹ்விடமிருந்து கண்ணியம் எனும் உடையைப் பெறுகிறான்; மற்றும் பல விதமான நன்மைகளையும் அடைகிறான். அப்போது, "பாக்யங்களையும், அனுக்கிரஹங்களையும் உடுத்துக்கொள்; ஆசைகளை ஒதுக்கி மறுக்கும் அளவுக்கு மரியாதைக் குறைவு செய்யாதே; ஏனெனில், அரசனின் நன்கொடையைப் பெற மறுப்பது அவனை வற்புறுத்துவதாகவும் அவன் மகத்தான சக்தியை அலக்ஷியஞ் செய்வதாகவும் ஆகிவிடும்'' என்று அவனிடம் கூறப்படும். இதன்பின், தன் முயற்சி எதுவுமே இன்றி இறைவனின் அனுக்கிரஹத்தாலும், பங்கு ஒதுக்குதலாலும் அவன் பொதியப் படுகிறான். இதற்குமுன் அவன் தன் நப்ஸின் ஆசைகளாலும் தூண்டுதல்களாலும் பொதியப்பட்டிருப்பது வழக்கம். எனவேதான், "அல்லாஹ்வின் பாக்யங்களாலும் அனுக்கிரஹங்களாலும் உன்னைப் பொதிந்துகொள்'' என்று அவனிடங் கூறப்படும்.

ஒதுக்கப்பட்டவற்றையும், சுகங்களையும் அடைவதில் இவனுக்கு நான்கு நிலைமைகள் உள்ளன. முதலாவதாக, இயற்கையின் தூண்டுதல்; இது ஹராமானது. இரண்டாவதாகச் சட்டத்தை அனுசரிக்கும்

நிலைமை; இது ஹலாலானது; அனுமதிக்கப்பட்டது. மூன்ருவதாகச் சந்தர்ப்பத்தின் உத்தரவு; இது விலாயத்தின் நிலைமை. கடைசியாகத் தெய்வீக அனுக்கிரஹம். இந்நிலையில் நோக்கம் மறைந்து, 'பதாலிய்யத்' (அப்தாலின் நிலை)தும், தெய்வீக லக்ஷியத்தை அடைதலும் எய்தப் படுகின்றன. தக்தீரின் கட்டளைப்படி, அதாவது அல்லாஹ்வின் செயலின்படி நிற்க முடிகிறது. இதுவே ஞானத்தினுடைய நிலை; நேர்மை எனுங் குணம் குடிகொண்ட நிலை; இந்நிலையை அடையாதவரை யாரும் நேர்மையாளர் என்று அழைக்கத் தகாதவராவர். இது கீழ்க்கண்ட அல்லாஹ்வின் வாக்கோடு இணைந்ததாகும்: "நிச்சயமாக, என் நேயன் இவ்வேதத்தை வெளியிட்ட அல்லாஹ்வே; அவன் நேர்மையாளர்களோடு தோழமை கொள்கிருன்." (7:196)

எனவே, எந்தப் பயனுள்ள வஸ்துவையும் தனக்கெனப் பயன்படுத்துவதிலிருந்தும், தனக்குத் தீங்கையும் சங்கடத்தையும் உண்டாக்கும் எதையும் விலக்குவதிலிருந்தும் தடுக்கப்பட்டவனே அடியாளுவான். இவன் தாயின் மடியில் கிடந்து பால் குடிக்கும் சிசுவைப்போலவும், குளிப்பாட்டுபவர் கையில் கிடக்கும் மையித் போலவும் இருக்கிருன். இவன் எந்த முயற்சியும் செய்யாமலே, எதுவும் யோசியாமலே, தெய்வக் கரம் இவன் போஷிப்பைக் கவனித்துக் கொள்கிறது. இவன் இவை யாவற்றையும் விட்டு மறைந்தவனுய், சில சமயங்களில் தன்னைக் கட்டுப்பாட்டுக் குள்ளாக்கியும், சில சமயங்களில் சுகமாய் இருக்குமாறு செய்தும், சில சமயங்களில் பணக்காரனுயும், சில சமயங்களில் ஏழையாயும் ஆக்கி வரும் தக்தீரின் கட்டளைப்படி ஒழுகுவதில் எந்த நிலைமையோ, ஸ்தானமோ, நோக்கமோ இல்லாதவனுய், தன் நிலைமை எதுவும் அகல்வதற்கோ, மாறுவதற்கோ, விரும்பவோ, இஷ்டப்படவோ, இஷ்டப்படாமலிருக்கவோ செய்யாத

வனாய் இருக்கிறான். இவன் பூரணமான இன்பமும் நிரந்தர இணைவுமே காட்டிவருவான். இதுவே அப்தால்கள், அவ்லியாக்களால் அடையப்பெறும் ஆத்மீக நிலையின் உச்சமாகும். (ஐம்பத்து ஐந்தாம் மகாலா)

35

அல்லாஹ்வின் அடியான் சிருஷ்டிகளை விட்டும் இச்சையை விட்டும், தன் நப்ஸை விட்டும், நோக்கத்தையும், இம்மை மறுமையின் ஆசைகளை விட்டும் மறைந்ததும், அவன் அல்லாஹு ஸுப்ஹானஹுவத்தஆலாவைத் தவிர வேறு எதையும் நாடமாட்டான்; சகலமும் அவன் மனத்தைவிட்டு மறைந்துவிடுகின்றன. இதன் பின்னரே தன்னைப் பொறுக்கியெடுக்கும், அன்பு பாராட்டும், தன்மீது சிருஷ்டிகள் யாவும் அன்பு செலுத்தும்படி செய்யும் அல்லாஹ்வின் சமீபத்துவத்தையும் கருணை கடாட்சத்தையும் பெற்று அதில் புரள்கிறான். அல்லாஹ் தன் கருணைக் கதவுகளை அவனுக்குத் திறந்து விடுகிறான்; அதை மீண்டும் ஒருக்காலும் அடைப்பதில்லை என்றும் வாக்களிக்கிறான். இதனால் அடியான் அல்லாஹ்வையே ஏற்றவனாய், அவன் எண்ணம் மூலமே எண்ணுபவனாய், அவன் மார்க்கங்களாலேயே மார்க்கம் காண்பவனாய், அவன் சித்தத்தாலேயே எதிலும் சித்தி பெறுபவனாய், அவன் மகிழ்ச்சியாலேயே மனமகிழ்வு கொள்பவனாய் ஆகிவிடுகிறான். அவன் உத்தரவுகளை நிறைவேற்றுகிறான்; வேறு யாருடைய உத்தரவையும் கேட்பதே இல்லை. அந்த ஜல்ல ஜலாலுஹுவினுடையதைத் தவிர வேறு ஜீவியத்தையோ செயலையோ அவன் அறியான். இதன்பின் அல்லாஹ் அந்த அடியானுக்கு ஒரு வாக்களிக்கிறான்; அதை நிறைவேற்றாது போட்டு வைக்கிறான்; இதனால் அந்த அடியான் இது சம்பந்தமாய் தனக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தது கிடைக்காமற் போகலாம். இஃது ஏனெனில் இச்சையும் நோக்கமும்,

சுகம் தேடலும் மறைவதுடன் அவன் வேறு தான், வேறு என்றிருக்கும் நிலைமையும் மறைந்துவிடுகிறது. அப்போது அவனுடைய ஆத்மாவே அல்லாஹ் ஸுப்ஹான ஹுவின் செயலாகவும், நோக்கமாகவும், லக்ஷியமாக வும் ஆகிவிடுகிறது. எனவே, இந்நிலையில் வாக்குறுதி அல்லது வாக்குறுதி முறிவு என்ற பேச்சுக்கே இடமில் லாது போகிறது; ஆசையும் நோக்கமும் உள்ளவனுக்குத் தான் இவையும் உண்டு. அத்தகைய அடியானுக்கு அல்லாஹு ஜல்லஜலாலஹு அளிக்கும் வாக்குறுதியை ஒருவன் தனக்குள் ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்ய எண்ணிவிட்டுப் பிறகு, அதே எண்ணத்தை வேறு எதன் பக்கமோ திருப்பி விடுவதற்கு உவமையாக்கலாம். இஃது எதுபோல் எனின், நம் பெருமான் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹு ஜல்லஜலாலுஹு, முந்திய வேதங்களில் உள்ள சிலவற்றை எடுத்துவிட்டதுபற்றிக் கீழ்க்கண்ட வாறு தெரிவித்துள்ளது போலாம். அதாவது: "(முந் திய வேதங்களில்) நாம் எவ்வசனங்களை எடுத்துவிடவோ, மறக்கப்பட்டுப் போகவோ விரும்பினோமோ, (அவற்றிற் குப் பதிலாக) அவை போன்ற, அல்லது அவற்றைவிடச் சிறந்தவற்றை நாம் (இவ்வேதத்தின் மூலம்) தருகிறோம். அல்லாஹ் நிச்சயமாகச் சகல வஸ்துக்களின்மீதும் அதி காரமுடையவன் என்பதை நீர் அறியீரா?" (2 : 106)

நபி பெருமான் (ஸல்) அவர்கள் ஆசையையும் நோக்கத்தையும் விட்டும் கழுவப்பட்டவர்களாய் இருந்தார்கள். பத்ரு யுத்தம் நடந்த நாளிலே கைதிகள் விஷயத்தில் அவர்கள் நடந்துகொண்டது அதற்கு ஓர் உதாரணம். அது பற்றித் திரு குர்ஆனில் கூறப்பட் டிருப்பதாவது: "நீர் இம்மையின் நிலையற்ற பொருள்களை விரும்புகிறீர்; ஆனால், உமக்கு அல்லாஹ் மறுமையைத் தர நாடியுள்ளான். அவன் மகா வலுப்பமானவன்; மகாஞானி. அல்லாஹ் ஏற்கனவே வெளியாக்கிவிட்ட

ஓர் உத்தரவு மட்டும் இல்லாதிருப்பின், நீர் எடுத்துக் கொண்டதற்காக மிகவும் கடுமையான தண்டனை ஏற்பட்டிருக்கும்.'' (8 : 67, 68)

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் உடைமை; அவர்களை அவன் ஒரே நிலையில், ஒரே விஷயத்தில், ஒரே வாக்குறுதியில் விட்டு வைக்கமாட்டான். தக்தீரின் உத்தரவை நோக்கி அவர்களைத் தள்ளி, தக்தீரின் கீழ்ப்படிதலை அவர்கள் கையாளச் செய்வான். இப்படி அவர்களை அசைத்துத் தக்தீரின் நடுவில் புரளச் செய்து தன் வார்த்தைகளால் விழிப்புடனிருக்கும்படி செய்வான். "அல்லாஹ் நிச்சயமாகச் சகல வஸ்துக்களின்மீதும் அதிகாரமுடையவன் என்பதை நீர் அறியீரா?'' (2 : 106)

அதாவது, நிச்சயமாக அவன் விதித்துள்ள விதிவசக் கடலில் நீ கிடக்கிறாய்; அதன் அலைகள் உன்னைச் சில சமயங்களில் இப்பக்கமும், சில சமயங்களில் அப்பக்கமும் அலைக்கழிக்கின்றன. எனவே, ஒரு வலியின் ஸ்தானம் முடியுமிடம் ஒரு நபியின் ஸ்தானத்தின் ஆரம்ப இடமாய் இருக்கிறது. விலாயத்துக்கும், பதாலியத்துக்கும் பிறகு நுபுவ்வத் அன்றி வேறு ஸ்தானமில்லை. (ஐம்பத்து ஆறும் மகாலா)

36

ஆத்ம அனுபவங்களின் பல்வேறு நிலைகளுமே கட்டுப்படுத்தும் நிலைகள் தாம். ஏனெனில், வலியானவர் அவற்றைக் கவனித்து நடக்கும்படி கட்டளையிடப்படுகிறார். கவனித்து நடக்கும்படி உத்தரவிடப்படும் எதுவுமே கட்டுப்பாட்டைக் கொண்டுவருவதுதான். தக்தீரின் கட்டளைப்படி நடந்துவிடுவது சுகமான ஒரு நிலைமை என்பதில் ஐயமில்லை; ஏனெனில், அதில் தக்தீரின் கட்டளையில் யாரும் தன் ஜீவனைத் தவிர வேறு எதை

யும் நோட்டமிட வேண்டாம் என்று கட்டளையிடப்பட்டுள்ளது. எனவே, வலியானவர் தக்தீரின் கட்டளை விஷயத்தில் தகருறு செய்தல் கூடாது. அதனுடன் இணங்கித் தனக்கு நேரக்கூடிய சகலவற்றின் விஷயத்திலும் - அவை இனியவையாயினும் கசப்பானவையாயினு - எதுவுமே கூறாது இருக்கவேண்டும். அனுபவ நிலைகள் வரம்புள்ளவையாதலால் அந்த வரம்புகள் காப்பாற்றப்பட வேண்டும் என்று கட்டளை யுண்டாகியுள்ளது. ஆனால், அல்லாஹ்வின் செயலான விதிவசமோ வரம்பற்றதாகையால் வரம்புகளைக் காப்பாற்றும் அவசியம் இல்லாது போகிறது. அல்லாஹ்வின் அடியான் விதிவசத்தின் நிலையை, அல்லாஹ்வின் செயலை, சுகமான நிலையை எய்தி விட்டான் என்பதற்கு அறிகுறி, அவன் சுகங்களை உதறித் தள்ளி, அவற்றை விட்டு விலகி இருக்குமாறு கட்டளையிடப்பட்ட பின், இப்போது சுகங்களுக்காக விண்ணப்பிக்கும்படி உத்தரவிடப்படுகிறான். ஏனெனில், அவன் அந்தரங்கம் சகல சுகங்களையும் விட்டு வெளியாகி, அவன் ரப்பைத் தவிர வேறு எதுவும் அவனிடம் இல்லாது ஆனதும், அவன் சுகமான நிலையில் வைக்கப்பட்டு அவனுக்காக ஒதுக்கப்பட்ட, அவன் கேட்டால் நிச்சயங்கிடைக்கக்கூடிய சுகமான பொருள்களைக் கேட்குமாறும், அதற்காக ஆவல் காட்டுமாறும் கட்டளையிடப்படுகிறான். அல்லாஹ்வின் பார்வையில் அவன் கண்ணியமும், அவன் கேட்பது ஏற்கப்படுவதில் அல்லாஹு ஜல்லஜலாலஹுவின் அருளனுக்கிரஹமும் இதன் மூலம் ஸ்தாபிதமானவையாகின்றன. சுகானுபவத்துக்கான பொருள்களை வேண்டுவதற்கு அடியான் தன் நாவை உபயோகிப்பது, கட்டுப்பாட்டுக்குப் பின் சுகம் உண்டாகியுள்ளதையும், சகலவித நிலைகளின் அனுபவங்களிலிருந்தும், நிலைகளிலிருந்தும், வரம்புகளுக்குள் கிடந்ததால் உண்டான சலிப்பிலிருந்தும் விடுபட்டுவிட்டதையும் காட்டும் அறிகுறியாகும்.

சட்டத்தைப் பேணும் சங்கடம் மறைவது நாஸ்திகத்தை உண்டாக்கவில்லையா, இஸ்லாத்திலிருந்து புறம்பாகி, "உமக்கு (யகீன் எனும்) மரணம் வரும்வரை உம் ரப்புக்குப் பணிந்து சேவை செய்வீராக!" (15 : 99) என்ற அவன் வார்த்தைகளையே நிராகரிப்பதாகவில்லையா என்று ஆக்ஷேபிக்கப்படலாம். இதற்கு என் பதிலாவது: அல்லாஹ் மகா தயாநிதி; அவன் நேசன் அவனுக்கு மிகவும் அருமையானவன்; தன்னுடைய சட்டத்தின் முன்பும் மார்க்கத்தின் முன்பும் விகாரமான, குறைபாடுள்ள ஓர் அந்தஸ்தில் தன் அடியான் தரிபட்டுக் கிடக்க அவன் விடமாட்டான். அதற்குப் பதிலாக, விவரித்த யாவிலுமிருந்தும் அந்த அடியானைக் காப்பாற்றி, பாதுகாத்து, விளிப்புடையவனுக்கிச் சட்டத்தின் எல்லைகளைப் பேணுமாறு செய்கிறான். எனவே, அந்த அடியான் பாவத்துக்கு எதிராகப் பாதுகாப்புப் பெற்றவனாய் எந்த முயற்சியும் போராட்டமுமின்றிச் சட்ட வரம்புக்குள் ஒழுகி வருகிறான். ஆனால், தன் ரப்பில் ஆலமீனின் அருகில் இருப்பதால், தன்னுடைய இந்த ஒழுக்கத்தையே உணராமலிருக்கிறான். அல்லாஹ் சொல்கிறான் : "தீமையையும் ஒழுங்கீனத்தையும் அவரிடமிருந்து அப்பாலாக்குவதற்காகவே நாம் அப்படிச் செய்தோம்; நிச்சயமாக அவர் நம் உண்மையான அடியார்களில் ஒருவராவார்" (12: 24) என்று. மேலும், "(ஷைத்தானே,) என் அடியார்கள் சம்பந்தப்பட்டவரை 'உனக்கு அவர்கள்மீது நிச்சயமாக எந்தச் செல்வாக்குமில்லை" (15 : 42) என்றும், "அல்லாஹ்வின் அடியார்களான பரிசுத்தவான்களைத் தவிர" (37 : 40) என்றும் திரு குர்ஆனில் கூறப்பட்டுள்ளது.

ஹே ஏழையே, இத்தகையவன் அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவன் பொருளாய் அவன் சமீபத்துவம், பரிவு என்ற மடிகளில் ஊட்டி வளர்க்க

படுபவனாய் இருக்கிறான். அவனை வைத்தான் அணுகுவ தெப்படி? தீயவையும், வேண்டத்தகாதவையும் அவனருகில் செல்வது எப்படி? அந்த ஊட்டத்தை விட்டு விலகி, அந்நிலைமைக்கான மரியாதையை நீ செய்யாதிருப்பது எப்படி? அத்தகைய கேவலமான இழிந்த துணிச்சலும், தவறிய அறிவும், பிழைபட்ட அபிப்பிராயமும் அல்லாஹ்வின் சர்வமான சக்தியாலும், சம்பூர்ணமான பரிவாலும், பரந்த கருணையாலும் அழிந்துபடுமாக! பரிபூரணமான போர்வைகளால் அவன் நம்மைப் போர்த்துப் பாவங்களை விட்டு விலக்கிப் பாதுகாப்பானாக! தன் சம்பூர்ணமான பாக்யங்களாலும், நிரந்தரமான அருட்கொடைகளாலும் அவன் நமக்கு ஊட்டமளித்து அருள் புரிவானாக!

37

சகல புறங்களின் விஷயத்திலும் குருடாய் இரு; அவற்றில் எதன் பக்கமும் கண் திறக்க வேண்டாம். அவற்றில் எதன் பக்கமும் நோக்கிக்கொண்டிருக்கும் வரை, அல்லாஹு ஜல்லஜலாலஹுவின் அனுக்கிரஹம், சமீபத்துவம் ஆகியவை உனக்கு மூடியவையாகவே இருக்கும். எனவே, உன்னுடைய மனத்தகத்தில் தௌஹீதை நிலைநாட்டி, உன் நப்ஸை அழித்துச் சகல புறங்களையும் மூடிவிடு. நீ மறைவதுடன் உன் அறிவும் மறையட்டும். அப்போது அல்லாஹ்வின் பக்கம் உன் மனக்கண் முன் தென்படும். உன் இதயத்தின் ஒளிக் கிரணங்களுடனும், ஈமானுடனும் நம்பிக்கையுடனும் அது தென்படுவதை உன் இரு மனக்கண்களாலும் காண்பாய். அச்சமயம் உன்னகத்தி லிருந்து ஒரு வெளிச்சம் தோன்றும்; இருண்ட இரவில் இருண்ட ஒரு வீட்டில் எரியும் விளக்கின் வெளிச்சம் திறந்த வாயில் மூலம் வெளியில் தென்பட்டுப் பிரகாசம் உண்டாவது போல, அந்த வெளிச்சம் உன் புறத்தி

லும் தென்படும். எனவே, உன் ஆத்மாவும் அங்கங்களும், அல்லாஹ்வின் வாக்குறுதியாலும், நன்கொடையாலும்- அவனையல்லாதார் தரும் நன்கொடைகள் வாக்குறுதிகளையும் விட்டு வேறுபட்ட நிலையில் - சுகத்தை உணரும்.

எனவே, உன் ஆத்மாவிடம் நீ கருணை காட்டு; அதனிடம் அநீதியாய் நடக்காதே! உன் அறியாமை மௌடீக இருளில் உன் ஆத்மாவை எறிந்து விடாதே! சிருஷ்டிகள் உள்ள பக்கத்தையும், சக்தியையும், திறனையும், பொருளீட்டலையும் கண்டுமயங்கி அவற்றில் நம்பிக்கை கொண்டு விடாதே! நீ அவ்விதஞ் செய்தால் எல்லாப் புறங்களும் மூடப்படும்; உன்னுடைய அந்த ஷிர்க்குக் காரணமாக, அதற்குத் தண்டனையாக அல்லாஹ்வின் அருளனுக்கிரஹம் எனும் பக்கமும் மூடப்பட்டுவிடும். ஆகையால் அவன் ஏகத்துவத்தை உணர்ந்து, அவன் அருளனுக்கிரகத்தைக் கண்டு, மற்ற எதன்மீதும் நம்பிக்கை கொள்ளாது அவன் மீதே பூரணமான நம்பிக்கை வைத்ததும், அவனையன்றி மற்றுமுண்டான சகலவற்றின் விஷயத்திலும் குருடானதும், அவன் உன்னைத் தனக்கு அருகிலுள்ளவனாக்கி, தன் கருணையைக் காட்டி, ஊட்டி, உணவளித்து, வைத்திய சிகிச்சையளித்து, சுகமாக்கி, நன்கொடைகள் உதவி, வளமானவனாக்கி, உதவிகள் செய்து, ஆட்சி செய்பவனாக்கி, சிருஷ்டிகளிடமிருந்தும், உன் நப்ஸிடமிருந்தும் உன்னை மறையச் செய்து, அதன் பின் உன் ஏழ்மையையோ, வளத்தையோ நீ காணாதபடி ஆக்கிவிடுகிறான். (ஐம்பத்து எட்டாம் மகாலா)

38

உன் நிலைமை துயரமானது அல்லது பாக்யமானது என்ற இரண்டில் ஒன்றாகவே இருக்கமுடியும். துயரமானதாய் இருப்பின், முயற்சியுடனாவது நீ பொறு

மையை நாடவேண்டும். ஆனால், இஃது இரண்டாந்தர நிலைதான். முயற்சியற்ற, ஒழுங்கான பொறுமையுடன் இருப்பதுதான் அதைவிட உயர்ந்த நிலையாகும். அல்லாஹ்வின் உத்தரவுடன், அப்போது நீ சுகத்தைக் கேட்கலாம். அதனுடன் இணைந்திருக்கவும் கடைசியில் அதில் மூழ்கிவிடவும் விரும்பலாம். இது அப்தால்கள் ஆத்ம ஞானிகள், அல்லாஹ்வைப்பற்றிய ஞானமடைந்தவர்கள் ஆகியோருக்குப் பொருத்தமான நிலையாகும். உன் நிலை பாக்யமானதாய் இருப்பின், அது குறித்து நன்றியறிதல் செலுத்தவேண்டும். நன்றியறிதல் நாவினாலும் இதயத்தாலும் உடலின் சகல அங்கங்களாலும் செய்யப்படலாம்.

நாவினால் நன்றி செலுத்துவது என்பது அந்தப் பாக்யம் அல்லாஹ்விடமிருந்தே வந்தது, அது ஜனங்களாலோ, உன்னாலோ, உன் பலத்தாலோ, சக்தியாலோ, நடவடிக்கையாலோ, முயற்சியாலோ, வேறு எதனாலுமோ, யார் மூலம் அது உன்னிடம் வந்ததோ அவராலுமோ அஃது உனக்கு கிடைக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்வதாம். ஏனெனில், நீயும் அவர்களும் அதற்கான கருவிகளாய்த்தான் இருந்தீர்கள். அதை உண்மையில் உண்டாக்கி ஒதுக்கித் தந்தவன் அல்லாஹு ஜல்லஜலாலஹுதான். எனவே, மற்ற யாருக்குமல்ல, அவனுக்கே நன்றி செலுத்தவேண்டும். உதாரணமாக ஒரு சம்மானத்தைக் கொண்டுவரும் அடிமைக்கல்ல, அதை அனுப்பும் எஜமானனுக்கே யாரும் மதிப்புத் தருகிறார்கள். இந்தச் சரியான மனப்பான்மை யற்றவர்களைப் பற்றி, "இம்மையின் புறத் தோற்றத்தை அவர்கள் கவனிக்கிறார்கள்; மறுமையைப்பற்றியோ அக்கறையற்றவர்களாய் இருக்கிறார்கள்" (30 : 2) என்று அல்லாஹ் திருகுர்ஆனில் கூறியுள்ளான். எனவே, புறத் தோற்றத்தை மட்டும் கவனித்து விட்டு, அதற்கப்பால் ஊடுருவிப் பார்க்

கும் ஞானமற்றவன் அறியாமையுள்ளவனும், அறிவுக் கோளாறுடையவனுமாவான். ஒரு விஷயத்தின் மூலஸ்தானத்தை ஊடுருவிப் பார்க்கும் சக்தியுடையவனைத்தான் அறிவுடையவன் எனலாம்.

இதயத்தால் நன்றி செலுத்துவது என்பது, பாக்யங்களிலும், நன்மைகளிலும், வசதிகளிலும், அக, புற நடவடிக்கைகளிலும், ஒய்விலும் உன்னுடையவையாய் இருப்பவை யாவும் அல்லாஹ் ஸுப்ஹானஹூவிடமிருந்தே வருகின்றன; வேறு யாரிடமிருந்துமல்ல என்பதை உறுதியான நம்பிக்கையுடன் மனத்தகத்தில் கொள்வதாகும் நாவால் நீ நன்றி செலுத்துவது என்பது இதயத்திலுள்ளதை வெளியிடுவதுதான். "உங்களுக்கு அனுக்கிரஹிக்கப்பட்ட யாவும், அல்லாஹ்விடமிருந்து வந்தவைதாம்" (16:53) என்றும், "புறத்தேயும் அகத்தேயும் அவன் தன் அருட்கொடைகளை உங்கள்மீது அள்ளிச் சொரிந்துள்ளான்" (31:20) என்றும், "அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் கணக்கிட்டால் அவற்றை உங்களால் எண்ண முடியாது" (14:34) என்றும் அல்லாஹ்வே கூறியுள்ளானன்றோ! எனவே, ஒரு முஸ்லிமுக்கு அருளனுக்கிரஹம் புரிபவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை.

கடைசியாக, அங்கங்களால் நன்றி தெரிவிப்பது என்பது அவற்றைச் சிருஷ்டிகளுடைய கட்டளைகளில் ஈடுபடுத்தாது, முற்றும் அல்லாஹ்வின் கட்டளைகளில் ஈடுபடுத்துவதாகும். எனவே, அல்லாஹ்வுக்கு எதிரான எது விஷயத்திலும் நீ சிருஷ்டிகளுக்கு இணக்கம் காட்டவே கூடாது. சிருஷ்டிகள் என்பது, இது சம்பந்தப்பட்டவரை உன் நப்ஸும், இச்சைகளும், நோக்கமும், மற்றுமுண்டான சகலமும் அடங்கியதாகும்.

அல்லாஹ்வுக்கு அடிபணிவதை உன் தலையாயக் கடமையாகக் கொள். மற்றவை யாவும் அதற்கு உட்பட்டே வரவேண்டும். வேறு விதமாய் நீ நடந்தால், நேரான பாதையைவிட்டு வழிதவறியவனுவாய்; அநீதவானுவாய்;

அல்லாஹ் தன் மூமினான அடியார்களுக்காக வெளியிட்டுள்ள கட்டளைகளுக்குப் புறம்பாகவே கட்டளையிடுபவனாவாய். அது நேர்மையானவர்கள் பின்பற்றும் வழியன்று. அல்லாஹ் ஜல்லஜலாலஹு சொல்கிறான்: ''அல்லாஹ் இறக்கிய(வேதத்தின் கட்டளைப்படி)தீர்ப்பளியாதவர்கள் யாரோ, அவர்களே நிச்சயமாக அநீதியாய் நடப்பவர்களாவர்''(5:45) என்று. இவ்விதம் தீர்ப்பளியாதவர்களைப் ''பாவிகள்'' (5:47) என்றும் வேறோர் இடத்தில் அவன் கூறியுள்ளான்.

அப்படி அநீதியாய் நடந்து கொண்டால் உன் முடிவிடம் ஜனங்களும், கற்களும் விறகாகும் நரக நெருப்பாய்த்தான் இருக்கும். இம்மையில் ஒரு நாழிகை நேரம் ஜவரத்தைத் தாங்காதவன், நெருப்பின் சிறு ஜவாலைகளின் முன்கூட நிற்க முடியாது. அப்படியிருக்க நிரந்தரமாய், நரகவாசிகளின் கூட்டத்தில் நரக நெருப்பில் சதாவும் கிடப்பதெப்படி? எனவே, அப்பால் ஓடு! அவசரமாய் ஓடு! அவசரமாய் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடு! அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடு!

முதலில் சொன்ன நிலைமைகளைப் பேணு; ஏனெனில், உன் வாணாள் முழுவதும் அவற்றில் ஏதாவதொன்று—துயரம் அல்லது பாக்யம்—வந்து கொண்டுதான் இருக்கும். இந்த ஒவ்வொரு நிலையிலும் அதற்குரிய மனப் பக்குவத்துடன், நான் விவரித்தது போல், பொறுமையாய் இரு; அல்லது நன்றி செலுத்து. துயரமான நிலைமையில் ஜனங்களில் யாரிடத்தும் அது பற்றிக் குறை கூறாதே! அதன் தொல்லை குறித்து யாரிடமும் எதுவுங் கூறி, மனத்தளவிலும் உன் ரப்பைப் பழிக்காதே! அவன் ஞானத்தையும் வழியையும் - உன் இம்மைக்கும் மறுமைக்கும் அருமையான இவற்றை - சந்தேகிக்காதே! உன் உத்சாகத்தில் நீ ஜனங்களில் யாரிடமும் செல்வதன் மூலம் தப்பிக்க முயலாதே!

ஏனெனில், அது அல்லாஹ்றவோடு எதையாவது இணை வைப்பதாகிவிடும்.

அல்லாஹ்றவைத் தவிர வேறுயாரும் தன்உடைமையி லுள்ள எதையும் பகிர்ந்து தரவோ, நன்மை அல்லது தீங்கு செய்யவோ, சங்கடங்களை அகற்றவோ, துயரத்தையும் பிணியையும் உண்டாக்கவோ, ஆரோக்கி யத்தை அளிக்கவோ, நன்மையானது எதையும் உண்டாக் கவோ சக்தியற்றவர்களாவர். எனவே, அகத்திலும் புறத் திலும் சிருஷ்டிகளின் பக்கம் திரும்பாதே! அல்லாஹ்றவுக்கு எதிராக அவற்றால் உனக்கு ஒருக்காலும் உதவமுடியா. பொறுமையுடனிரு; அல்லாஹ்றவுடன் மனப் பொருத்தம் காட்டு; அவன் செயலில் மூழ்கியவனாகு!

நீ இந்தப் பாக்யங்களற்றவனாய் இருந்தால், பணிவு காட்டி, உன் பாவங்களை ஒப்புக்கொண்டு, உன் நப்ஸின் தீமைபற்றியும், சத்தியத்தை விட்டு நீ விலகியிருந்தது பற்றியும் முறையிட்டு, அவன் தெளஹீதையும், ஆசி களையும், நீ ஷிர்க்கிலிருந்து ஒதுங்கிவிட்டதையும் வெளி யிட்டு, தக்தீரின் எழுத்துத் தன் பூரணத்துவத்தை எய் தும் வரை, உன் துயரம் மறைந்து, அல்லாஹ்றவின் அரு ளனுக்கிரஹம் உண்டாகிச் சுகமும் மகிழ்ச்சியும் ஏற் படும்வரை, அவனிடமே உதவி தேடி வா! அப்போது வரும் அருளனுக்கிரஹம் ஐயூப் நபிக்கு வந்தது போன்றிருக்கும்; இரவின் இருள் அகன்று பகலின் வெளிச்சம் வருவது போலும், பனியின் கொடுமை அகன்று வசந்தக் காற்று வீசுவது போலும் அந்த அரு ளனுக்கிரஹம் விளங்கும். அதற்குப் பொறுமையே திறவுகோலும் ஆரம்பமும், முடிவும், அத்தாட்சியு மாகும். இது ஹதீஸில், “உடலுக்குத் தலை எத்தனை பிரதானமானதோ, அத்தனை ஈமானுக்கு ஸபுர் எனும் பொறுமை பிரதானமானதாய் இருக்கிறது” என்றும்,

"ஸபுர் முழு ஈமானுமாகும்" என்றும் கூறப்பட்டுள்ளதற்கு இணக்கமானதாகும்.

சில சமயங்களில் அல்லாஹ்வின் அருளனுக்கிரஹத்தை அனுபவிப்பதன் மூலம் நன்றி தெரிவித்தல் உண்டாகிறது. ஆகவே, உன் நன்றி தெரிவித்தல் என்பது உன் நப்ஸ் துடைக்கப்பட்ட, உன் இச்சைகள் மறைந்த நிலையில், ஷரீஅத்தின் வரம்புகளைப் பாதுகாக்கும் ஆர்வம் நிறைந்த நிலையில் அதை, அனுபவிப்பதாகும். இது முன்னேற்றத்தின் கடைசி நிலை. நான் சொன்னதிலிருந்து பாடங் கற்றுக்கொள். அல்லாஹுஸுப்ஹானஹு நாடினால், நீ நேரான வழிகாட்டப்படுவாய். (ஐம்பத்து ஒன்பதாம் மகாலா)

39

இன்னார் அல்லாஹ்வின் அருகிலானார், இன்னார் தூரத்திலேயே வைக்கப்பட்டார், இன்னாருக்கு நன்கொடைகள் அருளப்பட்டன, இன்னாருக்கு அவை கிடைக்கவில்லை, இன்னாருக்குச் செல்வம் தரப்பட்டது, இன்னார் வறுமையிலேயே விடப்பட்டார், இன்னார் ஆரோக்கியமானவராக்கப்பட்டார், இன்னார் உடல்நல மற்றவராக்கப்பட்டார், இன்னார் உயரிய அந்தஸ்து தரப்பட்டார், இன்னார் தாழ்ந்த நிலையில் வைக்கப்பட்டார், இன்னார் புகழப்பட்டார், இன்னார் கண்டிக்கப்பட்டார், இன்னார் உண்மையானவராக்கப்பட்டார், இன்னார் பொய்யராக்கப்பட்டார் என்றெல்லாம் அடிக்கடி நீ கூறுவது விசித்திரமாய் இல்லையா? அவன் ஏகன், அவன் அன்பு விஷயத்தில் ஒருமையை விரும்புபவன், தன்னிடம் அன்பாய் இருப்பதில் ஒருமையுடையவனிடம் அவனும் அன்பு காட்டுகிறான் என்பதை நீ அறியாயா? அவன் தன்னையன்றி, வேறு எதனாலாவது உன்னைத் தன்னருகில் ஈர்த்தால், அதனால் உன்

அன்பு குறைபாடுள்ளதாகிச் சிதறிப்போகும். ஏனெனில் உனக்கு யார் மூலம் பாக்யங் கிட்டுகிறதோ அவரிடம் உன் மனத்தில் பற்றுதல் உண்டாவது சகஜமாய் இருக்கிறது. இதனால் உன் இதயத்தில் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பு குறைபட்டதாகிறது. அந்த அல்லாஹ்ற ஜல்லஜலாலஹூ பொறுமையுடைவன்; தனக்கு ஒரு கூட்டாளி ஏற்படுவதை அவன் விரும்புவதில்லை. எனவே, பிறருடைய கரங்கள் உனக்கு உதவ நீளாதபடியும், பிறருடைய நாவுகள் உன் புகழைப் பாட அசையாதபடியும், பிறருடைய கால்கள் உன்னிடம் வந்து, அதனால் உன் கவனத்தை அவனிடமிருந்து திருப்பிவிடாதபடியும் அவன் தடுத்து விடுகிறான். "தமக்கு ஒரு நன்மை செய்தவனிடம் அன்பு காட்டவும், தமக்குத் தீங்கு செய்தவனிடம் வெறுப்படையவும்படியான தன்மையுடையவையாய் இதயங்கள் இருக்கின்றன" என்று நம் பெருமான் (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளதை நீ அறியாயா? எனவே, நீ அவன் ஏகத்துவத்தை உணர்ந்து, அவனிடம் அன்பு காட்டி, முழுவதும் அகமும், புறமும், உன் அசைவுகளிலும் ஓய்விலும் அவனுக்கே உரியவனாகும்வரை உனக்கு ஜனங்கள் எந்த வகையிலும் உதவி செய்யாதபடி அவன் தடுத்து விடுகிறான். அதனால் அவனிடமிருந்து வருவதை யன்றி, வேறு எந்த நன்மையானதையும், எந்தத் தீயதையும் நீ அறியமாட்டாய். சிருஷ்டிகளிடமிருந்தும், உன் நப்ஸிடமிருந்தும், உன் இச்சைகளிடமிருந்தும், நோக்கத்திடமிருந்தும், அவனை யல்லாத சகலவற்றிடமிருந்தும் மறைந்தவனாய் நீ ஆகிவிடுவாய்.

அதன் பின் ஜனங்களின் கரங்கள் தயாளத்தோடு உன் பக்கம் திறக்கும்படி செய்யப்படும்; நாவுகள் உன் புகழுடன் அசையுமாறு விடுவிக்கப்படும். இம்மையிலும் சகல சமயங்களிலும் தயாளத்தால் நீ ஊட்டப்படுவாய்.

எனவே, வழுவிய ஒழுக்கமுடையவனாகாதே! உன்னை நோக்கும் அந்த ஒருவனை நோக்கு; உன்னைக் கவனிக்கும் அந்த ஒருவனிடம் கவனமாயிரு; உன்னிடம் அன்பு காட்டும் அந்த ஒருவனிடம் அன்பு காட்டு ; உன்னை அழைக்கும் அவனுக்குப் பதில் கொடு ; உன்னை விழுந்துவிடாத படி ஸ்திரமாக்கும், உன் அறியாமை இருளிலிருந்து உன்னை வெளியாக்கி, அழிந்துபடாது காப்பாற்றி, உன் மாசுகளைப் போக்கி, நாற்றத்திலிருந்து உன்னைச் சுத்தமாக்கி, உன் நாவிலிருந்தும், துர்க்கந்தம் வீசும் நப்ஸிடமிருந்தும், உன் கீழான இச்சைகளிலிருந்தும், தீமையை உண்டாக்கும் மீறமுடியாத உன் தீயகுணத்திடமிருந்தும் உன் ஷைத்தான்களான வழிதவறிய தோழர்களிடமிருந்தும், அல்லாஹ்வின் பாதையில் உன்னை வழிப்பறி செய்யும், உன் அறியாமையுடைய தோழர்களிடமிருந்தும் உன்னைக் காப்பாற்றும் ஒருவனிடம் உன் கரத்தை ஏந்து.

உன் மிருக இயல்புடன், சிருஷ்டிகளுடன், இச்சைகளுடன், கீழ்ப்படியாத தன்மையுடன், இம்மையுடன், மறுமையுடன், அல்லாஹ்வை யல்லாத மற்றுமுண்டானவற்றுடன் எத்தனை நாட்கள்தான் நீ இருந்து வருவாய்! சகலவற்றையும் சிருஷ்டித்தவனிடமிருந்து, யாவையும் ஜீவனுள்ள நிலைக்குக் கொண்டுவந்தவனிடமிருந்து, அந்தரங்கமும் பகிரங்கமுமானவனிடமிருந்து, சகலமும் மீளும், வெளிப்படும் ஸ்தானத்திலுள்ளவனிடமிருந்து, இதயமும் ஆத்மாவின் ஆறுதலும் தன்னுடையவையாய் இருப்பவனிடமிருந்து, சுமைகளை இறக்குபவனையும், நன்கொடைகளை வழங்குபவனையும், அருளனுக்கிரஹம் புரிபவனையும் உள்ளவனிடமிருந்து நீ ஏன் வெகுதொலைவிலுள்ளாய் ? (அறுபத்து இரண்டாம் மகாலா)

40

"எனக்காக ஒன்று ஓதுக்கப்பட்டிருப்பின் அது நிச்சயம் எனக்குக் கிடைக்குமே; எனக்காக ஓதுக்கப் படாத ஒன்றுக்காக நான் அல்லாஹ்விடம் எவ்வளவு தான் கேட்டாலும் அது வரப்போவதில்லையே! அதனால் நான் எதற்காகவும் அல்லாஹ்விடம் துஆக் கேட்க மாட் டேன்" என்று சொல்லாதே! இம்மை மறுமைக்குரிய, ஹலாலான, தீங்கற்ற, நல்லவைகளுக்காக நீ அல்லாஹ் விடம் துஆக் கேட்க வேண்டும். ஏனெனில், அல்லாஹ் தன்னிடமிருந்து கேட்கும்படி கட்டளையிட்டு வற்புறுத் தியுள்ளான். "என்னிடமே கேளுங்கள்; உங்கள் பிரார்த் தனைகளை நான் ஏற்பேன்" (40:60) என்றும், "அல்லாஹ் விடமிருந்து அவன் அருளனுக்கிரஹத்தைக் கேளுங் கள்" (4:32) என்றும் அவன் கூறியுள்ளான். "உங்கள் துஆ ஏற்கப்படும் என்று நீங்கள் முற்றும் நம்பிக்கையுட னிருப்பின் அல்லாஹ்விடம் துஆ கேளுங்கள்" என்றும் "உங்கள் உள்ளங்கைகளை அல்லாஹ்விடம் ஏந்தி துஆ இறைஞ்சுங்கள்" என்றும் நபி பெருமான் (ஸல்) அவர் களும் அருளியுள்ளார்கள். இதுபோன்று மற்றும் பல ஹதீஸ்களும் இருக்கின்றன. "நான் சில வஸ்துக்களை நாடி அவனிடம் துஆ கேட்டேன்; ஆனால், அவன் அவற்றை எனக்குத் தரவில்லை. அதனால் இனி நான் எதையும் அவனிடம் கேளேன்" என்று கூறாதே. உன் துஆவில் நீ விடாப்பிடியனாய் இருக்கவேண்டும். அப் போது, அவை உனக்கு விதிக்கப்பட்டவையாய் இருப் பின், நீ கேட்ட பின் அவற்றை உனக்கு அனுப்புவான்; அதனால் உன் ஈமான் அதிகமாகும்; உன் தௌஹீது உணர்வு பலப்படும்; ஜனங்களிடமிருந்து நீ எதையும் பெறாதிருக்க உதவும்; சகலவித நிலைமைகளிலேயும் அவ னிடமே நீ திரும்பவும், உன் தேவைகளெல்லாம் அவனா லேயே பூர்த்தி செய்யப்படும் என்ற நம்பிக்கை உறுதிப் படவும் இது துணை செய்யும்.

அப்படியின்றி நீ கேட்பவை உனக்கு விதிக்கப்படாத வைகளாய் இருப்பின், அவை பற்றி உனக்கு மனத் திருப்தியைத் தருவான்; உன் வறுமையிடையும் ஜல்லஜலாலஹு வான தன்னிடம், நீ மனப்பொருத்தம் காட்டச் செய்வான். நீ மிடிமையாலும் பிணியாலும் வாடினால், அவற்றைக் கொண்டும் நீ திருப்தியுறும்படியும் செய்வான். நீ கடன்பட்டவனாய் இருப்பின், கடன் கொடுத்தவன் மனத்தை உன் விஷயத்தில் கடுமையானதாய் இல்லாது செய்து, உன்னிடம் பரிவுகாட்டி, உன்னால் கொடுக்க முடியும் சமயம் அதைப் பெற்றுக்கொள்ள இசையுமாறோ, அல்லது நீ கொடுக்க வேண்டிய கடன் தொகையையே விட்டுக் கொடுக்குமாறோ, குறைக்குமாறோ செய்வான். அப்படியே இம்மையில் அது விட்டுக் கொடுக்கப்படவோ குறைக்கப்படவோ இல்லாது போயின், மறுமையில் உன் துஆவுக்குச் சம்மானமாகப் பெரும் வெகுமதியைத் தருவான்; ஏனெனில், அவன் தயாநிதியாகவும், தேவையற்றவனாகவும், கருணையாளனாகவும் இருக்கிறானன்றோ!

எனவே, துஆ இறைஞ்சுபவர்களை அவன் இம்மையிலும் மறுமையிலும் ஏமாற்றமடையச் செய்வதில்லை. ஆகையால், துஆவினால் விரைவிலோ காலதாமதமாகவோ நன்மை கிடைக்கவே செய்யும். கியாம நாளில் ஒரு மூமின் தன் விதிவசப்பட்டோலையில், தான் செய்யாத, செய்ததாக ஞாபகமில்லாத சில நற்செயல்களுக்கான நன்கொடைகள் பதிவாகியிருப்பதைக் காண்பான் என்றும், அப்போது, "அவற்றை நீ இனம் கண்டுபிடிக்க முடிகிறதா?" என்று அவனிடம் கேட்கப்படும் என்றும், "இவை எப்படி வந்தன என்று எனக்குத் தெரியாது" என்று அவன் கூறுவான் என்றும், அதற்குக் கீழ்க்கண்ட விதமாகப் பதில் கூறப்படும் என்றும் ஹதீஸில் வந்துள்ளது: "நிச்சயமாக உன் உலக வாழ்க்கையில் நீ செய்த

முறையீடுகளுக்கு இவை வெகுமானங்களாய் இருக்கும். அந்த முறையீடுகளை நீ அல்லாஹ் ஜல்லஜலாலஹுவிடம் செய்து கொண்டதில், அவனை நினைவுகூர்ந்தவனாய், தௌஹீதை மனத்தில் கொண்டவனாய், எதையும் அதற்குரிய ஸ்தானத்தில் வைத்தவனாய், யாருக்கும் உரியதைக் கொடுத்தவனாய், உன் நப்ஸுக்குச் சக்தியும், பலமும் இருப்பதாய்க் கூறாதவனாய், அகந்தையையும், டம்பத்தையும், வீண் பிரதாபத்தையும் ஒதுக்கியவனாய் இருந்திருக்கிறாய்; இப்படி இருப்பது சர்வ சக்தனான அல்லாஹ்வின் சந்நிதானத்தில் சம்மானம் அளிக்கப்படுவதற்குரிய நற்செயலாகக் கருதப்படுகிறது.'' (அறுபத்து ஆறாம் மகாலா)

41

உன் நப்ஸுடன் போராடி, அதை வென்று எதிர்ப்பெனும் வாளால் அதை நீ கொல்லும் ஒவ்வொரு தடவையிலும் அல்லாஹ் அதற்குப் புத்துயிர் தருகிறான்; அஃது உன்னோடு மீண்டும் மோதும்; உன்னிடமிருந்து இச்சைகள் பூர்த்தியாவதை வேட்கும்; பாவகரமான மற்றும் பிற சுகபோகங்களை அனுபவிக்குமாறு தூண்டும். அதனால் நீ மீண்டும் அதனோடு போராட நேரும். இவ்விதம் நீ போராடி வெற்றிகொள்ளும் போதெல்லாம், உன் கணக்கில் புதிய புதிய நன்கொடைகள் எழுதப்படும். ''நாம் ஒரு சிறிய ஜிஹாதிலிருந்தும் (அதாவது காபிர்களோடு போரிட்டதிலிருந்தும்) திரும்பி, ஒரு பெரிய ஜிஹாதில் இறங்கியுள்ளோம்'' என்று நம் பெருமான் (ஸல்) அவர்கள் சொல்லியிருப்பதன் கருத்து இதுதான். அதாவது அவர்கள் திரும்பியுள்ளதாகக் குறிப்பிட்டது இச்சைகளுக்கும், போகங்களுக்கும், நப்ஸ் பாவமான காரியங்களில் இழுப்பதற்கும் எதிராகப் போராடுவதைத் தான். ''மேலும் 'எகீன்' (எனும் மரணம்) உம்மை வந்தடையும்வரை உம் ரப்புக்குச் சேவை செய்வீராக!''

(15 : 99) என்று அல்லாஹ் அருளியுள்ள தன் அர்த்தமும் இதுவேயாம். அல்லாஹ் தன் ரஸூலைத் தனக்குச் சேவை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளான். இதன் கருத்து, மனிதன் தன் நப்ஸை எதிர்த்துச் சாடுதலேயாம். ஏனெனில், நப்ஸின் இயல்பு அவ்விதச் சேவையைச் செய்ய விடாது, அதற்கு நேர்எதிரிடையான காரியங்களைச் செய்யும்படி தூண்டுவதாகும். அல்லாஹ்வின் ரஸூலுக்குத் தேக இச்சைகள் எதுவும் இல்லையே, அப்படியிருக்க, அவர்களின் நப்ஸ், அல்லாஹ்வுக்குச் சேவை செய்வதைத் தடுப்பது எங்ஙனம் என வினவப்படலாம். அல்லாஹ் சொல்கிறான்: "அவர் தம் இஷ்டப்படி எதையும் பேசவில்லை; இஃது அவருக்கு 'வஹி'யில் இறக்கப்பட்டதேயன்றி வேறன்று" (53 : 3, 4) என்று. இவ்விஷயம் பற்றி ஊர்ஜிதம் செய்வதற்காகவே அல்லாஹ் தன் ரஸூலுக்கு இவ்வசனங்களை இறக்கியுள்ளான் என்று உன்னிடம் கூறப்படும். இவற்றின் மூலம் அவர்களுக்கிடப்பட்ட உத்தரவு, (மரணம் வரும்வரை அல்லாஹ்வுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற உத்தரவு) அவர்களுடைய உம்மத்துகள் அனைவருக்கும் பொருந்துமாறு வெளியிடப்பட்டுள்ளது. இதன் பின், அல்லாஹ் ஜல்ல ஜலாலஹு, தன் ரஸூலுக்கு அவர்களின் நப்ஸின்மீது அதிகாரத்தைக் கொடுத்தான்; அதன் மூலம் அது அவர்களுக்குத் தீங்கிழைக்காமலும், அதனுடன் போராடும் அளவுக்குச் சங்கடம் விளைவிக்காமலும் இருக்கச் செய்தான். இதுதான் அவர்களை அவர்கள் உம்மத்துக்களிலிருந்து பிரித்துக் காட்டுவதாகும். எனவே, ஒரு மூமினானவன் தன் மரண காலம் வரும்வரை இதுபோன்ற ஆத்மீகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவானாயின், தன் நப்ஸையும், இச்சைகளையும் குத்திய இரத்தம் தோய்ந்த வாளுடன் தன் ரப்பைச் சந்திப்பானாயின், கீழுள்ள வாக்கியத்தில் தான் விவரித்துள்ள சுவர்க்கத்தை அல்லாஹ் அவனுக்குக் கொடுப்பான்: "தன் ரப்பின்

முன் (விசாரணைக்காக) நிற்பதை(ப் பற்றி) அஞ்சி, தன் ஆத்மாவைக் கீழான இச்சைகளைவிட்டு விலக்கிக்கொண்டவனுக்கு நிச்சயமாக (ச் சுவன)த் தோட்டம் உறைவிடமாய் உள்ளது.'' (79 : 40, 41)

அவனை அத்தோட்டத்தில் நுழையச் செய்தபின் அதையே அவன் வாசஸ்தலமாக, இளைப்பாறுமிடமாக ஆக்கிவிடுவான்; இம்மை வாசஸ்தலங்களுக்கோ வேறு மாற்றிடங்களுக்கோ அனுப்பாதபடி அங்கேயே இருக்கச் செய்வான். சுகத்திற்கான சாதனங்களை நாளுக்கு நாள் நாழிகைக்கு நாழிகை அவனுக்குப் புதுப்பித்துக் கொடுப்பான். முடிவில்லாத முறையில் சகலவித ஆடை ஆபரணங்களையும் அளித்து வருவான்; அஃது அந்த அடியான் இம்மையில் தன் நப்ஸை எதிர்த்து நாளுக்கு நாள், நாழிகைக்கு நாழிகை புதுப் புதுப் போராட்டம் நடத்தியது போன்று புதியன புதியனவாய் இருக்கும்.

ஆனால் காபிரும், முனபிகும், பாவாத்மாவும், தங்கள் நப்ஸுடனும் இச்சைகளுடனும் போராடுவதைவிட்டு, ஷைத்தானுடன் தொடர்புகொண்டு, அவனைப்பின்பற்றிக் குபுர், ஷிர்க் ஆகிய பல்வேறு பாவ காரியங்களைச் செய்து இஸ்லாத்தைத் தழுவி நடக்காது, தௌபாச் செய்யாது மரணிப்பார்கள்; அல்லாஹ் அவர்களைக் காபிர்களுக்கான நெருப்பில்-''மனிதர்களும் கற்களும் விறகாகப் பயன்படும் (நரக) நெருப்பிலிருந்து காத்துக்கொள்ளுங்கள்; அது காபிர்களுக்காகத் தயாராக்கப்பட்டுள்ளது'' (2:24) என்று வருணிக்கப்பட்டுள்ள நெருப்பில் போடச் செய்வான். அவன் அவர்களை அந்நெருப்பில் நுழையச் செய்து, அதையே அவர்கள் புகலிடமாக்கியதும், அது அவர்கள் தோலையும் சதையையும் தீய்க்கும்; "அவர்கள் சருமங்கள் எவ்வளவு விரைவில் முற்றும் கருகித் தீய்ந்து போகின்றனவோ அவ்வளவு விரைவில் அவர்களுக்கு நாம் புதிய சருமங்களைக் கொடுப்போம்'' (4 : 56) என்று

அல்லாஹ் கூறியுள்ளது போல, அவர்களுக்குப் புதுத் தோலும் சதையும் தரப்படும். பாவஞ் செய்வதில் அவர்கள் தங்கள் நப்ஸுடனும், இச்சைகளுடனும், இம்மையில் ஒப்பந்தஞ் செய்துகொண்டிருந்ததாலேயே ஜல்லஜலாலஹுவான அவன் இவ்விதம் தண்டிக்கிறான். மீண்டும் மீண்டும் வேதனையும், தண்டனையும் அனுபவிக்கப்படுவதற்காக நரகவாசிகளின் தோலும் சதையும் புதுப்பிக்கப்படுகின்றன. ஆனால், சுவனவாசிகளின் சுகங்களோ மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு அவற்றில் அவர்கள் பூரணமாய்த் திருப்தியடையும்படி செய்யப்படுகின்றனர். அவர்கள் தங்கள் நப்ஸுடன் போராடி, இம்மையில் (அல்லாஹ்வின் சட்டத்துக்குப் பணிந்து) அதற்கு இயைய நடப்பதற்காகவே இந்நன்கொடையருளப்படுகிறது. "மறுமைக்கு இம்மையானது பயிற்சி நிலமாய் இருக்கிறது" என்ற நம் பெருமான் (ஸல்) அவர்களின் வாக்குக்கு இதுவே அர்த்தமாகும். (அறுபத்து ஏழாம் மகாலா)

42

கடந்த காலப் பாவங்களின் மன்னிப்பையும், நிகழ் கால வருங்காலப் பாவங்களிலிருந்து பாதுகாப்பையும், நல்ல முறையில் அவனுக்குக் கீழ்ப்படியவும், கட்டளைகளை நிறைவேற்றவும், ஹராமானவற்றை விலக்கவும், தக்தீரின் கசப்புக் குறித்து மனப்பொருத்தங் காட்டவும், துயரங்களின் கடுமையின் முன் ஸபுருடனிருக்கவும், பெருத்த செல்வங்களும், நன்கொடைகளும் இருக்கையில் நன்றி செலுத்தவும், கடைசியாக நல் மரணமடைந்து நபிமார்கள், ஸித்தீகீன்கள், ஷுஹதாக்களின் கூட்டத்தில் சேரவும் சக்தியை இறப்பதையன்றி அல்லாஹ்விடம் வேறு எதையும் கேளாதே! வறுமையையும் துயரத்தையும் அகற்றவேண்டும் என்றோ, செல்வம் பெருகிச் சுகமுண்டாக வேண்டும் என்றோ கேளாதே; அவன்

ஒதுக்கியுள்ளது குறித்து மகிழ்ச்சியடையும் மனப்பாங்கைக் கேள்; அவன் உன்னை வைத்துள்ள நிலையிலிருந்து அதற்கு மாற்றமான நல்ல நிலையில் வைக்கும் காலம் வரும்வரை அவன் பாதுகாப்பை அருளுமாறு கேள். ஏனெனில், வறுமையிலா செல்வத்திலா, எதில் நன்மையிருக்கிறது என்று நீ அறியாய். இதுபற்றிய ஞானம் மறைவானதாய் அவனிடம் உள்ளது. அந்த ஞானம் அவனுக்கேயுரியது. ஹஜ்ரத் உமர் இப்னு கத்தாப் (ரலி) அவர்கள் மூலம் வந்துள்ள ஹதீஸ் ஒன்றில், "நாளின் உதயம் எப்படி ஆரம்பிக்கிறது-அது நான் வெறுப்பதைக் கொண்டுவருகிறதா, விரும்புவதைக் கொண்டுவருகிறதா என்பது பற்றி எனக்கு அக்கறையே இல்லை; காரணம் அவற்றில் எதனால் நன்மை யுண்டாகும் என்று நான் அறியேன்" என்று நம் பெருமான் (ஸல்) அவர்களே கூறியுள்ளதாகக் காணப்படுகிறது. அவர்கள் இவ்விதங் கூறக் காரணம் அல்லாஹ்வின் ஏற்பாட்டுடன் அவர்கள் பூரணப் பொருத்தமும், அவன் கட்டளையுடன் பூரணத் திருப்தியும் கொண்டிருந்ததேயாகும். அல்லாஹ் சொல்கிறான்: "போரிடுவது உங்களுக்கு வெறுப்பானதாய் இருப்பினும், அஃது உங்கள்மீது கடமையானதாக்கப் பட்டுள்ளது. உங்களுக்கு மிகவும் நன்மையான ஒன்றை நீங்கள் வெறுக்கவும், உங்களுக்குத் தீமையான ஒன்றை நீங்கள் விரும்பவும் கூடுமல்லவா!" 2: 216). எது நல்லது, எது கெட்டது என்பதை அல்லாஹ் அறிவான்; நீ அறியமாட்டாய்.

உன் இச்சை மறைந்து, உன் நப்ஸ் உடைந்து, பணிவுபட்டு அடக்கப்படும்வரை இவ்விதமே நடந்துவா! பின்னர் உன் நோக்கமும், விருப்பங்களும் சகல ஜீவிதமும் உன் இதயத்தை விட்டகலும்; அங்கே அல்லாஹ்வைத் தவிர வேறு எதுவும் தங்கியிராது. அப்போது அல்லாஹ்வின் அன்பால் உன் இதயம் நிறையும்; அவனை அடைய

வேண்டும் என்ற,உன் நோக்கம் அந்தரங்க சுத்தியான தாகும். இதன்பின் அல்லாஹ்வின் கட்டளையாலும், இம்மை மறுமையின் 'சுகத்தை ஓரளவு அனுபவிக்க வேண்டும் என்ற உன் ஆசையாலும் உன் நோக்கம் உன் னிடம் திருப்பித் தரப்படும். இவற்றுக்காக நீயும் அல் லாஹ்விடம் வேண்டுவாய்; அவன் கட்டளைக்குக் கீழ்ப் படிந்தும் அவனோடிணங்கியும் இருந்தவாறு இவற்றைக் கேட்பாய். உனக்கு அவன் ஒரு நன்கொடை அளிப்பின் அதை ஏற்றுக் கொண்டு அவனுக்கு நன்றி செலுத்து வாய்; அவன் எதையாவது உனக்குத் தராது நிறுத்திக் கொண்டானென்றால், அதற்காக நீ மனந்தளராது,மனத் தில் எந்த மாற்றமும் கொள்ளாது, அதற்காக அவன்மீது குறையுங்கூறாது இருந்து வருவாய். ஏனெனில், நீ உன் இச்சை காரணமாகவும், நோக்கங் காரணமாகவும் அதை நாடவில்லை; உன் இதயம்தான் இது போன்றவற்றை விட்டுவிடுதலையானதாயிற்றே! இவை கிடைக்க வேண்டும் என்று நீ விரும்பியது, உன் முறையீட்டின் மூலம் கட்ட ளைக்குக் கீழ்ப்படிந்து வந்ததால்தான். உன்மீது ஸலாமத் ஏற்படுவதாக! (அறுபத்து ஒன்பதாம் மகாலா)

43

உன் செயல்களைப் பற்றி நீயே பெருமைப் பட்டுக் கொள்வதும், விஷயத்தில் உன்னை நீயே பாராட்டிக் கொள்வதும், அவற்றுக்காகப் பிரதிபலனை எதிர்பார்ப் பதும்,-அவை அல்லாஹ் தந்த சக்தியால் வந்தவை என் றும் அவன் உதவியாலும் பலத்தாலும், அனுக்கிரகத் தாலும் கிடைத்து வந்தவை என்றும் நீ சொல்லிக் கொள் ளும் நிலையில் இவ்விதம் பெருமை பாராட்டிக்கொள்வது நற்செயலாவது எப்படி? அது பாவத்தை விலக்கும் ஒரு செயலாயினுங்கூட, அதுவும் அவன் தரும் பாதுகாப் பின் மூலமும் உதவியின் மூலமுமே தானே சாத்தியமான

தாகிறது! அப்படியிருக்க அதற்காக நீ நன்றி தெரிவிக்காமலும், உனக்கு அது கிடைக்கும்படி அனுக்கிரஹித்ததற்கு விஸ்வாசங் காட்டாமலும் இருப்பதெப்படி? உன்னுடையதல்லாத ஒரு தீரச் செயலுக்காக, ஒரு தயாளச் செயலுக்காக, வள்ளன்மைக்காக நீ அகந்தை காட்டும் அறிவீனமும், அடிபணியாமையும் ஏன்? உன் எதிரியை ஒழிக்கும் சக்தியுடைய ஒரு வீரனின் உதவியின்றி நீ உன் எதிரியைத் தொலைக்க இயலாத நிலையில், சுத்த வீரனுடைய உதவியின்றேல், உன் எதிரிக்குப் பதிலாய் நீ வீழ்த்தவேபட்டிருப்பாய் என்றுள்ள நிலையில், உண்மையான தயாளமுள்ள, நம்பிக்கையான ஒருவன் உனக்கு உத்தரவாதமாக நிற்காத நிலையில் நீ உன் கையிலுள்ள முதலில் எதையுஞ் செலவிடமுடியாது, அவனுடைய உத்தரவாதத்தாலும் வாக்குறுதியாலுமே, நீ செலவு செய்வதற்குப் பகரமாய் உனக்குப் பொருள் கிட்டும் என்ற பிரமாணத்தாலேயே நீ தருமஞ் செய்ய முன்வரும் நிலையில், உன் செயல் குறித்து நீ பெருமைப் பட்டுக் கொள்வதெப்படி?

உதவியாளனுக்கு நன்றியும் துதியும் தெரிவித்து, அவனை ஓயாது துதித்து, உன் வாழ்க்கையின் சகல நிலைமைகளிலும் உன் சாதனைகள்-அவை தீமையானவையாயும், பாவகரமானவையாயும், குறை கூறக்கூடியவையாயும் இல்லாதிருந்தால் அவை-அவனாலேயே உண்டானவை என்று நீ கூறிவருவதே சாலவும் சிறந்தது. தீமையான சாதனைகளாய் இருப்பின் அவை உன் நப்ஸால் உண்டானவை என்று நீ உணர வேண்டும். உன் நப்ஸ் அநீதியானது, தவறிய ஒழுக்கமுடையது என்று நீ குறை கூறவேண்டும். ஏனெனில், சகல தீமைகளினதும் உறைவிடம் அதுவே; அதனால் அதன்மீது குறை சொல்வது மிகவும் பொருத்தமாகும். அல்லாஹ் ஜல்லஜலாலஹு உன் செயல்களையும் முயற்

சிகளையும் உண்டாக்கிவிடுகிறுனென்றால், முயற்சிகளைச் செய்பவன் நீதான்; அவன் அவற்றைச் சிருஷ்டிப்பவனே. "செயல் வரும்; அதிலிருந்து நீ தப்பமுடியாது" என்று மஃரிபாவின் ஞானத்தில் தேர்ந்த பெரியார்கள் சிலர் சொல்லியுள்ளதன் தாத்பரியம் இதுவேயாகும். "நற்செயல்கள் புரிந்து, அல்லாஹ்வுக்கு அருகிலாகுங்கள். உங்கள் இதயத்தை நேர்மையின்பால் திருப்புங்கள். ஒவ்வொருவருக்கும் அவர்கள் படைக்கப்பட்டது எதற்கோ, அஃது இலகுவானதாக்கப்பட்டுள்ளது" என்று நம் பெருமானுர் (ஸல்) அவர்கள் அருளியுள்ளதன் பொருளும் இதுவேதான். (எழுபதாம் மகாலா)

44

நீ நாடுபவன், அல்லது நாடப்படுபவன் ஆகிய இரண்டில் ஒன்ருய் இருக்கவேண்டும். நீ நாடுபவன் அல்லது முரீது ஆயின், உன்மீது சுமை ஏற்றப்படும்; கனமான சுமையை நீ சுமந்தே தீரவேண்டும். காரணம், நீ நாடுபவன்; நாடுபவன் தன் லக்ஷியத்தை எய்தும் வரை, தன் அன்பானவனை, தன் குறிக்கோளை அடையும் வரை பாடுபட்டேயாக வேண்டும். உன் மீதுள்ள சுமை இறக்கப்படும்வரை, துயரங்கள் உன்னை விட்டு அகற்றப்படும்வரை, உன் உயிர், சொத்து, சுகம், குழந்தை குட்டி சம்பந்தமாக உண்டாகும் கஷ்டங்களை ஏற்காது நீ ஓட முயலக்கூடாது. எனவே, நீ சகலவிதத் தீமைகளிலிருந்தும் அழுக்கு, அசிங்கம், தலைகுனிவு, பிணி, துயரம், ஜனங்களின் தேவை ஆகியவற்றிலிருந்தும் பாதுகாப்பானவனுக்கப்படுவாய். அல்லாஹ்வால் நேசிக்கப்படும் ஜனங்களின் கூட்டத்தில் சேர்க்கப்பட்டு, அவனுல் மிகவும் தயாளமாக ஊட்டப்படுவாய்.

ஆனுல், நீ நாடப்படுபவனுய் இருப்பின், அதே விதம் ஒரு துயரம் உண்டானுல் அல்லாஹ்வைக் குறை கூறுதே! உன் நிலைமை பற்றியும் ஸ்தானம் பற்றியும் கொஞ்சமும்

ஐயங்கொள்ளாதே! காரணம், அவன் உன்னைச் சோதனைக்கு உள்ளாக்கியுள்ளது நீ உயர்ந்த பெரியார்களின் நிலையை எய்த வேண்டும், நீ ஒரு அவ்லியாவின் அப்தாலின் ஸ்தானத்தை அடையவேண்டும் என்று அவன் விரும்புவதுதான். உன் நிலைமை இந்த அவ்லியா, அப்தால்களின் நிலைமையைவிடத் தாழ்ந்ததாய் இருக்க வேண்டும், கண்ணிய உடையும், ஒளியும், ஆசியும் அவர்கள் பெற்றிருப்பதைவிட வேறுவிதமானவையாய் இருக்கவேண்டும் என்று நீ விரும்புகிறாயா? உன் கீழான அந்தஸ்தில் நீ திருப்தியடைந்தாலும், ஹக்கு ஸுப்ஹானஹூ அதில் திருப்தியடைய மாட்டான். "மேலும் அல்லாஹ் அறிவானே யன்றி நீங்கள் அறியமாட்டீர்கள்" (2 : 232) என்று அவன் கூறியுள்ளானன்றோ! உனக்கு அவன் உயர்ந்த, ஒளி பொருந்திய ஸ்தானத்தைத் தேர்ந்தெடுத்துள்ளான்; நீயோ அது வேண்டாமென்கிறாய்!

உங்கள் கூற்றுப்படி, அன்பனுக்குத்தானே சோதனை உண்டாக வேண்டும். அப்படியிருக்க, சம்பூர்ணமாக்கப்பட்ட அடியான் சோதனைக்குள்ளாக்கப்படுகிறான் என்று சொல்வது சரியாவதெப்படி என்று நீ வினவலாம். நாம் முதலில் பொதுவான நியதியைக் கூறினோம்; பிறகு அதற்குச் சாத்தியமான விதிவிலக்கைக் குறிப்பிட்டோம். நம் பெருமான் (ஸல்) அவர்களே அன்பர்களில் தலையாயவர்கள் என்பதில் அபிப்பிராயபேத மிருக்க முடியாது; ஆனால், அதே சமயம் அதிகமும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதும் அவர்களாகத்தானே இருக்கிறார்கள்! "நான் அச்சமூட்டப்பட்டது போல யாரும் அச்சமூட்டப்படவில்லை; அதனால் நான் அல்லாஹ்வுக்கு அதிகமும் அஞ்சினேன். அல்லாஹ்வுக்காக நான் கஷ்டப்பட்ட அளவு யாரும் கஷ்டப்படும்படி செய்யப்படவில்லை. பிலாலின் கட்கத்தில் (அக்குளில்) வைக்கக்கூடக் காணாத அளவு உணவு இரவு பகல் கொண்ட முப்பது நாட்

களில் எனக்குக் கிடைத்ததுமுண்டு'' என்று நம் பெருமான் (ஸல்) அவர்களே கூறியுள்ளார்கள். "நபிமார்களான நாங்கள்தாம் அதிகமும் சோதிக்கப்படுகிறோம்; எங்களுக்கு அடுத்தபடியாக அடுத்தடுத்த தரஜாக்களில் உள்ளவர்கள் சோதிக்கப்படுகிறார்கள்'' என்றும், "அல்லாஹ்வின் ஞானத்தை எய்தியுள்ளதில் நான் மிகவும் சிறந்தவன்; உங்கள் யாவரினும் அவனுக்கு மிக மிக அதிகமாய் அஞ்சுபவனும் நான்தான்'' என்றும் அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்.

தனது சிறந்த அடியார்களை, தனக்கு மிகவும் பிரியமானவர்களை அல்லாஹ் அவ்வளவு சோதனை செய்வதும், அவர்களுக்கு அதிகமாக அச்சமூட்டுவதும் ஏன்? நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி இதன் நோக்கம் அவர்களை வானின் உயரிய பதவிகளை அடையுமாறு செய்வது தான். இம்மையில் செய்யப்படும் நன்மையான செயல்களின் மூலமன்றி, மறு உலக வாழ்க்கையின் தரம் உயர்த்தப்படமாட்டாது. இம்மையின் வாழ்க்கை, மறுமை வாழ்க்கைக்கான பயிர் செய்யும் நிலம்தான். நபிமார்களுடையவும், அவ்லியாக்களுடையவும் நற் செயல்கள் ஏவல், விலக்கல்களின்படி ஒழுகி, சோதனையிடையில் ஸபுருடனும், மனப் பொருத்தத்துடனும் மகிழ்வுடனும் இருப்பதுதான். அதன்பின் அச்சோதனை அவர்களை விட்டு அகற்றப்பட்டு, அல்லாஹ்வின் பாக்யங்களையும் அருளனுக்கிரஹங்களையும், பாதுகாப்பையும் அவர்கள் அனுபவிக்குமாறு செய்யப்படுகிறது. அவர்கள் தங்கள் ரப்பின் சந்நிதானத்தை நிரந்தரமாய் அடையும்வரை இவ்வாறு அருளப்படுகிறது. (எழுபத்து ஓராம் மகாலா)

45

தீனைச் சேர்ந்த ஜனங்களில், மார்க்க அவசியத்தாலோ, வெள்ளிக்கிழமை குத்பாத் தொழுகை போன்ற

அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்காகவோ, அல்லது தமக்கேற்பட்டுள்ள தேவை எதையாவது பூர்த்தி செய்து கொள்வதற்காகவோ கடைவீதி வழியாகச் செல்பவர்களில் பல வகையினருண்டு.

அவர்களில் ஒரு வகையினர் கடைவீதியில் செல்கையில் புலன் நுகர்ச்சிக்குத் தேவையான, சுகபோகத்துக்கு அவசியமான பல்வேறு பொருள்களை அங்கே கண்டதும், அவற்றால் கவரப்பட்டவர்களாய், அவற்றில் மனம் பதிந்து சோதனைக்கு உள்ளாகிறார்கள். அதனால் தம் அழிவுக்கும், மார்க்கத்தைப் புறக்கணிப்பதற்கும், அதன் கொள்கைகளைக் கைவிடுவதற்கும் ஆளாகிறார்கள்; அல்லாஹ் தன் கருணையாலும், பாதுகாக்கும் சக்தியாலும் அவர்களுக்கு ஆதரவு தந்து, இந்த மன இச்சைகளுக் கெதிராகப் போராடுவதில் பொறுமையை அளியாவிட்டால், அவர்கள் தம் இழிந்த இச்சைகளுக்கும், போக உணர்ச்சிக்கும் இடங்கொடுக்க நேர்ந்துவிடுகிறது.

அவர்களில் மற்றொரு வகையான ஜனங்கள் இப்பொருள்களைப் பார்த்ததும், அழிந்துபடக்கூடிய நிலைக்கு வந்துவிடுகிறார்கள். ஆனால், உடனே மார்க்கத்தின் சீர்தூக்கிப் பார்க்கும் சக்தியை மீண்டும் அடைந்தவர்களாய், முயற்சித்துத் தம்மை அடக்கிக்கொண்டு இப்பொருள்களை உதறித் தள்ளும் கசப்பை உண்கிறார்கள். தங்கள் நப்ஸ்மீதும், இயற்கையின்மீதும், இச்சைகள், போக உணர்ச்சிகளின்மீதும் கட்டுப்பாடு கொள்ள அல்லாஹ்வால் உதவி செய்யப்படும் மார்க்க வீரர்களாக அவர்கள் விளங்குகிறார்கள். மறுமையில் அவர்களுக்கு அல்லாஹ் ஏராளமான சன்மானங்களை அருளுகிறான்.

அது சம்பந்தமாக ஒரு ஹதீஸில், "ஒரு மூமின் தன் போக இச்சையால் ஆட்கொள்ளப்படவிருக்கும் சமயம் அல்லது அது தன்னை ஆட்கொண்டதும்,

அந்தப் போக இச்சையை உதறி எறிந்தால் அவன் பங்கில் எழுபது நன்மைகள் பதிவுசெய்யப்படும்'' என்று சொல்லப்பட்டுள்ளது. மற்றுமொரு ஹதீஸில், ''அவர்களில் சிலர் அல்லாஹ்வின் அருளனுக்கிரஹத்தாலும், பாக்கியத்தாலும், இம்மையின் செல்வங்களின் உருவில் இச்சுகபோகங்களைப் பெற்று அனுபவிக்கிறார்கள்; அவற்றுக்காக அல்லாஹ ஜல்லஜலாலுஹூவுக்கு நன்றி தெரிவிக்கிறார்கள்'' என்றும் கூறப்பட்டுள்ளது.

அவர்களில் மற்றொரு வகையினர் இந்தப் போகப் பொருள்களைப் பார்ப்பதோ, அவை இருப்பதாக அறிவதோ இல்லை. அல்லாஹ ஜல்லஜலாலுஹூவைத் தவிர மற்றச் சகலவற்றின் விஷயத்திலும் இவர்கள் கண் குருடாய் இருக்கிறது. அதனால், அவனைத் தவிர இவர்கள் வேறு எதையும் பார்ப்பதில்லை. அவனல்லாத எதையுங் கேட்காதபடி இவர்கள் செவிகளும் செவிடாயுள்ளன. அந்த அன்பனிடம் கொண்டுள்ள அக்கறையாலும், அவனை அடையவேண்டும் என்ற தூண்டுதலாலும், மற்ற எதையும் கவனிக்க அவர்களுக்கு வசதியே கிட்டாமல் போகிறது. எனவே, உலகினரின் கவனம் சென்றுள்ளவற்றின் பக்கம் இவர்கள் கவனம் செல்லவில்லை. இவர்கள் கடை வீதியில் செல்கையில் நீங்கள் என்ன காண்கிறீர்கள் என்று கேட்டுப் பாருங்கள். 'ஒன்றையும் காணவில்லையே!' என்றுதான் பதிலளிப்பார்கள். இவர்கள் சகல பொருள்களையும் பார்க்கவே செய்கிறார்கள். ஆனால், வெளிக் கண்களால்தான்; அகக் கண்களால் பார்க்கவில்லை. இவர்கள் ஆசையுடன் அவற்றைப் பார்ப்பதில்லை; தற்செயலாகவே பார்க்கின்றனர். பார்வையில் படுவது தோற்றமேயன்றி, உண்மையானதன்று; புறத் தோற்றமேயன்றி அகத் தோற்றமன்று. எனவே, அவர்கள் புறத்தே கடைத் தெருவிலுள்ளவற்றைக் கண்டாலும், மனத்தகத்தே தம் ரப்பையே காண்கிறார்கள். சில சமயங்களில்

அவன் புகழையும், சில சமயங்களில் அவன் கருணையையும் கண்டு கொண்டிருக்கிறார்கள்.

அவர்களில் இன்னொரு வகையினர் கடைத் தெருவில் நுழைந்ததுமே, அல்லாஹ் ஜல்லஜலாலுஹு-வின் கருணையால், அங்குள்ள ஜனங்களுக்காகத் தம் இதயத்தில் இரக்கம் நிறைந்துவிடக் காண்கின்றனர். இந்த ஜனங்களிடம் அவர்கள் கொள்ளும் இரக்கத்தால் இவர்களுக்குரிய, இவர்கள் முன்னுள்ள பொருள்களைக் காண இயலாதவர்களாகிவிடுகிறார்கள். எனவே, அவர்கள் கடைத் தெருவில் நுழைந்ததிலிருந்து, அதைவிட்டு வெளியாகும் வரை, அன்புடனும் பரிவுடனும், அல்லாஹ்வின் பாதுகாவலைத் தேடி துஆக் கேட்பவர்களாய், இந்த ஜனங்களுக்காக முறையிடுபவர்களாய் இருப்பார்கள். எனவே, இந்த ஜனங்களுக்கு நன்மை தேட, இவர்கள் நஷ்டவாளிகளாவதைத் தடுக்க அவர்கள் இதயம் உருகுகிறது; அல்லாஹ் தன் அனுக்கிரஹங்களிலும், பாக்கியங்களிலுமிருந்து, இவர்களுக்குக் கொடுத்துள்ளவற்றுக்காக அவனைப் புகழ்வதிலேயே அவர்கள் நாவு ஈடுபட்டிருக்கும். நீ விரும்பினால் அவர்களை ஞானியர்கள் என்றோ, அப்தால்கள் என்றோ, பக்திமான்கள் என்றோ, மறைவானதையும் தெளிவானதையும் காண்பவர்கள் என்றோ, அவன் அன்பர்கள், அவன் தன் அடியார்களின்மீது கவனஞ் செலுத்த நியமித்துள்ள தன் பிரதிநிதிகள் என்றோ, நேர்மையான வழிகாட்டப்படுவோர்கள் என்றோ, ஞான போதகர்கள் என்றோ அழைக்கலாம். இத்தகைய ஒருவர் இரும்பைப் பொன்னாக்கும் ரஸவாதக் கல் போன்றவர். இத்தகையவர்மீதும், அல்லாஹ்வை நோக்கித் தம் முகத்தைத் திருப்பியுள்ள யாவர்மீதும், மஃரிபாவின் உச்சத்தை எய்திவிட்டவர்கள்மீதும் அல்லாஹ்வின் பாக்கியங்களும், திருவுளச் சித்தமும் இறங்குமாக! (எழுபத்து இரண்டாம் மகாலா)

46

ஒருவனுடைய குறைகளையும் பொய்மையையும் அவனுடைய சிந்தனை, சொல், செயல்களைப்பற்றிய அபத்தக் கோரிக்கைகளையும் அல்லாஹ் சில சமயங்களில் தன் வலிமார்களுக்குத் தெரிவிக்கிறான். எனவே, வலியுல்லாஹ்வானவர் தன் ரப்பு விஷயத்திலும், அவன் ரஸூல், தீன் விஷயத்திலும் பொறுமையுடையவராக்கப்படுகிறார். ஆகவே, அக புற வியாதிகள் குடி கொண்டிருப்பவன், அவற்றினிடையிலும் தான் சுகமாய் இருப்பதாகக் கூறுவது போல, ஷிர்க்கான இணைவைக்கும் மனப்பான்மை மனத்தகத்தில் இருக்கையிலேயே இப்லீஸ் லஃனத்துல்லாஹ்வுக்குரிய மனப்பான்மையுடன், நரகத்திலும் கடையான நரக நெருப்பில் எறியப் படவிருக்கும், அங்கேயே சதாவும் தங்கும்படிவிடப்பட விருக்கும் முனாபிகின் மனப்பான்மையுடன் இருக்கையிலேயே தனக்குத் தௌஹீது உணர்வு உண்டாகியுள்ளது என்று ஒரு நபர் கூறுவானாயின், அதைக் கேட்டதும் வலியுல்லாஹ்வுக்கு அகத்திலும் புறத்திலும் கோபம் அதிகமாகிறது. எனவே, அந்த நபரின் குற்றங்களும், தீய செயல்களும், துடுக்கும், அவன் தன் பொய்ப் பிரதாபங்களும், ஸித்தீகுகளின் அந்தஸ்தைத் தான் அடைந்திருப்பதாகக் காட்டும் பாவனையும், தக்தீரில் தம்மையே அழித்துக் கொண்டவர்களோடு போட்டியிடுவது போன்ற அவன் போக்கும், தான் அல்லாஹ்வின் பூரணமாக்கப்பட்ட பொருள் போல அவன் நடிப்பதும் இந்த வலியுல்லாஹ்வின் வாய் வார்த்தைகளால் பகிரங்கப்படுத்தப் படுகின்றன.

சில சமயங்களில் அல்லாஹ்வின் புகழைப் பெறுவதில் கொண்ட பொறுமையாலும், சில சமயங்களில் இத்தகைய பொய்யனைப் பகிரங்கப்படுத்தி அவனைத் தண்டிக்கச் செய்வதற்காகவும் இவ்விதம் செய்யப்படுகிறது. மற்றும்

சில சமயங்களில் அல்லாஹ்ற ஜல்லஜலாலுஹூ⁻வின் தூண்டுதலாலும், அவன் நோக்கத்தாலும், பொய்யன்மீது அவன் கொண்டுள்ள ஆத்திரத்தின் வேகத்தாலும் இவ்விதம் செய்யப்படுகிறது. இதனால் சம்பந்தப்பட்டவன் மீது வலி புறங்கூறுகிறார் என்றும், "ஒரு வலி இப்படிச் செய்யலாமா, இது ஹறானமானதல்லவா, ஜனங்கள் அறியாத விஷயங்களைத் தன் முன் இருக்கும், அல்லது இல்லாதிருக்கும் ஒருவரைப் பற்றி அவர் சொல்லலாமா?" என்றும் யாராவது குறை கூறலாம். "அவைகளிலுள்ள பாவம், அவைகளிலுள்ள பயனைவிடப் பெரியதாகும்" (2:219) என்ற அல்லாஹ்றவின் வார்த்தைக்கு இணங்கிய விதமாகவே அவர் குறை கூறி இடித்துக் காட்டுகிறார். வெளிப்படையில் இக்குற்றச்சாட்டு, அல்லாஹ்றவுக்குக் கீழ்ப்படியாத ஒருவர்மீது சாட்டப்படுவதுதான்; ஆனால், இங்கோ, உண்மையில் அல்லாஹ்றவின் செயல் குறித்துக் குறைகூறப்படுவதால் அவன் கோபத்தைத் தூண்டிவிடுவதாய் இருக்கிறது. இத்தகைய ஆக்ஷேபனை செய்பவன் ஒன்றும் மார்க்கங் காணாது மயங்க நேரும். எனவே, இத்தகைய சந்தர்ப்பத்தில் அவன் (ஆக்ஷேபனை கூற நினைப்பவன்) மௌனமாய் இருந்து, அல்லாஹ்றவுக்குப் பணிவு காட்டி, இது ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதா என்று கண்டுபிடிக்க முயல வேண்டும்; அல்லாஹ்றவினுடையவும், அவன் வலியுடையவும்—பொய்யனின் உண்மை நிலையை பகிரங்கப்படுத்திய—செயலைக் கண்டிக்காமலிருக்க வேண்டும். இம்மனப்பான்மையை அவன் மேற்கொண்டால், அவனகத்திலுள்ள தீமை வேரறுபடும்; அறியாமையிலிருந்தும், மதிமயக்கத்திலிருந்தும் மீண்டு தௌபாச் செய்தவனாவான். எனவே, அது வலியின் சார்பாகச் செய்யப்படும் தாக்குதலாக ஆகிவிடும்; அகந்தையால் பணியாது, பொய் வாழ்வு நடாத்தியவனையும் அழிவிலிருந்து தடுத்து, அவனுக்குப் பயனுண்டாகும்படி செய்யும். அல்லாஹ்ற தான் விரும்புபவர்கள் நேர்பாதை

யடைய வழிகாட்டுபவனுய் இருக்கிறுன். (எழுபத்து மூன்றும் மகாலா)

47

அறிவுடைய ஒருவன் முதன் முதலில் நோட்டமிட வேண்டியது தன்னுடைய நப்ஸின் நிலைமையையும் அமைப்பையுமேயாகும். பிறகு சிருஷ்டிகளையும், புதிதாய் முளைப்பவற்றையும் தோன்றுபவற்றையும் நோட்டமிடவேண்டும். இவற்றின் மூலம் இவற்றின் மூலகர்த்தா சிருஷ்டியாளன் ஒருவன் இருக்கிறுன் என்பதை உணர வேண்டும். சிருஷ்டி சிருஷ்டித்தவனைக் குறிக்கிறதல்லவா! அதிகமான சக்தி அதைத் தருபவனைக் குறிக்கிறதல்லவா! சகலமும் அவன் மூலமாகவன்றே ஜீவித்திருக்கின்றன! "வானங்களிலும் பூமியிலும் உள்ள சகலவற்றையும் உங்களுக்கு அடங்கியவையாக அவன் படைத்துள்ளான்" என்ற திருமறை வாக்குக்கு இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் இது காரணமாகவே கீழ்க்கண்ட வியாக்கியானத்தைச் செய்துள்ளார்கள்: "சகல வஸ்துக்களிலும் அல்லாஹ்வின் ஸிபத்திலிருந்து ஒரு ஸிபத்து உள்ளது; ஒவ்வொரு பெயரும் அவன் பெயர்களில் ஒன்றின் அடையாளமாய் உள்ளது; எனவே, அகத்தே அவன் சக்தி மூலமும், புறத்தே அவன் ஞானம் மூலமும்- நிச்சயமாக நீங்கள் அவன் நாமங்களுக்கும், ஸிபத்துகளுக்கும், வேலைகளுக்கும் நடுவே இருக்கிறீர்கள். அவன் தன் ஸிபத்துகளில் வெளிப்படுபவனுயும், 'தாத்'தில் மறைந்தவனுயும் இருக்கிறுன். அவன் 'தாத்' அவன் ஸிபத்துகளில் மறைந்துள்ளது; அவன் ஸிபத்துகள் அவன் வேலைகளில் மறைந்துள்ளன. அவன் தன் ஞானத்தைத் தன் சித்தத்தின் மூலமும், தன் சித்தத்தைத் தன் அசைவுகளின் மூலமும் வெளிப்படுத்தியுள்ளான். அவன் தன் திறமையையும், வேலை நுட்பத்தையும் மறைவாக்கித் தன் வேலைத் திறமையைத் தன் சித்தத்தின் மூலம்

வெளிப்படச் செய்துள்ளான். எனவே, அவன் தன் மறைவான தன்மையுள் மறைந்து நிற்பவனாயும், தன் ஞானத்திலும், சக்தியிலும் வெளிப்படையானவனாயும் இருக்கிறான். "அவன் மிதாலுக்கு (உவமைக்கு) உவமை சொல்லக்கூடியதான எதுவுமில்லை; அவன்சகலவற்றையும் கேட்பவனும் பார்ப்பவனுமாய் இருக்கிறான்."

மஃரிபாவின் பல ரகசியங்களை இந்த விளக்கம் திண்ணமாகத் தெளிவாக்கிக் காட்டிவிட்டது. ஆத்ம ஞான விளக்குச் சுடர்விடும் இதயம் இல்லாதவனுக்கு இது விளங்காது. இந்த மகானுக்கு (இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களுக்கு) இப்பேறு கிடைத்த காரணம், நம் பெருமான் (ஸல்) அவர்களின் பாவமற்ற திருக் கரங்கள் அவர்களுக்காக ஏந்தப் பட்டு மிகவும் உருக்கமாக, "அல்லாஹ்வே, இவருக்குத் தீனின் ஞானத்தைக் கொடு; அதன் தாத்பரியத்தைப் போதனை செய்!" என்று துஆ இறைஞ்சியதுதான்.

எல்லாம் வல்ல ஜல்லஜலாலுஹூ இத்தகையவர்கள் மீது சொரிந்த அதே பாக்கியத்தை நம்மீதும் சொரிந்தருள்வானாக! கியாம நாளிலே அவர்களின் புனிதத் தன்மையுடன் நம்மையும் அவர்கள் கூட்டத்தில் சேர்த்தருள்வானாக! ஆமீன். (எழுபத்து நான்காம் மகாலா)

புதூஹுல் கைப் முடிவுற்றது

பத்ஹுர் ரப்பானி

முக்கிய விபரம்

ஹஜ்ரத் கௌதுல் அஃலம் (ரலி) அவர்கள், தங்கள் பிரசங்கங்களைத் தொடங்குமுன் முதலில் அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் (சர்வ புகழும் சர்வ லோக ரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே) என்று மூன்று தடவை மொழிவார்கள். ஒவ்வொரு தடவை மொழிந்த பின்னும் ஒரு நிமிஷம் மௌனமாய் இருப்பார்கள். பிறகு அல்லாஹ் வின் அஸ்மாக்களில் சிலவற்றையும், ஷஹாதத்துக் கலிமாவையும் கூறி, நாயகம் (ஸல்) அவர்கள்மீது ஸலவாத்து ஓதி, சில துஆக்களையும் ஓதுவார்கள். பின்பு கீழ்க்கண்ட கருத்தைப் பொதிந்த துஆவையும் ஓதிவரு வார்கள் :

"இறைவனே, பெருமானார் முஹம்மது (ஸல்) அவர் கள்மீதும், அவர்களின் கிளையார்மீதும் நீ ஸலவாத்துச் சொல்லியருள். இமாமையும், உம்மத்தையும், அதிபதியை யும், பிரஜைகளையும் நீ பாதுகாத்தருள். அவர்கள் மத்தி யிலே நல்ல காரியங்களில் ஐக்கிய மனோபாவத்தை அமைத் தருள். ஒருவருக்கொருவர் செய்யும் பொல்லாங்குகளை அகற்றியருள். ஆண்டவனே, எங்கள் சர்வ அந்தரங்கங் களையும் நீயே மிகவும் அறிந்தவன். ஆகையால், அவற்றை நீயே நல்லவையாக்கியருள். எங்கள் தேவைகளை நீயே நன்கு தெரிந்தவன். ஆகையால், அவைகளை நீயே நிறை வேற்றித் தந்தருள். எங்கள் பாவதோஷங்களை யெல் லாம் நீ நன்கு உணர்ந்திருக்கிறாய். எனவே, அவற்றை யெல்லாம் நீ மன்னித்தருள். எங்கள் குற்றங் குறைகளை நீ மிகவும் விளங்கியிருக்கிறாய். எனவே, அவற்றை யெல் லாம் மறைத்து உதவியருள். நீ விலக்கியவைகளில் நாங்கள் பிரவேசித்திடாமலும், ஏவியவைகளில் நாங்கள் அலட்சியம் செய்து இழந்திடாமலும் கண்காணித்தருள். உன் திக்று தியானத்தை நாங்கள் ஒருக்காலும் மறக்

காதபடி அருள்செய். உன் ஆக்ஞைபற்றி அச்சமுடையவர்களாக எங்களை யிருக்கச் செய். எங்களை உன்னல்லாதவர்களிடம் தேவைப்படும்படியாய் ஆக்கிவிடாதே. உன்னை மறந்தவர்களின் கூட்டத்தில் எங்களைச் சேர்த்திடாதே.

"இறைவனே, எங்களுக்கு நேர்வழியை உதிப்பாக்கித் தா! எங்கள் மனத் தீங்குகளை விட்டு எங்களை ஈடேற்றிவை! உன்னல்லாதவர்களை யெல்லாம் விட்டு விலகி, உன்னளவிலேயே நாங்கள் ஈடுபட்டிருக்கும்படி செய். உன் தொடர்பை விட்டு எங்களைத் துண்டிக்கும் நாச சக்திகள் யாவையும் எங்களை விட்டும் இல்லாமலாக்கிவிடு. உன்னையே தியானிப்பதையும், உனக்கே நன்றி செலுத்துவதையும், உன்னை வழிபடும் இபாதத்தில் சிறந்த வணக்கத்தையும் எங்களுக்கு உதிப்பாக்கித் தந்தருள்!"

இவ்வாறான துஆவை ஓதிய பிறகு வலது பக்கம் திரும்பிக்கொண்டு "லா இலா ஹ-இல்லல்லா ஹு-மாஷா அல்லா ஹு-லா-ஹவ்ல-வலா - குவ்வத-லஹு-இல்லா-பில்லா ஹில்-அலீயில்-அழீம்" (அல்லா ஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை, அல்லா ஹ் நாடியது நடக்கும், உன்னதமும் வலுப்பமும் மிக்க அல்லா ஹ்வைக் கொண்டல்லாமல் நமக்கு எவ்விதச் செயலாற்றுந் திறமையோ சக்தியோ கிடையாது) என்று மொழிவார்கள். பின்பு தங்கள் முன் பக்கம் நோக்கிக் கொண்டும், அதற்கப்பால் இடது பக்கம் திரும்பிக் கொண்டும் இவ்வாறே மொழிவார்கள்.

அதற்கப்பால், "எங்கள் சேமிப்புகளை இழக்கச் செய்துவிடாதே! எங்கள் மர்மங்களை வெளியாக்கி நிந்தனைக்காளாக்கிவிடாதே. எங்கள் தீய செயல்களைக் கொண்டு எங்களைக் குற்றஞ் சாட்டாதே. உன்னை மறந்த வாழ்வில் எங்களை உழலச் செய்யாதே. மருட்சியில் மதிமயங்கியிருப்பது கொண்டு எங்களைக் குற்றஞ் சாட்டாதே!" என்ற கருத்துள்ள பிரார்த்தனை புரிந்து,

"எங்கள் ரட்சகனே, நாங்கள் மறந்து விட்டாலும் அல்லது பிழை செய்துவிட்டாலும் அதற்காக எங்களை நீ குறை கூறாதே! எங்கள் ரட்சகனே, பொறுப்புச் சுமையை எங்களுக்கு முன்னுண்டானவர்களின்மீது நீ சுமத்தியதைப்போல் எங்கள்மீது சுமத்தி விடாதே. எங்கள் ரட்சகனே, எங்களால் தாங்கச் சக்தியில்லாததை எங்கள்மீது சுமத்தி விடாதே! எங்களை விட்டு எங்கள் பாவங்களைப் பொறுத்தருள். எங்கள் பாவங்களைப் பொறுத்தருள்! மேலும் எங்களுக்கு அனுக்கிரகம் புரிந்தருள்! நீயே எங்கள் எஜமானன். ஆகவே, அவிசுவாசிகளுக்குப் பாதகமாயும், எங்களுக்குச் சாதகமாயும் நல்லுதவி செய்!" என்ற திரு குர்ஆன் (2 : 286) வசனத்தையும் ஓதி முடித்துக்கொண்டு தங்கள் பிரசங்கத்தை நிகழ்த்த ஆரம்பிப்பார்கள்.

அவர்களின் பிரசங்கமெல்லாம் அல்லாஹ்வின் அருள் ஞான ஊற்றிலிருந்து மறைமுகமாகப் பொங்கி அவர்கள் திரு நாவு வழியே வழியும் ஞான அமுதாகவே இருக்கும். குறிப்பு எழுதித் தயாரித்தோ அல்லது மற்றவர்கள் பேசியதை அடிப்படையாக வைத்து அதைத் தழுவியோ ஹஜ்ரத் அவர்கள் பேசியதில்லை. சில சந்தர்ப்பங்களில் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸிலிருந்து ஒன்றையோ அல்லது ஞான மெய்யடியார்களான நாதாக்களின் தத்துவ ஞான மொழியிலிருந்து ஒன்றையோ பொதுவாக அருளன்பு பரக்கத்தை நாடி முதலில் பிரஸ்தாபித்துக்கொண்டு பிறகு சொற்பொழிவைத் தொடர்ந்து நிகழ்த்துவதுண்டு.

ஐந்தாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 535, ஷவ்வால் பிறை 12 மாலை நேரம் மதரஸா மஃமூராவில் ஹஜ்ரத் அவர்கள் நிகழ்த்தியது:

அன்பர்களே, மெய்ப்பொருளாகிய இறைவனுக்கு அடிபணிவது என்பது எங்குச் சென்றுவிட்டது? உண்மையிலேயே அடிபணிந்து வரும் அடியார்களாவதைக் கொண்டு உங்களின் சகல காரியங்களிலும் பூரணமானவர்களாகுங்கள். எஜமானனிடமிருந்து ஓடி வந்திருக்கும் அடியார்களாயுள்ளீர்கள். மீண்டும் அவனளவில் செல்வீர்களாக! அவன் முன் பணிவீர்களாக! அவன் நாட்டம், விதிப்படி நடப்பவற்றில் பொறுமையையும், திருப்தியையும் கைக்கொண்டு ஒழுக்கத்துடன் இருப்பீர்களாக! இவ்வாறு உங்கள் கடனை நீங்கள் பூர்த்தி செய்தால், "அடியான்" என்ற முறையில் எஜமான் பாலுள்ள கடமையும் பூர்த்தியாகும்; அவன் புறத்திலிருந்து பூர்த்தியும் சம்பூர்ணமும் வந்து சேரும். "அல்லாஹ் தன் அடியானுக்குப் போதியவனன்றோ?" என்று அல்லாஹ் திரு குர்ஆனில் அருளியுள்ளான். அடிமை யென்ற முறையில் உங்கள் கடமைகள் சீர்பெறும்போது அவன் உங்களை நேசிப்பான்; அவன் அன்பு உங்கள் உள்ளத்தில் வலுக்குமாறு செய்தருள்வான். தன் அன்பனாக்கி, பிறரைத் தேடாது தன் சமீபத்துவத்துக்குரியவனாக்கிவிடுவான். அந் நிலைமையில் நீங்கள் எச் சந்தர்ப்பமாயினும் மனத் திருப்தி பெற்றவர்களாகிவிடுவீர்கள். அகன்ற இப் பிரபஞ்ச வாழ்வை உங்களுக்கு அவன் குறுக்கினாலும், வாயில்கள் விசாலமானவையாய் இருப்பினும் அவற்றில் நுழைய முடியாதபடி உங்களுக்கு அவை அடைபட்டு விடினும், நீங்கள் பிறரின் வாயில்களின் பக்கம் செல்லமாட்டீர்கள்; பிறரிடமிருந்து ஒன்றைப் பெற நாடவு மாட்டீர்கள்; மூஸா நபி (அலை) அவர்களைப் பற்றித் திரு குர்ஆனில்

கூறப்பட்டபடி - "முன்னரே பிறர் பாலே அருந்துவதை அவர்மீது ஹராமாக்கி யிருந்தோம்" எனக் கூறப் பட்டுள்ளபடி - இறைவனல்லாத பிற வஸ்துக்களினின்று எதுவும் அடையாதவர்களாகி விடுவீர்கள்.

நமது இறைவனே சகல வஸ்துக்களின்மீதும் சாட்சியாய் இருக்கிறான்; எங்கும் இருக்கிறான்; சர்வ வஸ்துக்களையும் கண்காணிப்பவனாயும் இருக்கிறான். எல்லா வஸ்துக்களின் சமீபத்திலும் இருக்கிறான். அத்தகைய ரப்பை விட்டு நீங்கள் தேவையற்றவர்களாய் யிருக்க முடியுமா? அப்படியிருக்கையில் (மனத்தால்) அறிந்தபின் (செய்கையில்) அவனை மறுப்பதெப்படி? அல்லாஹ்வை அறிந்த பிறகும் அவனுக்கு எதிரிடை செய்யும் உங்களின் நிலைமை கைசேதத்துக் குரியதேயாகும். அவனிடமிருந்து திரும்பாதீர்கள்; ஏனெனில், அதுகொண்டு சர்வ நன்மையையும் இழந்தவர்களாவீர்கள். அவனுடன் பொறுமையுடன் இருங்கள்; அவனை விட்டுப் பொறுமையில்லாதவர்களாய் இருக்கவேண்டாம். எவர்கள் 'ஸாபிர்' களாக (ப்பொறுமையாளர்களாக) இருக்கிறார்களோ அவர்களே "காதிர்"கள் (சக்தியுள்ளவர்கள்) ஆவார்களென்பது உங்களுக்குத் தெரியாதா? அல்லாஹுத்த ஆலா கூறுகிறான்: "ஈமான் உள்ளவர்களே, பொறுமையுடனிருங்கள்! பொறுமையாளர்களாகுங்கள்! உறுதியாக நில்லுங்கள் ! அல்லாஹ்வின்பால் பயபக்தியுடனிருங்கள்" என்று. ஏன் ? சித்தி பெறுவதற்காக. பொறுமையைப் பற்றித் திரு குர்ஆனில் பல அழகிய வாக்கியங்கள் இருக்கின்றன. அவைகளெல்லாம் பொறுமையில் எத்தகைய நன்மைகள், பேறுகள், இம்மை மறுமையின் இன்பங்கள் இருக்கின்றன வென்பதை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. ஆகையால், பொறுமையைப் பற்றிக்கொண்டால், மார்க்கத்தினதும் உலகத்தினதும் நன்மைகளை அடைவீர்கள்.

சமாதிகளைத் தரிசனம் (ஜியாரத்) செய்யுமாறும், நல்லோர்களின் சகவாசம் பெறுமாறும், நன்மையான கருமங்களில் ஈடுபடுமாறும் உங்களுக்குப் போதிக்கிறேன். அதன்மூலம் உங்களுடைய சர்வ காரியமும் சீர்பெறும். போதனை செய்யப்படுவதை நம்பாமல் கெட்டவர்கள் போலும், கேட்டதை அனுஷ்டிக்காமல் கெட்டவர்கள் போலும் ஆகி விடாதீர்கள். உங்களுடைய (தீன்) மார்க்கச் சீர் தவறிப்போவது நான்கு காரணங்களாலேயாகும். முதலாவது, நீங்கள் அறிந்திருப்பதை அனுஷ்டிக்காமலிருப்பது. இரண்டாவது, நீங்கள் அறியாதிருப்பனவற்றின் அனுஷ்டானத்தில் ஈடுபடுவது. மூன்றாவது, அறியாததை அறிய முயற்சிக்காது அறிவீனர்களாயிருப்பது. நான்காவது, மற்றவர் அறியாததை அறிய முற்படுவதைத் தடுப்பது.

சமூகத்தவர்களே, நீங்கள் பிரசங்கங்கள் கேட்கச் செல்லும்போது காதுக்கினிமை தேடிச் செல்பவர்களாகி விட்டீர்கள்; உங்கள் குறைகளைத் திருத்த வழியைத் தேடுபவர்களாகச் செல்வதைக் காணோம். பிரசங்கங்களிலுள்ள போதனைகளைக் கடைப்பிடிப்பதற்குப் பதிலாக அதில் ஏதேனும் குறை யிருக்கிறதா என்று பார்க்க ஆரம்பித்துவிட்டீர்கள். பிரசங்கிகளின் பேச்சைப் பற்றிப் புரளி பண்ணவும், சிரிக்கவும், கேலி செய்யவும் ஆரம்பித்துவிட்டீர்கள். அல்லாஹ்வின்பால் நீங்கள் செய்யும் காரியங்கள் உங்களுடைய உள்ளத்தை 'ஆபத்து'க்களின் வழியே இழுத்துச் செல்வனவாகி விட்டன. (தவ்பா) மீட்சி பெற்றவர்களாய், சத்தியத்தின் பகைவர்கள் போலாகாது கேட்பது கொண்டு பயனடைய முயலுங்கள்.

அன்பர்களே, பழக்கங்களுக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கிறீர்கள். விதித்திருப்பவற்றை அவன் புறத்திலிருந்து கேட்பதும், காரணப் பொருளைக் கொண்டு மட்டும் நின்று

விடுவதும் உங்களைக் கட்டுப்படுத்தி யிருக்கின்றன. காரணப் பொருட்களைச் சிருஷ்டித்த மெய்ப்பொருளையும் அவன்பால் இருக்க வேண்டிய (தவக்கல்) நம்பிக்கையையும் இழந்து கிடக்கிறீர்கள்.

தாமதமின்றி அனுஷ்டானத்துக்குத் திரும்புங்கள்; அனுஷ்டானத்தில் களங்கமற்ற நிர்ணயத்துடன் ஈடுபடுங்கள். ஆண்டவனருளியிருக்கிறான், "(எனக்கு) அடிபணிந்து சேவை செய்வதற்காகவே யன்றி நான் ஜின்னையும் மனுவையும் சிருஷ்டிக்கவில்லை" என்று. சிருஷ்டிக்கப்பட்டது விளையாட்டுக்காகவன்று; உண்ணவும் அருந்தவும், உறங்கவும், மணமுடிக்கவும் மட்டும் சிருஷ்டிக்கப்பட்டதில்லை. மறதியில் மயங்கிக் கிடப்பவர்களே, விழியுங்கள்! உங்கள் இதயம் அவன்பால் ஓரடி எடுத்து வைத்தால் அவன் உங்கள் பக்கம் எத்தனையோ அடிகள் நெருங்குபவனாய் இருக்கிறான். அடியானைக் கொண்டு ஒரு காரியம் செய்விக்க நாடினால் அதற்குரிய சாதனங்களையும் திரட்டிக் கொடுத்துவிடுகிறான். இவ்விஷயமெல்லாம் உட்கருத்துக்களைப் பொருத்ததேயன்றி, வெளித்தோற்றத்தைப் பொருத்ததன்று. இவ் விஷயம் அடியார்களிடம் ஏற்பட்டுவிடில் இம்மை, மறுமை, மற்றும் அல்லாஹ் அல்லாத சகலத்தையும் விட்டுத் தேவையற்றவர்களாகி விடுகிறார்கள். அப்போதுதான் அவர்களுக்கு ஆரோக்கியம் வரும்; (தெய்வ) சமீபத்துவமும் வரும்; அதிகாரமும் ஆட்சியும் பரிபலானமும் வரும். அப்போது தான் அவர்கள் முயற்சி சிறிதேனும் பயன் மிகமிகப் பெரிதாகவும், துளி போன்றது சமுத்திரமாகவும், சந்திரனைப்போன்ற காரியம் சூரியனைப் போன்றதாகவும், சொற்ப அனுஷ்டானம் பெரிதாகவும், அவர்கள் இல்லாதிருப்பதே இருப்பதாகவும், அவர்கள் அழிந்திருப்பதே நித்ய வாழ்வாகவும், அவர்களின் அசைவே காரிய விருத்தியாகவும் ஆகிவிடும். அவர்களுடைய விருக்ஷம் உயர்ந்து

அர்ஷு (தெய்வ சிம்மாசனம்) அளவு வானமளாவி விடுகிறது; அந்த விருக்ஷத்தின் வேர் பாதாளம்வரை பாய்கிறது. அதன் கிளைகள் இம்மையிலும் மறுமை யிலும் படர்ந்து நிழல் கொடுக்கின்றன. அதிகாரமும் அறிவுமே அக்கிளைகளாகும். உலகம் அவர்கள்முன் மோதிரத்தைப் போல் சொற்பமான விஷயமாகி விடு கிறது. உலகம் அவர்களை அடிமைப்படுத்தவும் முடியாது. மறுமையாலும் அவர்கள் கட்டுப்படாதவர்களாகி விடு வார்கள். எவ்வரசனும் சரி, அவனது வேலையாளும் சரி, அவர்களுக்கரசனாகவோ எஜமானாகவோ ஆக முடி யாது. எக்காவலாளும் அவர்களைத் தடுக்க முடியாது. எவரும் அவர்களைப் பிடிக்கவும் முடியாது. எத்தீங்கும் அவர்களைப் பாதிக்கவும் முடியாது. இத்தகைய நிலையை அடைந்த பின்னரே அடியார்கள் சிருஷ்டிகளுடனிருந்து அவர்கள் கரங்களைப் பிடித்துக் கரை சேர்த்து நல்லோர் களாக்கக்கூடியவர்களாகிறார்கள். அத்தகைய அடியார் களைக் கொண்டு நன்மையை யுண்டாக்க அல்லாஹ் நாடும் போது, அத்தகைய அடியார்களை சிருஷ்டிகளின் வழி காட்டிகளாகவும், அவர்களின் வைத்தியர்களாகவும், அவர்களின் ஞானபோதகர்களாகவும், அவர்களின் பால் (இறைவனது நாட்டத்தை) மொழிபெயர்ப்பவர்களாக வும், மக்களை நீந்தச் செய்பவர்களாகவும், அவர்களுடைய சர்வ காரியங்களையும் சீர்பெறச் செய்பவர்களாகவும், அவர்களின் தீபங்களாகவும், அவர்களுக்கிடையே சூரியர் களாகவும் ஆக்கிவிடுகிறான். இத்தகைய நல்லடியார்களை அவன் நாடினால் இவ்விதம் ஆக்கி அருளிச்செய்கிறான்; இன்றேல் அவர்களைத் தன்னளவில் மறைத்து வைக் கிறான்; தன்னைத் தவிர மற்றவர் கண்ணுக்குப் புலப்படா திருக்கச் செய்துவிடுகிறான். (நல்லடியார்கள் பலர் பகிரங்கமாகாதிருப்பதன் அகமியம் இதுதான்.)

இவ்வாறு அடியார்களில் பொறுக்கி எடுக்கப்படும் சிலரையே பூரணப் பாதுகாப்பும் பூர்த்தியான நிம்மதியும்

அளித்துச் சிருஷ்டிகளிடம் அனுப்பி வைக்கிறான்; வழி காட்டவும் மக்களைச் சீர்திருத்தவும் அவர்களுக்குச் சந்தர்ப்பமும் வசதியும் அளிக்கிறான்.

இம்மையைத் துறந்தவர்களின் சோதனை மறுமையைக் கொண்டு ஏற்படுகிறது; இம்மை மறுமை இரண்டையும் துறந்தவர்களின் சோதனை இறைவனின் பக்கத்திலிருந்து ஏற்படுவதாய் இருக்கிறது.

உங்களின் மறதியை என்னென்பேன்! மரணம் உங்களை அடுக்காதென்றும், கியாம நாளில் எழுப்பப்பட மாட்டீர்களென்றும், ஸிராத் என்ற பாலத்தைக் கடக்க நேரிடாதென்றுமா நினைத்துக்கொண்டு திரிகிறீர்கள்? உங்கள் நிலைமைதானென்ன? இந்நிலைமையில் நீங்கள் இஸ்லாம் உள்ளவர்களென்றும் ஈமான் உள்ளவர்களென்றும் பறைசாற்றிக்கொண்டுமிருக்கிறீர்கள்! திருகுர்ஆனும் அறிவும் அவற்றின்படி ஒழுகாவிடில் உங்களுக்கெதிரிடையான சாட்சிகளாக நிற்குமன்றோ? அறிஞர்களின் அருகில் வந்து அவர்கள் போதித்தபடி ஒழுகாதிருப்பது, அல்லாஹ்வின் ரஸூல் (ஸல்) அவர்களிடம் சென்று அவர்கள் உபதேசித்தபடி ஒழுகாதிருப்பது போன்ற அத்துணை பெரும் பாவமாகுமென்பதை உணருங்கள்.

கியாம நாளன்றோ, சிருஷ்டிகள் அனைத்தும் பீதியடையுமாறு மெய்ப்பொருளாகிய அல்லாஹ்வின் சத்தியமயமும் சுடர்மயமும் பெருமையும் பிரகாசித்துக் கொண்டிருக்கும். உலகத்தின் அரசர்கள் தொலைவார்கள்; ஏக நாயனாகிய அவன் ஒருவனின் அரசே நிலைத்து நிற்கும். சகலரும் அவன் பக்கமே மீண்டும் செல்வார்கள். அல்லாஹ்வின் அடியார்களின் அதிகாரமும் பதவியும் வெளியாகிவிடும்; அவர்கள் அடைந்துள்ள சங்கையும் செல்வமும் தெய்வ அங்கீகாரமும் அன்றே நன்கு

புலனாகும். அன்று மட்டுமன்று; இன்றும் அல்லாஹ்வின் அன்பர்களே உலகப் பிரஜைகளினதும் உலகத்தினதும் காரியஸ்தர்களாகவும், உலகத்தை நிலை பெறச் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களை முன்னிட்டே உலகமும் நிலைபெற்று நிற்கிறது. அவர்கள் தம் தோற்றத்தால் சிருஷ்டிகளை ஆளுபவர்களாயும் மெய்ப் பொருளின் பிரதிநிதிகளாயும் இருப்பதில்லை; அகமியத்திலேயே அவ்விதமிருக்கின்றனர். இன்று அகமியப் பொருளாய் இருப்பது, நாளை (இறுதி நாளன்று) தோற்றத்திலுந் தெரியும் பகிரங்கப் பொருளாகிவிடும்.

மனோதீரத்தில் மூன்று படித்தரங்களுண்டென்பதையும் நீங்கள் அறியவேண்டும். காபிர்களுடன் போர் புரிபவர்களுடைய மனோதீரம், அவர்களுடன் மோதுவதிலும் போரில் ஸ்திரமாக நிற்பதிலுமே இருக்கிறது. நேர்மையாளர் (ஸாலிஹீன்)களின் மனோதீரம் தங்களுடைய நப்ஸுடனும் இச்சைகளுடனும், பாசங்களுடனும், ஷைத்தான்களுடனும், மனித ஷைத்தான்களான தீயோர்களுடனும் மோதி, அம்மோதுதலில் ஸ்திரமாக நின்று எதிர்ப்பதிலேயே இருக்கிறது. விசேஷ நல்லடியார்களின் மனோதீரம் இம்மையையும், மறுமையையும், அவனல்லாத சகலவற்றையும் துறந்தவர்களாய் இருப்பதிலேயே இருக்கிறது.

அன்பர்களே, உங்களைப் பிடித்து உலுக்கி எழுப்பப்படுமுன், நீங்களாகவே விழியுங்கள்! மார்க்க பக்தர்களாகி மார்க்க பக்தர்களுடைய சகவாசத்தைத் தேடுங்கள்! ஏனெனில் உண்மையில் மனிதன் என்ற பெயருக்குரியவன் மார்க்க பக்தனேயாவான். அறிவாளிகளுள் சிரேஷ்டன் அல்லாஹ்வுக்கு அடிபணிந்தவன் ஆவான்; அஞ்ஞானிகளில் தலை சிறந்தவன் அல்லாஹ்வுக்கு முரண் செய்பவன் ஆவான். "உங்களுடைய கரங்கள் மண்ணுக்குரியவையாகட்டும்" என ரஸூலுல்

லாஹ் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். மண்ணுக்குரிய நிலைமை என்ற அரபிப் பதத் தொடருக்கு உலகப் பொருள்களின் தேவை அற்றுப்போகும் நிலை என்பது அர்த்தமாகும். நீங்கள் மார்க்க பக்தர்களைச் சந்தித்து அவர்களை உகப்பீர்களாயின் உங்கள் கரங்கள் தேவையற்றவைகளாகிவிடும்; உங்கள் உள்ளங்கள் உள்ளொன்று வைத்துப் புறமென்றாய் இருப்பதை விட்டும், அவ்வாறிருப்பவர்களை விட்டும் விலகிவிடும். உள்ளொன்று புறமொன்றாய் இருந்து, பகட்டுக்காக வணக்கங்களில் ஈடுபடுபவனது வணக்கம் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

அல்லாஹ் ஒருவனை முன்னிட்டுச் செய்யப்படும் வணக்கம் மட்டுமே அங்கீகரிக்கப்படுவதாகும். உங்களுடைய வணக்கத்தின் வெளித் தோற்றமன்று, அதனுள் பொதிந்து கிடக்கும் அகமியமே வரவேற்கப்படுவதாகும். உங்களுடைய வணக்கம் அகங்காரத்துக்கும், ஆசாபாசங்களுக்கும், ஷைத்தானுக்கும், உலகத்துக்கும் எதிரிடையாய் இருந்தால், அதுவே அங்கீகரிக்கப்படுவது.

எனவே, வணக்கங்களில் ஈடுபடுங்கள்; கலப்பற்ற நிர்ணயத்தை நிலைநாட்டுங்கள்! உங்களுடைய வணக்கத்தைக்கூட உற்று நோக்குங்கள். அவன் ஒருவனை முன்னிட்டுச் செய்யப்படும் வணக்கம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுமென்று உணருங்கள். சிருஷ்டியான பொருளை முன்னிட்ட வணக்கம் ஏற்கப்படாததாகும்.

கைசேதமே! சிருஷ்டிப் பொருட்களை முன்னிட்டு வணங்குகிறீர்கள். பிறகு, சிருஷ்டித்தவன் அங்கீகாரமும் வேண்டுமென விரும்புகிறீர்கள். இது வீண் ஆசையாகும். குதூகலத்தையும் தற்பெருமையையும் விட்டொழியுங்கள். குதூகலத்தைக் குறைத்துக் கவலையை அதிகரியுங்கள்.

ஏனெனில், கவலையின் வீடும் சிறையுமாகிய உலகில் நீங்கள் இருந்து வருகிறீர்கள். நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே கவலையில் ஆழ்ந்திருந்தார்கள்; குதூகலமென்பது அவர்களிடம் குறைவாகவே காணப்பட்டது. பெரும்பாலும் துயரத்துடனிருந்தார்கள்; வெகு சொற்பமாகவே சிரித்திருக்கிறார்கள். சிரித்தாலும் புன் சிரிப்பாகவே சிரிப்பார்கள்; அதுவும் பிறரின் மனோ திடத்துக்காகவே. அவர்கள் உள்ளத்தில் எத்துணை கவலையும் யோசனையும் இருந்ததெனின், ஸஹாபாக்களுடைய உறவு பற்றியும் உலகம் பற்றியும் அவர்களுக்கு உத்தரவு இல்லாதிருந்தால் அவர்கள் வீட்டிலிருந்து வெளியேறியும் இருக்கமாட்டார்கள்; பிறருக்கருகில் அமர்ந்தும் இருக்கமாட்டார்கள்.

அன்பர்களே, ஆண்டவனுடன் நீங்கள் ஏகாந்த நிலையடைவது சீர்பெற்றுவிட்டால், உங்களுடைய அகம் புத்துணர்ச்சி பெற்றதாகிவிடும்; உங்களுடைய உள்ளம் சுத்தமானதாகிவிடும்; உங்களுடைய பார்வை படிப்பினைகளைப் புகட்டக்கூடியதாகி விடும்; உங்களுடைய மனம் மெய்க்கவலை குடிகொண்டதாகிவிடும்; உங்களுடைய மறைமுக (பாத்தின்) ஆத்மா மெய்ப்பொருளின் சம்பந்தம் பெற்றதாகவும் ஆகிவிடும்.

இம்மைக் கவலை ஒரு வேதனையாகும்; மறுமைக் கவலையோ ஞானம் பெருக்கும் சாதனையாகும் - உள்ளத்தின் உயிர்நிலையாகும். மறுமைக் கவலை அடையும் அடியானுக்கே இகபர சம்பந்தமான மெஞ்ஞானம் அளிக்கப்படுகிறது.

உங்களுடைய நிலைமை கைசேதத்துக்கு உரியதே; ஏனெனில், உங்கள் உள்ளங்களை உலக விஷயமாய்ப் பாழ்படுத்துகிறீர்கள். உங்களுக்கு உலகப் பேறு எம்மட்டும் கிடைக்கவேண்டுமோ, அக் கணக்கை இறைவன் முன்னரே முடித்துவைத்துவிட்டானென்பதை மறந்து

விடுகிறீர்கள்; அவன் உங்களுக்கென்று விதித்துள்ளவை கிடைப்பதற்குரிய கால நேரத்தையும் நிர்ணயித்து முடித்துவிட்டான். எனவே, உங்கள் மனம் கவலைக் காளாயினும் சரி, ஆகாவிடினும் சரி, உங்களுடைய தினசரி இரணம் கிடைத்தே தீரும். அதை விட்டு உலக இரணத்தின்மீது பேராசை கொள்வதானது உங்களை இறைவன் சந்நிதானத்திலும் சிருஷ்டிகளின் முன்னிலையிலும் அவமானம் பெறச் செய்துவிடுகிறது. ஈமான் குறைவுற்றிருப்பதாலேயே இரணத்தைப்பற்றிய கவலையிலும் தேட்டத்திலும் ஆழ்ந்துவிடுகிறீர்கள்; ஈமான் வளர்ச்சி பெறும்போது கவலையில் அவ்வளவு அதிகம் ஆழ்ந்துவிடாது அமர்ந்திருப்பீர்கள்; ஈமான் பரிபூரணம் பெற்றுவிடும் நிலைமையில் அத்தகைய கவலை என்பதே அறவே இல்லாது ஒழிந்துபோய்விடும்.

அன்பர்களே, உண்மையையும் பொய்யையும் கலந்துவிடாதீர்கள். சிருஷ்டிப் பொருள்களின் சம்பந்தமே உங்கள் உள்ளத்தில் நிறைந்துவிடும்போது, சிருஷ்டி கர்த்தனுடைய ஞாபகத்துடன் அவை சேருவதெப்படி? சாதனப் பொருட்களை மெய்ப் பொருளுக்குச் சமமாக - இணையாக - பாவிக்க ஆரம்பித்து விடுகிறீர்கள். சாதனப் பொருட்கள் குடிகொள்ளும் உள்ளத்தில் மெய்ப்பொருள் இருப்பதெப்படி? பகுத்தறிவுக்கு ஏற்றதும் ஏற்காததும் ஓர் இடத்தில் இருக்க முடியுமா? அகமியமும் வெளிப்படையும் ஓர் இடத்தில் இருக்கமுடியுமா? தெய்வ அருளும் சிருஷ்டிகளின்மீது நம்பிக்கையும் ஓர் இடத்தில் இருக்க முடியுமா? சாதனங்களை மட்டும் பற்றிப்பிடிக்கும் உங்களின் - காரணங்களைத் தோற்றுவித்த கருணாகரனை மறந்து காரணங்களை மட்டும் நினைக்கும் உங்களின் - அறியாமையை என்னென்பேன்!

அன்பர்களே, அஞ்ஞானிகளினதும் அறிவீனர்களினதும் சகவாசத்தில் இருந்து வருவதால் அவர்

களின் அஞ்ஞானம் உங்களையும் சூழ்ந்துள்ளது. ஈமானும், அனுபவார்த்தமடைந்த நம்பிக்கையும் (யக்கீனும்) அனுஷ்டானப்பூர்வமுள்ள ஞானமும் பெற்ற பெரியார்களின் சகவாசத்தைத் தேடுங்கள்! முஸ்லிம்கள் என்றால் சர்வ நடத்தைகளிலும் செயல்களிலும் உயர்வும் ஸ்திரமும் பெற்றவர்களாக விளங்க வேண்டும்; தங்களுடைய ஆத்மார்த்த முயற்சிகளிலும், இச்சைகளை அடக்குவதிலும் தலைசிறந்து விளங்கவேண்டும். இதனாலேயே நபி கரீம் (ஸல்) அவர்கள், "ஈமான் உள்ளவனின் குதூகலம் அவனுடைய முகத்திலிருக்கும்; அவன் கவலை உள்ளத்திலிருக்கும்" என வர்ணித்துள்ளார்கள். இப்படிச் சிருஷ்டிகளின் முன்னர் குதூகலமாகக் காணப்படுவதும், தங்களின் கவலையை மறைத்து அதைத் தங்களுக்கும் தங்களின் இறைவனுக்கும் தெரிந்த விஷயமாய் வைத்திருப்பதும் அவர்களின் நம்பிக்கையால் விளைந்த குணப் பலத்தினாலேயாம். இத்தகைய நல்லடியார்களின் கவலை நிரந்தரமானது; ஆத்ம விசாரணை அதிகமானது; சிரிப்பு சொற்பமானது. இதற்காகவே ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "தங்களுடைய நாயனின் சந்திப்பிலேயன்றி வேறெதிலும் மூமினுக்குச் சந்தோஷமும் நிம்மதியும் இல்லை" என்றருளியுள்ளார்கள். மூமின் தன் கவலையைத் தன் முக மகிழ்ச்சி கொண்டு மறைத்து விடுவான்; அவன் வெளிரங்க வாழ்வு இரணத்துக்குரிய சம்பாத்திய முயற்சிகளில் ஈடுபட்டதாய் இருக்கும்; அவன் உள்ளமோ தனது இறைவனுடன் அமைதியும் அடக்கமும் பெற்றிருக்கும். அவன் வெளிரங்க வாழ்வு சுற்றத்தாருக்கும் சூழ்ந்திருப்பவர்களுக்குமாக நடத்தப்படின், அகமிய வாழ்வு இறைவனுக்காகவே நடத்தப்படுவதாய் இருக்கும். அவனுடைய அகமியங்கள் மனைவிமக்கள் கூட அறியாத நிலைமையில் மறைமுகமாகவே இருந்துவரும். "உங்களுடைய காரியங்களை மறைமுகமாய் வைப்பது கொண்டு ஆக்கம் பெறுங்கள்!"

என்று நபி பிரான் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதற்கு அவன் செவிசாய்த்தவனுவான். எனவே, தன் நிலையை மறைமுகமாக வைப்பதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருப்பான்; தன்னை மறந்து தன் அகமியம் வெளியாகி விடினும், ஞாயகம் வந்ததும் எச்சரிக்கையுடன் மறைத்துக் கொள்ளவே முயலுவான்.

அன்பர்களே, என்னை உங்கள் முகம் பார்க்கும் கண்ணாடியாகப் பாவியுங்கள்; உங்களுடைய அகமும் அகமியமும் தெரிந்து கொள்ளக்கூடிய கண்ணாடியாகக் கொள்ளுங்கள்; உங்களுடைய முயற்சிகளின் தன்மையை அறியக்கூடிய கண்ணாடியாகவும் கருதுங்கள். என்னை விட்டுத் தூரமாயிருக்கும் நிலைமையில் உங்களிடமிருக்கும் குறைகள் தோன்ருதிருப்பதை, என் சமீபம் வருவதால் கண்டுகொள்வீர்கள். தீன் என்னும் நெறிநிலை உங்களுக்கு வேண்டுமாயின், என்னைப் பின்பற்றுங்கள்; நெறிநிலை விஷயத்தில் நான் தாட்சண்யம் காண்பிக்கக்கூடியவனன்று. அல்லாஹ்வுடைய சன்மார்க்க விஷயத்தில் நான் வெட்கப்படுபவனன்று. என்னுடைய பயிற்சியும் பரிபக்குவமும் இரும்புக் கரங்களினுல் ஆக்கப்பட்டவையல்ல. வயிற்றுப் பிழைப்பைப் பெரிதாக எண்ணி, உள்ளொன்று வைத்துப் புறமொன்ருனவர்களிடமிருந்து நான் பயிற்சி பெற்றவனன்று. உங்களுடைய உலகத்தை உங்களின் இல்லங்களிலேயே விட்டுவிட்டு, என்னிடம் வாருங்கள். நானே மறுமையின் வாயிலில் நிற்பவன்; என்னுடைய சகவாசத்திலிருந்து என்னுடைய மொழிகளைக் கேட்டு அதன்படி ஒழுகுங்கள். மவுத்து எவ்வளவு சீக்கிரம் வந்துவிடுமோ யார் கண்டவர்? ஈடேற்றம் என்பது தெய்வ பக்தியைப் பொருத்த விஷயம். "அல்லாஹ்வின் அடியார்களுள் பயபக்தியுள்ளவர்கள் அறிஞர்களே யாவர்" என்று அல்லாஹுத் தஆலா திரு குர்ஆனில் கூறியுள்ளான். அனுஷ்டானப் பூர்வமான அறிஞர்கள்

மட்டும்-அறிவையும் அனுஷ்டானத்தையும் ஒருங்கே தேடுபவர்கள் மட்டும்-தாங்கள் செய்யும் காரியங்களில், வேறொரு பிரதிபயனுமின்றித் தெய்வ சமீபத்துவத்தையே விரும்புபவர்கள் மட்டும்-பயபக்தியாளர்களாகத் திகழுவார்கள். அவர்கள் விரும்புவது தெய்வ சமீபத்துவத்தையும், அவனுடைய சமீபத்துவத்தைத் தடுக்கும் திரைகளினின்று விமோசனத்தையுமேயாகும்.

மானிட வர்க்கத்தாரில் ஒரு சாராருக்கு இம்மையும் மறு சாராருக்கு மறுமையும் இருக்கின்றன; மெய்ஞ் ஞானம் பெற்ற சாராருக்கென மெய்ப்பொருளாகிய அல்லாஹ் இருக்கிறான். அல்லாஹ்வின் உத்தம நல்லடியார்கள் - பயபக்தியுள்ளவர்கள் - புறக்கண் முன் அவனைக் காணாதிருப்பினும் அகக்கண்ணால் அவனை முன்னிருத்தியிருப்பவர்கள் - அல்லாஹ்வின் ஞாபகத்தால் அவனிடம் பயம் பெருகாதவர்களாயிருப்பது எப்படி? தினந்தினம் புதுப் புதுச் சுடரை வெளியாக்கிக் கொண்டிருக்கும் இறைவனை அவனுடைய அச்சம் அவர்கள் உள்ளங்களில் நிறையாதிருப்பதெப்படி? அவன் நாட்டமே எங்கும் நடைபெறுவதாய் இருக்கிறது; ஒரு சிலருக்கு ஆதரவளிக்கிறான்; ஒரு சிலரை உயிர்ப்பிக்கிறான்; மற்றும் சிலரை மரிக்கச் செய்கிறான்; ஒரு சிலரைச் சமீபப்படுத்துகிறான்; மற்றும் சிலரைத் தூரப்படுத்துகிறான். "அவன் செய்வதுபற்றி அவனைக் கேள்வி கேட்பது முடியாது; அவர்களே கேள்வி கேட்கப்படுவார்கள்." யா அல்லாஹ், உன் சமீபத்துவத்தை எங்களுக்கு அளிப்பாயாக! தூரப் படுத்த வேண்டாம்! இம்மை மறுமையின் நலன்களையும் நரக வேதனையினின்று ஈடேற்றத்தையும் அளிப்பாயாக!

பத்தாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 ஷவ்வால் பிறை 24 ஞாயிற்றுக்கிழமை காலையில் ஹஜ்ரத் அவர்கள் நிகழ்த்தியது:

"நானும் என் உம்மத்தில் தூய்மையுள்ள பக்தர்களும் பாசாங்கு என்பதிலிருந்து விடுதலை பெற்றவர்களாவோம்" என்று ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் அருளியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மை பக்தர்களின் வணக்கம் பாசாங்காய் இருக்க முடியாது; ஏனெனில், வணக்கம் என்பது அவர்கள் இயல்பாய் ஆகிவிட்டது. ஆகையால், தோற்றத்திலும் அகமியத்திலும் பாசாங்கோ, நடிப்போ இன்றியே அவர்கள் அல்லாஹ்வை வணங்குவார்கள். அதற்கு மாற்றமாகக் கலப்பற்ற நிர்ணயமற்ற முனாபிக்குகளோ எந்நிலையிலும் பாசாங்கு செய்பவர்கள்தாம்; குறிப்பாக அவர்கள் வணக்கம் அவ்விதமிருந்துவரும். தோற்றத்தின் அளவுக்குச் சிரமத்துடன் நடித்துவிடுவார்கள்; அகமியத்தில் சற்றேனும் கடைப்பிடிக்க மாட்டார்கள். தூய பக்தர்களின் பதவிக்குள் புகுவதற்கு அத்தகைய முனாபிக்குகளுக்குச் சக்தி ஏது? தூய பக்தர்கள் முன்னிருக்கும் பதவிகளிலோ ஒவ்வோர் இடத்துக்கும் ஒரு பேச்சு உண்டு; ஒவ்வொரு காரியத்துக்கும் ஓர் ஆளுண்டு. போருக்கென்றும் பிரத்தியேகமாய் மனிதர்கள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளார்கள்.

முனாபிக்குகளே, உங்களுடைய (நிபாக்) உள்ளொன்று வைத்துப் புறமொன்றாய் இருக்கும் கலப்பு நிலையிலிருந்து மீட்சியை நாடுங்கள்! உங்கள் வேஷத்திலிருந்து வெளியேறுங்கள்! ஷைத்தான் உங்களைக் கெடுத்து, உங்களைப் பார்த்துச் சிரிக்குமாறு ஏன் விட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் தொழுவதும் நோன்பு பிடிப்பதும் சிருஷ்டிகளை முன்னிட்டவையாய் உள்ளன.

வேயன்றிச் சிருஷ்டித்தவனை முன்னிட்டவையாய் இல்லை. அங்ஙனமே (பகட்டுக்காகத்) தருமம் கொடுப்பதும், ஹஜ்ஜு செய்வதும் உங்களிடமிருப்பினும், உங்களுடைய இம் முயற்சிகள் யாவும் பயனற்ற கருமங்களாகவே ஆகிவிடுகின்றன. இதன் பயனாய் ஜுவாலை நிறைந்த அக்கினிக்கு இரையாக வேண்டிய நிலை ஏற்பட்டும், நிலைமையை யுணர்ந்து அதற்குரிய பரிகாரமும், மீட்சியும், மன்னிப்பும் அடையாதிருந்து வருகிறீர்கள்.

புதிதாகச் சிருஷ்டித்திருப்பதையும் புதிய விஷயங்களையும் விட்டு ஷரீஅத்தை ஒட்டிய அனுஷ்டானத்தைக் கைக்கொள்ளுங்கள். முன்னோர்களான நேர்மையாளர்களின் நல்வழியைக் கடைப்பிடியுங்கள். (ஷரீஅத்தின்) நேரிய பாலத்தில் செல்லுங்கள். 'முஅதஸிலா'க்களைப் போல் சிருஷ்டித்தவனுக்குச் சிருஷ்டியின் குணம்கொடுப்பது போன்ற உபமானம் உண்டாக்க முற்படாதீர்கள். 'தக்தீர்' எழுதி முடிந்து போய் விட்டதால் இறைவன் ஒன்றும் செய்யாதிருக்கிறானென்று வரையறுத்துப் பேசவும் முன்வராதீர்கள். இவற்றை விடுத்து அபிநயமும், செயற்கை மயமும், கஷ்டமும், பகுத்தறிவு ஆட்டங்களுமின்றி, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஸுன்னத்துப்படி ஒழுகுங்கள்! உங்கள் கைசேத நிலையை என்னென்பேன்! திரு குர்ஆனை மனனம் செய்கிறீர்கள்; ஆனால், அதன்படி அனுஷ்டிக்கிறீர்களில்லை. ஸுன்னத்தை நினைவுகூர்கிறீர்கள்; ஆனால், அதன்படி ஒழுகுகிறீர்களில்லை. ஏன் அப்படிச் செய்கிறீர்கள்? பிறருக்குச் சன்மார்க்கம் புகட்டுகிறீர்கள்; நீங்கள் மட்டும் அதன்படி நடக்கிறீர்களில்லை. பிறரைத் தீமையிலிருந்து விலக்குகிறீர்கள்; நீங்கள் மட்டும் அதிலிருந்து விலகக் காணோம். "அல்லாஹ்வின் கடுங்கோபத்துக்குரிய விஷயம் நீங்கள் அனுஷ்டிக்காததைக் கூறுவதாய் இருக்கிறது" என்று அல்லாஹு ஜல்லஜலாலுஹு மொழிந்துள்ளான். சொல்வதொன்று செய்வதொன்

றென்றுள்ள இழிநிலையில் இருப்பதேன்? உங்களுக்கு வெட்கம் உண்டாவதில்லையா? ஈமான் இல்லாத நிலைமையில் ஈமான் இருப்பதாக ஏன் பறைசாற்றுகிறீர்கள்? ஈமான் என்றால் என்ன? ஈமானே ஆபத்துகளிடை எதிர்த்து நிற்பது; அதுவே பாரங்களைத் தாங்க உதவுவது; அதுவே போர் புரிவது; உலகப் பொருள் எத்துணை இருப்பினும் அதை இறைத்து விடுவது; அல்லாஹ்வுக்காக அள்ளிக் கொடுக்கச்செய்வது. அபிலாஷைகளை முன்னிட்டும் ஷைத்தானிய எண்ணங்களை முன்னிட்டும் தருமம் செய்யச் சொல்வதோ நப்ஸின் குணமாகும்.

மெய்ப்பொருளின் வாயிலை விடுபவன் சிருஷ்டியின் வாயிலை அண்டியவனாகிறான். அல்லாஹ்வின் வழியை விடுபவன் சிருஷ்டியின் வழிகளில் அமர்ந்தவனாகிறான்.

ஓர் அடியானுடைய நன்மையை இறைவன் நாடினால் அவ்வடியான் முன்னிருக்கும் சிருஷ்டியின் கதவுகளை அடைத்து விடுகிறான்; சிருஷ்டிகளின் உதவியைத் தடுத்து விடுகிறான். இவை கொண்டு தன்னளவில் அவ்வடியானைத் திருப்பிக் கொள்கிறான். குளக்கரையில் நின்று கொண்டிருந்தவனை சமுத்திரக் கரையோரம் நிற்கச் செய்து விடுகிறான். ஒன்றை மற்றதிலிருந்து அப்புறப் படுத்தி, எல்லாம் உள்ள ஒன்றளவில் நிறுத்தி விடுகிறான். மழை காலத்தில் குளக்கரையில் நிற்பதால் சந்தோஷமடைபவனே, உன் நிலைமையோ கைசேதத்துக்குரியது! சீக்கிரம் கோடை வரும்போது 'இக்குளம் வற்றிவிடும்; நீயும் அதன் கரையிலிருந்து வாடி மரிப்பாய்! சமுத்திரக் கரைக்கு ஓடு! ஆங்குள்ள தண்ணீர்தான் வற்றாதிருக்கும்; என்றும் அதிகமாகிக் கொண்டிருக்கும்.

அல்லாஹ்வுடன் வாழ்வது கொண்டே உண்மைச் செல்வமும், உண்மை மதிப்பும், உண்மை அதிகாரமும், உண்மை வழிகாட்டும் சக்தியும் அடையப் பெறுவாய்.

அல்லாஹ்வைப் பற்றிப்பிடிப்பது கொண்டு செல்வந்தனாகித் தேவையைப் பெற்றிருப்பவனைச் சகலமும் எதிர் பார்க்க வேண்டியதாகிவிடுகிறது. ஆனால், இப்பேறுகள் வெறும் அபிலாஷையால் அடையக்கூடியவையல்ல; உள்ளத்தில் இடம் பெற்று, அனுஷ்டானத்தில் உண்மைப் படுத்தப்படவேண்டிய விஷயத்தால் ஆகக் கூடியவைதாம்.

அன்பனே, நீ வேண்டுவதென்ன? மௌனத்தை வழக்கமாகவும்,பெயர்பகிரங்கமாகாதிருப்பதைப்போர்வையாகவும் சிருஷ்டிகளிலிருந்துவெருண்டோடுவதை லட்சியமாகவும்கொண்டிருப்பாயாக! பூமிக்குள் சுரங்கம்தோண்டி ஆங்கு மறைந்திருக்க முடிந்தால் அப்படியும் செய்து கொள்! எதுவரை? ஈமான் அதன் யௌவனப் பருவத்தையும், நிச்சயார்த்தம் (யக்கீன்) எனும் பாதம் ஸ்திரமான நிலைமையையும் அடைந்து, உனக்குள் குடி கொண்டிருக்கும் சத்தியத்துக்குச் சிறகுகளேற்பட்டு,உன் அகக் கண்கள் திறக்கும்வரை! அப்போதே உன் வீடு எனும் பூமியிலிருந்து உயர்ந்து இறைவனுடைய ஞான மெனும் ஆகாசத்தில் பறப்பது முடியும். அந்நிலைமையுடனேயே, உஷாரான வழி தெரிந்த தோழன் சகிதம் கிழக்கிலும், மேற்கிலும், தரையிலும், கடலிலும், காட்டிலும்,மலையிலும், வானத்திலும், பூமியிலும் சுற்றக்கூடியவனாவாய்; அந்நிலைமையில் உன் நாவை அவிழ்த்து விடு; பெயர் பகிரங்கமாகாதிருக்கும் போர்வையை எடுத்தெறி! சிருஷ்டிகளிடமிருந்து வெருண்டோடுவதையும் விட்டொழி; உன் சுரங்கத்திலிருந்து வெளியேறிச்சிருஷ்டிகளின் பக்கம் செல். ஏனெனில், நீ சிருஷ்டிகளுக்குரிய ஔடதம் ஆகிவிடுவாய். சிருஷ்டிகளின் அதிகத்தையும்சொற்பத்தையும் புகழையும், இகழையும் சட்டை செய்யாது கவலையற்றவனாயிரு! ஏனெனில், ('தவக்கலி'ன் பறவையாகிய) உனக்கு எங்கிருப்பினும் ஆங்கு உனக்குரிய

இரையும் இருக்கக் காண்பாய்; எங்கிருப்பினும் உன் ரப்பில் ஆலயீனோடேயே இருந்து வருவாய்.

சமூகத்தவர்களே, சிருஷ்டிகர்த்தனை அறியுங்கள்; அறிந்து அவன் முன்பாக அடிபணியுங்கள். உங்கள் உள்ளம் அவனில் நின்று தூரமாய் இருக்கும் வரை நீங்கள் ஒழுக்கமற்றவர்களாகவே இருப்பீர்கள். சமீபம் அடைந்ததும் ஒழுக்கமுள்ளவர்களாகிவிடுவீர்கள். உபமானமாக, ஓர் அரசனின் தர்பாரை எடுத்துக் கொள்ளுங்கள். தர்பாரின் வாயிலண்டை காவலாட்களும் ஏவலாட்களும் பேசிக் கொண்டிருப்பதுண்டு. ஆனால், மன்னன் வரும்போதோவெனில், எங்கும் நிசப்தமாகி அனைவரும் பயபக்தியுடன் நிற்கின்றனர். ஒவ்வொருவனும் தன் தன் இடத்திற்குச் சென்று ஒழுங்கு பெற நின்று விடுகிறான். அதைப்போல், சிருஷ்டிகளின் மீது கவனம் பாய்ந்துவிடுவதன் காரணம் சிருஷ்டிகர்த்தனின் சமீபத்துவத்தை அடையாக் குறையாலேயாகும்.

போலித் தெய்வங்களைத் துண்டித்து, சாதனங்களை வெட்டிவிட்டு, லாப நஷ்டத்துக்காகச் சிருஷ்டியின்மீது நோக்கு வைப்பதை ஒழிக்காதவரை நீங்கள் ஜெயம் பெற முடியாது. நீங்கள் ஆரோக்கியமாய் இருப்பதாகத் தோன்றினாலும், உண்மையில் வியாதியஸ்தர்களேயாவீர்கள். பார்வைக்குச் செல்வர்களாய் இருப்பினும், உண்மையில் தரித்திரர்களேயாவீர்கள். (உலகப் பார்வைக்கு) உயிருள்ளவர்களாய் இருப்பினும், (உண்மைப் பார்வைக்கு) பிணங்களேயாவீர்கள். வெளித் தோற்றத்துக்கு உண்டானவர்களாயிருப்பினும் உண்மையில் இல்லாதவர்களேயாவீர்கள். மெய்ப்பொருளை விட்டு வெருண்டோடுவதற்கு இன்னும் எத்தனை காலந்தான் ஆளாகிக் கொண்டிருப்பீர்கள்? இன்னும் எத்தனை நாட்கள் தான் மறுமையைக் காலியாக விட்டுவிட்டு இம்மையில் மட்டும்

குடியிருந்து வரப்போகிறீர்கள்? உங்களுள் ஒவ்வொரு மானிடனுக்கும் இருப்பது ஒரே இதயமன்றோ? அந்நிலையில் அவ்விதயத்தில் இம்மையின் பிரியமும் மறுமையின் உவப்பும் ஒருங்கே இடம் பெறுவது எப்படி? ஒரே இடத்தில் சிருஷ்டிகர்த்தனின் ஞாபகமும் அதற்குச் சமமாகச் சிருஷ்டியின் ஞாபகமும் எங்ஙனம் இருக்க முடியும்? அங்ஙனம் இருப்பதாகச் சொல்வது பொய்யாகும். "பொய் ஈமானை அசுத்தப்படுத்துகிறது" என்பது நபி வாக்கியமாகும்.

எந்தப் பாத்திரத்திலிருந்தும் அதனுள் இருப்பதுதான் வெளியாகும். ஆனால், உங்களுடைய அனுஷ்டானங்கள் உங்களின் அகப் பிரமாணங்களின் சாட்சியாகும். உங்களுடைய வெளிரங்கம், உள் ரங்கத்துக்குரிய சான்றாகும். இதனாலேயே பெரியார்கள் சிலர் "வெளிரங்கம் உள் ரங்கத்தின் மகுடமாகும்" என்றுரைத்துள்ளார்கள்.

உங்கள் அந்தரங்கம் மெய்ப்பொருளான அல்லாஹ்வுக்கும் அவனுடைய விசேஷமான அடியார்களுக்கும் பகிரங்கமாகத் தெரிவதுதான். இத்தகைய விசேஷமான அடியார்களுள் எவரும் கிடைத்துவிட்டால் அவர் முன் ஒழுக்கத்துடனிருங்கள். அவரைச் சந்திக்கு முன் உங்களுடைய பாவங்களிலிருந்து மீட்சி (தவ்பா) தேடுங்கள். அவர் முன் தாழ்மையும் அடக்கமும் கொண்டவர்களாய் இருங்கள். நேர்மையாளர்களான நல்லடியார்களின் முன் தாழ்மையுடனிருந்தால், அல்லாஹ்வின் முன் அடிபணிதலுடனிருப்பவர்களாவீர்கள். மரியாதையுள்ளவர்களாய்த் திகழுங்கள்; ஏனெனில், மரியாதையுடன் நடப்பவர்களுக்கு அல்லாஹ் உயர்வை அளிக்கிறான். "உங்கள் பெரியார்களிடம் 'பரக்கத்' இருக்கிறது" என்று நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பெரியார்கள் என்று

குறிப்பிடுவது வயதால் பெரியவர்களாய் இருப்பவர்களே மட்டுமன்று; வயது கூடுதலாய் இருப்பதுடன், ஏவலை அனுசரித்து விலக்கலைப் பேணி வருவதும், பயபக்திப் பரிசுத்தமும், வேதத்தையும் ஸுன்னத்தையும் பின்பற்றலும் அவசியமாகும். ஏனெனில், மரியாதைக்கும் ஸலாமுக்கும் உரித்தாகக் கூடாத கிழவர்களும் இருப்பதுண்டு; அத்தகையோரின் சகவாசத்தினால் நற்பேறுகள் கிடைப்பது எப்படி?

பெரியவர்கள் யார்? பயபக்தியுள்ளவர்கள் – நன்மை செய்பவர்கள் – பேணுதலுள்ளவர்கள் – அறிந்து கொண்டு அனுஷ்டானமும் செய்பவர்கள் – அனுஷ்டானத்தில் உண்மை நிர்ணயம் வாய்ந்தவர்கள் - இவர்களே பெரியவர்களாவார்கள். பரிசுத்தமும், அல்லாஹ் அல்லாத அனைத்தையும் விட்டு முகம் திரும்பியிருத்தலும் வாய்ந்த இதயமுடையோரே பெரியார்களாகும்; அல்லாஹு ஜல்லஜலாலுஹுவைப்பற்றிய ஞானமும் மெய்யனுபவமும் (மஃரிபா) குடிகொண்டதும், அவனுடைய சமீபத்துவம் அடைந்ததுமான இதயமுடையோரே பெரியார்களாவர்.

இதயத்திலுதிக்க வேண்டிய மெய்யறிவு அதிகமாகும் அளவுக்கே அல்லாஹ்வின் சமீபத்துவத்தையும் அடைபவர்களாவீர்கள். இம்மைப் பற்று இருக்கும் இதயம் அல்லாஹ்வை விட்டுத் திரையிடப்பட்டதாகும்; மறுமைப் பற்று இருக்கும் இதயம் அல்லாஹ்வின் சமீபத்துவத்தை விட்டுத் திரையிடப்பட்டதாகும்.

உலகப் பற்று அதிகரிக்குமளவுக்கு மறுமைப் பற்று குறைந்துவிடும். மறுமைப் பற்று அதிகரிக்குமளவுக்கு அல்லாஹ்விடம் பாசம் குறைந்துவிடும். (இம்மையையும் மறுமையையும் மறந்து, அவன் அன்புக்கு உரித்தாவதையே லட்சியமாகக் கொள்ள வேண்டுமென்பது பொருள்.)

உங்கள் நிலைமையை நன்கு உணர்ந்து கொள்ளுங்கள். உங்களை அல்லாஹ் எங்கே வைக்கவில்லையோ அங்கே தங்கிவிடாதீர்கள். இதனாலேயே, "தன் வரையறையை உணராதவனைத் தக்தீர் தன் வரையறையை உணருமாறு செய்து விடுகிறது" என்று ஒரு பெரியார் கூறியுள்ளார். நீங்கள் உட்காருவதற்கு அருகதையில்லாத இடத்தில் - எடுத்தெறியப்பட்டுப் போகக் கூடிய இடத்தில் - உட்கார முற்படாதீர்கள். ஓர் வீட்டுக்குச் சென்றால், வீட்டுக்காரன் உங்களுக்களிக்காத ஆசனத்தில் உட்காருவது தகுமா? பிறகு, உங்களை அவ்வாசனம் விட்டு உங்களுக்குரிய ஆசனத்திலமரச் சொல்லப்பட்டு, மறுத்தால் அவமானமடைய வேண்டுமல்லவா?

அன்பர்களே, தங்களுடைய ஜீவிய காலத்தை அனுஷ்டானமின்றி ஞானத்தை எழுதுவதிலும் மனனஞ் செய்வதிலும் வீணாக்கியவர்களும் உங்களில் உண்டு இதனால் உங்களுக்கென்ன பயன்? நபி (ஸல்) அவர்கள் அருளியிருப்பதாவது: 'சிருஷ்டிகள் உங்கள் பிரஜைகளே; உங்களுடைய பிரஜைகளுக்கிடையே என்னென்ன செய்து முடித்தீர்கள்?' என்று நபிமார்களும் உலமாக்களும் 'கியாமத்து' நாளன்று கேட்கப்படுவார்கள்; 'நீங்கள் என் புதையல்களின் பொக்கிஷதாரர்களாய் இருந்தீர்கள்; ஏழைகளைச் சம்ரட்சித்தீர்களா, அனாதைகளைப் பராமரித்தீர்களா, உங்கள் சொத்துக்களில் எவ்வளவு விதியாக்கப்பட்டிருந்ததோ அவ்வளவு வெளியே கொடுத்தீர்களா?' என்று மன்னர்களும் செல்வர்களும் வினவப்படுவார்கள்.

சமூகத்தவர்களே, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சத்போதனைகளிலிருந்து படிப்பினைகளை அடையப் பெறுங்கள்! அவர்களிட்ட ஆணைகளைத் தலைமேல் ஏற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் கடின இதயங் கண்டு வருந்துகிறேன். சிருஷ்டிகள் இழைக்கும் தவறுகளைப் பொறுத்துக் கொள்ளக் கூடிய பலத்தை எனக்களித்த தூயரப்பைத் துதிக்கிறேன். உங்களை விட்டுப் புறம்பாக வெளியேறி விடவேண்டுமெனும் விருப்பம் வரும்போது, தக்தீரின் ஞாபகமே என்னைத் தடைப்படுத்திவிடுகிறது. என் சொந்த விஷயத்திலோ, நான் சாந்தி அடைந்தவன்; மன்னனின் பூங்காவனத்து விருக்ஷக் கொப்பில் கூடுகட்டிக்கொண்டிருக்கும் பறவைக்கு ஏன் சாந்தி இராது?

உள்ளொன்றுவைத்துப் புறமொன்றாயிருக்கும் முனிபிக்குகளில் சிலர், நான் இந்நகரிலிருந்து போய்விடவேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்களுக்கு நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். நான் ஏதும் செய்ய நினைத்து விட்டால் நிலைமை மாறிவிடும்; விஷயமே வேறாகிவிடும். அல்லாஹ்வின் தண்டனைகளை வரவழைக்க அதிகநேரம் பிடிக்காது. ஆகையால், தக்தீரின் கட்டுக்குள் இருந்து வருகிறேன். யா அல்லாஹ், சமாதானமும் கருணையும் உண்டாவதாக!

என்னை அலட்சியம் செய்ய நினைக்கும் முனாபிக்குகள் நான் சத்தியத்தின் தலைவாயிலில் நிற்பவன் என்பதை உணரட்டும். நான் சத்தியத்தின் பக்கல் மக்களை அழைத்துக் கொண்டிருப்பவன். என்னை எதிர்க்க நினைப்பவர்கள் தம் வினைக்ளின் விடையை சீக்கிரமே அடைந்து கொள்வார்கள். நான் ஒரு விரலை அசைத்தால் அதன் கீழ் ஆயிரம் விரல்கள் ஆடும் என்பதை இவர்கள் உணரவில்லையா?

முனாபிக்குகளே, தெய்வத் தண்டனையை இம்மையிலும் நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள். காலம் கர்ப்பவதியாய் இருந்து வருகிறது. என்ன பிறக்க விருக்கிறதென்பதும் சீக்கிரமே புலனாகிவிடும். நானோ அல்லாஹ்வின் (குதுரத்து) சக்தி யெனும் கரத்தால் பிடிக்கப்பட்

டிருப்பவன். அவனே சில சமயங்களில் என்னை மலையாக்கி விடுகிறான்; மற்றுஞ் சில சமயங்களில் அணுவாக்கிவிடுகிறான். சில நேரங்களில் சமுத்திரமாக்கிவிடுகிறான்; மற்றுஞ் சில நேரங்களில் துளியாக்கிவிடுகிறான். சில வேளைகளில் சூரியனாக்கிவிடுகிறான்; மற்றும் சில வேளைகளில் மின்மினிப் பூச்சியாக்கிவிடுகிறான். இரவு பகலை மாற்றி மாற்றி அவன் வெளியாக்குவதுபோலத் தன் நாட்டப்படி என்னை ஆட்கொண்டுள்ளான். "ஒவ்வொரு நாளும் அவன் புதுச் சுடருடன் இருக்கிறான்" (திரு குர்ஆன்) என்பதில், ஒவ்வொரு தினமென்றால் தினம் மட்டுமன்று; ஒவ்வொரு விநாடியும் ஒரு சுடர் காட்டுபவன் என்ற அர்த்தமும் உண்டு. ஒவ்வொரு விநாடியும் தெய்வத்தின் ஜோதிச் சுடர்களைக் கண்டு களிக்கும் மெய்யன்பர்களுக்கே இப் பேச்சு உரித்தாகும்.

அன்பர்களே, நீங்கள் மனோ விலாசமும் இதய சாந்தியும் விரும்பினால், சிருஷ்டிகளின் பேச்சைக் கேட்டு நடக்காதீர்கள்; அவர்களின் கூற்றை லட்சியம் செய்யாதீர்கள். தம்மைப் படைத்தவனுடைய பொருத்தத்தையே பெறுதிருப்பவர்கள், உங்களைச் சந்தோஷமடையச் செய்வதெப்படி? இத்தகையோரில் பெரும்பான்மையானவர்கள் அறிவற்றவர்கள்; ஆன்ம திருஷ்டியும் ஈமானும் இல்லாதவர்கள்; அவர்கள் பொய்ப்பிப்பவர்களே யன்றி மெய்ப்பிப்பவர்களல்ல.

இத்தகையோரை விடுத்து, மெய்ப்பொருளைத் தவிர யாவையும் அலட்சியம் செய்யக்கூடிய - மற்றவற்றுக்குச் செவி சாய்க்காமலிருக்கும் - மற்றவற்றைக் கண்ணெடுத்துப் பார்க்காமலிருக்கும் – நல்லோர்களைத் தேடிப் பின்பற்றுங்கள்.

இறைவனுடைய பொருத்தம் பெறுவதற்காகச் சிருஷ்டிகளின் புறத்தால் வரும் தொந்தரவுகளைப் பொறுமையுடன் தாங்கிக் கொள்ளுங்கள்.

உங்களை அல்லாஹ் எச்சோதனைகளுக்கு ஆளாக்கினாலும் அதில் பொறுமையுடன் திகழுங்கள். ஏனெனில், தன் சங்கை பொருந்திய நல்லடியார்கள் விஷயத்தில் இம்முறையையே இறைவன் கையாண்டு வருவது வழக்கம். அவன் தன்னைத் தவிர, இதரப் பொருள்களின் சம்பந்தங்களைக் களையுமாறு செய்கிறான்; வித விதமான கஷ்டத்துக்கும் துயரத்துக்கும் அவர்களை ஆளாக்கி, இம்மையையும் மறுமையையும் அவர்களுக்குக் குறுகியதாக்கிக் காண்பிக்கிறான்; அவர்கள் (பனாவாகி) அழிந்துபோகுமாறு செய்து, பின்னர் தனக்கு மட்டும் சொந்தமான வாழ்வை மீண்டும் உண்டாக்கிக் கொடுக்கிறான். தன்னுடன் அவ்வடியார்கள் நிலைபெறும்படி செய்கிறான். புதிய உயிரை அவர்களுக்கு அளித்தருள்கிறான். "பிறகு மறு சிருஷ்டியாக அவனை உண்டாக்கினான்; சிருஷ்டிப்போர்களில் சிரேஷ்டனாகிய அல்லாஹ்வே சர்வ சம்பத்துக்களையும் அளிக்க வல்லவன்" (திரு குர்ஆன்). இது விசேஷமான சிருஷ்டிப்பாகும். இச் சிருஷ்டியைக் கொண்டு அடியான் இதர மானிடர்களைவிட விசேஷமானவனாகிவிடுகிறான்; புதிய நிலைமையை அடைகிறான்; அல்லாஹ்வின் அடியானாக உண்மையில் ஆத்மீகத்துடன் திகழுகிறான். சிருஷ்டிப் பொருள்களைப் பார்த்தாலும் அவன் மனம் குறுகும் நிலை வந்துவிடுகிறது; ஆகையால், அவற்றை ஏறெடுத்துப்பார்க்கவும் விரும்பாதவனாகிவிடுகிறான். சர்வ சிருஷ்டிகளும் அவன் முன்னிலையில் சமமாகிவிடுகின்றன. புதிய அதிகாரமும் சக்தியும் அவன் சூட்சுமக் கரங்களுக்கு அளிக்கப்படுகின்றன. அல்லாஹ்வும் தன் (குதரத்தை) சக்தியை, மூஸா (அலை) நபியின் கரத்திலிருந்த கம்பின் வழியாய்க் காட்டியதே போல் நல்லடியான் விஷயத்திலும் காட்டுகிறான். தான் விரும்பிய எவ்வஸ்துவிலும் எக்கரத்திலும் தன் சக்தியை வெளிப்படுத்தும் அல்லாஹ்வுக்கே சர்வ தூய்மையும் துதியும் உரித்தாகுக!

மூஸா நபி (அலை) அவர்களின் கரத்திலிருந்த கம்பு மாந்திரீகர்கள் வெளிப்படுத்திய சகல மாயைகளையும் விழுங்கிவிட்டுப் பின் தன் யதார்த்த நிலைமையிலேயே – மாறுதல் அல்லாமல் – இருந்துவிடவில்லையா? ஏன்? மூஸா நபியின் கரத்தில் வெளியாக்கப்படுவது மாந்திரீக மன்று, தெய்வீக சக்தியாகும் என்று அம்மாந்திரீகர்களுக்கு அல்லாஹ் காட்ட விரும்பினான். மாந்திரீகர்கள் தமது மந்திரத்தினால் மாயைகளைச் சிருஷ்டித்தார்கள். மூஸா நபி (அலை) அவர்களின் கம்பின் வழியாலோ தெய்வீக சக்தி நின்று பிரகாசித்தது. இதனாலேயே மாந்திரீகர்களின் தலைவன் மூஸா நபியை உற்று நோக்கிப் பார்த்தான்; அகங்காரம், சுய அதிகாரம் ஆகியவற்றைக் கொண்டு அவர் ஒன்றையும் உருப்போட்டாரில்லை என்பதைக் கண்டான்; பயபக்தியுடன் அல்லாஹ்வின் ஞாபகத்தில் ஆழ்ந்து நிற்பதைக் கண்டான். எனவே, நடந்தது மூஸா நபியின் சக்தியைக் கொண்டு நடந்ததன்று, ஆண்டவனின் சக்தியைக் கொண்டே நடந்தது எனக் கண்டான். இதனாலேயே மாந்திரீகர்களின் தலைவனும் அவன் சகாக்களும், பிர்ஔனையும் லட்சியம் செய்யாது மூஸா நபியை மெய்யர் என்று விசுவாசிக்கலாயினர்.

அன்பர்களே, மதியை மட்டும் பற்றிப்பிடிப்பதை விடுத்து நீங்கள் விதியின் (தக்தீரின்) பக்கம் முற்றும் பற்றி நிற்கும் காலம் என்றுதான் வருமோ? மதியை மட்டும் முற்றும் நம்பிக்கொண்டிருக்கும்வரை நீங்கள் அல்லாஹ்வின் சக்தியளவில்–குதுரத் அளவில் – போய்ச் சேருவதெப்படி? உங்களுடைய அனுஷ்டானங்களின் உள்ளும் புறமும் ஒத்த உண்மை, உங்களைச் சக்தியும் கிருபையும் நிறைந்த ரப்பின் வாயிலுக்குக் கொண்டு சேர்க்கும் நாளும் என்றுதான் வருமோ? மெய்ஞ்ஞான மெனும் சூரியன் உதயமாகி மக்களுக்கும் மாக்களுக்கு மிடையிலுள்ள வித்தியாசங்களை நீங்கள் உணரக்கூடிய நாளும் என்றுதான் வருமோ?

மெய்ப்பொருளாகிய இறைவன் சோதனைகளை உண்டாக்கும்போது அது கண்டு வெருண்டோடாதீர்கள். நீங்கள் காரணப் பொருளின் பக்கமே முற்றிலும் சார்ந்து விடுகிறீர்களா, அல்லது மெய்ப்பொருளின் பக்கம் சார்கிறீர்களா என அவன் பரீட்சிக்கிறான். காணக்கூடிய பொருளை - வெளிரங்கமான பொருளைப் பற்றிப்பிடிக்கிறீர்களா அல்லது காணக்கூடாத பொருளை-அகமியப் பொருளைப் பற்றிப்பிடிக்கிறீர்களா எனப் பரீட்சிக்கிறான்.

யா அல்லாஹ், எங்கள் அனைவரையும் கடும் சோதனைகளுக்கு ஆளாக்காது, உன் சமீபத்துவத்தையும் அருளின் அகமியங்களையும் அளித்தருள்வாயாக! உன்னை விட்டுத் தூரப்பட்டுக்கிடவாது, எங்களை ரட்சித்தருள்வாயாக! ஏனெனில், உன்னை விட்டுத் தூரமாய் இருப்பதற்கும் எங்களிடம் பலமில்லை; சோதனைகளைத் தாங்குவதற்கும் எங்களிடம் சக்தி இல்லை. சோதனையெனும் நெருப்பின்றியே உன் சமீபத்துவத்தை வேண்டி நிற்கிறோம்; சோதனை ஏற்படுவது-உன் நாட்டத்தில்-அவசியமாய் இருப்பினும், அந்நெருப்பால் எரிக்கப்படக்கூடாதவர்களாக ஆக்கிவிடுவாயாக! இப்ராஹீம்(அலை) அவர்கள் மீது நெருப்பைக் குளிருமாறு செய்ததுபோல, எங்களுக்கு வரும் சோதனைகளெனும் அக்கினியும் எங்களைத் தகிக்காது அருள்புரிவாயாக! இப்ராஹீம் (அலை) அவர்கள் அவ்வக்கினிக் குண்டத்திலும்கூடச் சர்வ சிருஷ்டிகளின் தேவையுமற்றிருந்தது போல, நாங்களும் தேவையற்றவர்களாகத் திகழுமாறு அருள்புரிவாயாக! அவர்களுக்கு உன் அன்பின் பரவசத்தையும் காரிய சித்திகளையும் பாதுகாப்பையும் அளித்ததுபோல எங்களுக்கும் அளித்தருள்வாயாக!

இப்ராஹீம்(அலை) அவர்கள் வழியில் அடியெடுத்து வைப்பதற்கு முதலாக வழித் தோழனையும், ஏகாந்தத்

துக்கு முதலாகப் பக்திப் பரிபூரணத்தையும், வியாதி வரு முன் பத்தியத்தையும், சோதனை வருமுன் பொறுமை யையும், விதிவசம் வருமுன் அதைக்கண்டு தலைசாய்க்கச் செய்யும் சித்தப் பொருத்தத்தையும் உண்டாக்கிக் கொண்டவர்களாக விளங்கினார்கள். உங்கள் மூதாதை யாகிய இப்ராஹீம் (அலை) அவர்களின் முன்மாதிரியி லிருந்து படிப்பினை பெறுங்கள்! அவர்களுடைய சொல் செயல் முறைகளை லட்சியமாகக் கொள்ளுங்கள்! அவர் கள் மீது சோதனைக் கடலிலும் எந்த இறைவன் அருள் சொரிந்தானோ, எந்த இறைவன் அவர்களைச் சோதனை யின் கடலில் நீந்தும்படி விதித்து அச்சோதனையிலும் கைகொடுத்தருளினானோ, எந்த இறைவன் பொய்யர்களை எதிர்க்கும்படி அவர்களுக்கு உத்தரவிட்டு அதிலும் பக்க பலமாய் இருந்தருளினானோ, எந்த இறைவன் அவர்களை மஹோன்னதங்களின்பால் ஏறும்படி செய்து அவர் களுக்கு வேண்டிய ஊட்டத்தையும் தந்தருளினானோ, எந்த இறைவன் சிருஷ்டிகளையழைத்து அள்ளிக் கொடுக் குமாறு அவர்களுக்கு ஆணையிட்டு அதற்குரிய சாத னங்களையும் திரட்டிக் கொடுத்தானோ அந்த இறைவ னுக்கே எல்லாப் புகழும்! இதுவே அகமியமான-மறை முகமான நன்கொடையாகும்.

அன்பர்களே, அல்லாஹ் நிர்ணயித்த தக்தீரும் செய லும் வரும்போது, அவன்முன் அமைதியுடன்-மௌன மாய் இருப்பீர்களாக. அப்போதுதான் அவன் புறத்தி லிருந்து அருள்மயங்கள் இறங்குவதை நீங்கள் காண முடியும். ஜாலினூஸ் எனும் ஞானியின் சிஷ்ய னைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? அச்சிஷ்யன் ஊமையன் போல அடக்கத்துடன் இருந்து ஜாலினூ ஸின் சகல ஞானங்களையும் எப்படிப் படித்துக் கொண் டான் என்று யோசித்துப் பாருங்கள். நீங்கள் அதிகம் வாயாடுவதாலும், எதிர்த்துக் கேள்விகள் போடுவதைக்

கொண்டும், கலக மனப்பான்மையைக் கொண்டும் இறைவன் புறத்திலிருந்து வரக்கூடிய மெஞ்ஞானங்களை அடையமுடியாது.

இறைவனே, உன் சித்தத்துக்குப் பொருந்தியவர்களாக வாழும் நிலைமையை எங்களுக்களித்து, உன்னிடம் எதிர்த்து வாதாடும் மனப்பான்மையை விட்டொழிக்கும் சக்தியைக் கொடுத்து, இம்மையின் நலன்களையும் மறுமையின் நலன்களையும் நரகவேதனையினின்று இரட்சிப்பையும் தந்தருள்வாயாக!

பன்னிரண்டாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545, துல்கஃதா பிறை 2 ஞாயிற்றுக் கிழமை காலையில் ஹஜ்ரத் அவர்கள் நிகழ்த்தியது:

அன்பர்களே, நீங்கள் மெய்ப்பொருளை விரும்புவதாகச் சொல்வதும் சரியாய் இருப்பதில்லை; நீங்கள் உண்மையிலேயே அவனை விரும்புபவர்களாய் இருப்பதுமில்லை. ஏனெனில், அல்லாஹ்வை விரும்புவதாகக் கூறிக்கொண்டு இதரவற்றைத் தேடி அலைபவனுடைய கூற்று பொய்க் கூற்றேயாகும்.

இம்மையைத் தேடுவோர் எண்ணிறந்தோர்; மறுமையை நாடுவோர் வெகு சிலரே. உண்மையிலேயே அல்லாஹ்வை நாடுபவர்களோ, அதிலும் சிலரே. சாதாரணமாகக் கிடைப்பதற்கரிதாய் இருப்பது அபூர்வமானதாகி விடுகிறது. குடும்ப வழிகளில், வம்ச பரம்பரைகளில் இத்தகைய மெய்ப் பக்தர்கள் ஒன்றிரண்டு பேர்களே காணுவதற்குக் கிடைக்கின்றனர். (இத்தகைய பக்தர்கள் உண்மையில் பூமியின் உயிர்ச் சத்தாக, மன்னர்களே போல் இருக்கின்றனர்.) அவர்களே நகரங்களினதும் நகரவாசிகளினதும்பொறுப்பாளர்களாகக்(ஆண்டவனால்) கருதப்படுகிறார்கள். அவர்களைக் கொண்டு மக்களை வந்

தணுகும் துயர்கள் தூரமாகிவிடுகின்றன; அவர்களை முன்னிட்டு மழையும் வருஷிக்கிறது; அவர்களுடைய புண்ணியத்தால் வானத்திலிருந்து இறைவன் மழைத் தாரைகளைக் கீழ்நோக்கி விழச்செய்து பூமியைப் பசுமைப் படுத்துகிறான்.

இத்தகைய பக்தர்கள் தம் ஆரம்ப நிலையில் ஒரு மலையிலிருந்து மறு மலைக்கு, ஒரு நகரிலிருந்து மறு நகருக்கு, ஒரு காட்டிலிருந்து மறு காட்டுக்கு ஓட முயற்சிப்பார்கள். எந்த இடத்தில் தம்மைப் பிறர் கண்டு கொள்ள நேரிட்டாலும் உடனே தம் இடத்தை மாற்றி விடுவார்கள். சகலவற்றையும் தமக்குப்பின் விட்டெறிந்து விட்டு, உலகத்தின் திறவுகோல்களை உலகத்தவரிடமே ஒப்படைத்துவிடுவார்கள். இவ்வாறு நிரந்தரமற்ற நிலையில் இவர்கள் இருந்து வருவது மாற்றப்பட்டு, கோட்டையால் சூழப்பட்டவர்கள்போல் எங்கும் நகர முடியாதவர்களாக ஓரிடத்தில் தரிபட்டுவிடுமாறு செய்யப்படுவார்கள். அருட்கள் யாவும் இவர்கள் உள்ளங்களை நோக்கிப் பாய ஆரம்பிக்கும். மறைமுகமான சாதனங்களால் சூழப்பட்டவர்களாக விளங்குவார்கள். விசேஷப் பாதுகாப்புக்குரியவர்களாகிவிடுவார்கள். சங்கையும் செய்யப்படுவார்கள்; கவனிக்கப்பட்டும் வருவார்கள்; சிருஷ்டிகளின்மீது அதிகாரிகளாக ஆக்கப்படுவார்கள். இவைகளெல்லாம் பகுத்தறிவுக்கு எட்டாதவை எனலாம். அந்நிலையில் இந்தப் பக்தர்கள் சிருஷ்டிகளின்மீது கவனம் செலுத்தக் கடமைப்பட்டு விடுகிறார்கள். அவர்கள் வைத்தியர்கள் போலாகிவிடுவதால், அவர்கள் முன் சிருஷ்டிகள் நோயாளிகள் போலவே இருக்கின்றன.

இத்தகைய பக்தர்களுள் நீங்களும் சேர்ந்தவர்களென்று வாயால் கூறிக் கொள்வதால் பயனென்ன? இத்தகையோருக்கு இருக்க வேண்டிய அடையாளங்களில் ஏதேனும் ஒன்று உங்களிடம் உள்ளதா? மெய்ப்பொரு

ளின் சமீபத்துவத்துக்கும் அருள் மயத்துக்கும் அடையாளங்கள் யாவை? அல்லாஹ்வின் சமூகத்தில் நீங்கள் அடைந்திருக்கும் பதவி யாது? உயர்வான ஆத்மீக ஆட்சி உலகில் உங்கள் பதவியாது? ஒவ்வோர் இரவிலும் எந்நிலையில் உங்கள் கதவுகள் அடைக்கப்படுகின்றன? நீங்கள் அருந்துவதும் குடிப்பதும் சந்தேகப்பொருளா? அல்லது சுத்தமான ஹலால் ஆன பொருளா? நீங்கள் இம்மையின் பற்றுதலுடன் இருப்பவர்களா? மறுமையின் பற்றுதலுடன் இருப்பவர்களா? மெய்ப்பொருளின் பற்றுதலுடன் இருப்பவர்களா? ஏகாந்தத்தில் உங்களின் தோழனும் அன்பனும் யார்?

பொய்யர்களே, ஏகாந்தத்தில் உங்கள் தோழர்களாய் இருப்பவை உங்கள் நப்ஸும், ஷைத்தானும், இச்சைகளும், உலகக் கவலைகளுமேயாம். பகிரங்கத்தில் உங்கள் தோழர்களாய் இருப்பவர்கள், மார்க்கத்துக்கு முரண்பட்டவர்களும் வீண்பேச்சுக்காரர்களுமான மனித ஷைத்தான்களேயாம். நான் குறிப்பிட்ட பக்தி நிலை வெறும் பேச்சால் உண்டாகிவிடுவதன்று. இது பற்றிய வாயாடுதல்கள் வீணே; அவற்றால் பயனொன்றுமில்லை.

அல்லாஹ்வின் சமூகத்தில், அமைதியும் அகந்தையற்ற நிலையுமுடையவர்களாகி, ஒழுக்கமின்மையிலிருந்து ஒதுங்கி இருங்கள். பேசுவதென்றால், அல்லாஹ்வையும் அவனுக்குரியவர்களையும் பற்றிப் பேசி, அதன்மூலம் புண்ணியம் பெறுங்கள். அதுவும் வெளிரங்கமாய் மட்டும் உரிமை பாராட்டிக் கொண்டு உள்ரங்கத்தில் ஒன்றுமில்லாதிருப்பதில் பயனில்லை. ஏனெனில் அகம் ஒத்திராத புறம் என்றுமே வீணானதுதான்.

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "நாள் முழுவதும் பிறரின் மாமிசத்தைப் புசிப்பவனுடைய (புறம்பேசித்

திரிபவனுடைய, நோன்பு, நோன்பாகாது'' என்றுரைத்திருப்பதை நீங்கள் அறியீர்களா? மேலும், வெறுமனே உண்ணுவதாலும், குடிப்பதாலும், நோன்பு திறப்பதாலும் மட்டும் நோன்பு முற்றுப் பெறுதென்றும், அத்துடன் பாவத்தைவிட்டு விலகியிருத்தலும் அவசியமென்றும் அவர்கள் போதித்துள்ளார்கள். புறம் பேசுவதைக் கை கழுவுங்கள். புறம்பேசுதல், நெருப்பு காய்ந்த விறகுகளைச் சாப்பிடுவதுபோல் நன்மைகளைச் சாப்பிட்டுவிடுகிறது. நேர்மையாளனாக ஆகிவிட்டவனிடம் புறம்பேசுதல் எனும் குணம் இருக்க முடியாது. புறம் பேசுபவன் என்று பேரெடுப்பவனுடைய பெயர் மக்களிடையில் மதிப்பிழந்துவிடும்.

மேலும், காமப் பார்வையை விட்டுப் பேணிக் கொள்ளும்படியும் உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில், அப்பார்வை உங்களுள்ளங்களில் பாவங்களின் வித்துக்களை விதைத்துவிடும். அதன் பலாபலன் இம்மையிலும் மறுமையிலும் நல்லதாய் இருக்காது.

பொய்ச் சத்தியம் செய்வதை விட்டும் பேணிக் கொள்வதும் அவசியமாகும். ஏனெனில், அது வாழ்மனைகளைப் பாழும் குட்டிச் சுவர்களாக்கி விடுகிறது; சொத்தினதும் மதத்தினதும் புண்ணியங்களை (பரக்கத்தை) இல்லாமலாக்கிவிடுகிறது. உங்களுள் வியாபாரத்தைப் பொய்ச் சத்தியம் கொண்டு நடத்தி தீனை நஷ்டத்துக்குள்ளாக்குபவர்களின் நிலையும் கைசேதத்துக் குரியதேயாகும். உங்களுக்கு உண்மையில் அறிவிருப்பின், அதிலுள்ள நஷ்டத்தின் பாரதூரத்தை உணரத் தவறமாட்டீர்கள். "இச்சரக்கு, சத்தியமாக வேறு எக்கடையிலும் இல்லை'' என்கிறீர்கள்; "சத்தியமாக இவ்வளவு அடக்க விலை'' என்று சொல்கிறீர்கள். சொல்வதெல்லாம் பொய்யென்று தெரிந்திருந்தும் சொல்கிறீர்கள்; உங்களுடைய பொய்க்கு ஆதாரமாய்

அல்லாஹ்வின் நாமத்தையும் சந்தியில் இழுக்கிறீர்கள். ஆனால், விரைவில் அந்தகர்களாயும் வீழ்ச்சியடைந்தவர்களாயும் ஆகிவிடுவீர்கள். அல்லாஹ்தான் உங்கள் மீது கருணை புரிந்து காப்பாற்றவேண்டும்.

மெய்ப்பொருளான இறைவன் முன் ஒழுக்கத்துடன் நடவுங்கள். ஷரீஅத்தின் ஒழுக்கங்களிலிருந்து ஒழுக்கம் பயிலாதவனுக்குக் கியாமநாளில் ஒழுக்கத்தின் பயிற்சி நெருப்பால் (நரகத்தால்) அளிக்கப்படும் என்பதை ஞாபகத்திலிறுத்துங்கள்.

[ஹஜ்ரத் அவர்கள் உபந்யாசித்துக் கொண்டிருந்த இச்சந்தர்ப்பத்தில், சபையினரில் ஒருவர், "நீங்கள் எச்சரித்த தீய குணங்களைக் கையாளுபவனுடைய நோன்பும் ஒலுவும் செல்லுபடியற்றவை என்று உத்தரவு பிறப்பிக்குமாறு பிரார்த்திக்கிறேன்" என்றார். இக் கேள்வியைச் செவியில் வாங்கிக் கொண்டு, ஹஜ்ரத் அவர்கள் தொடர்ந்து பேசியதாவது :]

அன்று; இதனால் நோன்பும் ஒலுவும் செல்லுபடியற்றதாகி விடமாட்டா. ஆனால், அவை சிறப்புப் பெறுவதற்குவேண்டிய லட்சணங்களைப் பற்றித்தான் நான் நல்லுபதேசம் செய்கிறேன் என்பதை மறந்து விடவேண்டாம்! (குறிப்பு : ஹஜ்ரத் அவர்களே ஷரீஅத்துக்கு மீறி உத்தரவு கொடுக்கப் பின்வாங்கி யிருக்கையில், சில போலி ஞானிகள் வாய் கூசாது இடும் உத்தரவுகள் பற்றி என்னென்பது ! — மொழிபெயர்ப்பாளன்)

அன்பர்களே, நாளை வருங்கால பூமியின் தரை மட்டத்திலிருந்து மறைந்து, சமாதியில் இடம் பெறப்போவதில் உங்களுக்குச் சந்தேகமா ? நாளை என்பது இருக்கட்டும்; அடுத்த கணத்திலேயே நீங்கள் அவ்விதம் மறைந்துவிடவும் கூடுமல்லவா ! அப்படியிருந்தும் நீங்கள் மறதிக்கு ஆளாகியிருப்பது முறையா ? உங்கள் உள்ளங்கள் ஏன் கடினமாகவே

இருக்கின்றன? உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை கல்லே போல் சமைந்து கிடக்கிறீர்களே! நானும் போதிக்கிறேன்; இன்னும் பலரும் போதிக்கத்தான் செய்கிறார்கள். அப்படியிருந்தும் நீங்கள் பழைய பிற்போக்கு நிலையிலேயே தானே நிற்கிறீர்கள். திரு குர்ஆனின் மொழிகள் உங்களுக்கு ஓதிக் காண்பிக்கப்படுகின்றன; நபியின் உபதேசங்களும் முன்னவர்களின் வரலாறுகளும் உங்களுக்கு எடுத்தோதப்படுகின்றன; அப்படியிருந்தும் அவற்றால் நீங்கள் கண் விழிக்கக் காணோம். வெட்கப்படவோ, உங்கள் நடைமுறையில் மாறுதல் ஏற்படவோ காணோம். நல்லுபதேசம் செய்யப்படும் இடத்தை அடுத்தும், படிப்பினை பெறாதவனே மானிடரில் கேடுகெட்டவனாவான்.

அன்பர்களே, அல்லாஹ்வின் அவ்லியாக் (நண்பர்) களை அலட்சியம் செய்வதானது மெய்ஞ்ஞானம் குறைவதற்குரிய வழியாகும். அத்தகைய நல்லோர்கள்மீது குறை கூற முற்பட்டுவிடுகிறீர்கள். "இவர்கள் ஏன் எங்களுடன் நெருங்கிப் பழகாதிருக்கிறார்கள், ஏன் எங்கள் சகவாசத்தில் அமரப் பின்வாங்குகிறார்கள்" என்று கூறுகிறீர்கள். இவ்வாறெல்லாம் நீங்கள் கூறுவதற்குக் காரணம், நீங்கள் உங்களையே அறியாதிருப்பதுதான். தன்னையறியாதிருந்தால், பதவிகளின் தராதரங்களும் தெரியாதே இருக்குமெனலாம். உங்கள் உலகையும் அதன் பலாபலனையும் மெய்காணாதிருக்கும் அளவுக்கு உங்களுடைய மறுமைபற்றியும் அறியாதிருப்பீர்கள்; மறுமை பற்றிய அறியாமை இருக்குமளவுக்கு மெய்ப்பொருள் பற்றிய ஞானமும் இல்லாமலேயே இருக்கும்.

உலக மாயையில் மூழ்கிக்கிடப்பவர்களே, விரைவிலேயே இம்மையிலும் மறுமையிலும் நஷ்டங்களின் வாயில்கள் உங்கள் முன் திறக்கப்படவிருக்கின்றன வென்பதை உணருங்கள். உங்கள் கேடுகெட்ட நிலைமை

கியாம நாளில் பகிரங்கமாக வெளியாக விருக்கிறதென் பதையும் உணருங்கள். கியாம நாளோ உங்களுக்கு நஷ்ட நாளாக-அவமான நாளாக இருக்கு மென்பதை உணருங்கள். மறுமை வருமுன் உங்கள் நப்ஸிடம் கணக்குக் கேளுங்கள். உலகில் காணப்படும் தெய்வ அன்பையும் இரக்கத்தையும் கண்டு ஏமாற்றமடைய வேண்டாம். பாவங்களிலும் கலகங்களிலும் அநியாயங் களிலும் கேடுகெட்டவர்களாய்த் தரிபட்டு நிற்கிறீர் கள். சிலருக்கு மரணத்துக்கு முன் ஜுரம் வந்து மரணத்தின் முன்னறிவிப்பாக இருப்பதுபோலப் பாவங் கள் 'குபிரு'க்குரிய முன்னறிவிப்புகளாய் இருக்கின்றன. மரணம் வருமுன், ஆத்மாக்களைக் கைப்பற்றும் 'மலக்கு' வருமுன் - பாவங்களிலிருந்து மீட்சி பெற்றுக்கொள் ளுங்கள்.

வாலிபர்களே, (பாவங்களிலிருந்து) மீட்சி (தவ்பா) பெறுங்கள். மெய்ப்பொருளாகிய இறைவன், நீங்கள் மீட்சிப் பெறுவதற்குத் தூண்டுதல் பெறுமாறு உங்களைச் சோதனைக்கு ஆளாக்குவதை நோட்டமிடுங்கள். தீமை களிலேயே மீண்டும் தரிபாடாக வேண்டாம்.

விசேஷமான நல்லடியார்களன்றி, மற்றோர்க்கு வரும் சோதனைகள் யாவும் இக்காலத்தில் தண்டனைகளாகவே இருக்கின்றன; அச்சோதனைகள் அவர்களுக்கு நன்மை யாக முடிவதில்லை; பாவங்களின் பகரமான தண்டனை யாகவே இருக்கின்றன. அதுபோலவே பெரும்பான்மை யானவர்களுக்கு உண்டாகும் பேறுகளோ, பதவிகளோ, தெய்வ சங்கையோ குறிப்பிடத்தக்கவையாய் இருப் பதுவுமில்லை.

ஆயினும், அல்லாஹ்வுக்குரியவர்கள் சோதனை களுக்கு உட்படுத்தப்படுவது, அவர்கள் மன்னனின் முன் அவர்களின் பதவி உயர்வதற்காகவே யல்லாது வேறன்று; இத்தகைய சோதனையான நேரத்தில் அவர்கள் பொறு

மையைக் கடைப்பிடிப்பார்கள்; ஏனெனில், அவர்களுக்குத் தேட்டமாய் இருப்பது இறைவன் ஒருவன்தான். இவ்வாறு சோதனையான சமயத்தில் பொறுமையுடனிருக்கும் நிலையில் அவர்கள் குறைவற்றிருந்தால் அவர்கள் அரசை அடைகிறார்கள். குறைவிருந்தால், தாம் இன்னும் அழிவின் நிலையிலேயே இருப்பதாக அவர்கள் நினைப்பார்கள்.

எனது அல்லாஹ்வே, அவர்களை அழிவுக்கு ஆளாக்காதிருக்கப் பிரார்த்திக்கிறேன். உன் சமீபத்துவத்தையும், இம்மையிலும், மறுமையிலும்- இம்மையில் அகக்கண் கொண்டும், மறுமையில் புறக்கண் கொண்டும்-உன் தரிசனம் பெறுவதையும் அவர்களுக்கு அருள்வாயாக!

சமூகத்தவர்களே, அல்லாஹ்வின் அருளும் கருணையும் வருமோ வராதோ என்று நம்பிக்கை இழந்து விடாதீர்கள்; ஏனெனில், அவன் சமீபமாகவே இருக்கிறான். நம்பிக்கையை இழந்து விடாதீர்கள்; ஏனெனில், அல்லாஹ்வே சிருஷ்டிகர்த்தன். புதிய நிலையை அவன் சிருஷ்டித்துக் கொடுத்துவிடில் அதில் ஆச்சரியம் என்ன இருக்க முடியும்!

சோதனை யினின்றும் வெருண்டோடாதீர்கள். பொறுமையைக் கொண்டு ஏற்கப்படும் சோதனையே சர்வ நன்மைகளினதும் அஸ்திவாரமாகும். நபித்துவத்தினதும், தெய்வத் தோழமையினதும் (விலாயத்), தெய்வ ஞானத்தினதும் (மஃரிபத்), தெய்வ அன்பினதும் அஸ்திவாரமாய் இருப்பது சோதனையேயாகும். ஆகவே, சோதனையில் பொறுமை யில்லாது போகும்போது அஸ்திவாரமே இல்லாத நிலையாகிவிடுகிறது. அஸ்திவாரமின்றிக் கட்டடம் அந்தரத்தில் நிற்பதெப்படி?

சோதனையினின்றும் ஆபத்தினின்றும் பயந்தோடுகிறீர்கள். காரணம் ஞானத்தினதும், தெய்வத் தோழமை

யினதும், தெய்வ சமீபத்துவத்தினதும் தேவையை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள். இதை விடுத்து, பொறுமையைக் கைக்கொள்ளுங்கள்; நடைமுறை அனுஷ்டானங்களைக் கடைப்பிடியுங்கள். இதயமும், உள்ளமும், ஆத்மாவும் கொண்டு தெய்வ சமீபத்துவத்தின் தலைவாயிலின் பக்கம் செல்லும்வரை இவ்விதமிருந்து வாருங்கள்.

அறிஞர்களும் (உலமா), தெய்வத் தோழர்களும் (அவ்லியா), புதிய ஜீவன் பெற்றவர்களும் (அப்தால்) நபிமார்களின் வாரிசுதாரர்களாவர். நபிமார்கள் வியாபாரத்தின் பொறுப்பாளர்களெனின், இவர்கள் முன் சென்று விலை கூறுபவர்களாவர்.

மூமின்கள் அல்லாஹ்வன்றி வேறெதற்கும் பயப்படவு மாட்டார்கள்; வேறெதையும் பொருட்படுத்தி எதையும் அதினின்று எதிர்பார்க்கவு மாட்டார்கள். அதற்கான சக்தி அவர்கள் இதயத்திலும் உள்ளத்திலும் அளிக்கப்பட்டிருக்கிறது. அல்லாஹுத் தஆலா அவர்களைத் தன் பக்கம் உயர்த்திக் கொள்ளும்போது, அவர்களுடைய உள்ளங்கள் அவனிடமிருந்து சக்தியை அடைவதில் அதிசயமென்ன விருக்கிறது! அவர்களோ என்றும் அவன் சந்நிதானத்திலேயே இருப்பவர்களாவார்கள். அவர்களுடைய உடல் பூமியிலிருப்பினும் உள்ளம் மெய்ப்பொருளின் சந்நிதானத்திலேயே இருக்கும். அல்லாஹுத் தஆலா அருளியிருப்பதாவது: "நிச்சயமாக, அவர்கள் நம் சந்நிதியில் விசேஷமானவர்களாவார்கள்; நன்மையாளர்களாவார்கள்; அவர்கள் தம் தம் காலத்தில் பொறுக்கி எடுக்கப்படுகிறார்கள்." அவர்களின் உள்ளங்கள் விசேஷச் சிறப்புப் பெற்றுள்ளன; அவர்களின் வெளிரங்கம் ஜோதி பெற்றதாக விளங்குகிறது. இதனாலேயே சிருஷ்டிகளிலிருந்து அவர்கள் தனிப்பட்டவர்களாகிவிடுகிறார்கள்; பிறர் விரும்புவன அவர்களால்

விரும்பப்படாது போய்விடுகின்றன. அவர்கள் முன் செல்லச்செல்ல, வந்த வழிகளில் புல்லடைந்துபோய்விடு கிறது; பிறகு அவர்கள் வந்த வழியே திரும்ப நேரிடுவ தில்லை. அவர்களோ ஏகாந்தத்தை உவந்தவர்களாயும் ஜன சஞ்சாரமற்ற வனாந்தரங்களையும் சமுத்திரக்கரை களையும் விரும்புபவர்களாயும் இருக்கின்றனர். காட்டுச் செடி கொடிகளை உணவாய்ப் பெற்று ஏரி குளங்களில் குடிப்பைப் பெற ஆரம்பித்துவிடுகின்றனர். காட்டுப் பிராணிபோல் ஆகிவிடும் அவர்களின் இந்நிலைமையிடை, மெய்ப்பொருளான இறைவன் அவர்களைத் தன் சமீபத்து வத்துக்கும் அன்புக்கும் உரித்தானவர்களாக்குகிறான். அவர்களின் உடல்களை நபிமார்களினதும், சத்தியசீலர் களினதும் (சித்தீக்), தியாகிகளினதும் (ஷஹீது) உடல்க ளுடன் சேர்த்து எழுப்பப்படுமாறு செய்கிறான்; அவர் களின் அகத்தைத் தன்னிடம் தரிபடச் செய்கிறான். அவர்களும் இரவும் பகலும் ஏகாந்த நிலையில் அவன் தொண்டிலேயே தரிபட்டு நிற்பார்கள். பக்தர்களின் இன்பம், அன்பை நாடுபவர்களின் மனமகிழ்ச்சி மெய்ப் பொருளான இறைவனாகவே இருக்கிறான்.

அன்பர்களே, (இப்புவியில்) இனிப்பும் கசப்பும், சீரும் கேடும், சுத்தமும், அசுத்தமும் ஒருங்கே இருப்பது அவசி யமே. இந்நிலையில் நீங்கள் பரிபூரண சுத்தத்தை நாடினால் உங்கள் உள்ளத்தில் சிருஷ்டிகளின் தொடர்பற்றவர் களாய் மெய்ப்பொருள் சம்பந்தமுள்ளவர்களாய் ஆகுங்கள். உலகிலிருந்து அப்புறப்பட்டவர்களாகி உற்றார், உறவினரை விட்டுவிட்டு, அவர்களை இறைவன் பொறுப்பில் சாட்டிவிட்டு, அனைவரை விட்டும் உள்ளம் நிர்வாணம் பெற்று வெளியாகிவிடுமாறு செய்து மறுமை யின் வாயிலண்டை வாருங்கள். மறுமை மயத்திலேயே குடிகொண்டிருந்தும் அங்கும் தன் இறைவனை அடை யாத நிலைமையில் அங்கிருந்தும் வெருண்டோடி மெய்யின்

சமீபத்துவத்தைத் தேடியவர்களாய் வெளியேறுங்கள். அவனை நீங்கள் அடைந்துவிடின் அப்போதுதான் அவன் புறத்திலிருந்து பூரணப் பரிசுத்தமென்பது உங்களுக்கு உரித்தாகக்கூடியதாய் இருக்கும்.

அல்லாஹ்வின் அன்பன் பிறவற்றைக் கையிலேந்தி என்ன செய்யப் போகிறான்? சுவர்க்கமென்பது பதவி தேடுபவர்களுடைய இடமேயாகும்; வியாபாரிகளின் நிலையாகும். அவர்கள் உலகத்தைத் துறந்து சுவர்க்கத்தைப் பெறுகிறார்கள். இதனாலேயே மெய்ப்பொருளான இறைவன் "நப்ஸ் நாடுபவற்றைக் கொண்டு கண்கள் குளிர்ச்சி அடையும் யாவும் சுவர்க்கத்தில் உள்ளன" என்றுரைத்துள்ளான். இந்த ஆயத்தில் இறைவன் இதயத்தை (கல்பை)க் குறிப்பிட்டிருக்கிறானென்று பாருங்கள். உள்ளத்தை (பாத்தின்)க் குறிப்பிட்டிருக்கிறானென்றும் நோக்குங்கள். மறைமுகத்தை (ஸிர்)க் குறிப்பிட்டிருக்கிறானென்றும் பாருங்கள். அன்று! ஏனெனில், சுவர்க்கமென்பது நோன்பு நோற்றவர்கள், 'தஹஜ்ஜத்' என்னும் இரவு விழித்துப் புரியும் தொழுகையாளர்கள், இச்சைகளையும் இன்பங்களையும் துறந்தவர்கள் ஆகிய நல்லடியார்களுக்கு அவர்கள் இம்மையில் துறந்த உணவு, பூங்காவனம், இல்லம் ஆகியவற்றிற்குப் பகரமாகக் கிடைக்கும் பேறேயொழிய வேறன்று.

ஆனால், இதயம் பொங்கி உள்ளம் விழித்தவர்களான இறைவனின் அன்பர்கள் வேண்டி நிற்கும் பதில் மெய்ப்பொருளின் சமீபத்துவமும் தரிசனமுமேயாகும்.

உங்களிடமிருந்து நான் எதிர்பார்ப்பது வெறும் வாய்ப்பேச்சையன்று; அனுஷ்டானத்தைத் தான். ஏனெனில், அல்லாஹ்வுக்கென்றுமட்டும் அனுஷ்டானங்களில் ஈடுபடக்கூடிய அறிஞர்கள் அடிபட்டும் வாய் திறக்காத மான்களைப் போல், மிதிபட்டும் வெட்டப்பட்டும்

மௌனமாகவே இருக்கும் பூமியேபோல் மௌனத்தைக் கையாளுபவர்களாய் இருப்பார்கள்.

அல்லாஹ்வுக்குரியவர்கள் அல்லாஹ்வல்லாதவற்றைக் கண்கொண்டு பார்ப்பதுமில்லை; அவற்றுக்குச் செவி சாய்ப்பதுமில்லை. அவர்களுக்கு நாவில்லை; இதயமுண்டு. அவர்கள் தம்மையும் பிறரையும் அழித்தவர்களாவார்கள்; சதா அதே நிலைமையிலேயே இருப்பார்கள். பிறகு அல்லாஹ் நாடும்போது அவர்களை உயிர்ப்பிக்கிறான்; அவர்களின் நாவை அசையச் செய்கிறான். அன்பில் மதி இழந்தவர்கள் போல் அவர்கள் ஆகிவிடுகின்றனர். மன்ஞதி மன்னனான ரப்பு அவர்களைத் தன் பக்கல் இழுத்ததும் கருணையின் கரத்தால் அவைகளை அசைவுறச் செய்கிறான். தனக்காக வென்றே இவ்வாறு அவர்களுக்குப் புத்துயிரூட்டுகிறான். அவர்களைத் தனக்கென்று விசேஷமாக இருப்பவர்களாக்கிவிடுகிறான். மூஸா நபியை நோக்கி "உம்மை என் சொந்தத்துக்கென்றே சிருஷ்டித்தேன்" என்றருளியது போல் அவர்களையும் ஆகுமாறு செய்துவிடுகிறான். இத்தகைய இறைவனோ எந்த ஒப்புவமையுமற்றவன்; சகலவற்றையும் கேட்டுக் கொண்டிருப்பவன்; அறிபவன். கஷ்டமின்றியே சுகத்தையும், மதிமயக்கமின்றியே அன்பையும், குறைவின்றியே அருட்கொடைகளையும், துயரமின்றியே இன்பத்தையும், கசப்பில்லாத இனிப்பையும், அழிவில்லாத ஆட்சியையும் உண்டாக்கிக் கொடுக்கக்கூடியவன். "இவன் ஆதிக்கமென்பது மெய்ப்பொருளான அல்லாஹ்வுக்கே உரியது" (திரு குர்ஆன்) என்பது இறைவனின் ஒரு வாக்கியம். அவனையடைபவர்களுக்கு இப்புவியிலேயே பேரின்பம் உண்டாகிவிடுகிறது. இது தவிர உள்ள எந்நிலைமையிலும் உலகில் பூரண இன்பத்தை அடைவது முடியாத விஷயம். ஏனெனில் இவ்வுலகமானது ஆபத்துக்கள், துயரங்கள் என்பவற்றின் ஸ்தலமாகும்; ஒரு நாள் வெளியேறிவிட வேண்டிய இடமாகும்.

ஆகையால், உங்கள் உள்ளத்திலிருந்தும், கரங்களிலிருந்தும் உலகத்தை எடுத்தெறிந்துவிடுங்கள். அது முடியாது போய்விடின், கரங்களில் உலகம் இருக்க விட்டு விட்டு, உள்ளத்திலிருந்தாவது அதை அப்புறப்படுத்தி விடுங்கள். பிறகு, சக்தி அதிகரித்தபின் கரங்களிலிருந்தும் அதை எடுத்தெறிந்து, அல்லாஹ்வுக்குரியவர்களான ஏழைகளுக்குக் கொடுத்துவிடுங்கள். அப்படிக் கொடுத்து விட்டாலும், உலகில் உங்களின் பங்கு எதுவோ அஃது எங்கும் சென்று விடப்போவதில்லை. நீங்கள் செல்வர்களாய் இருப்பினும், ஏழைகளாயிருப்பினும், துறந்தவர்களாயிருப்பினும், ஆசைப்படுபவர்களாயிருப்பினும் வரவேண்டிய விதிப்பயன்கள் வந்தே தீரும். (இம்மை மறுமையின் நலன்களின்) அஸ்திவாரம், இதயம், உள்ளம் ஆகியவை சீருடன் - சுத்தமுடன் இருப்பதுவேயாகும். அறிந்து அதன்படி அனுஷ்டானம் செய்து, அனுஷ்டானத்தில் நிஷ்களங்க நிர்ணயம் பெற்றிருந்து, மெய்ப்பொருளை மெய்யாகவே தேடுவது கொண்டே இச்சுத்தம் ஏற்படுவதாய் இருக்கிறது.

அன்பர்களே, முதலில் மார்க்க ஞானம் பெற்று, பிறகே துறவறத்தை அனுஷ்டிக்கவேண்டுமென்று நீங்கள் உபதேசிக்கப்பட்டதில்லையா? முதலில் வெளிரங்கமான கல்விகளைக்கொண்டு ஞானம் பெற்று, பிறகே மறைவான ஞானம் பெறுவதற்காகத் துறவறம் பூணவேண்டும். பகிரங்கமான ஷரீஅத் சட்டங்களின்படி ஒழுகி வாருங்கள். அதுவே இறுதியில், நீங்கள் கற்றறியமுடியா ஞானத்தளவில் உங்களைக் கொண்டு சேர்க்கக்கூடியதாகும். ஜோதி இரு திறப்பட்டதாகும்: வெளிரங்கத்தின் ஜோதி ஷரீஅத் ஆகும்; மறைமுகத்தின் ஜோதி மெஞ்ஞானம் ஆகும். (இரண்டும் ஒருங்கே இன்றியமையாதவையாகும்.) மறைமுக ஜோதியே உங்களுக்கும் உங்கள் இறைவனுக்குமிடையே நிலவவேண்டிய

ஜோதியாகும். நீங்கள் கற்ற ஞானத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரும் அளவுக்கே மெய்ப்பொருளான இறைவனளவில் செல்லும் வழி நெருங்கிக்கொண்டு வரும்; விசாலமாகிக்கொண்டு வரும். அவனளவில் செல்லும் வழியின் கதவு திறந்துவிடும்; அக்கதவு உங்களுக்கென பிரத்தியேகமானதாகிவிடும்.

எங்கள் இறைவனே, இம்மையின் நன்மையையும், மறுமையின் நன்மையையும், நரக வேதனையினின்று விமோசனத்தையும், ஒருங்கே எங்களுக்கு அளித்தருள்வாயாக!

பதினேழாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 துல்கஃதா பிறை 14 வெள்ளிக்கிழமை ஸுப்ஹு தொழுகைக்குப் பிறகு, மதரஸா மஃமூராவில் ஹஜ்ரத் அவர்கள் நிகழ்த்தியது :

உங்களுடைய இரணத்தைப் பற்றிய கவலைக்கு இடங்கொடுக்க வேண்டாம். நீங்கள் அதைத் தேடுவதைவிட, இரணமே உங்களைத் தேடிக் கொண்டிருப்பதாயிருக்கிறது. ஒரு நாளின் இரணம் கிடைத்துவிடும்போது மறு நாளின் இரணம் பற்றிய கவலை ஏன்? சென்ற தினம் வந்து சென்றதுபோல், வரும் தினம் வரட்டும். நாளை என்பது உங்களளவில் வருமா, வராதா என்பது என்ன நிச்சயம்? ஆகையால், இன்றைய நினைவில் - முயற்சியில் மூழ்குங்கள். நாளையின் நினைவு ஏன்? நீங்கள் மெய்ப்பொருளை உண்மையிலேயே அறிந்தவர்களாயின், இரணத்தைப்பற்றிய கவலையை விட்டு, அவனுடன் கவலையற்றிருங்கள். அவனை யறிந்தவர்கள் இரணத்தைப் பற்றிக் கவலைப்படவும் முடியுமோ? அவனை உண்மையில் அறிவது மனத்தைச் சாந்தப்படுத்தி விடுகிறது; நாவை மௌனமாக்கிவிடுகிறது.

மெஞ்ஞானிகள் தெய்வ சந்நிதானத்திலிருப்பவர்களாக - மௌனிகளாக - இருப்பார்கள். ஆனால், தெய்வ நாட்டம் அவர்களை மக்களளவில் ஏவி அனுப்பும் போதே, தங்களின் வாய்ப்பூட்டைத் திறப்பார்கள். உதாரணமாக, மூஸா (அலை) அவர்கள் மாடுகளைக் கண்காணித்துக்கொண்டிருந்த காலத்தில் வாய் தெத்திப் பேசும் இயல்புடையவர்களாயிருந்தார்கள். ஆனால், அவர்களை இறைவன் பொறுப்புகொண்டு ஏவியபோது, "என் நாவிலிருந்து பூட்டை எடுத்துவிடு" என்று பிரார்த்தித்தார்கள்; ஏனெனில், அவர்கள் ஏகாங்கியாய் இருந்தவரை அவர்களுக்குப் பேச்சின் அவசியம் இல்லாதிருந்தது. ஆனால், மக்களுக்கிடையில் வழிநடத்தும் பொறுப்பு வந்ததும், அவர்கள் பேசும் வரம் கேட்டதும், பிறரைவிட அதிகத் தீவிரமாயும் அதிக வன்மையுடனும் பேசுபவராக ஆகிவிட்டார்கள். இயற்கையிலேயே வாக்கு வன்மையுடன் தோன்றிய மூஸா (அலை) சிறுபிள்ளையாயிருக்குங்கால், பிர்ஔனுடனும் ஆஸியாவுடனும் பேசுங்காலத்து, தெய்வ சங்கல்பத்தால் அவர்களுடைய வாயில் நெருப்புப் பட்டு வெந்து விட்டதனாலேயே அவர்களுக்குத் தெத்துவாய் உண்டாகியிருந்தது.

அன்பர்களே, உங்களுள் பெரும்பாலோருக்கு அல்லாஹ்வைப்பற்றிய ஞானமுமில்லை; நபிமார்களின் பிரதிநிதிகளாயிருக்கும் வலிமார்களைப்பற்றிய ஞானமுமில்லை. அரிசியில்லாது வெறும் உமியைப் பற்றிப் பிடித்து நிற்பவர்களாக வாழ்ந்து வருகிறீர்கள். குட்டிச் சுவர்போலும், வரண்டு உதிர்ந்துபோன விருட்சம்போலும் விளங்குகிறீர்கள். மானிடனுடைய இதயத்தின் நிறைவும் செழிப்பும் இஸ்லாத்தைக் கொண்டே, இஸ்லாத்தின் அகமியத்தை அடைவது கொண்டே ஏற்படும். இஸ்லாம் என்றாலென்ன? சிரம் சாய்த்தலே இஸ்லாமாகும்; தன்னை முற்றும் தெய்வத்தின் வசம் ஒப்புவித்துவிடு

வதே இஸ்லாமாகும்; இதற்குப் பகரமாக இறைவன் தன்னையும் சிருஷ்டிகளையும் உங்களுக்கு உரித்தாகச் செய்வான்.

இஸ்லாம் என்பது இறைவன் வசம் தன்னை ஒப்பு வித்துவிடுவதாகும். நீங்கள் உங்களை அவன் வசம் ஒப் படைத்துவிடும்போது, அவன் உங்களைத் திரும்பவும் உங்களிடமே ஒப்படைத்தருள்வான். மற்றவர்களையும் உங்கள் வசம் ஒப்படைப்பான். ஆகையால், சிருஷ்டிகளை விட்டு ஏகாந்தத்திலாகி அவன் முன் அடிபணிந்து விடுங் கள். பிறகு அவன் நாடியபோது, உங்களுக்கு அவனே போர்வை யளிக்கட்டும்! அவனே உங்களைச் சிருஷ்டிகளி டம் அனுப்பட்டும்! பிறகு சிருஷ்டிகளுக்கிடையில் அல் லாஹ்வினுடையவும் அவன் திருத் தூதருடையவும் சித் தத்துக்கிசைந்தவர்களாக நீங்கள் வாழ்வு நடத்துவீர் கள். அதன் பின், அவன் புறத்திலிருந்து வரும் உத்தர வின்றி எதையும் செய்யக்கூடாதவர்களாகிவிடுவீர்கள். இந்நிலையில் மூஸா (அலை) அவர்கள் "இறைவனே, நீ மகிழ்ச்சியடைவான்வேண்டி விரைவில் வந்துவிட்டேன்" என்றுரைத்ததுபோல் உரைக்கக்கூடியவர்களாகிவிடுவீர் கள். சாதனங்களைத் துறந்து, இம்மை மறுமையை அலட்சியஞ் செய்து, மெய்ப்பொருளொன்றே லட்சிய மெனக் கொண்டு, அனைத்தையும் விட்டு அவன் சந்நிதா னத்தில் நிற்பவர்களாகிவிடுவீர்கள்.

அறிவீனர்களே, நான் வருணித்துள்ள இந்நிலையை நீங்கள் அறியவில்லை. நீங்களோ, அகங்காரம், மமதை, இச்சை ஆகியவற்றின் அடிமைகளாகக் கிடக்கிறீர்கள். நன்மையும் தீமையும் சிருஷ்டிகளின் புறத்தாலானவை என்ற நினைவில் இறைவனுக்கிணை வைப்பவர்களாகக் கிடக்கிறீர்கள். உங்களுள் சிலர் சுவர்க்கத்தின் அடிமை களாய் இருக்கலாம்; சுவர்க்கம் புகும் ஆசைக்கு ஆளாகிக் கிடக்கலாம். மற்றும் சிலர் நரகத்தின் அடிமைகளாய்

இருக்கலாம்; நரகத்துக்குப் பயந்தவர்களாக வாழலாம். பயத்துக்கும் பிரியத்துக்குமுரிய ஏகப்பொருள் மெய்ப் பொருளேயாகும். நீங்கள் விரும்புவதும் பயப்படுவதும் அவனல்லாத ஏனையப்பொருட்களாகவே இருக்கின்றன. உள்ளங்களையும் நேத்திரங்களையும் புரட்டிவிடவல்ல - 'ஆகு' என்ற ஒரு சொல்லால் உற்பத்தி செய்யவல்ல- ஏகனை நடைமுறையில் நீங்கள் மறந்துவிட்டது ஏன்?

அன்பர்களே, நீங்கள் புரியும் வணக்கங்களின் நினைவிலும் தற்பெருமை கொண்டு விடாதீர்கள். அவ்வணக்கங்களை ஏற்றுக்கொள்ளுமாறு ஆண்டவனிடம் பிரார்த்தனை புரியுங்கள். அவன் நாட்டம் உங்கள் நிலையை மாற்றிவிடாதிருக்குமாறு பயபக்தியுடன் நடந்து கொள்ளுங்கள். அவன்மீது பயபக்தி கொள்வதை எந்நிலைமையிலும் மானிடன் கைவிடக் கூடாது. உண்மையிலேயே அல்லாஹ்வை யறிந்தவன் எந்நிலைமையிலும் பெருமைக்கு இடங்கொடான்; தன் தீனைக் காப்பாற்றிக்கொண்டு, தெய்வ சம்பந்தத்தைச் சீர்பெறவைத்துக்கொண்டு, இப் புவியிலிருந்து செல்லும்வரை மதி மயக்கத்துக்கு இடங் கொடான்.

சமூகத்தவர்களே, இதயத்தை அடிப்படையாகக் கொண்ட நல் வணக்கங்களையும், கலப்பற்ற நல்லுணர்ச்சிகளையும் கடைப்பிடியுங்கள். கலப்பற்ற மெய்யுணர்ச்சியென்பது யாது? அல்லாஹ்வன்றிச் சகலவற்றினின்றும் புறம்பாயிருக்கக்கூடிய உணர்ச்சியே கலப்பற்ற மெய்யுணர்ச்சியாகும். அல்லாஹ்வின் மெஞ்ஞானமே உண்மை லட்சியமாகும். அங்ஙனமிருந்தும் உங்கள் நிலைமை என்ன? உங்களுள் பெரும்பாலோர் சொல்லிலும், செயலிலும், ஏகாந்தத்திலும், பகிரங்கத்திலும் பொய்யர்களாகவே வாழ்கிறீர்கள். உங்கள் சொல் அனுஷ்டானமற்ற வெறும் வார்த்தையாயும், உங்கள் அனுஷ்டானங்கள் கலப்பற்ற நிர்ணயமும் தவ்ஹீதுமற்றவையாயும்

இருக்கின்றன. நான் உங்களுக்குக் கற்பித்துக் கொடுக்க விரும்பும் உறைகல்லையெடுத்து, அது கொண்டு பரிசீலனை செய்யாது நீங்கள் ஏமாற்ற முயன்றாலும் அதனால் யாது பயன்? ஊற்றுக்கு நிற்காத உங்களுடைய வணக்கங்களை ஆண்டவன் அங்கீகரிப்பானென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? கூடிய சீக்கிரம் நேரம் வரும் போது - நெருப்பின் ஜுவாலை சமீபத்திலிருக்கும்போது உங்களுடைய கையிருப்புகளின் சாயம் வெளியாகிவிடும். கலப்புள்ள கருமங்கள் அனைத்தும் அங்கீகரிக்கப்படாது எறியப்படும். ஏனெனில், அல்லாஹ்வை முன்னிட்டே யல்லாத அனுஷ்டானங்கள் அனைத்தும் பொய்யாகவே இருக்கின்றன. எனவே, வணக்கத்தில் ஈடுபடுங்கள்! பக்திமான்களாகத் திகழுங்கள்! நிகரற்ற இறைவனைப் பார்க்கவும் கேட்கவும் கூடிய நாயனைத் தேடுபவர்களாக வாழுங்கள்! முதலில் அவனல்லாதவற்றை இல்லாதொழியுங்கள்; அதன் பிறகு அவன் ஞாபகத்தை ஊர்ஜிதப் படுத்துங்கள். இறைவனில் அவனுக்கு அருகதையற்ற குணங்கள் இல்லையெனத் திட்டப்படுத்தி, அவன் தனக்கென விரும்பிக்கொண்ட உயரிய குணங்களை அவனில் உண்டு என ஊர்ஜிதப்படுத்துங்கள். அவனை வருணிப்பதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தகுதியென உரைத்துள்ள குணங்களே அவனில் உண்டு என ஊர்ஜிதப்படுத்துங்கள்.

எப்போதும் அல்லாஹ்வுடன், அவன் ரஸூலுடன், அவன் நல்லடியார்களுடன் வாழ்வு நடத்துபவர்களாகுங்கள். நல்லொழுக்கமும் பயபக்தியுமுள்ளவர்களாகுங்கள்.

உங்களுக்குக் கதிமோட்சமும் ஈடேற்றமும் வேண்டுமெனின், என்னிடம் வந்து அதற்குரிய ஒழுக்கத்தையும் வழிகளையும் கற்றுக்கொள்ளுங்கள்; வர விரும்பாதவர்கள் வாராதிருக்கட்டும். உங்களுள் பலர் வீண் கருமங்களுக்கா

ளாகும் சுபாவமுடையவர்களாயிருப்பினும், என் முன் வரும்போதாகிலும் அச்சுபாவங்களைக் களைந்தவர்களாக வாருங்கள். ஏனெனில், சில சமயங்களில் சங்கைக்குரிய பலர் அரூபியாக எனது சபையில் சமூகங் கொடுக்கிறார் களென்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்! இது உங்களுடைய புலனுக்குப் புறம்பானதாய் இருக்கலாம். ஒவ்வொரு பதார்த்தத்தையும் அதைச் சமைத்தவனே நன்கறிவான். விருந்து அழைப்பு விடுபவனே விருந்துக்கு எவரெவர்கள் சமூகங் கொடுப்பார்களென்று அறிந்திருப்பான். உங்களுடைய உலகப் பற்றானது உங்களுடைய கண்களை மறைத்துள்ளது; இதனால் நீங்கள் பார்க்கக் கூடாத நிலையிலுள்ளீர்கள்.

உலகிலிருந்து கடைத்தேறுதல் உங்கள் கடமை; ஏனெனில், உலகம் உங்கள்மீது தன் ஆதிக்கத்தைச் சிறுகச் சிறுக அதிகரித்து, இறுதியில் உங்களைப் பலி கொண்டுவிடும். உங்களுடைய மதியைப் போதையால் மயக்கி, உங்கள் கால் கைகளை மடக்கிக் கண்களின் பார்வையை மங்கச் செய்துவிடும். மரணத்துக்குப் பின் கபுரில் இத்தகைய போதை நீங்கும்போது, உலகம் என்ன நிலைக்குக் கொண்டு சேர்த்திருக்கிறதென்பதைக் காண முடியும். உலகத்தின்மீது பற்றுக் கொண்டு அதைத் துரத்திச் சென்று சேமிப்பதன் முடிவு இதுவாகவே இருக்கிறது.

அன்பர்களே, உலகப் பற்றிருப்பின் உங்கள் ஈடேற்றம் எங்கு வரப்போகிறது? அல்லாஹ்வுடைய பக்தன் என்று தன்னையழைத்துக் கொள்பவன், அவனல்லாத எதன்மீதும் - மறுமையேயாயினுஞ் சரி - பற்றுக்கொண்டால் அவன் ஈடேற்றம் பெறப் போவதில்லை. ஞானமுள்ள பக்தர்கள் அவனல்லாத எதையும் தம் பற்றுதலுக் குரித்தாகக் கொள்வதில்லை. இத்தகைய பற்றுதலுண்டாகி நிலைப்பட்டுப் போகும்போது, அவர்களுக்

குரிய உலக விதிப்பயன்கள் அவர்களிடம் வரும்போது, அவற்றைப் போதுமானவையாகவும் மகிழ்ச்சியளிப்பவை யாகவும் காண்பார்கள். இம்மையைத் துறந்து சென்ற பின்னும், தாம் அலட்சியஞ் செய்த மறுமைப் பொருட்கள் தமக்காகக் காத்துக் கொண்டிருப்பதைக் காண் பார்கள்.

மனிதனில் நப்ஸ் எனும் கீழ்ச்சுபாவமும், கல்பு எனும் உயரிய சுபாவமும் ஒருங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. கல்பின் நுகர்ச்சி மறை பொருளானதாகவும் நப்ஸின் நுகர்ச்சி வெளிப்படையானதாகவும் இருக்கின்றன. நப்ஸின் புலன்களைக் கட்டாதவரை கல்பின் நுகர்ச்சி ஏற் படுவதில்லை. நப்ஸின் புலன்கள் கட்டுப்பட்டதும் கல்பு திறந்து விடுகிறது; கல்பின் ஊற்றிலுள்ள உணர்ச்சிகளும் நுகர்ச்சிகளும் வெளியாக ஆரம்பிக்கின்றன. அதற்கு மேலும் சென்று, கல்பின் நுகர்ச்சியையும் கட்டுப் படுத்தி, மெய்ப்பொருளொன்றே லட்சியம் என்ற நிர்ண யம் ஏற்படுவதே மானிட சோதனையின் சம்பூர்ண நிலை யாகும். சோதனையைச் சம்பூர்ணமாய் நிறைவேற்றும் இந் நிலைமையை மானிடன் அடையும்போது, அவ்வடியானை நோக்கி இறைவன், "உனது நப்ஸைப் பலிகொடுக்கா திருப்பாயாக!" என்றருள்கிறான். நப்ஸூம் புதிய ஜீவன் பெற்று, 'நப்ஸ் முத்மஇன்னா'வாக மீண்டும் அமலுக்கு வந்துவிடுகிறது.

உங்களை உலக மாயையில் மூழ்கச் செய்யக்கூடியவர் களுடைய சகவாசத்தை ஒதுக்கி, உலகைத் துறக்கச் செய்யக்கூடியவர்களுடைய சகவாசத்தைத் தேடுங் கள். ஒவ்வோரினமும் தன் இனத்தோடு சேர்வதே இயல்பாதலின், அல்லாஹ்வுடைய அன்பர்கள் ஓர் இன மாக ஒருவரை மற்றவர் அடுப்பது வழக்கமாய் இருக் கிறது. இவ்வாறு இறைவனின் அன்பைப் பற்றிப்பிடிக் கும் பக்தர்களுக்கு இறைவனும் அன்பனாகிவிடுகிறான்;

அவர்களுக்கு ஆதரவளிக்கிறான். இத்தகைய பக்தர்கள் ஒருவருக்கு மற்றவர் பக்கபலமாகத் திகழுகிறார்கள். ஒரு கோஷ்டியாக, மக்களை சைத்தானின் பக்கமும் கலப்பற்ற நிர்ணயத்தின் பக்கமும் அழைப்பவர்களாக வாழ்வார்கள். வழி சறுகிக் கிடக்கும் மக்களின் கரங்களைப் பிடித்து அவர்களை நேர்வழியில் நடத்தாட்டுவார்கள். இவ்விதமாக மெய்யூழியர்களாகிறவர்கள் எஜமானர்களாக்கப் படுவார்கள்; நன்மை செய்கிறவர்கள் நன்மை செய்யப் படுவார்கள். பிறருக்கு அளிக்கிறவர்கள், இறைவனால் அளிக்கப்படுபவர்களாவார்கள்.

நெருப்பின் நடத்தையிலுள்ளவர்களுக்கு நாளை கிடைக்கப் போவதும் நெருப்பேதான். உங்கள் செயல்களுக்கேற்பவே பயனும் கிட்டும். நீங்கள் உள்ள நிலைமைக்கேற்பவே உங்களை ஆட்சி செய்வதுமிருக்கும். உங்கள் செயல்களும், கருமங்களுமே உங்களை ஆட்சி செய்பவையாய் இருக்கின்றன. நரகுக்குக் கொண்டு செல்லும் காரியங்களைப் புரிந்து கொண்டு இறைவனிடமிருந்து சுவர்க்கத்தை எதிர்பார்ப்பது நியாயமா? உண்மையிலேயே சுவர்க்கம் வேண்டுமெனும் லக்ஷியமிருப்பின் அதற்குரிய முயற்சிகள் வேண்டாமா?

சுவர்க்கத்துக்குரியவர்கள் உலகின் கண் இதயங் கொண்டு - வெறும் உறுப்புக்களைக் கொண்டல்ல - வணக்கம் புரிந்தவர்களாவர். உள்ளொன்று வைத்துப் புறமொன்றான நிலையிலான வணக்கம் உங்களுக்கு என்ன பயனை அளிக்க முடியும்? பகட்டுக்கு வணங்குபவர்களுடைய உறுப்புக்கள் மட்டும் வணங்குகின்றன; உண்மையில் வணங்குபவர்கள் உள்ளும் புறமும் ஒன்றாக வணங்குவார்கள். மூமின்கள் உயிருள்ளவர்கள்; உணர்ச்சியுள்ளவர்கள். முனாபிக்குகளோ - புறமொன்றானவர்களோ நடைப்பிணங்களாவார்கள்.

மூமின் அல்லாஹ்வுக்காக வணங்குவான்; முனாபிக் சிருஷ்டிகளை முன்னிட்டு வணங்குவான்; தன் வணக்கத்துக்காகப் பிரதிபலனையும் பெயரையும் விரும்புவான். மூமினுடைய வணக்கம் உள்ளும் புறமும் ஒன்றானதாய்-ஏகாந்தத்திலும் பகிரங்கத்திலும் ஒரே நிலைமையானதாய்-கஷ்டத்திலும் சுகத்திலும் ஒரே தன்மையானதாய் இருந்துவரும். முனாபிக்குடைய வணக்கமோ, பகிரங்கத்திலும் சந்தோஷ நேரத்திலும் மட்டுமே காணக்கிடப்பதாய் இருக்கும். இத்தகைய முனாபிக்குகளுடைய மனத்திலும் அல்லாஹ்வின் நினைவு குடிகொண்டிருப்பதாகவோ, அவர்களுடைய உள்ளத்தில் நபிமார்கள் மீது பக்தியிருப்பதாகவோ, அவர்களுக்கு வேதங்களின்மீதும் நீதித்தீர்ப்பு நாளின்மீதும் நம்பிக்கை யிருப்பதாகவோ கூற முடியாது. அவர்களுடைய இஸ்லாம், உலகின் வசதிக்கான கொள்கையாகவே இருந்து வருகிறது. அவர்களுடைய தொழுகையும், நோன்பும், கல்வி கற்றலும் மனிதருடைய பார்வைக்கும் புகழுக்குமே நடக்கின்றன. அவர்கள் தனித்திருக்கும்போது-பிறர் பார்க்காதிருக்கும் போதுஆகாத கருமங்களில் மூழ்கி விடுகின்றனர். இறைவனே, கலப்புள்ள மனோ நிலையிலிருந்து அடைக்கலம் அளிப்பாயாக! இம்மையிலும் மறுமையிலும் மக்களுக்குக் கலப்பற்ற நிர்ணய நம்பிக்கையை அளித்தருள்வாயாக!

செய்யப்படும் வணக்கங்களிலும் நற்கருமங்களிலும் கலப்பற்ற நிர்ணயமே அத்தியாவசியமானதாகும். தன்னால் புரியப்படும் நற்கருமங்களுக்குப் பிரதிப் பிரயோஜனத்தைச் சிருஷ்டியிடமிருந்தாயினுஞ்சரி, சிருஷ்டிகர்த்தனிட மிருந்தாயினுஞ்சரி, எதிர்பார்க்கும் எண்ணம் வேண்டாம். இறைவனுடைய அருட் கொடைகளை எதிர்பாராது, அவனை மட்டுமே முன்னிட்டு நற்கருமம் செய்யுங்கள். இறைவனை மட்டும் தங்களுடைய ஏக லட்சியமாகக் கொண்டிருப்பவர்களின் கூட்டத்தில் சேருங்கள்.

அவனை யடையும்வரை அவனுடைய தேட்டத்தை மட்டும் உங்களின் உள்ளத்தில் இடம் பெறச் செய்யுங்கள். அவனை யடைந்துவிட்டால், உடனேயே உண்மையில் உங்கள் இம்மையும் மறுமையும் சுவர்க்கமாக மாறிவிடுவதைக் காண்பீர்கள். இம்மையில் தெய்வ சமீபத்துவத்துக்கும், மறுமையில் தெய்வ சந்நிதானத்துக்கும் உரித்தாவீர்கள். வாக்களிக்கப்பட்டுள்ள இதர அருட்கொடைகளும் இத்தகைய நல்லடியார்களுக்கு இதன் பயனாய்-அவர்கள் அவற்றைச் சிந்திக்காதிருந்தும் வரவே செய்யும்.

அன்பர்களே, உங்களுடைய உயிரையும் உடைமைகளையும் தெய்வ உத்தரவு, தெய்வ விதியின் ஏவல், தெய்வ விதிப்பயன் ஆகியவற்றின் வசம் ஒப்படைத்து விடுங்கள். விற்கிரயம் அளிக்கக்கூடியவன் வசம் சரக்குகளை ஒப்படைத்துவிடுவது போல், இறைவனிடம் ஒப்படைத்து விடுங்கள். விற்கிரயத்தை உங்களிடம் நாளை (மஹ்ஷரில்) அளித்தே தீருவான். அல்லாஹ்வின் அடியார்களே, உங்கள் உயிர்களையும், விலையையும், விற்றுமுதலையும் ஒருங்கே அவனிடம் ஒப்படையுங்கள். அத்துடன் உங்கள் உயிரையும், உடைமையையும், சுவர்க்கத்தையும், சகலவற்றையுமே அவனிடம் ஒப்படைத்து விடுங்கள். “இவை யெல்லாம் லட்சியங்களல்ல; நீயே எங்கள் லட்சியம்” என்று கூறுபவர்களாகுங்கள். பிரயாணத்துக்கு முன், வழித்தோழனைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டுமெனும் பழமொழிக்கிணங்க, நானுரைக்கும் உபதேசத்தின்படி நடப்பதை உங்கள் வழித்தோழனாக்கிக் கொள்ளுங்கள்.

சுவர்க்கம் வேண்டுமென விரும்புபவர்கள் அதை யடைவதற்கு இன்றே-இம்மையிலேயே முயற்சி செய்து கொள்ளட்டும்; நாளை-மறுமையில் செய்வதற் கொன்றும் இருக்கப் போவதில்லை. இம்மையிலேயே சுவர்க்கத்தின்

ஓடைகளுக்கு நற்கருமங்கள் வாயிலாக நீர்பாய்ச்சி வைப்பவனே மறுமையில் சுவர்க்கத்தை அனுபவிக்க முடியும்.

'கியாமத்' நாளில் நெஞ்சங்களும் நேத்திரங்களும் தட்டுத் தடுமாறிப் போகுமென்பதை மறக்க வேண்டாம். கீழே விழாது நிற்பது அசாத்தியமான காரியமாகிவிடும் வேளையில், ஒவ்வொரு மூமினும் தன் ஈமானுடையவும் பயபக்தியினுடையவும் பலம் எவ்வளவுக் கிருக்கிறதோ அவ்வளவுக்கே நிலை நிற்பவனாக விளங்குவான். பாவிகளின், காபிர்களின், அநியாயக்காரர்களின் உறுப்புக்களோ குற்றஞ் சாட்டுதலின் வெட்டுக்களால் அவஸ்தைப்படு பவைகளாகிவிடும்.

அன்பர்களே, நீங்கள் புரியும் வணக்கங்களைக்கொண்டு தற்பெருமையடைந்துவிடுவதும் கூடாது. ஏனெனில், வணக்கங்கள், அவற்றின் முடிவு எவ்விதம் ஆகிறதென் பதைப் பொறுத்தவையாயுள்ளன. உங்களுடைய முடிவு நல் முடிவாவதற்கும், அல்லாஹ்வுக்கு உகப்பான வணக் கங்களின் பக்கம் உங்கள் ஆத்மா இழுத்துச் செல்லப்படு வதற்கும், அவனிடமே வரந்தேடி மன்றாடுங்கள்! பாவ மன்னிப்பைக் கோரி பாவத்திலிருந்து மீட்சி பெறும் போது, பாவத்தை விட்டொழிந்து விட்டதாக நீங்கள் நிர்ணயிப்பது உடைந்து, மீண்டும் பாவத்துக்காளாகாது எச்சரிக்கையா யிருங்கள். எவர் தூண்டிடினுஞ் சரியே, உங்கள் இச்சை, ஆசை, சுபாவம் ஆகியவற்றால் தூண்டப்படினுஞ் சரியே, உங்கள் இறைவனுக்கு முரண் பட்டவர்களாய் நடக்க வேண்டாம்! பாவங்கள், இம்மை யிலும் மறுமையிலும் உங்களை அவமானஞ் செய்பவை யாயுள்ளன. நீங்கள் இறைவனுக்கு மாறுபட்டு நடந் தால், அவன் உங்களைக் கைவிட்டு விடுவான்; ஆதர வளிக்கமாட்டான். அல்லாஹ்வே, உனக்குக் கீழ்ப்படி தலைக்கொண்டு ஆதரவு பெறுபவர்களாக எங்களை ஆக்கு வாயாக! உனக்கு மாறுபட்டு அவமானமடையாது

அடைக்கலம் தருவாயாக! இம்மை மறுமையின் நன்மையையும் நரக வேதனை யினின்று விமோசனத்தையும் எங்களுக்களித்தருள்வாயாக!

பதினெட்டாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 துல்கஃதா பிறை 16 ஞாயிற்றுக்கிழமை ஸுப்ஹு நேரத்தில், ஜாவியாவில் ஹஜ்ரத் அவர்கள் நிகழ்த்தியது:

இறைவன் உங்கள்மீது இருவகையான ஜிஹாதுகளைக் கடமையாக்கி யிருக்கிறான். அவற்றுள் ஒன்று வெளிப்படையானது; மற்றது மறைமுகமானது. மறைமுகமான ஜிஹாது யாதெனின், தன்னுடைய அகங்காரம், இச்சை, இயல்பு, ஷைத்தான் ஆகியவற்றை எதிர்த்துப் போராடி, தீமைகளையும் அநியாயங்களையும் ஒழித்து, பாவமீட்சி பெற்று, அம்மீட்சியில் தரிபட்டிருப்பதாகும். வெளிப்படையான ஜிஹாது யாதெனின், அல்லாஹ்வுக்கும் அவன் ரஸூலுக்கும் எதிரிகளான 'காபிர்'களை எதிர்ப்பதில் ஏற்படும் அபாயங்களைத் தாங்கி, அவன் வழியில் உயிரைக் கொடுப்பதாகும். இவற்றுள் மறைமுகமான ஜிஹாது, வெளிப்படையான ஜிஹாதை விடக் கடினமானதாகும். ஏனெனில், வெளிப்படையான ஜிஹாதுக்குக் காலமும் இடமும் உண்டு. மறைமுகமான ஜிஹாதோ நிரந்தரமானது; ஒவ்வொரு நிமிடமும் நடந்துகொண்டிருப்பது. மனதுக்குகந்தவையாயினும், ஷரீஅத்துக்கு முரண்பட்டவைகளை எதிர்க்கவேண்டிய ஆத்மீக 'ஜிஹாது' கடினமாதென்பதை நீங்களே யூகித்துக் கொள்ளலாம்.

இவ்விருவித ஜிஹாதுகளிலும் ஈடுபடுபவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நற்பயன்களுண்டு. இவர்களோ வீர தியாகிகளாவார்கள். வெளிப்படையான ஜிஹாதில் ஈடுபடும்போது தோல்வியைவிட மரணமே

மேலானதென்று நினைப்பதே போல், மறைமுகமான ஜிஹாதில் ஈடுபட்டிருக்கையிலும் பாவத்திற் கிணங்கிச் சரணடைவதைவிட மரணமே மேலானதென நினைப்பார்கள்.

சமூகத்தவர்களே, இறைவன் உங்களுக்குத் தரும் கஷ்டத்தைவிடவும், அதிகமான சுகத்தை அளிப்பவனாய் இருக்கிறான். எனவே, பக்தர்களுடைய ஒவ்வொரு வினாடியும் ஓர் உள்ளக் கிளர்ச்சியாகவும் ஒரு தெய்வ ஏவலாகவுமே இருந்துவரும். ஒவ்வொரு வினாடியிலும் ஏவல் விலக்கல் என்பது அவர்களின் உள்ளத்தில் உதித்துக்கொண்டேயிருக்கும். அவர்கள் இதர சிருஷ்டியினரைப் போலும், முனாபிக்குகளைப்போலும் இருக்க மாட்டார்கள்.

ஆண்டவனுடையவும் ரஸூலுடையவும் சத்துருக்களான முனாபிக்குகள், இறுதியில் நரகத்துக்கே செல்வர். உலகில் தெய்வ ஏவல்களை எதிர்த்துத் தங்கள் ஆசைகள், இச்சைகள், சுபாவங்கள், 'ஷைத்தான்'களே பெரியவையெனக்கொண்டு, அவற்றிற்கே சரணடைந்து வந்த முனாபிக்குகள் நரகத்துக்குச் செல்லாதிருப்பதெப்படி? மறுமையைவிட இம்மையே பெரிதென்றும் சதமென்றும் நினைத்த இவர்கள் நரகத்திலிருந்து தப்புவதெப்படி? திருகுர்ஆனைச் செவியுற்றும் அதன்படி நடக்காத இவர்கள் நரகத்திலிருந்து விமோசனம் பெறுவதெப்படி? சமூகத்தவர்களே, திருகுர்ஆனை நம்புங்கள்; அதன் உபதேசப்படி நடந்து வாருங்கள். உங்களுடைய நடத்தையில் கலப்பற்ற நிர்ணயமே குடிகொள்ளுமாறு கவனியுங்கள்.

உங்களுடைய நற்கருமங்களில் தற்பெருமையையும், கலப்புள்ள எண்ணத்தையும், பிறரின் புகழ்ச்சியையும், பிரதிபிரயோஜனத்தின் விருப்பத்தையும் இடம்பெறவிடாதீர்கள். குர்ஆன் ஷரீபின் ஈமானுடன் திகழுபவர்கள்

அல்லாஹ்றவுக்கென அனுஷ்டானங்களில் ஈடுபடுபவர்கள் சிருஷ்டிகளில் வெகு சிலரே; கலப்புள்ள நிர்ணயமுள்ள வர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர்.

அல்லாஹ்றவுக்கு அடிபணிந்து அவனுக்குக் கீழ்ப்படி வதில் நீங்கள் சோம்பலாயிருப்பதேன்? ஷைத்தானுக்கு அடிபணிந்து உங்களின் நாயனுக்கும் உங்கள் ஆத்மா வுக்கும் பகைவர்களாவதேன்?

அல்லாஹ்றவின் அன்பர்களான நல்லடியார்களோ, தெய்வத்தை முன்னிட்டுச்சிரமமின்றி ஒருக்காலும் சும்மா இருப்பதில்லை. தெய்வ நாட்டத்தினால் விளையும் கஷ்ட நஷ்டங்களில் பொறுமையாய் இருப்பதால் மறுமையின் நன்மை பெருகுமென அவர்கள் நன்கறிவார்கள். மெய்ப் பொருளான இறைவனின் ஆதிக்கத்தினால் அவனால் உண் டாக்கப்படும் மாறுதல்களினால் நிகழ்வதற்கிணங்கியவர் களாயிருக்கும் காரணத்தால், சில சமயங்களில் பொறுமை யாளர்களாக விளங்குவார்கள்; மற்றச் சமயங்களில் நன்றியறிதல் பொங்குபவர்களாகத் திகழுவார்கள். சில சமயங்களில் அவன் சமீபத்தில் இருப்பார்கள்; சில சமயங்களில் தூரத்திலிருப்பார்கள்; சில வேளை களில் கஷ்டத்திலிருப்பார்கள்; மற்ற நேரங்களில் சுகத்திலிருப்பார்கள். சில வேளைகளில் செல்வராகியும், சில வேளைகளில் ஏழையாயுமிருப்பார்கள். சில சமயங் களில் ஆரோக்கியத்திலும், சில சமயங்களில் நோயிலும் இருப்பார்கள். நிலைமைகள் எவ்வளவு தான் மாறினாலும், தங்கள் ஆத்மா மெய்ப்பொருளைப் பற்றிப்பிடித்ததாக நிற்கவேண்டுமென்பதே அவர்களின் குறிக்கோளாய் உள் ளது. இத்தகைய நிலை ஸ்திரம் பெற்றவர்களாகிச் சதா சிருஷ்டிகளின் நலனை முன்னிட்டு இறைவனை வேண்டி நிற்பவர்களாய் வாழ்பவர்களே நல்லடியார்களாவார்கள்.

அன்பர்களே, வாக்குவன்மையுள்ளவர்களாக வேண் டுமாயின் தெளிமனமுவர்களாகுங்கள். தெய்வ விதி

களைக் கடைப்பிடிப்பதில் தவறற்றவர்களாக விளங்கும் போதே ஞானத்தின் அருள்வாக்குள்ளவர்களாக ஆகுதல் முடியும். உங்கள் மறைமுகம் தெள்ளிய நிலைமையை - தவறற்ற நிலைமையை அடைந்துவிடுங்கால், உங்கள் வெளி முகத்திலும் அருள் சுரக்கும்; உங்கள் நாவும் அருள் வன்மையை யடைந்துவிடும்.

மெய்ப்பொருளான இறைவனுக்கு அடிபணிவதி லேயே சம்பூர்ண நிம்மதியும் கரையேற்றமும் உள்ளன. அவன் ஏவியிருப்பதன்படி நடக்கவேண்டும்; அவன் விலக்கியிருப்பவற்றினின்று விலகவேண்டும். அவன் நாட்டத்தினதும் விதிப் பயனினதும் பலா பலன்களில் பொறுமைவேண்டும். இவ்விதம் அல்லாஹ்வின் பேச்சுக் கிணங்கி நடப்பவனின், பேச்சுக்கு அல்லாஹ்வும் இணக்கி நடக்க ஆரம்பித்துவிடுகிறான். அல்லாஹ்வுக்கு உண்மையில் முற்றும் அடிபணிந்து விடுபவனுக்குச் சிருஷ்டிகளை அல்லாஹ் அடிபணியச் செய்கிறான்.

சமூகத்தவர்களே, நான் சொல்வதைக் கேட்பீர்களாக! உங்கள் நன்மையை விரும்புகிறவனாய்ப் பேசுகிறேன். நான் என்னை விட்டும் உங்களை விட்டும் அப்புறமாகவே இருந்து வருபவனாவேன். உங்கள் கண்ணுக்கு நான் எக்காரியங்களில் ஈடுபடுவதாகத் தெரிகிறதோ அக் காரியங்களை விட்டுங்கூடப் புறம்பாக இருப்பவனே. உண்மையிலே என் வாழ்விலும் உங்கள் வாழ்விலும் தெய்வ நாட்டத்தினால் விளையும் காரியங்களை நடத்தாட்டுபவனாய் இருந்து வருகிறேன். என் ஆத்மாவுக்கு நான் விரும்புவது எதுவோ அதையே உங்கள் ஆத்மாவுக்கும் விரும்புபவனாய் இருக்கிறேன். "தன் ஆத்மாவுக்காக நாடக்கூடியவற்றைத் தன் சகோதர முஸ்லிமுக்கும்விரும்பாதவரை மூமினுடைய ஈமான் சம்பூர்ணமடைந்துவிட்டதாகக் கூற முடியாது" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள். நம்மனை

வருடைய அதிகாரியும், தலைவரும், நீதிபதியும், நம்மனை வருக்கும் பரிந்து பேசி ரட்சிக்கக்கூடிய வள்ளலும் (ஷபீ உம்), ஆதம் (அலை) காலம் தொட்டுக் கியாம நாள்வரை சகல நபிமார்களுடையவும் தளகர்த்தராக விளங்குபவர் களுமான நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் இம் மொழியை உங்கள் மனத்தில் நன்கு இடம்பெறச் செய் யுங்கள். தனக்கென்று விரும்புவதைத் தன் சகோதர முஸ்லிமுக்கு விரும்பாதவனுடைய ஈமானில் குறையிருப் பதாகக் கூறியுள்ளார்களல்லவா? இவ்விதமிருக்க, முஸ் லிம்கள் தங்கள் உணவு இன்பத்தையும், ஆடை அழகை யும், வீட்டு உயர்வையும், செல்வப் பெருக்கையும் போல் தம் சகோதர முஸ்லிம்களுக்கும் உண்டாகக்கூடாதென்று எண்ணத் தலைபட்டால், அதுபற்றி என் செய்வது? அவர்களின் ஈமான் இத்தகைய மனப்பான்மையால் பொய்யாகி விடுகிறதல்லவா?

அன்பர்களே, நோன்பு நோற்பதைக் கடைப்பிடியுங் கள். நோன்பு திறக்கும்போது ஏழைகளுக்கும் ஏதேனும் கொடுங்கள்; தனியாகச் சாப்பிடவேண்டாம்; பிறருக்குக் கொடுக்காது தனியாக அருந்துவது நன்மையைத் தராது.

சமூகத்தவர்களே, பக்கத்திலுள்ள சகோதரர்கள் பட்டினி கிடக்க, நீங்கள் மட்டும் வயிறு புடைக்க உண்டால், உங்கள் ஈமான் சீர்பெற்றில்லையென்றே அர்த்தம். உங்களுக்கும் உங்களுடைய உற்றுருக் கும் வேண்டியது போக மிச்சமிருந்தும், கதவண்டை வந்து கெஞ்சும் ஏழை வெறுமனே திரும்புவது தகுமா? இவ்வாறு நடந்து கொள்வதன் முடிவை விரைவில் காண்பீர்களென்பது திண்ணம். உங்களிடம் வந்த ஏழைகளின் கதியை நீங்களடைந்துவிடுவதும், இருந்தும் நீங்கள் கொடுக்க மறுத்ததேபோல் உங்களுக் கும் பிறர் மறுக்கும் நிலையும் ஏற்படுவது முடியாத காரியமன்று. ஆகையால், இயன்றதை ஏழைகளுக்குக்

கொடுங்கள். கொடுப்பதிலும் மரியாதையுடன் எழுந்து சென்று கொடுங்கள். நமது நபி (ஸல்) அவர்களே ஏழைகளுக்குத் தங்கள் கரத்தால் தானமளித்திருக்கிறார்கள்; தங்கள் கரத்தாலேயே தங்களின் ஒட்டகங்களுக்கு இரை வைத்திருக்கிறார்கள்; தங்கள் கரத்தாலேயே பால் கறந்திருக்கிறார்கள்; தங்கள் கரத்தாலேயே தங்களின் கிழிந்த ஆடைகளைத் தைத்திருக்கிறார்கள். இத்தகைய எளிய வாழ்க்கையை நடாத்திய அவர்களைப் பின்பற்றுவதாக நீங்கள் கூறிக்கொள்ள முடிவதெப்படி? உங்கள் குணமும் நடத்தையுமோ அவர்களுடைய முன் மாதிரிக்கு நேர் முரண்பட்டவையா யிருக்கின்றன. உங்களைப் பற்றிப் பகட்டாக எது கூறிக்கொண்டாலும், அதற்குரிய அடையாளங்களை உங்களிடங் காணேம். என்னிடம் கேட்கும்பட்சத்தில், இஸ்லாத்தின் நிபந்தனைகளை முற்றும் நிறைவேற்றப் பிரயாசை எடுங்கள்; இன்றேல், உங்களை முஸ்லிம்களென்று பறை சாற்றிக் கொள்ளவேண்டாம் என்றே கூறுவேன்.

இஸ்லாத்தின் நிபந்தனைகளை யறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பீர்களாக! இஸ்லாத்தின் மூலார்த்தமென்ன? மெய்ப்பொருளான நாயன் முன் சிரம் சாய்த்துவிடுவதும், அனைத்தையும் அவன் வசம் ஒப்படைத்துவிடுவதுமே இஸ்லாமாகும். அவ்வாறு செய்வது அவசியமென்பதை நீங்கள் உணரவேண்டும்.

இன்று நீங்கள் சிருஷ்டிகள்மீது இரக்கப்பட்டால், நாளை அல்லாஹ் தன் கருணை கொண்டு உங்கள்மீது இரக்கப்படுவான் என்பதை உணருங்கள். பூமியிலுள்ளவர்களிடம் கருணை காட்டினல் வானத்துக்குரியவனல் கருணை புரியப்படுவீர்களென்பதை மனத்திலிறுத்துங்கள்.

சுயநலத்துடனிருக்கும்வரை நான் வர்ணித்துள்ள நிலையை நீங்களடைய முடியாது; உங்கள் இச்சைகளுக்கு இணங்கியவர்களாய் நடந்து வரும்வரை இச்சை

யின் கைதிகளாகவே யிருப்பீர்கள். வாழ்வுக்குரியதை நப்ஸுக்குக் கொடுத்தாலும், இன்ப நுகர்ச்சியில் மூழ்க அனுமதித்துக்கொள்ளாதீர்கள். தேவையானதை மட்டும் கொடுத்து வந்தால் நப்ஸ் ஸ்திரம் பெறுவதாகவும், அதன் இச்சைகளைப் பூர்த்தி செய்ய முனையும்போது அழிவை யடைவதாகவும் இருக்கிறது. நப்ஸுக்குள்ள உரிமைகள் தேவையின் அளவுக்கு உண்ணுவதும் குடிப்பதும் உடுத்துவதுமாகும்; அதன் இச்சைக்கு இணங்குபவர்கள், தேவைக்கு மீறிய இன்ப நுகர்ச்சிகளுக்கு இரையாகிவிடுகின்றனர்.

உலக வாழ்வில் நப்ஸின் உரிமைகளை நிறைவேற்றுவதில் ஷரீஅத்தைக் கடைப்பிடியுங்கள். அதற்கு மேலுள்ள பேறுகளை தக்தீரின் வசம் ஒப்படைத்துவிடுங்கள். ஹலாலானதையே - ஆகுமானவற்றையே - உங்கள் நப்ஸுக்கு அளிப்பவர்களாய், ஷரீஅத்தின் தலைவாயிலில் அமர்ந்து அதன் ஏவல்களின்படி தொண்டாற்றுபவர்களாகத் திகழுங்கள். அதன் மூலம் நீங்கள் ஈடேற்றமடைய முடியும். "ரஸூல் (ஸல்) உங்களுக்கு அளித்திருப்பதை அங்கீகரித்துக் கொள்ளுங்கள்; அவர்கள் விடும்படி தடுப்பதை விட்டு ஒதுங்கிக்கொள்ளுங்கள்" என்று திரு குர்ஆனில் தெய்வ உத்தரவு யிருப்பதை அறியீர்களா?

கொஞ்சமானது கொண்டே திருப்தி பெற்றவர்களாய் அதிலேயே உங்கள் நப்ஸ் அடங்கி யொடுங்குமாறு செய்யுங்கள். அதற்கு மேல் தெய்வ ஞானத்திற்கேற்ப - தக்தீரின் கரங்களினால் - அதிகம் வரும்போதும் அதனால் தீமைக்காளாகாது காப்பாற்றப்படுவீர்கள். கொஞ்சத்தில் திருப்தி யடைபவர்களின் நப்ஸ் அழிவை யடைவதில்லை; அதற்கு மேலும், விதியிருப்பின் உள்ளவை வரவே செய்யும். " ஓர் ஆட்டுக்குச் சிறிது புல்லும் கொஞ்சம் தண்ணீரும் போதுமானதாய் இருப்பது

போலவே மூமினுக்கும் அவசியத் தேவைகளான சொற்பமே போதுமானதாய் இருக்கிறது'' என்று இமாம் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

மூமின்கள் அவசியத் தேவைகளையே அனுபவிப்பவர்களாக வாழ்வார்கள்; முனாபிக்குகளோ இன்ப நுகர்ச்சியிலேயே ஆழ்ந்து கிடப்பார்கள். ஏனெனில், மூமின் தான் பிரயாண வழியிலிருப்பதாக உணர்வான்; பிரயாணத்தின் முடிவில் தேவையுள்ள சகலமும் தனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறதெனநம்புவான். முனாபிக்கோ ஒரு முடிவையும் தன் முன் நிறுத்தாதவனாயிருப்பான்; பிரயாணத்தின் வழியில் கிடைத்ததே சகலமும் எனக் கருதுவான்.

நாட்களையும் மாதங்களையும் நற்காரியங்களில் செலவழிக்காது வீணே விரயமாக்கிக் கொண்டிருப்பது சரியா? உலகக் காரியங்களில் நீங்கள் அயர்ந்து விடுவதாகக் காணோம்; மார்க்க விஷயத்தில் மட்டும்தான் அயர்ந்து கிடக்கிறீர்கள். இத்தகைய நிலைமையை மாற்றிக்கொள்ளுங்கள். நேர்மையின் வழிக்கு வாருங்கள். இவ்வுலகம் எவர் வசமும் நிரந்தரமாய் இருந்ததில்லை; உங்களுடனும் இருக்கப்போவதில்லை.

சமூகத்தவர்களே, அல்லாஹ்வின் வசமிருந்து நித்திய ஜீவன் கிடைக்குமென்ற வரத்தை யடைந்து விட்டீர்களா? முடிவு விஷயத்தில் ஏன் இவ்வளவு அசிரத்தையாகி விட்டீர்கள்? தங்கள் மறுமையை நாசப்படுத்திப் பிறருக்காக உலக வாழ்வைச் செழிப்பாக்கிக் கொண்டிருப்பவர்கள் - தங்கள் மார்க்கத்தை நொறுக்கி விட்டுப் பிறர் அனுபவிப்பதற்காக உலகப் பொருட்களைத் தேடிவைப்பவர்கள் - சிருஷ்டிப் பொருட்களின் விருப்பைப் பெறுவதற்காகச் சிருஷ்டிகர்த்தனின் வெறுப்புக்குரித்தாகுபவர்கள் - இவர்கள், தாங்கள் விரைவில் மரணமடைய நேருமென்பதையும் இறைவன் சந்நிதானத்

தில் அனைத்துக்கும் கணக்குக் கொடுத்துத் தீரவேண்டு மென்பதையும் நன்கு உணர்ந்தால், தங்கள் நடத்தையை அகத்தியம் மாற்றிக்கொள்வார்களென்பேன். அறிஞர் லுக்மான் (அலை) ஒரு சந்தர்ப்பத்தில் கூறியதாவது: "மகனே, சில சமயங்களில் வியாதிக்கு ஆளாகிறாய்; ஆனால், அப்படி வியாதிக்காளாவாய் என்பதை நீ அறிவதில்லை. இவ்விதமே ஒரு சமயத்தில் மரணத்துக்காளாவாய்; அப்படி இறப்பா யென்பதை நீ அறியப்போவதில்லை" என்று. நானும் உங்களுக்கு எச்சரிக்கை செய்யவும் தீமையை விட்டு நீங்கள் ஒதுங்கிக் கொள்ளுமாறு செய்யவும் தூண்டுகிறேன். அப்படியிருந்தும், நீங்கள் எச்சரிக்கையாகி, அச்சம் பெற்று நல்வழி திரும்பாதிருப்பது சரியா?

நன்மை யென்பதில்லாத உலக விஷயத்திலேயே உழன்று கிடப்பவர்களே, விரைவில் உலகம் உங்களைத் தாக்க விருக்கிறது; உங்கள் கழுத்தை அது நெருக்கி வருகிறது. நீங்கள் சேமித்துச் சுகிக்க விரும்பியவையனைத்தும் பயனற்றுப்போக விருக்கின்றன. ஆகையால், எச்சரிக்கையுடனிருப்பீர்களாக! அன்பர்களே, சகிப்புத்தன்மையுடன் வாழ்ந்து ஷிர்க் எனும் பாவத்துக்கு ஒருக்காலும் ஆளாகாதிருக்க முயற்சியுங்கள். பேச்சுகளையும் விவாதங்களையும் பெருக்கிக்கொண்டு போவதால் நலனில்லை; முடிவு தீங்குதான்.

சிருஷ்டிகளுள், இறைவன்பால் அழைக்கக்கூடிய ஆற்றலிருந்து அதற்கென இறைவனால் நியமிக்கப்படுவர்கள் வெகு சிலரே. அவர்கள் மக்களை அழைக்குங்கால், அழைப்பை அங்கீகரிக்காதவர்களுக்கெதிராக அவர்கள் சாட்சியாகவும் அத்தாட்சியாகவும் ஆகிவிடுகிறார்கள். இத்தகைய பெரியோர்கள் நம்பியவர்களுக்கு நற்பேறுகளாகவும், மார்க்க விரோதிகளுக்கும் முனாபிக்குகளுக்கும் தெய்வாக்கினையாகவும் ஆவார்கள்.

இறைவனே, எங்கள் அனைவரையும் தவ்ஹீதின் நறுமணம் கொண்டு கமழுபவர்களாக்கி, உன்னை யல்லாது மற்றெல்லாப் பொருட்கள் சம்பந்தப்பட்டவரை அழிந்து போனவர்களாக்கி விடுவாயாக!

ஏகத்துவத்திலுள்ளவர்களே, இணைவைப்பவர்களே, அனைவரும் செவிசாயுங்கள்! சிருஷ்டிகளுள் எதன் வசமும் ஒன்றுமில்லை; அனைத்தும் பலஹீனமானவை. அரசனும் ஆண்டியும், செல்வனும் ஏழையும் சகலரும் இறைவனின் தக்தீரின் கைதிகளாவர். அனைவருடைய உள்ளங்களினது ஆதிக்கமும் அவன் வசமே உள்ளது. நாடிய வண்ணம் அவ்வுள்ளங்களை அவன் திருப்பு வான். அவனுக்கு நிகரென்பது ஒன்றுமில்லை. அவன் அனைத்தையும் கேட்பவன், காண்பவன்!

உங்களுடைய நப்ஸைக் கொழுக்கச் செய்யாதீர்கள். வெறி கொண்ட நாயை அடக்காது வளர்த்து வருபவன், இறுதியில் அந்த நாயால் கடிக்கப்பட்டுப்போவது போல, நப்ஸை வளர்ப்பதிலும் அதற்கு இரையாகாதிருக்க வேண்டும். நப்ஸை அவிழ்த்து விடாது கட்டிவைக்க வேண்டும். ஆகையால், நப்ஸின் சுபாவங்களைக் கட்டுப் படுத்தி, இச்சைகளை நிறைவேற்றுவதில் யதேச்சையுட னிருக்க விடாது எச்சரிகையாய் இருப்பீர்களாக!

இறைவனே, எங்கள் நப்ஸை அடக்குவதில் எங்களுக்கு உதவி புரிவாயாக! எங்களுக்கு இம்மை யிலும் மறுமையிலும் நன்மையளித்து, நரகவேதனை யின்றி ஈடேற்றத்தை யளிப்பாயாக!

இருபத்து இரண்டாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 துல்கஃதா பிறை 28 வெள்ளிக்கிழமை ஸுப்ஹு நேரத்தில், ஜாவியாவில் நிகழ்ந்தது.

ஹஜ்ரத் அவர்கள் உபன்னியாசத்தை ஆரம்பித்து நிகழ்த்திக் கொண்டிருக்கையில் ஒருவர், "உலகப் பற்றை என் இதயத்திலிருந்து களைவதற்குரிய வழி எது?" என்று வினவினார். அதற்கு அவர்கள் கூறியதாவது: உலகத்தின் மாறுதல்களைப் பற்றிச் சிந்தியும். உலகத்தைத் தேடுகிறவர்கள் விஷயத்தில் உலக வாழ்வு எங்ஙனம் தனது நிறத்தை மாற்றிக் கொள்கிறதென்று கவனியும். உலக வாழ்வு மானிடர்களிடம் எவ்விதம் தந்திரஞ் செய்கிறதென்றும், விளையாடுகிறதென்றும், தன்னைத் தொடருமாறு செய்து பெரும் உலகப் பதவிகளை அளிக்கிறதென்றும், பிறகு திடீரென்று எவ்விதம் கீழே விழுத்தாட்டிச் சின்னாபின்னமாக்கிப் பரிகசிக்கிறதென்றும், அத்துடன் எவ்விதம் ஷைத்தானும் சேர்ந்து கொண்டு நகைக்கிறான் என்றும் சிந்தித்துப் பாரும். ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்கள் தொட்டு கியாம நாள் வரை மன்னர்கள் சரிதையிலும் செல்வர்கள் சரிதையிலும் இம்மாறுதலே காணக்கிடக்கிறது; இனியும் காண்பதற்கு இருக்கிறது. ஒரு காலத்தில் உச்சத்தில் வைக்கிறது; மறு காலத்தில் பாதாளத்தில் கொண்டு போய்ச் சேர்க்கிறது. முதலில் முன்னால் கொண்டு செல்கிறது; பிறகு பின்னால் தள்ளிவிடுகிறது. செல்வனாக்குகிறது; பிறகு ஏழையாக்கிவிடுகிறது. தன்னளவில் மாக்களை யிழுத்துப் பலிகொடுத்துவிடுகிறது. இத்தகைய உலக மாயைகளை வென்றவர்களும் அதன் தீமைகளின் மாசுபடாதிருந்தவர்களும் வெகு சொற்பமானவர்ளெனலாம். உலக வாழ்வின் இயல்பை உணர்ந்தவர்களே அதன் பாகமாகிய மாயையிலிருந்து ஈடேற்றம் பெற்றவர்களாய் விளங்குவார்கள். ஆகையால், வினா விடுத்த அன்பரே,

அகக்கண் கொண்டு உலக வாழ்வின் உண்மையைக் காணக்கூடியவராய் ஆகிவிடின், அகத்திலிருந்து உலகப் பற்றைக் களைந்தெறியும் சக்தியும் உமக்கு உண்டாகும். ஆனால், புறக்கண் கொண்டு மட்டும் பார்ப்பது கொண்டு உலக வாழ்வின் ஹீனங்களை உணர இயலாது; அதற்குப் பகரமாக அதன் பகட்டுகளால் மனம் கவரப்பட்டவராய், உலகப் பற்றையொழிக்கக் கூடாதவராய், உலக வாழ்வின் பற்றினால் துண்டிக்கப்பட்ட எண்ணற்ற மானிடர்போல் நீரும் துண்டிக்கப்பட்டுப் போவீர்.

அன்பர்களே, உங்களுடைய அகம் அமைதி நிறைந்த தாக-'முத்மஇன்னு'வாக ஆகும் வரை உங்களின் அகத்தைக் கட்டுப்படுத்தவும் அடக்கவும் முயற்சியுங்கள் நப்ஸ் 'முத்மஇன்னு'வாகி விடும்போது இம்மையின் குறைகளை உணரக்கூடியதாகவும் இம்மையைத் துறக்கக் கூடியதாகவும் ஆகிவிடும். இவ்வாறு அமைதி நிறைந்த அகத்தை அடையப்பெற வேண்டுமெனின், இதயத்தின் உணர்ச்சிகளின்படியும் மனச்சாட்சியின் ஏவல்படியும் நடப்பவர்களாகி, இறைவனளிப்பது கொண்டு திருப்தி யடைபவர்களாகவும், அவனளிக்காத விஷயங்களில் பொறுமையை இழக்காதவர்களாகவும் ஆக முயற்சிக்க வேண்டும். 'முத்மஇன்னு' வெனும் அகச்சாந்தி ஏற்படும் போது உண்மையான 'தக்வா' - பயபக்தியின் கிரீடம் சூட்டப்பட்டவர்களாகவும் தெய்வீக சமீபத்துவமெனும் போர்வை போர்த்தப்பட்டவர்களாகவும் ஆகிவிடுவீர்கள்.

நம்பிக்கை ஸ்திரத்தையும் மெய்யை உறுதிப்படுத்துவதையும் கடமைகளாகக் கொண்டு, அல்லாஹ்வுக்குரிய நல்லடியார்களைப் பொய்ப்படுத்துவதையும் அவர்களுடன் விதண்டாவாதஞ் செய்வதையும் விட்டொழியுங்கள். அல்லாஹ்வின் அடியார்களுடன் எதிரிடை செய்யாதீர்கள்; ஏனெனில். அவர்கள் இம்மையினதும் மறுமையினதும் மன்னர்களாயிருக்கிறார்கள். அனைத்தையும்

துறந்து அல்லாஹ்வின் சமீபத்துவம் பெற்றுள்ள காரணத்தால் அல்லாஹ்வல்லாத அனைத்துக்கும் அவர்கள் மன்னர்களாயிருக்கிறார்கள். அவர்களை ஆண்டவன் உலகத்தின் தேவையற்றவர்களாக ஆக்கிவிட்டான்; தன் சமீபத்துவத்தையும் அன்பையும் ஜோதியையும் அடையாளங்களையுங் கொண்டு அவர்களை நிறைவு பெறச் செய்துள்ளான். இம்மைப் பொருட்கள் யாரிடம் சேருகின்றன, அவற்றை யார் 'அருந்துகின்றனர் என்றெல்லாம் அவர்களுக்கு அக்கரை ஏது? இம்மையின் ஆரம்பங்களை அவர்கள் கவனிப்பதில்லை; அதன் முடிவையும் அழிவையும் தான் காண்கிறார்கள். மெய்ப்பொருளாகிய இறைவனையே சதா தம் அகமியக் கண்களின் முன் நிறுத்தியவர்களாயுள்ளார்கள். அழிவுக்குப் பயப்படுவதலோ, ஆளவேண்டுமென்று விரும்புவதனாலோ அவர்கள் அல்லாஹ்வை வணங்கவில்லை. இறைவனுக்காகவே என்று படைக்கப்பட்டவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். "நீங்களறியக் கூடாதவர்களையும் அவன் சிருஷ்டித்துள்ளான்;" "தான் நாடியவற்றை நிறைவேற்றுகிறவனாய் இருக்கிறான்." (திரு குர்ஆன்)

"மனம் வாக்கு ஈறுபட்டவர்கள் - முனாபிக்குகள் பேசினால் பொய்யைப் பேசுவார்கள்; வாக்குக் கொடுத்தால் அதை மீறுவார்கள்; அமானிதப் பொருளை மோசம் செய்வார்கள்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளியிருப்பதில் கூறப்பட்டுள்ள தீய குணங்களை விட்டு விமோசனம் பெற்றுள்ளவர்களே அசுத்தத்தைவிட்டு விமோசனம் பெற்றவர்களாவார்கள். நன்னம்பிக்கை யுள்ளவர்களுக்கும் கலப்பான நம்பிக்கையுள்ளவர்களுக்குமிடையிலுள்ள பரீட்சை இதுதான். இந்நாயக வாக்கியத்தை உரைகல்லாகக் கொண்டு உங்கள் நம்பிக்கை எவ்வளவு தூரம் சரியாய் இருக்கிறதென்று நோட்டமிடுங்கள்.

நல்லெண்ணத்துடன் மறுமையை லட்சியமாகக் கொண்டு நடாத்தப்படும் வாழ்வின் அம்சங்கள் தவிர மற்றபடி, இவ்வுலக வாழ்வு 'பித்னா'-விஷமம் நிறைந்ததாகவும் விரயத்துக்குள்ள வழியாகவும் இருக்கிறது. என்றாலும் இம்மையின் காரியங்களிலும் எண்ண சுத்தி ஏற்பட்டுவிடும்போது இம்மையே மறுமையைப் போன்றதாக ஆகிவிடுகிறது.

அல்லாஹ்வுக்கு நன்றியறிதல் செலுத்தப்படாத பாக்கியங்களனைத்தும் துர்ப்பாக்கியங்களாகவே ஆகிவிடுகின்றன. இறைவனால் அளிக்கப்படும் பேறுகளை நன்றியறிதலைக் கொண்டு பேணிக் கொள்ளுங்கள்! இறைவனுக்கு நன்றியறிதல் செய்யும் விதங்கள் இரண்டு. ஒன்றாவது, அவனால் அளிக்கப்படுபவற்றை அவனுக்குக் கீழ்ப்படிவதில் செலவழிப்பதும், துயருறும் தேவையாளர்களுக்கு ஆதரவளிப்பதுமாகும். இரண்டாவது, பேறுகளை அளிப்பவனாகிய ஆண்டவனையறிந்து அவனுக்கு நன்றியறிதல் செலுத்துவதாகும்.

"அல்லாஹ்வை மறக்குமாறு செய்யும் ஒவ்வொரு பொருளும் உங்களுக்குத் துர்ப்பாக்கியமானது" என்று ஒரு பெரியார் பகர்ந்துள்ளார். ஆண்டவனது நாமத்தை உச்சரிக்கும் நற்காரியமும் அல்லாஹ்வை நீங்கள் மறக்குமாறு செய்வதாயிருப்பின், அதுவும் உங்களுக்குத் துர்ப்பாக்கியமானதெனலாம். உங்கள் தொழுகையும், நோன்பும், ஹஜ்ஜும், சகல நற்கருமங்களும் இறைவனது நினைவை நிலைநிறுத்தாது அவனை மறக்கச் செய்திடின், அவையும் உங்களுக்குத் துர்ப்பாக்கியமானவையேயாகும். இறைவன் உங்களுக்களிக்கும் அருட்கொடைகள் அவனை நீங்கள் மறக்குமாறு செய்திடின், அவையும் உங்களுக்குத் துர்ப்பாக்கியமானவையேயாகும். உங்களுள் பலர் அவனது அருட்கொடைகளை அனுபவித்த பின் சோதனைக் காலம் ஏற்படும்போது அவனை மறந்து, பிறரை

நம்பி நிற்பவர்களாக ஆகிவிடுகிறீர்கள்; உள்ளும் புறமும் பொய்யின் அழுக்காறு அடைந்தவர்களாக ஆகிவிடுகிறீர்கள். ஷைத்தானுடைய மாயையில் சிக்கிப் பொய்யையும் தீய கருமங்களையும் நல்லவையாக நினைக்க ஆரம்பித்து விடுகிறீர்கள். உங்கள் வாழ்வில் எவ்விதம் பொய் எங்கும் வியாபித்துவிடுகிறதெனில், இறைவன் முன் தொழ நிற்கும்போது உங்கள் நாவுதான் அல்லாஹு அக்பர் என்று கூறுகிறதேயன்றி உங்கள் மனம் மற்றவர்களைப் பெரிதாகக் கொள்வதாகவே இருக்கிறது. உங்களுடைய நம்பிக்கையைக் கவிழ்ந்து நிற்குமாறு செய்யும் பொருட்களையே நீங்கள் வணங்குபவர்களாகிவிடுகிறீர்கள். எந்தெந்த வஸ்துக்களைக் கொண்டு நீங்கள் எதிர்பார்த்து நிற்கிறீர்களோ, எந்தெந்த வஸ்துக்களுக்குப் பயப்படுகிறீர்களோ அவற்றை வணங்குகிறீர்கள். இந்நிலைமையில் உங்களுடைய நாவின் கூற்றுகளும் இதய நிலையும் வேறுபட்டவையாகிவிடுகின்றன; உங்களுடைய சொல் வேறாகவும், செயல் வேறாகவும் ஆகிவிடுகிறது. நாவால் ஒரு தடவை 'அல்லாஹு அக்பர்' என்று கூறினால் உங்கள் இதயம் அவ்வுண்மையை ஆயிரம் விடுத்தம் எதிரொலித்துக்கொண்டிருப்பதாய் இருக்கவேண்டும்; நாவினால் ஆயிரந் தடவை மொழிந்தும் உள்ளத்தில் ஒரு விடுத்தமேனும் உணர்ச்சி பெறாதவர்களாக இருக்கலாமா? நாவால் மட்டும் 'லாயிலாஹ இல்லல்லாஹ்' என்று கூறி விடுகிறீர்கள்; உண்மையிலோ ஆயிரக் கணக்கான பொருட்களை வணக்கத்துக்குரிய பொருட்களாகக் கொண்டுள்ளீர்கள். எனவே, நீங்கள் எந்நிலையில் விழுந்து கிடப்பினும், அந்நிலையிலிருந்து மீட்சி பெற முயற்சியுங்கள்.

உங்களுள் அநேகர் குணத்தைப் படிக்கிறீர்கள்; ஞானத்தின் பெயருடன் திருப்தியடைந்தவர்களாக, அனுஷ்டானப் பூர்வத்தைக் கைவிட்டவர்களாக இருக்

கிறீர்கள். இவ்வாறுள்ளவர்கள் தங்களை 'ஆலிம்'கள் என்று அழைத்துக் கொள்வது பொய்யுரைப்பதாகும். பிறகு ஞானத்தைப் போதித்துவிட்டு உங்கள் மட்டுக்கு அதன்படி அனுஷ்டானஞ் செய்யாதிருக்க உங்கள் மனம் எங்ஙனம் பொருந்திக்கொள்கிறதென்று கேட்கிறேன். திரு குர்ஆனில், "உங்கள் செயலில் இல்லாததைச் சொல்லில் ஏன் காட்டுகிறீர்கள்?" என்று இறைவன் கூறியிருப்பதை ஏன் ஞாபகத்தில் இறுத்திக்கொள்ளாதிருக்கிறீர்கள்? உண்மையைக் கடைப்பிடிக்குமாறு பிறர்க்குப் போதித்துவிட்டு, நீங்கள் பொய்யைக் கடைப்பிடிப்பது சரியா? பிறரைத் தவ்ஹீத்தைக் கடைப்பிடிக்குமாறு ஏவிக்கொண்டு, உங்கள் அனுஷ்டானத்தில் ஷிர்க்கைக் கடைப்பிடிப்பது சரியா? கலப்பற்ற நிர்ணயம் வேண்டுமென்று போதித்துவிட்டு உங்களுடைய நிர்ணயங்களில் கலப்புடனிருப்பது சரியா? பிறரைப் பாவத்திலிருந்து விலகியிருக்குமாறு உபதேசித்துக்கொண்டு, நீங்கள் பாவங்களைச் செய்வது ஒழுங்காகுமா? இவ்வாறெல்லாம் நடப்பதன் காரணம், உங்களிடம் வெட்கமெனும் இலட்சணம் மறைந்து விட்டதனாலேயாகும். உங்களுடைய உள்ளத்தில் ஈமானின் ஜோதி இருந்தாலல்லவோ இவ்விஷயங்களில் வெட்க உணர்ச்சி ஏற்படும். இதனாலேயே, "வெட்கமென்பது ஈமானின் இலட்சணங்களிலுள்ளதாகும்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளார்கள். உங்கள் நிலைமையை நோக்கின் ஈமான் என்பதும், யகீன் என்பதும், அமானிதத்தின் பொறுப்பு என்பதும் இல்லாதவர்களாய் இருக்கிறீர்கள். உங்களுடைய ஞான விஷயத்தில் - ஞானத்தின்படி ஒழுகாதது கொண்டு - கடமைகளைச் செய்யாதவர்களாகி விட்டதனால், அமானிதங்களை இழந்துவிட்டவர்களாக ஆகிவிட்டீர்கள். இதனால் ஆண்டவனின் சந்நிதானத்தில் அமானிதத்தை மோசம் செய்தவர்களாக ஆகியுள்ளீர்கள். இந்நிலைமையிலிருந்து விமோசனம் பெறுவ

தற்காக, உங்களின் இந்நிலைமையிலிருந்து மீட்சி பெற்று உங்களைத் திருத்திக்கொண்டு, திருந்திய நிலைமையில் தரிபட்டிருக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

அல்லாஹ்வின்மீதும் அவனது தக்தீரின்மீதும் நம்பிக்கை சீர்பெற்றவர்கள் தங்களின் சர்வ காரியாதிகளினதும் பொறுப்பை இறைவன்மீது சாட்டியவர்களாக ஆகிவிடுவார்கள்; மற்ற எப்பொருளையும் அவனுக்கு இணையாகத் தமது அகத்தில் நிறுத்தாதவர்களாக விளங்குவார்கள். தவ்ஹீதில் ஸ்திரம் பெற்றுவிடும் இத்தகைய நல்லடியானை எந்நிலைமையிலும் இறைவன் கார்மானம் பெற்றவனாக ஆக்கி யருள்வான். இத்தகைய ஈமான் தரிபடும்போது அதுவே இறுதியில் 'யகீன்' உண்மையின்மீது உறுதியாகிவிடுகிறது; அதற்கடுத்த படியாக, 'விலாயத்'தின் படித்தரங்கள் ஏற்பட ஆரம்பித்துவிடுகின்றன; 'விலாயத்'தில் 'பத்லிய்யா' எனும் 'அப்தால்'களின் நிலைமையும், அதன் பின்னர் 'கைபிய்யா' எனும் நிலைமையும், இறுதியில் 'குத்பு' எனும் நிலைமையும் ஏற்பட்டுவிடுகின்றன. இவ்வாறு குத்பு எனும் நிலைமையையடைந்துவிடும் நல்லடியார்கள், ஆண்டவனின் அருளைக் கொண்டு, மலக்குகளாலும் ஜின்னுகளாலும் ஆத்மாக்களாலும் போற்றப்படுபவர்களாக ஆகிவிடுகின்றனர். இத்தகைய நல்லடியார்களை இறைவன் முன்னேற்றமடையச் செய்கிறான்; தனது சமீபத்துவம் பெறச் செய்கிறான்; தனது சிருஷ்டிகளின்மீது ஆதிக்கஞ் செய்யும் அதிகாரத்தை யளிக்கிறான்; அவர்களைத் தானும் நேசித்துத் தனது இதர அடியார்களும் நேசிக்குமாறு செய்கிறான்.

இத்தகைய ஆத்மீக உன்னதங்களுக்கெல்லாம் ஆரம்பமாகவிருப்பது அல்லாஹ்வினதும் அவனுடைய ரஸூலினதும் நம்பிக்கை நிலைபெறுவதேயாகும். இத்தகைய ஆத்மப் பரிபக்குவத்துக்கு அஸ்திவாரமாக

விருப்பது இஸ்லாமாகும்; அல்லாஹ்வின் அருள் மறையாகும்; ரஸூலுடைய ஷரீஅத்தின்படி அனுஷ்டானம் புரிந்து நம்பிக்கைத் திடமா யிருப்பதால், அனுஷ்டானங்களில் கலப்பற்ற நிர்ணயம் பெற்றிருப்பதாகும்.

மூமின்கள் அல்லாஹ் அல்லாதனவற்றைத் தமது அகத்திலிருந்து அகற்றுவதில், தங்கள் வாழ்வையும் காரியாதிகளையும் அல்லாஹ் அல்லாதவையாகவே கருதுவதால், அவற்றையும் தமது பிரதம இலட்சியங்களாகக் கொள்ளமாட்டார்கள். உலகிலிருந்து பல காரியாதிகளைச் செய்திடினும், அவர்களது அகத்தில் அக்காரியாதிகளின் பற்றுகளிருக்கமாட்டா. அவர்கள் அல்லாஹ்வை முன்னிறுத்தியவர்களாக, அவனை முன்னிட்டு அவனல்லாத சகலவற்றையும் எதிர்க்கத் துணிந்தவர்களாக விளங்குவார்கள். இவ்வாறு அல்லாஹ்வை முன்னிட்டு அனைத்தையும் அகத்திலிருந்து துறந்தவர்களாகும்போது, அல்லாஹ்வினால் வழி நடத்தப் படுபவர்களாகி விடுகிறார்கள். இக்கருத்தே, "நமது வழியில் பிரயாசை எடுப்பவர்களுக்கு அகத்தியம் நமது வழியை நாம் காட்டியருள்வோம்" எனும் திரு குர்ஆன் வாக்கியத்திலும் அடங்கியுள்ளது.

சகல வஸ்துக்களுடையவும் பற்றுகளைக் களைந்து எறியும்போது ஆண்டவனுடைய விதிப்பயன்களைக் கொண்டு மனப்பொருத்தம் பெறும் நிலையும் ஏற்பட்டு விடுகிறது. ஏனென்றால், அவர்கள் சகலமும் அவனுடைய நாட்டப்படி அவனது விதிப்பயனால் நடத்தாட்டப்படுவதை நன்குணர்ந்தவர்களாகிவிடுவார்கள். இவ்வாறு அவனது விதிப்பயன்கள்மீது சித்தப் பொருத்தம் ஏற்பட்டுவிடும்போது, முதலில் உலகச் சாதனங்களைக் கொண்ட விதிப்பயன்களை மட்டும் காணுவார்களெனினும், இறுதியில் அவனுடைய விசேஷ சக்திகளைக் கொண்டு ஏற்படக்கூடிய விதிப்பயன்களையும் காணுபவர்களாகி விடுவார்கள்.

இறைவனின் விதிப்பயனைக் கொண்டு சித்தப் பொருத்தத்துடன், ஒவ்வொன்றிலும் விதிப்பயன்களை விதித்தருளும் நாயனை எதிர்பார்த்து நிற்பவர்களே பாக்கியசாலிகள். விதிப்பயனுடன் ஒத்துவிடுபவர் களாகவும் விதிப்பயனால் விளையும் கொடைகளுக்கு நன்றி மறக்காதவர்களாகவும் இருப்பவர்களே பாக்கியசாலிகள். விதிப்பயனால்-'தக்தீரி'னால் ஏற்படக்கூடிய கொடை களுள் தலைசிறந்தது ஆண்டவனது அருளும் அவனது சமீபத்துவமும், இவற்றைக்கொண்டு ஆண்டவனல்லாத சகல சிருஷ்டிகளின் தேவையற்ற நிலைமை ஏற்படுவதுமே யாகும்.

அடியானின் அகம் இறைவனை யடைந்ததாக ஆகி விடும்போது, அவனைச் சிருஷ்டிகளின் தேவையற்றவனாக வும் தனது சமீபத்துவம் பெற்றவனாகவும் இறைவன் ஆக்கிவிடுகிறான். சிருஷ்டிகளின்மீது ஆதிக்கம் செலுத்து பவனாக்கியருள்கிறான். "நிச்சயமாக, நீர் இன்று நமது சந்நிதானத்தில் ஸ்திரம் பெற்றவராகவும் அமானிதங் களை அளிக்கப் பெற்றவராகவும் ஆகிவிட்டீர்" என்ற திரு குர்ஆன் வாக்கியப்படி, ஹஜ்ரத் யூஸுப் (அலை) அவர் களைத் தனது அமானிதங்களை நிர்வகிப்பவர்களாக நிய மித்தது போலவே இறைவன் தனது நல்லடியார் களையும் தனது கலீபாக்களாக நியமித்தருள்கிறான். இதுவே ஆத்மாக்களுக்கு ஏற்படும் அனுபவமாய் இருக் கிறது; ஆத்மா சீர்பெற்று இறைவனல்லாதனவற்றின் பற் றுகள் அறுப்பட்டுச் சிறப்புப் பெற்றுவிடும்போது அவ் வாத்மாக்களை இம்மை மறுமையின்மீது ஆதிக்கம்பெறச் செய்கிறான். உண்மையைத் தேடுபவர்களும் ஆத்ம அபிவிருத்தி விரும்புகிறவர்களும் வலம் சுற்றுமிடமாக இவர்கள் ஆகிவிடுகிறார்கள்.

இத்தகைய ஆத்மீக உன்னதங்களையடையும் மார்க் கம் ஞானத்தைப் பெற்று, அதன்படி அனுஷ்டானஞ்

செய்வதாய் இருப்பதால் சோம்பலையும் அனுஷ்டான மற்ற நிலையையும் விட்டொழியுங்கள்! ஏனென்றால், இவற்றை விட்டொழிக்காதிருப்பவர்கள் தெய்வ தண்டனைகளை அடைபவர்களாவார்கள். இதனாலேயே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "அடியான் அனுஷ்டானத்தில் குறையுள்ளவனாகும்போது, இறைவன் அவனைக் கவலையில் ஆழ்த்திவிடுகிறான்" என்று அருளியுள்ளார்கள். இத்தகையோர்கள் தமது தலையெழுத்தில் இல்லாதவற்றைத் தேடித் தட்டலைபவர்களாக ஆகிவிடுகின்றனர். குடும்பக் கவலையென்றும், தொழிற் கவலையென்றும், பிள்ளைகள் கீழ்ப்படியாமையினால் கவலை யென்றும், பலவிதக் கவலைகளில் சதா ஆழ்ந்து கிடப்பவர்களாக-நான்கு பக்கத்திலும் உதைபடுகிறவர்களாக ஆகிவிடுகிறார்கள். இவையனைத்தும் இறைவனுக்கு அடிபணிவதிலுள்ள குறைகளினால் விளைபவையாகும். தண்டனைகள் இருப்பதேபோல் சம்மானங்களும் இருக்கின்றன வென்பதையும் நீங்கள் உணர வேண்டும். "நீங்கள் நம்பிக்கையும் நன்றியும் உள்ளவர்களா யிருப்பின், அல்லாஹ் உங்களுக்கு அதற்குரிய சம்மானங்களை யளிப்பான்." (திருகுர்ஆன்)

விதிப்பயன்மீது நம்பிக்கை வைப்பதுபற்றிச் சிலர் விதண்டாவாதமான கேள்விகளை விடுக்கின்றனர். இறைவனின் நாட்டத்தைப்பற்றி விதண்டாவாதம் செய்வது ஆகாத காரியமாகும். அவன் நாட்டத்தைப்பற்றிக் கேள்வி கேட்கக்கூடியவர்கள் எவருமில்லை யென்பதையும், நாமே கேள்வி கேட்கப்பட விருக்கிறோமென்பதையும் நாம் நன்குணர வேண்டும்.

மானிடர்களே, உங்களுடைய நிலைமை கைசேதத்துக்குரியதாகவே இருந்து வருகிறது. இறைவனை மறந்து எத்துணைக் காலம் உங்களுடைய சுயநலங்களிலும் பிள்ளைகளின் கவலையிலுமே ஆழ்ந்து கிடக்கப்

போகிறீர்கள்? "உங்களுடைய பிள்ளைகளுக்குப் பிழைக்கும் வழியைக் காட்டிக் கொடுத்து விட்டுப் பிள்ளைகளை விட்டும் மனத்தை யகற்றி, இறைவனுடைய ஞாபகத்தில் மூழ்கி விடுவீர்ளாக!" என்று ஒரு பெரியார் பகர்ந்துள்ளார். மனைவி மக்கள் மீது எத்துணை கவனம் இன்றியமையாததோ அதற்கதிகமாய் அவர்களுடைய கவலைகளிலேயே முற்றும் ஆழ்ந்து விடாதீர்கள்; உங்களை ரட்சிக்கக்கூடியவன் 'அல்லாஹ் அயன்றி உங்கள் மனைவி மக்களல்லா. உங்களுடைய தலையெழுத்தில் அபரிமிதமான கிரணங்களிருப்பின், அவை தத்தமக்குரிய நேரத்தில் தாமாகவே வந்து கொண்டிருக்கும். இவ்வாறு நேரம் வந்து கிடைக்கப் பெறும் கொடைகளையும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து கிடைக்கப் பெறுபவையாகவே நம்பி, அவனுக்கு இணைவைக்காதவர்களாக வாழுங்கள். ஆனால், உங்களுடைய தலையெழுத்தில் குறைந்த கிரணங்களே எழுதப்பட்டிருப்பினும், அப்பொழுதும் உங்களுடைய அடக்கத்தின் பயனாகவும் மனப்பொருத்தத்தின் பயனாகவும் கிடைப்பது கொண்டே பிறரின் தேவையற்றவர்களாக விளங்குங்கள்.

இறைவனின் நாட்டத்தில் மனம் பொருந்திய முஸ்லிம்கள் உலகப் பொருட்கள் எதையும் விரும்பின், தாழ்மையுடனும் மன்றாட்டத்துடனும் இறைவனிடம் விண்ணப்பம் செய்வார்கள். இறைவன் அவர்கள் கோரியதை அளிக்கும்போது நன்றியறிதலைச் செலுத்துவார்கள்; இறைவன் அவர்கள் கோரியதை அளிக்காவிடின், அவன் நாட்டத்துக்குப் பொறுமையுடன் சிரம் சாய்த்து மனம் பொருந்திக் கொள்வார்கள். தங்கள் மார்க்கத்தைக் கொண்டும் தெய்வ பக்தி கொண்டும் உலகப் பேற்றை அடையும் நோக்கம் அவர்களிடம் இருந்ததில்லை.

உள்ளொன்று வைத்துப் புறமொன்றான முனாபிக்குகளே, முஸ்லிம்கள் உங்களைப் போல் உலகத்துக்காக மார்க்கத்தை விற்கமாட்டார்கள். நீங்கள் உலகத்தை மட்டும் லட்சியமாகக் கொண்டுள்ளீர்கள்; மார்க்கத்தையும் உலக ஆதாயத்துக்கு வழியாக நினைத்துள்ளீர்கள்; நேரியவர்களாக இல்லாதிருந்தும் நேரியவர்களைப் போல் பாசாங்கு செய்கிறீர்கள்; நேரியவர்களின் ஒழுக்கங்களை அனுஷ்டிக்காது பேச்சிலும் வேஷத்திலும் நேரியவர்களாக நடிக்கிறீர்கள். 'லாயிலாஹ இல்லல்லாஹ்' என்பது உங்களுக்கு வெறும் கூற்றாகவே இருந்துவருகிறது. ஆகையால், பொய்யர்களே, மெய்யர்களாக முயற்சியுங்கள்! ஆண்டவனை விட்டுத் தூரமாகியிருப்பவர்களே, மீண்டும் அவன் பக்கம் அணுகுங்கள். ஆண்டவனின் வாயிலண்டை செல்லும் நாட்டங் கொண்டு அவனிடம் மன்னிப்புப் பெற நாடுங்கள். உலகத்தை அனுபவிப்பதென்றால், ஈமானுடன் அனுபவியுங்கள். ஈமானுடன் உலகை அனுபவிப்பவர்கள் ஷரீஅத்தின்படி ஆகுமானதை அனுபவிப்பவர்களாவார்கள். விலாயத்துடன் உலகை அனுபவிப்பவர்கள் திரு குர்ஆனும் ஸுன்னத்தும் சாட்சியாயிருக்க, அல்லாஹ்வின் ஆணை கொண்டு அனுபவிப்பவர்களாவார்கள். அப்தால்களினதும் குத்புகளினதும் நிலையுடன் உலகை யனுபவிப்பவர்கள் சகலவற்றையும் இறைவன் வசம் ஒப்புவித்துவிட்டவர்களாகையால், உலகையனுபவிக்குமாறு ஆண்டவனே செய்தருள்வதாலேயே அவ்விதம் அனுபவிப்பவர்களாவார்கள்.

அன்பர்களே, உங்களுக்கு வெட்கமென்பது இல்லாதிருப்பதேன்? ஆண்டவனின் அருள் வழியை விட்டுப் புறம்பான நிலையிலிருப்பதை உணர்ந்து மனமுருகி அழுங்கள். இன்று கீழ்ப்படிகிறீர்கள்; நாளை முரண் செய்கிறீர்கள். இங்ஙனம் நீங்கள் ஸ்திரமற்

திருப்பதைப்பற்றி உங்களுக்கு வெட்கமில்லையா? "எத னுடைய இரு தினங்கள் ஒரே மாதிரிக் கழிந்துவிடுகின் றனவோ (ஒரு நாளைவிட மறுநாள் அபிவிருத்தி ஏற் படாத காரணத்தால் ஒரே மாதிரி யிருக்கிறதோ), எவர்களின் சென்ற நாள் நிகழும் நாளைவிட நல்லதா யிருக்கிறதோ(நாளுக்கு நாள்மேலோங்காமலிருக்கிறதோ) அவர்கள் துர்ப்பாக்கியசாலிகளாவாவார்கள்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளியிருப்பதை ஏன் உணராதவர்களாயிருக்கிறீர்கள்?

அன்பர்களே, உங்களாலாவதொன்றுமில்லை; என்ரு லும், உங்கள் முயற்சிகளும் இன்றியமையாதவையா யிருக்கின்றன. ஆகையால் பிரயாசைப்படுங்கள்; ஆதர வளிப்பது ஆண்டவனுடைய வேலையாகும். நீங்கள் இருந்து, இத்தரணி யெனும் சமுத்திரத்தில் நீந்து வதற்காகக் கால்களையும் கைகளையும் அடிப்பது உங்கள் கடமையாகும்; உங்களைக் கரைசேர்க்குமாறு ஏவுவது ஆண்டவன் வேலையாகும். பிரார்த்திப்பது உங்கள் கடமை யாகும்; அப்பிரார்த்தனையை அங்கீகரிப்பதும் மறுப்பதும் அவன் நாட்டமாகும். சத்கருமம் செய்வது உங்கள் கடமையாகும்; அதற்குரிய வசதிகளை யளிப்பது அவன் விதிப்பயனுகும். தீமையைத் தவிர்த்திருப்பது உங்கள் கடமையாகும். தீமையினின்றுங் காப்பாற்றுவது அவன் செய்கையாகும். அவனைத் தேடுவதில் உண்மையாளர் களாகுங்கள்; அவன் தனது சமீபத்துவத்தின் வழியைத் தானே காட்டியருள்வான்; தனது கருணையை உங்கள் மீது சொரிந்து கொட்டுவான். இதனையே அல்லாஹ் வுக்குரியவர்கள் தமது இலட்சியமாகக் கொள்வார்கள்.

நப்ஸையும், சுபாவத்தையும், இச்சையையும், ஷைத்தானையும் அடிபணிந்து கிடப்பவர்களே, உங்க ளுக்காக நான் என் செய்வேன்? என் வசமுள்ளது யாவை? மெய்யையும், யதார்த்தத்தையும், தெளிவை

யும் வைத்திருப்பவனாக இருக்கிறேன்; பிரித்தறிபவனாக வும் இருக்கிறேன்; அதாவது, ஆண்டவனல்லாதவற்றி லிருந்து பிரித்து ஆண்டவன்பால் கொண்டு சேர்ப்ப வனாய் இருக்கிறேன்.

முனாபிக்குகளாக-உள்ளொன்று வைத்துப் புற மொன்றாய் இருப்பவர்களே, பெருமையடிப்பவர்களே, பொய்யர்களே, உங்கள் பகட்டை ஒப்புக்கொள்ளக் கூடியவன் நானன்று; உங்களை நான் லட்சியஞ் செய் யக்கூடியவனன்று; நீங்கள் ஆண்டவனை லட்சியஞ் செய்யாதிருக்கையில், ஆண்டவன் முன்னிலையில் வெட் கப்படாதிருக்கையில், ஆண்டவன் சர்வத்தையும் காண் கிறானென்பதையும், அவனுடைய அமரர்களும் பார்க்கிறார்களென்பதையும் பொருட்படுத்தாது உங்க ளுடைய பாவக் கருமங்களில் ஈடுபடுபவர்களாயிருக் கிறீர்கள். என்னிடம் மெய்யிருக்கிறதென்பதை மறந்து விடாதீர்கள். அது கொண்டு நம்பிக்கை கொள்ளாத வர்களினதும், உள்ளொன்று வைத்துப் புறமொன்றான வர்களினதும் சிரசுகளைத் துண்டிக்கக்கூடியவனா யிருக் கிறேன். "மெய்யென்பது அகிலத்திலுள்ள அல்லாஹ் வின் வாளாகும். அதை எப்பொருள்மீது வைத்திடி னும் அப்பொருளைத் துண்டிக்கக்கூடிய வாளாகும்" என்று ஒரு பெரியார் பகர்ந்துள்ளார். எனவே, என் பேச்சுக்களுக்குச் செவி கொடுங்கள். ஏனெனில், நான் உங்கள் நலனை விரும்புகிறவன். உங்களை நான் விரும்பு வது, உங்களுக்கு நலன் செய்வதற்காகவே யொழிய வேறு எக்காரணத்தினாலுமன்று. நீங்கள் சம்பந்தப்பட்ட வரை நான் மையித்தாய் இருக்கிறேன். மெய்ப் பொருள் சம்பந்தப்பட்டவரை அவனைக் கொண்டு உயிர் வாழ்பவனாய் இருக்கிறேன். என் உண்மை சகவாசத்தை அடைந்தவர்கள் நலனை யடைந்தவர் களாவார்கள்; காரியசித்தி யடைந்தவர்களாவார்கள்.

என்னைப் பொய்யனுக்குபவர்கள் அல்லது என் உண்மை சகவாசத்தை யடையாதிருப்பவர்கள் துர்ப் பாக்கியசாலிகளாவார்கள்; இம்மை மறுமை தண்டனை களை அடையப் பெறுவார்கள்.

அல்லாஹ்வைப் பற்றிய மெய்ஞ்ஞானமடைவதற்கு அவனைப்பற்றிய விதண்டாவாதங்களை விட்டொழிப் பது இன்றியமையாத விஷயமாகும். இதனுலேயே மாலிக் இப்னு தீனு(ர்) (ரலி) அவர்கள், “உங்களுக்கு மெஞ்ஞானம் வேண்டுமாயின், அல்லாஹ்வின் விதி வசத்தைக் கொண்டு மனம் பொருந்தியவர்களாகுங்கள். தனது நப்ஸையும், இச்சையையும், நாட்டத்தையும் இறைவனுக்கு இணையாக்காதீர்கள்” என்று உபதேசித் துள்ளார்கள்.

ஆரோக்கியவான்களாயிருந்தும் மார்க்கக் கடன்களை நிறைவேற்ருதிருப்பவர்களே, ஆண்டவனுடைய அருட் கொடைகளை ஏன் வீணுக்குகிறீர்கள்? நீங்கள் எத் தகைய நஷ்டங்களைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறீர்க ளென்பதை உணர்ந்தால் பெருந்துயரமடைவீர்கள். ஆகையால் விழிப்படையுங்கள். விரைவில் மரணம் வந்து உங்களையடுக்கவிருக்கிறதென்பதை உணருங்கள். எனவே, பிறர் உங்கள் மரணத்தைக் கண்டு அழுமுன், உங்கள் நிலைமையை நீங்களே முன்னறிந்து அழுங்கள். உங் களுடைய பாவங்கள் அதிகரித்து உங்களைச் சூழ்ந்து கொண்டிருப்பதால், நல்ல முடிவு அரிதான நிலையில் நீங்களிருப்பதை உணருங்கள். உலகப் பற்றினுல் உங்கள் ஆத்மா பிணியுற்றிருப்பதை உணருங்கள். உலகப் பற்றைக் களைந்து, உண்மையைப் பற்றிப்பிடிப்பது கொண்டு ஆரோக்கியம் பெறுங்கள். பற்றற்ற தன்மையைக் கொண்டும் உலக ஆசாபாசங்களைத் துறப்பது கொண் டும், ஹக்கு தஆலாவின் சந்நிதானத்தை நாடி முன் னேக்குவதைக் கொண்டும் அதற்குச் சிகிச்சைபுரியுங்கள்.

சன்மார்க்க சுபிட்சமே நம் மூலதனமாகும்; நற்கிரியைகளே அதன் மூலம் கிடைக்கும் லாபமாகும். பேராசைகொண்டு தேடி அலைந்து, மோசம் போகும் குணத்தை விட்டொழியுங்கள். கிடைத்ததைப் பெருமகிழ்வுடன் பொருந்தி திருப்தியடைந்து கொள்ளுங்கள். ஹலாலானது வந்தால் கேள்வி கணக்குச் சொல்லவேண்டிய பொறுப்பும், ஹராமானதை ஏற்றால் தண்டனையடைய வேண்டிய நிலையும் இருக்கும்போது, புத்திசாலியானவன் எந்த வஸ்துவைக்கொண்டுதான் மகிழ்ச்சியடைய இயலும்! ஆனால், உங்களிலோ மிகப்பலர் தண்டனையையும் கேள்வி கணக்கையும் அடியோடு மறந்து கிடக்கிறீர்கள். அன்பர்களே, உலகப் பொருள்கள் உங்களை யணுகி, உங்கள் மனம் அவற்றின்பால் ஈர்க்கப்படும் நிலை ஏற்பட்டால், அப்பற்றை ஒழியுங்கள்! அப்பொருள்களிடம் அதிகமான பற்று உண்டாகிவிடின் உங்களுக்கு உண்மையான இதயம் இல்லை என்றே அர்த்தம். நப்ஸுக்கும், இச்சைக்கும், பேராசைக்கும் அடிமைப்பட்டே கிடக்கிறீர்கள். உங்களுக்கு உண்மையான கல்பு வேண்டுமாயின், அகக்கண் திறந்த நாதாக்களின் சகவாசத்தில் அண்டிப் பழகுங்கள். சம்பூர்ணத் தன்மை பெற்ற ஒரு ஞானகுருவை (ஷைகை)த் தேடிக் கண்டு கொள்ளுங்கள்; அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றும் தன்மையுடைய அப்பெரியார் உங்களைப் பரிசுத்தப்படுத்தி, ஞான போதங்களை அருளி, ஹிதோபதேசங்களும் செய்து உங்களுக்கு நல்வழி காட்டுவார். கைமுதலை நழுவவிட்டுக் கொள்முதலிலும் விற்பனையிலும் முழு நஷ்டத்தையுமடைபவர்களே, மறுமையை விற்று விட்டு இம்மையை விலைக்கு வாங்கிவிட்டீர்கள்; இம்மையை வாங்கிக்கொண்டு மறுமையைக் கொடுத்துவிட்டீர்கள். மஹா மதிமோசமான தன்மையிலும், அறிவு சூன்யமானவர்களாய் வருந்தத்தக்க நிலையிலுள்ளீர்கள். எவ்வித லக்ஷியமோ, நோக்கமோ இன்றி மிருகங்களைப் போல்

உண்பதும் தின்பதுமாய் இருக்கிறீர்களே! ஒரு மூமின் உணவு விஷயத்தில் ஷரீஅத்துக்கு உட்பட்டே நடப்பான்; அதிலுங்கூட ஷைகின் பக்குவ நிலைக்கு உட்பட்டவன் அவர் விலக்கியதை விட்டு, அனுமதிப்பதை மட்டும் உட்கொள்வான். தன் சுய இச்சைக்கு இடங்கொடான். ஷைகின் நோக்கிற்கேற்பவே ஒழுகுவான். அந்த ஷைகு அவர்களோ அல்லாஹ்ற இடமிருந்து மறைவானவற்றை அறிந்தவர்களாய் அதன்படி கட்டளையிடுபவர்களாய் இருப்பார்கள். இதுபற்றி இந்தச் சீடனும் தன் ஷைகிடம் அணுவளவும் ஐயங்கொள்ளான்; தன் ஷைகின் கட்டளையையன்றிச் சுயமான நோக்கம் எதுவுமில்லாதவனாகவே இருப்பான். இவை யாவிலும் ஷரீஅத்தின் வரம்புக்கு உட்பட்டே நடப்பான். தன்னைச் சிருஷ்டிகளை விட்டும் 'பனு'வான தன்மையிலாக்கி, ஷரீஅத்தின் வரம்புகளையும் செவ்வனே பேணிக்கொண்டு குத்ரத் என்ற ஆழிய சமுத்திரத்திலே சபித்துக்கொண்டே குதித்துவிடுவான். அந்தச் சமுத்திரத்தின் அலைகள் அவனை மேலே தூக்கவும், கீழே தள்ளவும், ஒதுக்கவுமாக அலைக்கழிக்கும்; சில சமயங்களில் அதலமான ஆளத்தில் தள்ளி, அஸ்ஹாபுல் கஃபு (குகையிலிருந்தவர்கள்)களின் நிலையிலாக்கி விடும். "நாம் அவர்களை வலமும் இடமும் புறட்டுகிறோம்" என்று அவர்களைப்பற்றித் திரு குர்ஆனில் கூறப்பட்டுள்ளது போன்ற நிலையை இவன் அடைகிறான். இவன் சுய நினை விழந்தும், தன் புலன் உணர்வை இழந்தும், அல்லாஹ்றவின் அன்பு என்ற இல்லத்திலும் அவன் அருகிலும் திளைத்திருப்பான்; தனது அக, புறக் கண்களை மூடியவனாய் இருப்பான். இவனை யனையவர்கள் எதையும் அவனுக்காகவே, அவனைக் கொண்டே பார்ப்பார்கள்; அதுபோலவே அவனுக்காகவே அவனைக்கொண்டே கேட்பார்கள். (அவனையே சர்வத்திலும் ஷுஹூது செய்வார்கள்.) அல்லாஹ்றவே, நீ அல்லாதவற்றை விட்டு

எங்களைப் 'பஞ'வாக்கியருள்! உன்னைக்கொண்டே பேரின்ப நிலையடையச் செய்! எங்களுக்கு இம்மையிலும், மறுமையிலும் நன்மையளித்து நரகவேதனையை விட்டு விமோசன மளித்தருள்!

இருபத்து மூன்றாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 துல்ஹஜ் மாதம் பிறை 12 வெள்ளிக் கிழமை காலை மத்ரஸா மஃமூராவில் ஹஜ்ரத் (ரலி) அவர்கள் நிகழ்த்தியது:

"இதயங்கள் துருப்பிடித்துப் போகின்றன; திரு குர் ஆனை ஓதுதலும், மரணம்பற்றிய சிந்தனையும், வஃளு திக்று மஜ்லிஸ்களுக்குச் சமூகங் கொடுத்தலும் அவற்றி லுள்ள துருவை யகற்றிச் சுத்தப்படுத்தக்கூடியவை" என்று நபிநாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஆம், இதயம் துருப்பிடிக்கத்தான் செய்கிறது. நபி நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லித் தந்த பக்குவ முறை களைக்கொண்டு, அந்த இதயத் துருவை நீக்கிச் சுத்தம் செய்துவிடவேண்டும். இல்லையேல் அதன் சுய ஜோதி மங்கி மறைந்துபோய் இறை ஜோதியுடன் தொடர் பின்றித் தூரமானதாகிவிடும்; கரிய இருளும், உலக ஆசை யில் சிக்கி பக்தி, பேணுதலின்றி உழலும் வண்ணம் செய் யக்கூடிய மருட்சியும் நிறைந்ததாக ஆகிவிடும். ஏனெனில், அகத்தில் உலக ஆசை இடம் பெற்றுள்ளவனின் இறை பக்தி பேணுதலற்றதாகிவிடும். அத்தன்மையில் அவன் ஆகுமானதையும், ஆகாததையும் (ஹலாலையும், ஹராமையும்) சேர்த்து அள்ளிக் கட்டுவான். அவ்விரண் டையும் பிரித்து ஹராமை விட்டு ஹலாலை மாத்திரம் 'தேடவேண்டுமே என்ற மனப்பான்மை அவனை விட்டு அடியோடு அகன்று போகும்; மேலும், சிறப்பும் மாட்சி

மையும் மிக்க அவனது நாயனைப்பற்றிய அச்சமும் நீங்கிப் போய்விடும்.

சமூகத்தவர்களே, உங்களருமை நபி நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னதை ஒப்புக்கொள்ளுங்கள். உங்களுக்கு அவர்கள் சொல்லித் தந்த மருந்தைப் பிரயோகித்து உங்கள் இதயத் துருவை நீக்குங்கள். உங்களில் யாருக்காவது ஒரு வியாதி வந்தால் மட்டும் வைத்தியன் குறிப்பிட்டுச் சொல்லும் மருந்தை வாங்கிப் பிரயோகிக்கும்வரை உங்கள் வாழ்வே சுகப்படாததுபோல் இருந்து வருகிறதில்லையா? நீங்கள் தனித்திருக்கும்போதும் கூட்டத்தோடிருக்கும்போதும் உங்கள் இறைவனை உற்று நோக்குங்கள். (முராகபாச் செய்யுங்கள்) நீங்கள் அவனைக் கண்டதே போன்று உங்கள் கண்களுக்கு முன்னுலாக்கிக் கொள்ளுங்கள். நீங்கள் அவனைப் பார்க்காதவர்களாயிருப்பினும் அவன் உங்களைப் பார்க்கிறான். இதயப் பூர்வமாக அல்லாஹ்வைத் தியானிப்பவனே (திக்று செய்பவனே) உண்மையான தியானவான். இதயப் பூர்வமாகத் தியானியாதவன் உண்மையான தியானவானல்லன். ஏனெனில், நாவு இதயத்தின் அடிமையாயும், அதைப் பின்பற்றியதாயும் உள்ளது. நல்லுபதேசங்களைக் கேட்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். ஏனெனில், உபதேசங்கள் கேட்பதை யிழந்தால் இதயம் குருடாகிவிடுகிறது. சர்வ நிலைமைகளிலும் மகத்துவமும், மாண்பும் மிக்க அல்லாஹ்வின் கட்டளைக்குக் கண்ணியம் கொடுப்பதே பாவமீட்சியின் (தௌபாவின்) எதார்த்தமாகும். இத்தன்மையிலேயே நாதாக்களான சிலர் கூறியுள்ளார்கள்: "சர்வ நன்மைகளும் இரண்டு சொல்லில் அடங்கிவிடுகின்றன. அவை, (1) மகத்துவமும் மாண்பும் மிக்க அல்லாஹ்வின் கட்டளைக்குக் கண்ணியங் கொடுப்பது. (2) அவனது சிருஷ்டிகள்மீது இரக்கம் கொள்வது என்பன" என்று. அல்லாஹ்வின் கட்டளைக்

குக் கண்ணியம் கொடுக்காமலும், அல்லாஹ்வின் சிருஷ்டி மீது கருணை கொள்ளாமலும் இருப்பவர்களனைவரும் அல்லாஹ்விடமிருந்து மிகத் தொலைவிலுள்ளவர்களாவர். "நான் உமக்குக் கிருபா கடாட்சம் புரியவேண்டுமானால் நீர் மற்றவர்களுக்குக் கிருபை பாலியும். எவர் அவ்வாறு கிருபை பாலித்தாரோ அவருக்கு நிச்சயமாக நான் கருணை பாலிப்பேன்; மேலும் எனது கடாட்சங்கொண்டு அவரை எனது சுவர்க்கத்தில் புகுத்துவேன்" என்று நபி மூஸா (அலை)வுக்கு அல்லாஹ் வஹீ அறிவித்தான். ஆகவே, கருணை யிரக்க முடையோருக்கே சுப மங்களம்! "நன்ருக உண்டார்கள், தின்ருர்கள். நன்ருக உண்டோம், தின்ருேம்" என்றும், "இன்பமாகப் பருகினுர்கள், இன்பமாகப் பருகினேும்" என்றும், "சொகுசாக உடுத்தார்கள், சொகுசாக உடுத்தோம்" என்றும், "செல்வங்களைச் சேகரித்தார்கள், செல்வங்களைச் சேகரித்தோம்" என்றும் இவ்வாருகப் பேசியே உங்கள் வாணுள் வீணே கழிந்துவிட்டது. ஜெயம் பெறவேண்டுமென்று விருப்பமுடையவர்களாய் ஹராமானவைகளை விட்டும், (ஹலாலோ, ஹராமோ என்று சந்தேகமுடைய) ஷுப்ஹாத்துக்களை விட்டும், இச்சைகளை விட்டும் தடுத்துத் தங்கள் ஆத்மாவைப் பொறுமையுறச் செய்யட்டும்; அல்லாஹ்வின் ஏவலை எடுத்து நடப்பதிலும், அவன் விலக்கியவற்றைத் தவிர்த்து நடப்பதிலும், அவனமைத்த விதிக்குக் கட்டுப்பட்டு நடப்பதிலும் தங்கள் ஆத்மாவைப் பொறுமை பெறச் செய்யட்டும். ஜெயமடைந்த சமூகத்தவர்கள் அல்லாஹ்வுக்கு இணக்கமாகி அவனுடன் பொறுமை கொண்டிருந்தார்கள்; அவனை இழந்திருப்பதில் பொறுமை கொள்ளவில்லை; அவனுக்காகவே பொறுமை செய்தனர்; அவனிலேயே பொறுமை செய்தனர்; இவ்வாறு பொறுமை செய்ததெல்லாம் அவனுடனே தாங்கள் இருக்கவேண்டுமென்பதற்கே; அவன் சந்

நிதானச் சமீபத்துவம் தங்களுக்கு வாய்க்கவேண்டுமென் பதையே அவர்கள் எதிர்பார்த்தனர். தங்கள் நப்ஸையும் பேராசைகளையும், இயற்கைச் சுபாவங்களையும் விட்டு அவர்கள், ஷரீஅத் எனும் சன்மார்க்க நெறியைத் துணை யாக்கிக்கொண்டு தங்கள் ரப்பினளவில் நடந்து பிர யாணம் புறப்பட்டு விட்டார்கள். அப்போது ஆபத்துக் கள், விபத்துக்கள், சோதனைகள், சங்கடங்கள், கவலைகள், பசி, பட்டினி, தாகம், உடுமானமில்லாமை, கேவலம், தாழ்வு முதலியனவெல்லாம் அவர்களை முன்னோக்கி வந்தடைந்தன. அவற்றிலெதையும் அவர்கள் சட்டை செய்யவில்லை; தங்கள் பிரயாண நடையை விட்டு வேறு திசையில் மீளவுமில்லை; தாங்கள் போய்க் கொண்டிருக் கும் போக்கில் எவ்வித மாறுதலும் செய்யவில்லை. தங்கள் அகத்தின் (கல்பின்) யதார்த்த சொரூப அக மியத்தையும், அதை இயக்கிக் கொண்டிருக்கும் வல்ல வனின் ஞான அகமியத்தையும் செவ்வனே அறிந்து உணருந் தன்மை யுண்டாகுமட்டும் அவர்கள் ஓய்வு ஒழி வின்றித் தங்கள் பிரயாணத்தில் முன்னோக்கிச் சென்ற வண்ணமேதான் இருப்பார்கள்.

சமூகத்தவர்களே, ஹக்குத் தஆலாவைத் தரிசிப்பதற் குரிய அமல்களைச் செய்யுங்கள். அவனைச் சந்திப்பதற்கு முன்பே நீங்கள் வெட்கங் கொள்ளுங்கள். மூமினுடைய வெட்கம் முதலில் அல்லாஹ்விடமும் பின்பு அவனது சிருஷ்டிகளிடமும் உண்டாகுதல் வேண்டும். ஆனால், மார்க்க சம்பந்தமானவற்றிலும் அதன் சட்டதிட்டக் கட்டளைகளிலும் வெட்கங் கொள்ளலாகாது. அவ்வா றான கருமங்களில் வெட்கங் கொள்ளாமல், அல்லாஹ் வின் மார்க்க சம்பந்தமான விஷயங்களைத் தெளிந்துணர வேண்டும். அத்தன்மையில் அறிந்து அதன்படி சட்ட திட்டங்களை நிலைபெறச் செய்து அல்லாஹ்வின் ஏவல் களுக்குத் தலைசாய்க்க வேண்டும். "அல்லாஹ்வின் (கட்

டளையை நிறைவேற்றும்) மார்க்க விஷயத்தில் (விபச்சாரம் புரிந்தவர்களான) அவ்விருவர்மீதும் உங்களுக்கு இரக்கம் ஏற்படலாகாது." (திரு குர்ஆன்) ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களைச் சரிவரப் பின்பற்றி நடந்தவரை அவர்கள் தங்கள் பரிவட்டங்கொண்டு அவர்களின் ஆடையைப் புனைந்து, படைச்சட்டையும், தலைச்சீராவும் சூட்டி, தங்களது வாளையும் ஈந்து, தங்கள் பிரதிநிதியாக ஆக்கி, தங்களின் ஒழுக்க சீலம், நற்குணம் முதலியவற்றால் இலங்கச்செய்து தங்கள் கௌரவச் சின்னத்தையும் அளிப்பார்கள். தங்களது உம்மத்துக்களில் இவர் எவ்வளவு மகோன்னதமானவரா யிருக்கிறார் என்று அவர்களுக்கு அளவில்லாத மகிழ்ச்சி பெருகும். அவ்வண்ணம் அருள்புரிந்ததற்காக அல்லாஹ்வை மிகவும் நன்றி செலுத்திப் புகழ்வார்கள். தங்களது சமூகத்திடையில் அவரைத் தங்களுக்குப் பிரதிநிதியாக ஏற்படுத்துவார்கள். ஹக்குத் தஆலாவின் சந்நிதான வாசல் பக்கம் சமூகத்தவர்களை அழைப்பவராகவும், அதற்குத் தக்க நமூனாவாகவும் அவரை ஏற்படுத்துவார்கள். ஏனெனில், அப்பொறுப்பை அவர்களே ஏற்று நடத்தி வந்து அழைப்பாளராகவும், நற்சான்றாகவும் இருந்து வந்தார்கள். இம்மண்ணுலகை விட்டும் மறு உலகிற்கு அல்லாஹ் அவர்களை அழைத்துக் கொண்டதற்கப்பால் அப்பொறுப்பை மேற்கொள்ளத் தங்களுக்குப் பகரமாக ஒரு பிரதிநிதியைத் தங்களது சமூகத்தார்களிலிருந்தே ஏற்படுத்திக் கொண்டார்கள். இவ்வாறாக ஏற்படுத்தப் படுபவர் கோடியில் ஒருவராய் இருக்கலாம். உலகில் ஓர் ஆத்மா உள்ளமட்டும் இவ்வண்ணமிருந்து கொண்டேயிருக்கும். இவ்வாறாக ஏற்படுத்தப்படுபவர்கள் ஜனங்கள்பால் நெருங்கிச் சத்தியத்தைப் போதிக்கிறார்கள்; சதாவும் ஹிதோபதேசம் புரிகிறார்கள்; ஜனங்கள் தங்களுக்கிழைக்கும் தீங்குகளைப் பொறுமையுடன் சகித்துக் கொள்கிறார்கள். முனாபிக்குகளுடனும் தீயவர்களுடனுங்

கூட அவர்கள் சிரித்த முகத்துடன் பழகுகிறார்கள். அந்தக் கெட்டவர்களிடம் குடிகொண்டிருந்த தீய - மோசமான நிலைமைகள் மாறி அவர்கள் அல்லாஹ்வின் சந்நிதான வாசல் பக்கம் வருபவர்களாக ஆகவேண்டும் என்பதற்காக இந்த நல்லடியார்கள் தங்களாலான உபாயங்களையெல்லாம் கையாள்கிறார்கள். இதற்கொப்பவே நாதாக்களுள் ஒருவர் (ரஹ்) கூறியுள்ளதாவது: "அகக்கண் திறந்தீ (ஆரிபு) ஞானியல்லாத யாரும் தீயவனைக் கண்டு புன்னகை பூப்பதில்லை. அவனைப் பற்றித் தனக்கெதுவும் தெரியாதது போல அவனைப் பார்த்துச் சிரித்துப் பேசுவார். ஆனால், அவருக்கோ அந்தத் தீயவன், சத்திய சன்மார்க்கம் என்ற வீட்டை நாசப்படுத்தி யிருப்பதும், அவன் அகத்தில் அந்தகார இருள் அப்பிப் போயிருப்பதும், அதிகமான மோசடியும் குழப்பமும் அவனில் அமைந்திருப்பதும் நன்றாகத் தெரியத்தான் செய்யும். அவர் தன்னை இன்னாரென அறியவில்லை என்றும், தன் நடைமுறை வழக்கங்களெல்லாம் அவருக்குத் தெரியாமல் மறைக்கப்பட்டுவிட்டன என்றும் தீயவன் - நயவஞ்சகன் நினைத்துக் கொள்கிறான். ஆனால், உண்மை அவ்வாறில்லை. அகக்கண் திறந்த அவருக்குத் தெரியாமல் மறைக்க இவர்களுக்கு ஏதும் அப்படி அற்புத சக்தி (கராமத்து) வந்துவிடவில்லை. அவர்களின் நிலைமைகளையும் தன்மைகளையும் அவர் நன்றாக அறிந்தே யிருக்கிறார்; பார்வையாலும், நோட்டத்தாலும், வசனத்தாலும், உசும்புதலாலும் அவர்களின் லட்சணங்களை அறிந்தேயிருக்கிக்கிறார். அவர்களின் அகம், புறம் இரண்டின் தன்மைகளையும் நன்கு தெரிந்தே யிருக்கிறார். அதில் எவ்விதச் சந்தேகமுமில்லை." உங்களுக்குப் பிடித்த கேடென்ன? சத்தியவந்தர்களான ஸித்தீகீன்களுக்கும் அகக்கண் திறந்த ஞானிகளான ஆரிபீன்களுக்கும், நல்லனுஷ்டானமுடையோர்களான ஆமிலீன்களுக்கும் தெரியாமல் உங்கள் லட்சணங்களை மறைத்து வைத்துக்

கொண்டிருப்பதாக நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்! ஒன்றுக்கும் உதவா வண்ணம் உங்கள் வாழுட்களை எத்தனை காலந்தான் வீணாக்கிக் கொண்டிருப்பீர்கள்? மறுமை வாழ்வின் வழியைப் போதிப்பவரை நீங்கள் தேடிப்பிடியுங்கள். ஹே, மறுமைவாழ்வின் வழியை இழந்து இம்மை வாழ்வில் வழிதவறிப் போகச் செய்தவர்களே, அல்லாஹு அக்பர்! உங்களுக்கே கேடு! இதயங்களை யெல்லாம் சாகடித்தவர்களே, (காரண கர்த்தாவை விட்டுக்) காரண காரியங்களை (ஸபபுகளை)க் கொண்டு இணைவைத்தவர்களே, தங்கள் சக்தி, வலிமை, ஜீவனம், முதல், பொருள்கள், ஊருக்குப் பெரிய மனிதர்கள், ஸுல்தான்கள் ஆகிய இத்தகைய விக்ரஹங்களையெல்லாம் நம்பி பூஜிப்பவர்களே, நீங்கள் போய்க்கொண்டிருக்கும் போக்கின் முடிவு அல்லாஹ்வை விட்டும் திரையிடப்பட்டவர்களாகி விடுவது தான். நல்லதோ, கெட்டதோ அது அல்லாஹ் அல்லாத மற்ற வஸ்துவிலிருந்து சம்பவிப்பதாக நம்புகிறவன் அல்லாஹ்வின் அடியான் அல்லன்; ஆனால், நல்லது கெட்டது உண்டாகும் மூலஸ்தானம் என்று அவன் கருதுவதற்கே அவன் அடிமையாய் இருக்கிறான்; ஆகவே, அல்லாஹ்வின் வெறுப்பு திரை என்ற நரகத்திலே உழல்கிறான். நாளை மறுமையில் ஜஹன்னம் என்ற நரகத்திலே வேதனையுறுவான். அல்லாஹ்வின் இத்தகைய நரக வேதனைகளை விட்டு, உண்மையான பயபக்தி (தக்வா) உடையவர்களும், ஏகத்துவ (தவ்ஹீது) நிலையுடையவர்களும், நிஷ்களங்கமான (இக்லாஸு) சித்தசுத்தியுடையவர்களும், யதார்த்தமான பாபமீட்சி (தவ்பா) பெற்றவர்களும் தவிர வேறு யாரும் விமோசனம் பெறமாட்டார்கள். உங்கள் மனப்பூர்வமாகத் தௌபாச் செய்யுங்கள். அதன்பின் நாவால் தௌபாச் செய்யுங்கள். தௌபா என்றால் என்ன? உங்கள் இதயத்திலே ஏற்படுகிற புரட்சிகரமான மாறுதலே அது. உங்கள் நப்ஸின் கொட்டத்தை யொடுக்கி,

போராசையைப் போக்கி, உங்கள் ஷைத்தான்களை அடக்கிக் கெட்ட சகபாடிகளை நீக்கிப் புரியும் புரட்சியாட்சியே அது. அதன் மூலம் உங்கள் பார்வை, கேள்வி, பேச்சு, அகம், கைகால் சர்வ உறுப்புக்களும் முன்னிருந்த மோச நிலை மாறி விசேஷத் தன்மை பெற்றுவிடும். ஹறாமும் ஷுப்ஹத்தும் கலக்காத பரிசுத்தமான ஆகாரத்தையும் பானத்தையுமே நீங்கள் உட்கொள்வீர்கள். உங்கள் ஜீவனப் பிழைப்பு, கொள்வினை, விற்பனை முதலியவற்றில் குற்றமேதுமின்றிப் பேணுதலுடனிருப்பீர்கள். உங்கள் முழுக் கவனமும் சிந்தையும் அல்லாஹ் அளவிலேயே இருக்கும்; உலக வழக்கத்தை விடுவீர்கள்; அவற்றிற்குப் பதில் அல்லாஹ்வின் வணக்கங்களை எடுத்துக் கொள்வீர்கள்; பாபமானவற்றை அடியோடு விட்டுவிடுவீர்கள்; அவற்றிற்குப் பகரமாக நல்வழிபாடுகளை எடுப்பீர்கள். இவ்வாறாக நீங்கள் நல்லம்சங்களைப் பெற்று ஷரீஅத்தின் ஒழுக்க நெறிகளையும், அத்தாட்சிகளையும் செவ்வையாகக் கைக்கொண்டு இருந்துவருவதுடன் ஹகீகத்து எனும் யோகசாதனையிலும் நிலைபெறுவீர்கள். ஷரீஅத்து நடவடிக்கைகள் செவ்வையான அத்தாட்சியுடன் இல்லாத ஹகீகத்து யோகசாதனையானது நிச்சயமாக வழிகேடு தான். ஆகவே, ஷரீஅத்து நெறிவழுவாத ஹகீகத்து நிலைவேண்டும். அதில் நீங்கள் ஸ்திரம் பெற்றீர்களாயின் தீய குணங்கள், சுபாவங்களை விட்டும் நீங்கி இருக்கக்கூடிய 'பனா' என்னும் சூன்ய நிலை ஏற்படும். சிருஷ்டிகர்த்தா அல்லாத வேறு சிருஷ்டி எதையும் நீங்கள் நோக்கமாட்டீர்கள். அச்சமயத்தில் உங்கள் வெளிரங்கம் பாதுகாக்கப்பட்டதாயும், அந்தரங்கம் அல்லாஹ்வின் விஷயத்தில் இயங்கிக் கொண்டிருப்பதாயும் இருக்கும். நீங்கள் இத்தகைய சம்பூரண நிலைமையைப் பெற்றுவிட்டால், இந்த லோகம் முழுவதுமே உங்களிடம் வந்து இடம் பெற்றாலும், முந்திய பிந்திய சர்வ ஜனங்களும் உங்களுக்குக் கட்டுப்பட்டுத் தொடர்ந்

தாலும்கூட உங்களை அசைக்க முடியாது; அவை உங்கள் எஜமானாகிய அல்லாஹ்வின் சந்நிதான வாசலைவிட்டு உங்களைத் திருப்பிவிடமாட்டா. ஏனெனில், நீங்கள் தனித்திருக்கவில்லை. அவனுடனேயே இருக்கிறீர்கள்; அவனை முன்னோக்கிய வண்ணமே இருக்கிறீர்கள்; அவனைக் கொண்டே இயங்கிக் கொண்டிருக்கிறீர்கள்; அவன் ஜலால், ஜமாலிலேயே நோட்டமிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்; அவனது ஜலாலை நோக்கிய சமயத்தில் தனித்த ஏகமயமாய்க் காண்கிறீர்கள். ஜமாலை நோக்கிய போது ஐக்கியமயமாகக் காண்கிறீர்கள். ஜலாலைக் கண்ணுற்றபோது அஞ்சுகிறீர்கள்; ஜமாலைக் கண்ட போது ஆதரவு வைக்கிறீர்கள்; ஜலாலைப் பார்த்ததும் உங்களையே இல்லாமலாக்கிவிடுகிறீர்கள்; ஜமாலை நோக்கியதும் தரிபடுத்துகிறீர்கள். சபாஷ்! இவ்வாறான பேரின்பப் போஜனமருந்தியவருக்கே சுப சோபனம்!

இறைவனே, உன் சந்நிதானத்தின் அருகென்ற பேரின்ப உணவை எங்களுக்குத் தந்தருள். உன் மருவுதல் என்ற பேரின்பப் பானத்தை எங்களுக்குப் புகட்டியருள். இம்மையின் நற்பேறுகளையும் மறுமையின் நற்பேறுகளையும் எங்களுக்களித்து, நரக வேதனையிலிருந்து எங்களை ரட்சித்தருள்!

இருபத்து நான்காவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545, துல்ஹஜ் பிறை 14-ல் ஹஜ்ரத் அவர்கள் நிகழ்த்தியது:

மெய்ப்பொருளாகிய நாயனின் திட்டப்படியும் சர்வ ஞானப்படியும் நடைபெறும் தக்தீர் எனும் விதிவசத்தை அறிந்து அதற்கு இணங்கிய வாழ்வை நடாத்துவது முறையேயன்றி, அவனையும் அவனது தக்தீரையும் மறந்து நம்முடைய அகங்காரத்தையும் ஆசைகளையும் சுபாவங்களையும் பெரிதாக நினைத்து, அவனுக்கு அவைகளை இணைவைப்பது முறையன்று.

உங்கள் சொந்தக் கடமைகளைச் செய்வதிலும், பிறருக்கு நீங்கள் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதிலும் அல்லாஹ்வின் பயபக்தியுள்ளவர்களாகுங்கள். "சிருஷ்டிகர்த்தனின் ஆணைக்கிணங்குவதில் சிருஷ்டிகளுக்கு முரண்படத் தயாராய் இருக்கவேண்டும்; சிருஷ்டிகளுக்கு இணங்குவதில், சிருஷ்டிகர்த்தனின் ஆணைக்கும் நாட்டத்துக்கும் முரண்பட்டுவிடலாகாது; உடைப்பதை உடைக்கவும் ஒன்றுபடுத்துவதை ஒன்றுபடுத்தவும் தயாராய் இருக்கவேண்டும்" என்பது ஓர் ஆன்றோர் வாக்கியம். அல்லாஹ்வின் நாட்டத்துக்கு முரண்படாது அவனுடைய சித்தத்துக்கு இணங்கியவர்களாகுதல் எப்படியெனின் அவ்விதம், தெய்வ நாட்டத்துக்கு முற்றிலும் இணங்கிய வாழ்வு நடாத்தும் மெய்யறிஞர்களைக் கொண்டு அறிந்துகொள்வதன் மூலம்தான்.

அறிவு அளிக்கப்பட்டதேன்? அறிந்ததன்படி ஒழுகி அனுபவத்தில் உண்மை காண்பதற்காகவே. நெட்டுருப்போடுவதற்கும் விதண்டாவாதம் செய்வதற்குமல்ல. முதலில் அறிவுத் தெளிவு பெறுங்கள்; பிறகு அதன்படி அனுஷ்டியுங்கள். அதன் பின்னரே நீங்கள் பிறர்க்குப் போதிக்க முன்வர வேண்டும்.

நீங்கள் அடைந்த அறிவுகொண்டு அனுஷ்டானம் செய்து உண்மை கண்ட அறிஞர்களாகிவிடும்போது, பிறருக்குப் போதிப்பதற்காக நீங்கள் நாவால் உபதேசிக்க வேண்டுமென்றில்லை; உங்களின் மௌனமே பிறர்க்கு அறிவுச் சுடர் கொளுத்தக்கூடிய ஆற்றலை அடைந்துவிடும்; உங்களின் நாவு அசையாதிருப்பினும், உங்கள் அனுஷ்டானமே பிறருக்கு அறிவு உண்டாக்கும் போதனையாக விளங்கும். அனுஷ்டானமும் அனுபவஞானமுமற்றவர்களின் உபதேசங்கள் உயிரற்றவையாய் இருக்கின்றன. இதனாலேயே, "எவனுடைய பார்வை பிறருக்கு நற்பயனை அளிக்கக்கூடிய சுடரை அடையவில்லையோ,

அவனது பிரசங்கம் பிறருக்குப் பயன் விளைவிக்குமென்பது அசாத்யம்'' என்று ஒரு பெரியார் பகர்ந்திருக்கிறார். எனவே, அறிந்ததன்படி அனுஷ்டானம் செய்பவனின் அறிவு அவனுக்கே பயனளிப்பதாய் இருப்பதுடன் பிறருக்கும் பயனளிக்கக்கூடியதாக ஆகிவிடுகிறது.

என்னுடைய உபதேசம் பெறவேண்டுமெனும் நாட்டத்துடன் வருகிறவர்களின் நிலைமைகளுக்கேற்றவாறு, எனது நாயன் என்னை உபதேசம் செய்யுமாறு அருள் பாலிக்கிறான். உண்மையிலோ, உங்களுக்கும் எனக்கும் இருக்கும் வேற்றுமை அளவற்றது. என்றாலும், எனக்கு ஆண்டவன் அளிப்பவை அனைத்தையும் உங்களுக்கு அர்ப்பணம் செய்து வெறும் கையனாய் இருந்து வருகிறேன். உங்களுக்கு அளித்துவிடுவதைத் தவிர என்னிடம் ஒன்றுமில்லை. உங்களுக்கும் எனக்குமிடையில் சம்பந்தமிருப்பின் உபதேச சம்பந்தம் மட்டுமேயாகும். உங்களுக்கு நான் உபதேசிப்பதுவும் அல்லாஹ்வை முன்னிட்டேயல்லாது சுயநலத்தாலன்று.

தெய்வச் சித்தத்துக்கும் உத்தரவுகளுக்கும் இணங்கியவர்களாகிவிடுமாறு மீண்டும் உங்களுக்கு உபதேசிக்கிறேன். தக்தீருக்கு முரண்பட முயன்றால் தக்தீரின் சக்தி உங்களின் கழுத்தை உடைத்துவிடுமென்பதை உணருங்கள்; ஆண்டவனின் நாட்டத்துக்கு இணங்கியவர்களாகிவிடும் வழி தேடுங்கள்; நடக்கப்போவது உங்களின் நாட்டமன்று; அவனுடைய நாட்டமேயாகும். அவனது நாட்டம் நடைபெறுவதற்கு எதிரிடையாக உங்களின் நாட்டம் என்ன செய்ய முடியும்? அவனது நாட்டம் நடைபெறுவதில் குறுக்கிடும் ஆத்மாக்கள் அழிவுக்காளாகுமென்பதில் சந்தேகம் உண்டோ? "அவனது நாட்டமே நடைபெறுக!'' என்பவர்களாகத் தக்தீருக்கு அடிபணிந்தவர்களாகிவிடுங்கள்; அவனது கருணைக்குரித்தாகி அவனது நாட்டத்தால் வழிநடத்தப்படுகிறவர்களாகிவிடுங்கள்!

அல்லாஹ்வின் அடியார்கள் தங்களின் ஆத்மார்த்த வழியின் ஆரம்பத்தில், ஜீவனோபாயத்துக்காக ஷரீஅத்தைத் தழுவிய பிரயாசையுள்ளவர்களாகவே இருந்து வருவார்கள்; ஆனால், அவர்கள் அந்தப் படித்தரத்திலிருந்து மேலேறும்போது, 'ஆண்டவனால் வழி நடத்தப்படல்' எனும் 'தவக்கல்' அவர்கள் உள்ளங்களை ஆதிக்கம் செய்வதாகிவிடுகிறது; அவர்களுடைய உறுப்புக்கள் தெய்வச் சித்தத்தின் தூண்டுகோலால் அசைபவையாய் ஆகிவிடுகின்றன; அவர்கள் இந்நிலைமையை அடையும் போது, அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உலகப் பேறுகளின் வரங்கள் கிரமம் என்பதே இல்லாமல் அவர்களிடம் வந்து சேருகின்றன; தமக்கென்று எது எழுதப்பட்டு, எழுத்தின்படி வந்தும் சேருகிறதோ, அதையே தமக்குப் போதுமானதாக அவர்கள் காண்பார்கள்.

அது மட்டுமா? ஆண்டவனின் சமீபத்துவம் வாய்ந்த அடியார்கள், மறுமையில் சுவர்க்கப் பேறுகளை அனுபவிப்பதில்கூடச் சுவர்க்கம் வேண்டுமென்ற நினைவு கொண்டோ ஆசை கொண்டோ சுவர்க்கத்தில் புகுந்து அப்பேறுகளை அனுபவிக்கமாட்டார்களென்பேன். எங்ஙனம் இம்மைப் பேறுகளின் விருப்பற்றவர்களாகவே, ஆண்டவன் இம்மையில் அளிப்பதை அவன் உத்தரவை நிறைவேற்றும் முறையில் அவர்கள் அனுபவிப்பார்களோ, அங்ஙனமே மறுமையிலும் ஆண்டவன் விரும்பி அளித்து அனுபவிக்குமாறு உத்தரவிடும்போது, உத்தரவுக்குக் கீழ்ப்படிகிறோமென்ற முறையில் மட்டுமே, சுவர்க்க போகங்களையும் அனுபவிப்பார்கள். இத்தகைய நல்லடியார்களுக்கு இறைவன் இம்மையிலும் மறுமையிலும் போதுமானவற்றை அளித்தருள்கிறான்; அவன் தன் அடியார்கள் விஷயத்தில் ஒருக்காலும் அநியாயமாய் நடக்கக் கூடியவனன்று.

என் புதல்வர்களே, உங்களின் ஆத்மார்த்த முயற்சியின் அளவுப்படியே உங்களுக்கு ஆண்டவனின் அருட்கொடைகள் அளிக்கப்படவிருக்கின்றன வென்பதை மறந்துவிடாதீர்கள். உங்களின் அகங்களிலிருந்து "அல்லாஹ்" அல்லாத சகல பொருட்களையும் பெயர்த்தெறியுங்கள்; ஏனெனில், அவனல்லாத அநித்தியப் பொருட்களிலிருந்து எவ்வளவுக்குத் தூரமாகிறீர்களோ, அவ்வளவுக்கே நித்யனை அல்லாஹ்வின் சமீபத்துவத்தை அடைந்தவர்களாவீர்கள். உங்களின் அகத்தின் முன் சகல சிருஷ்டிகளும் மரித்தவைகளாகிவிடவேண்டும்; உங்களின் 'தான்' என்பது முற்றிலும் மரித்ததாக ஆகிவிடவேண்டும். அப்பொழுதே உங்களுக்கும் உங்களைப் படைத்தவனுக்குமிடையிலுள்ள திரைகள் விலக ஆரம்பிக்கும்.

உங்களின் அகங்காரம் ஒழியவேண்டும்; இச்சைகள் அறுபடவேண்டும்; சுபாவங்கள் மறையவேண்டும்; வழக்கங்களின் ஆதிக்கம் அழியவேண்டும்; சிருஷ்டிப் பொருட்களைச் சாதனப் பொருட்களாகக் கொள்ளும் மனப்பான்மை மாறவேண்டும்; அவனல்லாத இதர சகலவற்றின்மீதும் நீங்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் நிவர்த்திக்கப்படவேண்டும்; இவைகளெல்லாம் ஒருக்காலும் ஏக நாயனுக்கு நிகராக - ஏக நாயனின் ஞாபகத்தை மறைத்து உங்கள் முன் நிற்பவைகளாக இருக்கவிடக்கூடாது. அத்துடன், அல்லாஹ் ஒருவனிடமேயன்றி வேறு எப்பொருளிடமும் உதவி பெறும் நினைவைக் களையவேண்டும். இவ்வாறு சகல பாசங்களையும் பற்றுகளையும் அகத்திலிருந்து எடுத்தெறிந்துவிட்டு, ஏக நாயனின் ஞாபகத்தைமட்டும் முன்னிறுத்தியவர்களாகி, அவனை வணங்கும்போதும் அவனது ஆணைகளை நிறைவேற்றும்போதும், அவன் அளிக்கக்கூடிய சம்மானங்களை அடையும் நோக்குடன் பிரதிபயன் கருதித் தொண்டு

புரியக்கூடாது. அவன் அளிக்க விரும்புவதை அளிக்கட்டும்; உங்கள் கடன் பணிசெய்து கிடப்பது மட்டுமே என்பதை உணரவேண்டும். "அவனது நாட்டம் நடைபெறுக! அவனது திட்டம் பூர்த்தியாகுக! அவன் செய்பவை அனைத்தும் சரியே!" என்ற கொள்கையாளர்களாகிவிடுங்கள். இங்ஙனம் செய்யும்போதே உங்களின் 'தான்' என்பது முற்றிலும் மரித்ததாகி, ஆண்டவனுடைய நாமத்தையும் ஞாபகத்தையும் மட்டும் தமது உயிர்நாடியாகப் பெற்ற அடியார்களாக ஆகுவீர்கள். அத்தகைய நிலையிலேயே உங்களின் இதயாசனம் இறைவனுடைய இருப்பிடமாகிவிடுகிறது; அதன்பின்னரே, அவன் தான் நாடும் விதம் உங்களைத் தனது விசேஷ நாட்டம் கொண்டு நடத்தாட்ட ஆரம்பித்துவிடுவான். ஹாஜிகள் கஃபாவின் திரையைப் பற்றிக்கொண்டு பக்தி ததும்பியவர்களாக நிற்பதேபோல், 'தெய்வ சமீபத்துவம்' எனும் கஃபாவின் திரைகளைப் பற்றிக்கொண்டு மெய்மறந்து நிற்பவர்களாகிவிடுவீர்கள்.

இகத்திலும் சரியே பரத்திலும் சரியே, சுவர்க்கத்தின் திறவுகோலாய் இருப்பது "லாயிலாஹ – இல்லல்லாஹு" எனும் மந்திரமேயாகும். ஆனால், நாவினால் மட்டும் இம்மந்திரத்தை உச்சரித்துவிடுவது திறவுகோல் ஆகாது; அவனல்லாத சகலவற்றையும் அகத்திலிருந்து அகற்றியவனுவதுடன், எந்நிலையிலும் தெய்வ உத்தரவுகளைக்கொண்ட ஷரீஅத்தின் வரையறைகளைக் காப்பாற்றி வாழ்வதே முக்தி வழியாய் இருக்கிறது.

மெய்ப்பொருளின் சமீபத்துவம் பெறுவதையே அல்லாஹ்வின் அடியார்கள் சுவர்க்கம் என்று நினைப்பார்கள்; ஆண்டவனின் சமீபத்துவமின்றி அவனது அருளுக்குத் தூரமாய் இருப்பதையே அவர்கள் நரகமெனக் கொள்வார்கள்.

இதைத் தவிர, அவர்கள் நெருப்பின் ஜுவாலைகளுக்குப் பயப்படுபவர்களாய் இருப்பதில்லை. அவர்களைப் பயப்படச் செய்வதற்கு அக்கினிக்குக் கொடூரம் ஏது? நரக நெருப்போ அல்லாஹ்வின் அடியார்களைக் கண்டு பயப்படக்கூடியதாய் இருக்கிறது; அவர்களைக் கண்டு வெருண்டோடுவதாய் இருக்கிறது. அல்லாஹ்வின் அன்புக்கும் அருளுக்கும் உரித்தானவர்களைக் கண்டு நரகம் பீதியடையாதிருப்பதெப்படி?

ஈமான் வாய்ந்தவர்களின் நிலைமை, இம்மையிலும் மறுமையிலும் ஒருங்கே குறையற்றதாய் இருக்கிறது; இம்மையிலும், அவர்கள் தக்தீரின்படி எத்தகைய நிலையிலிருப்பினும் ஆண்டவனுக்குப் பொருந்தியவர்களாய் இருப்பின் போதுமானதென்று கவலையற்றிருப்பார்கள்; மறுமையிலும், ஆண்டவனின் சித்தப் பொருத்தம் மட்டுமே வேண்டுமென வாடுவார்கள்; நாடுவார்கள். அதற்குமேல் எந்நிலையில் நாம் மறுமையில் இருப்போமென்ற கவலை அவர்களுக்கு ஏது? எங்கிருப்பினும் சரி, தக்தீரின் எழுத்துப்படி தங்களுக்குக் கிடைப்பது கொண்டு திருப்தி அடைபவர்களாய் இருப்பார்கள். எத்திசையில் நோக்கினும் அல்லாஹ்வின் ஜோதியின் உதவி கொண்டு நோக்குவார்கள்; அவர்களுக்கு இருள் என்பது ஏது? அவர்களது சகல சமிக்ஞைகளும் சிருஷ்டி கர்த்தனைக் குறிப்பிடுவனவாகவே இருக்கின்றன. அவர்களின் முழு நம்பிக்கையும் அவனை மட்டும் பொருத்ததாய் இருக்கிறது.

அல்லாஹ்வையும் அவனது விசேஷத் தக்தீருக்கு உரித்தாகும் அடியார்களையும் அறியாதவர்களே, அடியார்களுக்கு நீங்கள் இழைக்கும் தீங்கு உங்கள்மீதே நீங்கள் ஏற்றிக்கொள்ளும் நஞ்சாய் இருக்கிறது. அடியார்களைப் பற்றிப் புறளி பேசாதீர்கள்; அவர்களை அவதூறு செய்யாதீர்கள்; அங்ஙனம் செய்வது உங்கள்

வாழ்வுக்கே உலை வைப்பதாகும். அவர்கள் விஷயத்தில் அநியாயத்துக்கு ஆளாவதில் எச்சரிக்கையாய் இருந்து கொள்ளுங்கள். அல்லாஹ் அவர்களுக்குப் பாதுகாவலனாய் இருக்கிறான் என்பதையும், தனது விசேஷ அருளுக்கு உரித்தாகும் அடியார்கள் விஷயத்தில் அதிக ரோஷமுள்ளவனாய் இருக்கிறானென்பதையும் மறந்து விடாதீர்கள்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்றாகத் திரியும் முனாபிக்குகளே, உங்களின் இதயமும் உங்கள் அகமும் புறமும், கசடு நிறைந்தவையாகி விட்டதை உற்று நோக்குங்கள். தௌஹீதைக்கொண்டும் கலப்பற்றநிர்ணயங்களை மனத்தில் இடம் பெறச்செய்வதுகொண்டும் உங்களின் இதயத்திலுள்ள நோய்களை நிவர்த்தியுங்கள். சந்தேகங்களை அகற்றுங்கள். எவ்வளவுக்கு நீங்கள் ஷரீஅத்தின் வரையறையைப் பேணாதிருக்கிறீர்களோ, எவ்வளவுக்குப் பயபக்தி என்பதை நடைமுறையில் இல்லாதொழிக்கிறீர்களோ, உங்களின் சூட்சும சரீரத்தின் போர்வைகளை எவ்வளவுக்கு அசுத்தமடையச் செய்கிறீர்களோ, எவ்வளவுக்கு உங்களுக்குப் பிறப்புரிமையாக அளிக்கப்பட்ட ஈமானின் ஜோதியை அணைத்துவிடுகிறீர்களோ, அவ்வளவுக்கு ஆண்டவனின் வெறுப்புக்கும் கோபத்துக்கும் இலக்கானவர்களாகிக்கொண்டிருக்கிறீர்கள். உங்களில் பலர் நன்மை செய்ய ஆரம்பிக்கப் பழகினும், சுயநலத்துக்காகவும் பிறருக்குக் காட்டவும் சிருஷ்டிகளின் புகழை முன்னிட்டுமே நன்மை செய்பவர்களாய் இருக்கிறீர்கள்! ஆகையால், உங்களின் சீர்கெட்ட இந்நிலை மாறி, உண்மையிலேயே அல்லாஹ்வின் அடியார்களாக ஆவதற்கு உங்களுக்கு நாட்டமிருப்பின், சிருஷ்டிகளின் புகழை மறந்து, ஒதுங்கிக்கொண்டு ஏகாந்த வாழ்வை அனுஷ்டிப்பது இன்றியமையாததாகும்.

பிறர் காணவேண்டும் என்ற நோக்குடன் செய்யப்படும் ஆத்மார்த்த முயற்சிகள் தமது தத்துவங்களை

இழந்துவிடுபவைகளாகிவிடுகின்றன. “(ஆண்டவனை அறிந்து அவனுக்கு அடிபணியும் முயற்சியில், தனது ஆத்மார்த்த முயற்சிகள் பிறருக்குத் தெரியாதிருப்பதற்காக ஜனங்களை விட்டு) ஒதுங்கியிருந்து வாழ்வு நடாத்துதலைக் கடைப்பிடியுங்கள்; அங்ஙனம் ஒதுங்குவதும் வணக்கமாகும்; உங்களுக்கு முன்னிருந்த நல்லோர்களின் இலட்சணங்களுள் அதுவும் ஒன்றாய் இருந்தது” என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்.

முதலாவது நீங்கள் அடையவேண்டுவது ‘ஈமான்’ எனப்படும் நம்பிக்கைத்திடம் ஆகும்; பிறகு நீங்கள் அடையவேண்டுவது உண்மை கண்டதால் ஏற்படும் உறுதியாகிய ‘யக்கீன்’ ஆகும். அதன்பின், உங்களின் இலட்சியமாய் இருக்கவேண்டுவது தன்னை அழித்து, தனக்காகவோ பிறருக்காகவோவன்றி, அல்லாஹ்வை முன்னிட்டு மட்டுமே வாழ்வு நடாத்துவதாகும். இவ்வாறு மேலேறிச் செல்லவேண்டியிருக்கும் ஒவ்வொரு படித்தரத்திலும், அல்லாஹ் ஷரீஅத்தின் வாயிலாக ஆகுமாக்கியிருப்பவற்றையும் ஆகாதென்று விலக்கியிருப்பவற்றையும் சதா முன்னிறுத்தி அவற்றின் விஷயத்தில் பேணிவருவதும் அவசியமாகும். உங்களைக் கண்டு அல்லாஹ்வின் ரஸூல் (ஸல்) அவர்களின் நேத்திரங்கள் குளிர்ச்சியடையும் அருகதையுள்ளவர்களாக நீங்கள் ஆகவேண்டும்; திரு குர்ஆனின் தொனிகளில் எதிரொலிக்கா நின்ற ஆத்ம விளக்கங்களைத் தாங்குபவர்களாய் நீங்கள் மிளிரவேண்டும்.

திரு குர்ஆனின் தெய்வீக மூல மந்திரங்களாகிய ஆயத்துகள் தொனிக்கப்படும்போது செவிசாய்த்தல் வேண்டும். அதற்கு முரணாகப் பேசுபவன் ஒருக்காலும் உண்மைக் கண்ணியத்தை அடையான். எழுத்துக்களைக் கொண்ட காகிதங்களின் சேர்மானமாக நம் கரத்திலிருக்

கும் இந்நூல் - இக்குர்ஆன் வெறும் எழுத்தன்று; வெறும் நூலன்று; சர்வ கண்ணியனும் சர்வசக்தனுமாகிய அல்லாஹ்வின் வசனமாகும். இக்குர்ஆனை ஒலிப்பித்தவன் ஏக நாயகனாய் இருக்கிறான்; நாம் அதனைச் செவியில் தாங்குபவர்களாய் இருக்கிறோம். வேறு விதமாகக் கூறுவதெனின், பார்ப்பதற்குச் சிறு நூலாக நாம் கையில் ஏந்தும் குர்ஆன் ஷரீபின் ஒரு புறத்தில் ஆண்டவனின் கரமும் மறுபுறத்தில் நமது கரங்களும் உள்ளன எனலாம்.

அல்லாஹு ஜல்ல ஜலாலுஹூவையும், அவன் விஷயத்தில் ஓர்மையையும் கடைப்பிடித்து அதுகொண்டே இம்மை மறுமைக் குறைகள் அனைத்தும் நிவர்த்தியானவர்களாகுங்கள்! வாழ்விலும் சாவிலும் அவன் ஒருவனே உங்களுக்குப் போதுமானவனாய் இருக்கிறான். எச்சந்தர்ப்பத்திலும் உங்களை ரட்சிக்கக்கூடியவனாய் இருப்பவனும் அவனே!

எனவே, அல்லாஹ்வின் திருமறையாம் திருகுர்ஆனைப் பலமாகப் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். அம்மறையிலிருந்து எழும் சங்கநாதமே உங்களை வழி நடத்திச்சென்று இறுதியில் தெய்வ சந்நிதானம் பெறச் செய்வதற்குப் போதிய பொக்கிஷமாய் இருக்கிறது.

தங்களை ஸூபிகளென்றும் தரீக்காக்காரர்களென்றும் அழைத்துக் கொள்ளும் வேஷதாரிகளே, உங்களின் "ஸூப்" எனும் கம்பளிப் போர்வையாலோ பச்சைப் போர்வையாலோ ஆகப்போவது ஒன்றுமில்லை. முதலில் உங்களின் அகத்தை - இதயத்தை - சுபாவத்தை சுத்தி செய்யுங்கள். ஆத்ம சுத்தியில்லாத உடல் சுத்தியும், ஆத்ம ஜோதியற்ற உடை அலங்காரமும் காரியத்துக்கு உதவப்போவதில்லை. முதலில் வீட்டைக் கட்டி அதனைச் செம்மைப்படுத்திக் கொண்டல்லவா கதவை அலங்கரிக்கவேண்டும்? வீடு ஓட்டையாய் இருந்து கதவு மட்டும் டாம்பீகமாக இருந்தென்ன பயன்? ஆகையால்,

முதலில் உள்ளே சீர்பெறச் செய்யுங்கள்; கதவை அப்புறம் கவனித்துக்கொள்ளலாம். அகம் அற்ற புறம் கொண்டு ஆவதொன்றுமில்லை; சிருஷ்டிகர்த்தனின் அருளற்ற நிலையில் சிருஷ்டிகளால் ஆவதொன்றுமில்லை! வீட்டைக் கட்டாது வெறும் கதவை மட்டும் நிறுத்தி வைத்திருப்பதில் அர்த்தமில்லை. குட்டிச் சுவருக்கு முன் அழகிய வாயிலைக் கட்டிக்கொண்டு அதற்குப் பூட்டுப் போட்டுக் கொள்வதென்றால் அதுபற்றி என் சொல்வது?

மறுமையற்ற இம்மையாளர்களே, சிருஷ்டிகர்த்தனை மறந்து கிடக்கும் சிருஷ்டிகளே, உங்களின் காரியாதிகள் அனைத்தும் மஹ்ஷரின்போது உங்களுக்கு ஒரு பயனும் விளைவிக்கப்போவதில்லை. குணச் செல்வத்துக்கு ஆங்கு இடமுண்டேயன்றிப் பணச் செல்வத்துக்கு ஆங்கு மதிப்பு ஏது? நீங்கள் அடைந்துள்ள குணச் செல்வங்களாகிய தற்பெருமை, அகங்காரம் முதலிய தீய குணங்கள் தாம், நீங்கள் உலக வாழ்வில் உருவாக்கியுள்ள குணச் செல்வங்கள். இவை மஹ்ஷரில் செல்வங்களாகப் பாவிக்கப்படுபவையல்ல; தரித்திரங்களெனக் கணக்கெடுக்கப்படுபவையாகும்.

எனவே, பெயரளவில் இஸ்லாத்தைப் பின்பற்றுகிறவர்களாய் இராது, உங்களின் இஸ்லாத்தை முதலில் சீர்படுத்திக் கொள்ளுங்கள். இஸ்லாத்தைச் சீர்ப்படுத்திக் கொண்ட நிலையில் உலகப் பேறுகளை அடைவதும் அனுபவிப்பதும் சிறந்த வழியேயன்றி, உங்களின் இஸ்லாம் சீர்பெறாதிருக்கும் நிலையில் நீங்கள் அடைந்திருப்பதாக நினைக்கும் பேறுகள் பேறுகளல்ல; நீங்கள் அனுபவிப்பதாக மனப்பால் குடித்துக்கொள்ளும் சுகம் சுகமன்று.

இஸ்லாம் என்பது இறைவனின் நாட்டத்துக்குச் சிரம் சாய்ப்பதுதான். ரிஜ்க் அளிப்பவன் அவனுகையால் அவன் தனது குறைவற்ற 'தக்தீர்' எனும் திட்டப்படி ரிஜ்க் அளிப்பான் என்பதை நம்பி தன்னை அவன் வசம்

ஒப்புவிப்பது இஸ்லாம் ஆகும். தன் பலத்தைப் பெரிதாக நினையாது அவனது உதவியைத் தேடி நிற்பது இஸ்லாம் ஆகும். அவனளித்த இம்மைப் பேறுகள் அனைத்தையும் அவன் வழியிலேயே செலவழித்து விடுவதுடன், நற்கருமங்களை ஓயாதுசெய்து, அவைகளையும் அவன் புறத்தில் சாட்டிவிட்டு, அவைகளையும் அடியோடு மறந்துவிட்டு, அவனுடைய ஞாபகமும் அவன்பற்றிய நாட்டமும் தேட்டமும் தவிர வேறொன்றையும் இதயத்தில் இடம் பெற அனுமதிக்காமலிருப்பதுவே இஸ்லாம் ஆகும்.

உங்களுடைய வணக்கங்களும் முயற்சிகளும், அவனது ஞாபகத்தின் நிறம் ஏற்றப்படாதவரை, உயிரற்றவையாய் இருக்கின்றன; அர்த்தமற்ற கிரியைகளாய் இருக்கின்றன.

இறைவனின் வழி தேடி நிற்கும் எனது அருமைப் புதல்வர்களே, சிருஷ்டிகள் அனைத்தும் அவன் உண்டாக்கி அருளியுள்ள ஆயுதங்களாகவும் கருவிகளாகவும் இருக்கின்றன. இச்சூத்திரப் பாவைகளை வடிவுபெறச் செய்தவனும், அவற்றைத் தனது சூட்சுமக் கயிறுகளைக்கொண்டு நடத்தாட்டுபவனும் அவன் ஒருவனே! இவ்வுண்மையை உணர்பவர்கள் சூத்திரப் பாவைகளின்மீது தங்களின் கண்கள் குவிந்து கிடக்கும் நிலையிலிருந்து விமோசனம் பெற்று, சூட்சுமக் கயிறுகளைக்கொண்டு சர்வத்தையும் நடத்தாட்டும் ஏகப் பரம்பொருளை நாடியவர்களாக — தேடியவர்களாக ஆகிவிடுவார்கள். மனம் சிருஷ்டிகளின் ஞாபகத்தால் நிறைவது கஷ்டத்தின் தொடக்கமாகவும் தொல்லைகளின் உற்பத்தியாகவும் இருக்கிறது; சிருஷ்டிகர்த்தனின் ஞாபகம் மட்டும் மனத்தில் நிறைவது சகல துக்க துன்பங்களைவிட்டு நிர்வாணமெய்தச் செய்யும் ஆரமுதாய் இருக்கிறது.

உங்களுக்குமுன் சென்றோர்கள் அநுபவார்த்தமாய் எவ்வழியை முக்தியாகக் கண்டார்களோ அதைவிட்டுத்

தூரமானவர்களாய் இருக்கிறீர்கள். ஆகையால், உங்கள் மூதாதையர்கள் சென்ற வழியில் நீங்கள் செல்வதாகவும் சொல்லிக் கொள்வதற்கில்லை. உங்களுடைய சொற்பக் கல்விகொண்டு திருப்தியும் தற்பெருமையும் அடைந்தவர்களாக, சீரிய வழி புகட்டவல்ல ஞான குருவைத்தேடும் கவலைகூட அற்றவர்களாகக் கிடக்கிறீர்கள். நேரிய வழியிலிருந்து சறுகிக் கிடப்பவர்களே, மானிட ஷைத்தான்களின் கரத்திலும் ஜின்னுகளிலுள்ள ஷைத்தான்களின் கரத்திலும் விளையாட்டுப் பொம்மைகள் போல் அகப்பட்டுக்கொண்டு தட்டலையும் அறிவிலிகளே, அகங்காரத்துக்கும் ஆசைக்கும் இச்சைக்கும் அடிமைகளாகத் திரிபவர்களே, நீங்கள் அடைந்திருக்கும் சீர்கேட்டை என்னென்பேன்! தம் நிலைமையை உணராதவர்களான குருடர்களாகமட்டுமா இருக்கிறீர்கள்? கண்கள்தான் தெரியவில்லை என்றால், கண் திறப்பதற்காக ஆண்டவனை மன உருக்கத்துடன் நினைத்து அவனிடம் கண் திறந்தருளவேண்டுமென்று அல்லும் பகலும் பிரார்த்தனையாவது புரிந்து வருகிறீர்களாவெனில், அதுவுமற்ற கல் நெஞ்சர்களாகி விட்டீர்களே! எனவே, போனது போகட்டுமென்று இனியேனும் ஆண்டவனை நினைத்து, உங்களின் அகக்கண் திறப்பதற்காகப் பிரார்த்தனை புரியுங்கள். உங்கள் சத்துருவாகிய ஷைத்தானின் வலையில் அகப்பட்டுக் கொண்டிருப்பதில் நின்றும் - அழிவெனும் பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதில் நின்றும் அவன் ஒருவனே உங்களைக் காப்பாற்றியருளக்கூடியவனாய் இருக்கிறான்.

பிறரின் குற்றம் குறையைப் பார்ப்பதுபோல், உங்களின் ஆத்மாவிலுள்ள குற்றம் குறைகளை ஆராய்ந்து, நீங்கள் செல்லும் போக்கு எத்தகைய முடிவைத் தருமென்பதைச் சிந்தித்துப் பார்த்து, உங்களின் நிலைமையில் நல்மாறுதல் காணமுயற்சியுங்கள். மறதி எனும் விரு

க்ஷத்தினடியில் மதிமயங்கிக் கிடக்காது, அவ்விருக்ஷத்தின் சாயையிலிருந்து வெளியேறி, ஞான சூரியனுடைய விரிகரண ஜோதி வீசப்படுபவர்களாகி நேர் வழி பெறுங்கள்.

மறதி எனும் விருக்ஷம் அஞ்ஞானமெனும் தண்ணீர் கொண்டு வளர்ந்த விருக்ஷமாகும்; ஆத்ம விழிப்பு எனும் விருக்ஷமே ஞானமெனும் நீரால் வளர்ந்த விருக்ஷமாகும். 'தவ்பா' என்பது தன் குறைகளை அறிந்து திருந்துவதிலேயே இருக்கின்றது. தெய்வபக்தி மெஞ்ஞானத்தைக் கொண்டே தளிர்விட்டு வளர்வதாய் இருக்கிறது.

அல்லாஹ்வின் மார்க்க ஞானம் தேடும் எனது அன்பிற்குரிய புதல்வர்களே, இளம் பிராயத்திலும் வாலிபப் பருவத்திலும் நீங்கள் தவறுகள் இழைத்திருப்பின், ஏதோ வயது சிறியதென்று அல்லது அறிவு ஏற்படவில்லையென்று சாக்குக் கூறுவதற்கு வழியிருந்தது. மத்திய வயதை அடைந்தும், முதிர்ந்த வயதை அடைந்தும் இன்னும் சிறுபிள்ளைத்தனமாய் இருப்பின் சரியாகுமா?

அஞ்ஞானிகளின் சகவாசத்திலிருந்து ஒதுங்கிக் கொள்ளுங்கள். பெண்களுடன் தனியே சந்திப்பு ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களிலிருந்து பேணிக் கொள்ளுங்கள். வாலிப அறிவிலிகளுடைய சகவாசத்தை விட்டு, அறிவு முதிர்ந்தவர்களின் சகவாசத்தையே தேடுங்கள். சிருஷ்டிகளிலிருந்து ஒதுங்கி நிற்கும் நிலைமையில், திருந்தாத மக்கள் உங்களைத் தேடி வரும்போது, நோயாளியை வைத்தியன் எந்நோக்குடன் வரவேற்கிறானோ அந்நோக்குடன் வரவேற்பளியுங்கள். உங்களை அணுகும் மக்களுக்குப் பிதாக்கள் போன்ற அன்புடன் ஆதரவளியுங்கள். அல்லாஹ்வின் உத்தரவுகளை நிறைவேற்றுவதில் ஓயாத முயற்சியுடையவர்களாகுங்கள். அல்லாஹ்வின் ஞாபகமென்பது, (நாவினால் மட்டும் அவனது

நாமத்தை உச்சாடனம் செய்வதாகாது) அவனது ஏவல்களை ஓயாது நிறைவேற்றிக் கொண்டிருப்பதேயாகும். "அடியானின் (நபில்) தொழுகைகள் குறைவானவையாய் இருப்பினும், அவனது (நபில்) நோன்புகள் அதிகமாய் இல்லாதிருப்பினும், அவன் திரு குர்ஆனை ஓதுவது அதிகமாய் இல்லாதிருப்பினும், அவ்வடியான் அல்லாஹ்வின் உத்தரவுகளை நிறைவேற்றுபவனாய் இருப்பின், அவனே அல்லாஹ்வை உண்மையில் (திக்று) ஞாபகம் செய்தவனாவான். அடியானின் (நபில்) தொழுகைகள் அதிகமாயிருப்பினும், (நபில்) நோன்புகள் அதிகமாயிருப்பினும், அவன் திரு குர்ஆனை உச்சாடனம் செய்வது அதிகமாயிருப்பினும், அவன் அல்லாஹ்வின் உத்தரவுகளை நிறைவேற்றாதிருப்பின் அவன் அல்லாஹ்வை மறந்தவனாகவே பாவிக்கப்படுவான்" என்று ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அருளியிருக்கிறார்கள்.

எனவே, மூமின் ஆவதெனின், நாயனுக்குக் கீழ்ப்படிந்த வாழ்வு நடாத்தவேண்டும்; அவனது நாட்டம் நடை பெறுகவென்று தனது அவசர புத்திகளை ஒழித்துவிடவேண்டும். தனது எக்கருமத்திலும் ஆண்டவனின் நாட்டத்துக்கும் உத்தரவுக்கும் முரணாகாது அக்கருமம் இருக்கிறதா வென்பதைப் பார்த்த பின்னரே அக்கருமத்தைச் செய்பவர்களாக ஆகவேண்டும். வேஷதாரிகளான முனாபிக்குகளுக்கு இதுபற்றிய அக்கறை யிருப்பது எங்ஙனம்?

அன்பர்களே, உங்கள் யதார்த்த நிலைமையைப் பரீட்சித்தறியுங்கள்! ஆண்டவனை அறிந்துவிட்டதாகவும் மெஞ்ஞானம் பெற்றுவிட்டதாகவும் உங்களுள் பலர் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்படியாயின், உங்களுடைய அகமியத்தில் நீங்கள் கண்ட தத்துவங்கள் ஜோதிகள் யாவை என்று வினவுகிறேன்.

அல்லாஹ்வின் அன்பர்களான வலிகளாகவும், அவனால் நடத்தாட்டப்படுபவர்களான அப்தால்களாகவும் ஆகிவிடுவதற்குள்ள அடையாளங்கள் என்னவென்றோ, அத்தாட்சிகள் என்னவென்றோ உங்களுக்குத் தெரியுமா? மனத்தால் மட்டும் அப்பதவியை அடைந்து விட்டோம், இப்பதவியை அடைந்துவிட்டோமென்று நினைத்துவிடின் போதுமா? உங்களிடம் எவரேனும் செல்லாக் காசைக் கொடுத்தால், அதைத் தட்டிப் பார்க்காது நீங்கள் வாங்கிக்கொள்வதுண்டா? இதர அடையாளங்கள் ஒரு புறம் இருக்கட்டும், அல்லாஹ்வின் அன்பனானவன் எத்தகைய சோதனையிலும் கவலைக்காளாகாதிருப்பானல்லவா, அத்தகைய மனோநிம்மதி உங்களிடமிருக்கிறதாவென்று உங்களின் நெஞ்சத்தை முதலில் தட்டிப் பார்த்துக் கொள்ளுங்கள்.

அன்பர்களே, இறைவன்மீது அன்பும் இதரப் பொருட்களின்மீது அன்பும் ஒரே இதயத்தில் ஒரே சமயத்தில் இடம் பெறுவது முடியாத காரியமாகும். "எம்மானிடனுக்கும் ஈரிதயங்களை அல்லாஹ் அமைத்தானில்லை" என்பது திரு குர்ஆன் மொழி. இம்மைப் பிரியமுள்ள இதயத்தில் மறுமைப் பிரியம் இடம் பெறுவதெப்படி? இம்மைப் பிரியமோ மறுமைப் பிரியமோ குடிகொண்டுள்ள இதயத்தில் இறைவனின் பிரீதி இடம் பெறுவதெப்படி? எனவே, அநித்யப் பொருட்கள் அனைத்தையும் இதயாசனத்திலிருந்து அகற்றி நித்யப் பொருளைமட்டும் தேடுபவர்களாக-நாடுபவர்களாக ஆகுங்கள். முக்தி பெறுவதற்காக உங்களின் உயிர்களையும் பொருட்களையும் அர்ப்பணம் செய்யத் தயாராகுங்கள். "நிச்சயமாக, அல்லாஹ் மூமின்களிடமிருந்து அவர்களின் உயிர்களையும் பொருட்களையும் கிரயமாக வாங்கிக்கொண்டு அவர்களுக்குச் சுவர்க்கத்தை அளிப்பவனாய் இருக்கிறான்" என்பது மற்றொரு

திரு குர்ஆன் மொழியின் கருத்தாகும். ஆகையால் அவனன்றி உங்களிடமுள்ள சகல பற்றுகளையும் உதறித் தள்ளியவர்களாகுங்கள்; அவன் சந்நிதியின் சமீபத்தை அடைவீர்கள்; இம்மையிலும் மறுமையிலும் அவன் திவ்வியத் தோழமையை அடைவீர்கள். ஹக்குத் தஆலாவிடம் நேசங் கொண்டவர்களே, அவன் விதிவச நியதி கொண்டு எவ்வாறு உங்களைச் சுழற்றுகிறானோ, அவ்வாறெல்லாம் இசைந்து சுழலுங்கள். அவன் உறைவிடமான உங்கள் இதயங்களை மாசற்றவையாக வைத்திருங்கள். அவனல்லாத பொருட்களான குப்பை கூளங்கள் அங்கே சேரவிடாதபடி பெருக்கிச் சுத்தம் செய்யுங்கள். அதன் தலைவாயிலிலே ஏகத்துவம் (தவ்ஹீது), சித்தசுத்தி (இக்லாஸ்), உண்மை (ஸித்கு) ஆகிய வாளாயுதங்களைத் தாங்கி அமர்ந்திருங்கள். அவனல்லாத. எது வரினும் உள்ளே செல்ல அனுமதியாதீர்கள். உங்கள் இதயத்தின் எந்தச் சந்து பொந்திலாவது கலப்பான நிர்ணயம் ஒளிந்து கொண்டிருக்க இடம் தர வேண்டாம். பருப்பை விட்டுத் தொலியைப் பாராட்டிக்கொண்டிருக்கும் வீண் விளையாட்டுக்காரர்களே, என்னிடம் பருப்பையன்றி வேறு எதுவுமில்லை. என்னிடம் சித்தசுத்தியுண்டு: ஹக்கு ஸுப் கள்ளமனமில்லை. சத்தியமுண்டு, அசத்தியமில்லை. ஹாஹு ஹூ உங்களகத்தேயிருந்து பயபக்தியையும் சித்தசுத்தியையுமே எதிர்பார்க்கிறான். உங்கள் புறக் கிரியைகளை அவன் நோட்டமிடுவதில்லை. "(குர்பானி கொடுக்கப்படும் பிராணியாகிய) அதன் மாமிசமோ இரத்தமோ அல்லாஹ்வை அடைவதில்லை; உங்கள் பயபக்திதான் அவனை அடையும்" என்று அவனே கூறியுள்ளான். ஆதமுடைய மக்களே, இம்மையிலும் மறுமையிலுமுள்ள சகலமுமே உங்களுக்காகத் தான் படைக்கப்பட்டுள்ளன. அதற்குப் பகரமாக நீங்கள் செலுத்தும் நன்றி எங்கே ? உங்களின் பயபக்தி எங்கே ? அவனுக்கு அடிபணிந்து வணங்குவதற்காகவே நீங்கள்

இருந்து வருகிறீர்கள். உயிரற்ற வெறும் சடங்குகளைச் செய்வதில் உங்கள் வீரியத்தை வீணாக்க வேண்டாம்; சித்தசுத்தியுடன் உயிருள்ள அமல்களைச் செய்வதில் முனையுங்கள்.

இருபத்தைந்தாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 துல்ஹஜ் மாதம் பிறை 19 வெள்ளிக் கிழமையில் ஹஜ்ரத் அவர்கள் நிகழ்த்தியது:

ஈஸா (அலை) அதிக மணமுள்ள வாசனைப் பொருள் எதையாவது முகர்ந்தால் தங்கள் மூக்கைப் பொத்திக் கொண்டு 'இது துனியாவிலுள்ளது' என்று கூறுவார்கள் என ரிவாயத்துச் செய்யப்பட்டுள்ளது. வார்த்தைகளாலும் வேஷத்தாலும் துறவு காட்டுபவர்களே, இஃது உங்களுக்கு விரோதமான சான்றாக விளங்குகிறது. துறவிகளைப் போல் உடையுடுத்தியுள்ள உங்கள் உள்ளக் கிடக்கையோ ஆசைமயமாய் இலங்குகிறதே; துனியாவை இழப்பது பற்றிக் கைசேதமடைகிறதே! இவ்வாறு செய்யாமல், நீங்கள் உங்கள் துறவு வேடத்தைக் களைந்து உங்கள் உள்ளக்கிடக்கையை அகற்றிக்கொண்டால் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் முனாபிக்குத் தன்மையை விட்டு நீங்கியவர்களாவதுடன் அதனால் உங்களுக்கு நன்மையுமுண்டாகும். உண்மையான துறவுடையவன் தனக்குரியதை, தன்னைத் தேடி வருவதைப் பொருத்தமுடன் அனுபவிப்பான். வெளிரங்கத்தில் எப்போதும் போலச் சாதாரணமாக உடுத்துவான். ஆனால், அவன் உள்ளமோ அவ்விஷயத்திலும், வேறெவ்விஷயத்திலும் துறவு பூண்டதாகவே இருக்கும். இத்தன்மையில்தான் நமது அருமை நபி நாயகம் (ஸல்) அவர்கள், ஈஸா (அலை) அவர்களைவிடவும், மற்றும்எனைய நபிமார்களை விடவும் மகா பெரும்

துறவியாய் இருந்தார்கள். "இத்துனியாவிலிருந்து எனக்குப் பிடித்தமானவை மூன்று. அவை வாசனைத் திரவியம், வாழ்க்கைத் துணைவி, தொழுகையில் என் கண் குளிர்ந்த வாழ்வு ஆகியவை" என்று அவர்கள் கூறி இருக்கிறார்கள். அவற்றில் பற்றற்ற தன்மை கொண்டிருந்ததோடு, அவற்றை அவர்கள் நேசித்தும் வந்தார்கள். ஏனெனில், அவைகளை அனுபவிக்கவேண்டுமென ஏற்கனவே அல்லாஹ்வின் புறத்தால் ஏற்பாடு செய்யப் பட்டுவிட்டது. எனவே, அல்லாஹ்வின் கட்டளைக்கு வழிபட்டு அதற்கிசைந்து நடக்கலானார்கள். இவ்வாறாக ஆண்டவனின் கற்பனைக்குத் தலைசாய்த்துக் கட்டுப்படுவது வழிபாடேயாகும். இவ்வண்ணம் தனக்கு அல்லாஹ் அளித்த பங்குகளை அனுபவிப்பதும் வழிபாடேயாகும். இவ்விதம் அல்லாஹ்வின் வழிபாடு என்ற முறையில் உலகம் முழுவதையும் தூக்கிச் சுமந்தாலும் சரியே. அறியாமையின் பாதத்தின்மீது நின்று கொண்டிருக்கும் துறவிகளே, நன்றாகக் கவனித்துக் கேளுங்கள். கேட்டு உண்மையுணர்ந்து நடவுங்கள்; பொய்யாக்கிவிடாதீர்கள். நன்றாக உற்றுணர்ந்தறியுங்கள். உங்கள் மடமையால் இறைவனின் அமைப்பு (கத்ரு) விதி பற்றித் தப்பாக எண்ணித் தள்ளிவிடாதீர்கள். அறிவு ஞானம் இல்லாத அறிவிலி தன் அபிப்பிராயமே பெரிதென நினைக்கிறான்; அவன் தன் நப்ஸின் பேச்சுக்கும், மனோஆசைக்கும், ஷைத்தானுக்கும் தலைசாய்க்கிறான். அவன் இப்லீஸுடைய தாசனாய் இருக்கிறான்; அவனுக்குக் கட்டுப்பட்டு அவனைப் பின்பற்றி நடக்கிறான்; இப்லீஸையே அவன் தன் ஷைகாக ஏற்றுக் கொண்டுள்ளான். ஹே அறிவில்லாதவர்களே, முனாபிக்குத் தன்மையானவர்களே, உங்கள் இதயங்கள் எத்தனை பெரிய அந்தகாரத்திலாழ்ந்துள்ளன! எத்தனை பெரிய துர்நாற்றம் பிடித்தவர்களாய் இருக்கிறீர்கள்! உங்கள் நாவுகள் எவ்வளவு தூரம் புரட்டுச் செய்கின்றன! இம்மாதிரியான செய்கை

களெல்லாம் வேண்டாம்! உங்களிடமுள்ள அத்தனை மோசங்களையும் விட்டுத் தௌபாச் செய்யுங்கள். அல்லாஹ்வின் விஷயத்தில் அபச்சாரம் வேண்டாம்; அவன் நேசத்தைப் பெற்று அவனை நேசித்து வரும் அவ்லியாக்களைப் பற்றி அபவாதம் கூறாதீர்கள். தமக்குக் கிடைத்ததை அவர்கள் அநுபவிப்பது இறைவனின் ஏவலுக்குக் கட்டுப்பட்டேயன்றிப் பேராசையின் உந்துதலால் அன்று. அல்லாஹ்வின்பாலுள்ள ஆசை அவர்களகத்தே கடுமையாகக் கொந்தளிக்கிறது; அவனளவில் அவர்கள் பெரும் நேசம் கொண்டுள்ளார்கள்; அவனல்லாதவற்றில் ஆசை பூணாதிருக்கிறார்கள்; அவனல்லாத சர்வத்தையும் விட்டு அகத்தாலும் புறத்தாலும் பற்றற்றிருக்கிறார்கள். அவர்கள் அநுபவிக்க வேண்டுமென்று ஆதியிலேயே அல்லாஹ் விதித்த நியதிக்கொப்பவே அவர்கள் நடந்து வருகிறார்கள். இவ்வுலகில் இருப்பது, இதில் தரிபட்டிருப்பது, இங்குக் கிடைப்பதை அநுபவிப்பது, உடுப்பது, அல்லாஹ்வையும் அவன் நல்லடியார்களான தங்களையும் நிராகரித்துப் பொய்யாக்கியவர்களைக் காண்பது முதலியன வெல்லாம் அவர்களுக்கு மகாபெரும் சோதனைகளாய் இருக்கின்றன.

அன்பர்களே, உங்கள் ஆத்மாவையும், மன இச்சையையும் பக்குவப்படுத்த முனைந்திருக்கும்போது மற்றவர்களைப்பற்றிப் பேசுவதை விட்டுவிடுங்கள். மூச்சுப்பேச்சற்ற மையித்தைப் போன்றாகிவிடுங்கள். ஏனெனில், அல்லாஹுத் தஆலா எந்தக் கருத்தை, விஷயத்தை உங்களளவில் நடத்தவேண்டுமென நாடினானோ அவ்விஷயத்திற்கு உங்களைத் தயாராக்கிவைப்பான். அவன் நாடினால், உங்களை அவ்விஷயத்தின் பேரில் கிளப்பிவிடுவான்; அதற்குத் தகுதியுள்ளவர்களாக ஆக்கிவிடுவான்; அதன் பேரிலேயே தரிபாடாக்கி வைப்பான்.

ஆகவே, அக்காரியாதிகளில் செயலாற்றுபவன் (மல்ஹார்) அவனே, நீங்களல்ல. எனவே, உங்கள் ஆத்மாவையும், பேச்சையும், சர்வ தன்மைகளையும், நிலைமைகளையும் அல்லாஹ்வின் வசத்தில் ஒப்படைத்துவிடுங்கள். அவனுக்காகவே அமல் செய்யுங்கள்; பேச்சு இல்லாத அமலாகுங்கள்; முகஸ்துதியற்ற சித்தசுத்தியாகுங்கள் ; இணையில்லாத ஏகத்துவமாகுங்கள் ; பிரஸ்தாபமற்ற இலைமறை காயாகுங்கள்; கூட்டமில்லாத தனித்த இடமாகுங்கள் ; வெளிரங்கமில்லாத அந்தரங்கமாகுங்கள். உங்களுடைய நாயனை நேருக்குநேர் சந்தித்து வசனிப்பதுபோல உங்கள் எண்ணத்தை மாற்றியமைத்து அந்தரங்கப்பூர்வமாகக் காரியம் புரியுங்கள். அவ்வண்ணமே, "உன்னையே வணங்குகிறோம்; உன்னிடமே உதவி தேடுகிறோம் (இய்யாக நஃபுது-வஇய்யாக நஸ்தயீன்)" என்று முன்னிலையுணர்ந்து அவனுடன் வசனியுங்கள். இவ்வசனம் நேருக்குநேர் உள்ளவனுடன் பேசுவதே. ஆகவே, "என் சமீபம் ஆஜராயிருப்பவனே - என்னை நன்கு அறிந்து தெரிந்திருப்பவனே - எனக்கு மிகவும் சமீபமானவனே - எனக்குச் சாட்சியாயிருப்பவனே" என்று இத்தகைய அம்சங்களை மனத்தில் கொண்டு, இவ்வாறான நிய்யத்துடன் உங்கள் தொழுகையிலும் மற்றும் சந்தர்ப்பங்களிலும் அவனுடன் வசனியுங்கள். இக்கருத்தை யொட்டியே நபி நாயகம் (ஸல்) அவர்கள், "கண்ணுறக் கண்டது போல் அல்லாஹ்வை வணங்குங்கள். நீங்கள் அவனைப் பார்க்காவிடினும் நிச்சயமாக அவன் உங்களைப் பார்க்கிறான்" என்று இயம்பியுள்ளார்கள்.

அன்பர்களே, ஹலாலான உணவையருந்துவது கொண்டு உங்கள் அகங்களைத் தூய்மைப்படுத்துங்கள். அவ்வாறாயின் உங்கள் நாயனை நிச்சயமாக அறிந்து கொள்ளக்கூடியவர்களாவீர்கள். இவ்வாறாக உங்கள் உணவையும், உடையையும், அகத்தையும் தூய்மையாக்கி

வைத்தீர்களேயானால் தூயவர் (ஸூபி) ஆகிவிடுவீர்கள். ஸூபி என்ற சொல் 'தஸவ்வுபு' என்றதிலிருந்து வந்தது. 'தஸவ்வுபு' என்ற சொல் 'ஸபா' என்ற மூலத்திலிருந்து உண்டாயிற்று. 'ஸபா' என்பதற்குப் பொருள் "தூய்மை" என்பதாகும். ஸூப் என்ற கம்பளியுடையணிந்தோர்களே, உண்மையான ஸூபி யாரெனப் புரிந்துகொள்ளுங்கள். தன்னகத்தே தன் நாயனான அல்லாஹ்வைப்பற்றியதல்லாத வேறு சிந்தனை எதுவும் எழா வண்ணம் தூய்மையுடையவனே ஸூபியாவான். இத்தகைய புனித ஸூபித் தன்மை இலகுவில் உண்டாகி விடுவதன்று. மேலும், ஆடைகளைக் கந்தல் கந்தலாகக் கிழித்துக்கொள்வதன் மூலமோ, முகத்தை மஞ்சளாகச் செய்வதன் மூலமோ, புஜங்களைக் கட்டிக் கஷ்டப்படுத்துவதன் மூலமோ, ஸாலிஹீன்களின் சரித்திரங்களைப் பற்றி நீளமாகப் பேசிக்கொண்டிருப்பதன் மூலமோ, தஸ்பீஹ் தஹ்லீல்களைச் சொல்லி எண்ணி விரல்களை மடக்கிக் கொண்டிருப்பதன் மூலமோ இத்தன்மையை எய்திவிட முடியாது. அதற்கு ஹக்குத் தஆலாவைத் தேடுவதில் உண்மையோடிருக்க வேண்டும்; சிருஷ்டிகளின்மீதுள்ள நம்பிக்கையை மனத்திலிருந்து நீக்குவதிலும், ஹக்குத் தஆலா ஒருவனுக்கே அகத்தில் இடமுண்டு என்பதிலும் உண்மையோடிருக்க வேண்டும். நாதாக்களில் ஒருவர் கூறியதாகச் சொல்லப்பட்டுள்ளதாவது: "ஒரு நாள் இரவிலே, 'இறைவனே, எனக்குப் பயனளிக்கக்கூடியதும், ஆனால் உனக்கு விரோதமில்லாததுமான அமலை விட்டு என்னை விலக்காதே' என்று பல தடவைகளாக வேண்டிக்கொண்டிருந்தேன். அப்பால் தூங்கிவிட்டேன். கனவில், 'உனக்குப் பயனளிக்கக்கூடிய எந்த அமலையும் விட்டு நீ விலகவேண்டாம். உனக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய எந்த அமலையும் நீ விட்டுவிடவேண்டும்' என்று ஒருவர் சொன்னது போலிருந்தது." நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் உங்களது

வம்ச பரம்பரையை நல்ல முறையில் வைத்துக் கொள்ளுங்கள். நம் நாயகம் (ஸல்) அவர்களை நல்ல முறையில் பின்பற்றி யொழுகுபவர்களே, அவர்களின் நல்ல வம்ச பரம்பரையினராவர். அவர்களைப் பின்பற்றி யொழுகாதிருந்துகொண்டு நான் அவர்களின் உம்மத்து என்று சொல்லிக்கொள்வதில் எவ்விதப் பயனுமில்லை. சொல்லிலும் செயலிலும் நீங்கள் அவர்களையே பின்பற்றி யொழுகி நடந்தால், மறுமையில் அவர்களுடனே அளவளாவிச் சந்தோஷமாகச் சொர்க்கானந்தத்தில் இருப்பீர்கள். "இறையருள் தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் (மனமொப்பி) எடுத்துக்கொள்ளுங்கள். அவர் உங்களுக்கு வேண்டாமென விலக்கியதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்" என்று (திரு குர்ஆனில்) அல்லாஹ் கூறியிருப்பதை நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? ஆகவே, நாயகம் (ஸல்) ஏவியவைகளை நீங்கள் ஏற்று எடுத்து நடவுங்கள். அவர்கள் விலக்கியவைகளை நீங்கள் ஒதுக்கிவிடுங்கள். இவ்வாறாக நீங்கள் செம்மையுடன் நடந்தால் உங்கள் இறைவனின் சமீபத்துவத்தை, அகமியத்தால் இவ்வுலகிலும், ஆத்மாவாலும் சரீரத்தாலும் மறுவுலகிலும், அடையப் பெறுவீர்கள். ஹே துறவிகளான ஸாஹிதுகளே, எவ்வளவு அழகாகத்தான் நீங்கள் துறவறத்தை மேற்கொண்டுள்ளீர்கள்! உங்கள் மனவெழுச்சிப்படியும் இச்சைப்படியும் துறவறம் பூண்டுள்ளீர்கள்; உங்கள் மனம் போன போக்கில் நடக்கிறீர்கள். உண்மையான துறவறம் பற்றி நீங்கள் அறிய வேண்டுமானால் உண்மையான ஞானகுரு, ஷைகுமார்களைப் பின்பற்றி அவர்கள் சகவாசத்தில் இருங்கள். அவர்கள் அல்லாஹுத் தஆலாவை அறிந்த ஆரிபுகளாய் இருப்பார்கள் – சன்மார்க்க ஞானங்களை யுணர்ந்த ஆலிம்களாயிருப்பார்கள் – நற்செயல்கள் புரிந்த ஆமில்களாயிருப்பார்கள் – பக்குவ நிலைபெற்ற அவர்கள் ஏனைய சிருஷ்டிகளை ஞானப் பாட்டையில் அழைக்கும் வண்ணம் நல்லுப

தேச நஸீஹத்துகள் செய்வார்கள். நீங்கள் அவர்களிடம் சகவாசம் பெற்றீர்களாயின் உங்கள் இதயத்திலே உள்ள மாசு மருக்களை நீக்கி, ஆசாபாசக் கூளங்களைப் போக்கி ஹக்குத் தஆலாவுடைய சமூகத்தின் பக்கம் உங்களை முன்னோக்கச் செய்துவிடுவார்கள். அவர்கள் அல்லாஹ் ஒருவன் அளவிலேயே முன்னோக்கிய வண்ணமிருப்பார்கள். அவனல்லாதவற்றைப் புறக்கணித்திருப்பார்கள்.

அன்பர்களே, உங்கள் நாயன் உங்கள் பின் பக்கம் வந்து அமருமுன்பே நீங்கள் அவனளவில் உங்கள் இதயங்களால் முன்னோக்கிவிடுங்கள். அவ்லியாக்கள், சான்றோர்களின் சரித்திரங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதே போதும் என்று சும்மா இருந்துவிடுகிறீர்களே! அது போதுமா? அது மட்டும் போதும் என்று நீங்கள் எண்ணியிருப்பதானது தண்ணீர் தானாகவே தன் வாயில் சென்றுவிடவேண்டுமென்று கருதி, தன்னிரு கைகளையும் நீட்டி, ஆனால் அள்ளிக் குடிக்காமல் விரித்து வைத்துக் கொண்டிருப்பவனின் நிலையைப்போலிருக்கிறது. கையைக் கொண்டு அவன் தண்ணீரை அள்ளிக் குடித்தாலொழிய அவன் வாயில் தண்ணீர் போய்ச் சேரமுடியாது. உங்களுக்கு வந்துள்ள நஷ்டத்தை உணருங்கள். வீணான மேலெண்ணம் மடமையின் பள்ளத்தாக்காகும். "வீணான மேலெண்ணம் பூண வேண்டாமென எச்சரிக்கிறேன். ஏனெனில், மடமையின் பள்ளத்தாக்காக அஃது அமைந்துள்ளது" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். நீங்கள் செய்யும் காரியங்களோ தீயவர்களின் தீய காரியங்கள். ஆனால், நீங்கள் மேலெண்ணம் பூண்டிருப்பதோ சான்றோர்களின் உயர் பதவிகள். ஒரேயடியாக ஆதரவு வைத்து அச்சம் இழந்திருப்பவன் வழி பிசகிவிட்டான்; ஒரேயடியாக அச்சத்தில் ஆழ்ந்து ஆதரவை யிழந்திருப்பவன் பேறு கெட்டுப்போய்விட்

டான். ஆதரவு, அச்சம் (ரஜா, கவ்பு) ஆகிய இரண்டுக்கும் மத்திமமான போக்கை யனுஷ்டிப்பதிலேயே ஈடேற்றம் அமைந்துள்ளது. "மூமினுடைய அச்சமும் ஆதரவும் நிறுக்கப்பட்டால் இரண்டும் சமமாய் இருக்கும்" என்று நபி நாதர் (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளார்கள். நாதாக்களுள் ஒருவர் குறிப்பிட்டுள்ளதாவது: ஸுப்யானுத் தவ்ரீ (ரஹ்) அவர்களை அவர்கள் மரணித்ததற்கப்பால் கனவில் கண்டு, "அல்லாஹுத் தஆலா உங்களை யாது புரிந்தான்?" என வினவினேன். அப்போது அவர்கள், "என் பாதங்களில் ஒன்றை ஸிராத்துல் முஸ்தகீம் மீதில் வைத்து மற்றதைச் சொர்க்கத்தில் வைத்தேன்" என்று கூறினார்கள். அவர்கள்மீது அல்லாஹ்வின் சாந்தி நிலவுக! ஏனெனில் அவர்கள் சன்மார்க்க ஞானம் பெற்ற பகீஹாகவும், பற்றற்ற ஸாஹிதாகவும், பேணுதலுடையவர்களாகவும் இருந்தார்கள். மார்க்க ஞானங்களைக் கற்ற அவர்கள் அவற்றின்படி யொழுகினார்கள்; கற்ற கல்விக்குரிய பொறுப்பை அமல் மூலம் நிறைவேற்றினார்கள்; அமலுடைய பொறுப்பைக் களங்கமற்ற நிலை (இக்லாஸு) கொண்டு பூர்த்தி செய்தார்கள்; அல்லாஹ்வுக்குரிய கடனை அவனைப் பேரன்புடன் நேசித்து அவன் பொருத்தத்தைத் தேடுவதன் மூலம் நிறைவேற்றினார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்களுக்குரிய கடமையை அவர்களின் சொல்லையும் செயலையும் இனிது பின்பற்றுவதன் மூலம் பூர்த்திசெய்தார்கள். அல்லாஹ்வின் கிருபா கடாக்ஷம் அவர்கள்மீதும், ஏனைய ஸாலிஹான சான்றோர்கள்மீதும், அவர்கள் பொருட்டால் நம்மீதும் சர்வ காலமும் நிலவுமாக! எவனாயினும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையோடு பின்பற்றாமலும் அவர்கள் தந்த ஷரீஅத்தை ஒரு கையிலும், அவர்கள் மீது அருளப்பட்ட புனித வேதமான திரு குர்ஆனை மறு கையிலும் ஏந்தி அவர்கள் சென்ற பாதையில் அல்லாஹ்வின் பக்கம் செல்லாமலும் இருப்பானாயின் நிச்சயமாக அவன்

தானும் நாசமடைந்து பிறரையும் நாசத்திலாக்குவான்; அவன் தான் நெறி பிசகியதுடன் பிறரையும் நெறி பிசகச் செய்வான். அவ்விரண்டு பொக்கிஷங்களும் ஹக்குத் தஆலாவினளவில் கொண்டுசெலுத்தும் சிறந்த அத்தாட்சிகளாகும். குர்ஆன் ஷரீபானது உங்களை ஹக்குத் தஆலாவிடம்கொண்டு செலுத்தும் சான்றாகவும், ஸுன்னத்து என்னும் ஹதீது ஷரீபானது உங்களை நாயகம் (ஸல்) அவர்களிடம் கொண்டு செலுத்தும் சான்றாகவும் உள்ளன. இறைவனே, எங்கள் நப்ஸைவிட்டு எங்களை அப்பாலாக்கு! இம்மையின் நற்பேறுகளையும் மறுமையின் நற்பேறுகளையும் எங்களுக்குத் தந்தருள்! நரக வேதனையை விட்டு எங்களைப் பாதுகாத்தருள்!

இருபத்தாறுவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 துல்ஹஜ் மாதம் பிறை 20 சனிக்கிழமை ஜாவியாவில் ஹஜ்ரத் அவர்கள் நிகழ்த்தியது:

"தனக்குண்டாகும் சங்கடங்களை, சோதனைகளை (முறையிடாது) மறைத்துக் கொள்ளல் அர்ஷுடைய பொக்கிஷங்களில் ஒன்றாகும்" என்று நாயகம் (ஸல்) அவர்கள் உரைத்துள்ளார்கள். சிருஷ்டிகளிடம் தன் சங்கடமான சோதனைகளை முறையிடுபவனே, அவ்வாறு சிருஷ்டிகளிடம், நீ முறையிடுவதால் யாது பயன்? அவர்களால் உனக்கு எந்த நன்மையையும் எந்தத் தீங்கையும் செய்ய முடியாது. அவர்களால் நன்மையோ, தீமையோ செய்யமுடியும் என்று நீ அவர்களை நம்பியிருந்தால், அவ்வாறு நம்பி அல்லாஹ்வுடைய ஏகத்துவப் பாதையில் இணைவைக்கத் துணிந்தால், அல்லாஹ்வின் சந்நிதானத்தை விட்டும் தூரப்பட்டுவிட்டாய்; அவன் வெறுப்புக்கு இலக்காகிவிட்டாய்; அவனுக்கும் உனக்குமிடையில் திரையிடப்பட்டுவிடும். நீ சுத்த அறிவீனனா

யிருக்கிறாயே! அறிவுள்ளவன் என்று நீ வாதாடுகிறாய். ஆனால், அறியாமையின் அம்சமாகவே விளங்குகிறாயே! துனியாவைப் படைத்த இறைவனை விட்டுவிட்டுத் துனியா முழுவதையும் வேண்டுமென நீ ஆசிப்பதும், சோதனைகளிலிருந்து விமோசனம் பெறவேண்டுமென்பதற்காக ஜனங்களிடம் முறையிட்டுத் திரிவதும் அறியாமையின் அம்சமல்லாது வேறென்ன?

அந்தோ, கேவலம் நாய்கூட வேட்டையாடுவதற்குப் பழக்கி வைக்கப்படுவதன் மூலம் தன் இயற்கை சுபாவமான பேராசையையும், கெலிப்பையும் விட்டு விடுகிறதே! அவ்வாறே, வேட்டையாடப் பயன்படுத்தப்படும் பட்சி கூடத் தன் இயற்கை சுபாவத்தை விட்டுவிட்டு வேட்டைப் பொருளை மோசப்படுத்தாமல் ஒப்படைக்கும் வண்ணம் பயிற்சி செய்யப்பட்டுள்ளதே! அப்படியிருக்க உன் மனத்துக்குப் பயிற்சி கொடுத்து வசப்படுத்தி வைக்க வேண்டாமா? உன்னிடத்திலே அல்லாஹ் அமானிதமாக ஒப்படைத்துள்ள சத்திய சன்மார்க்கத்தை - தீனுல் இஸ்லாத்தை அது கபளீகரம் செய்துவிடாமலும், உன்னையே கீறிக் கிழித்துப் போடாமலும், அல்லாஹ்வின் அமானிதத்தில் மோசம்செய்து விடாமலும் இருப்பதுபோன்ற விஷயங்களில் அதற்கு நல்லறிவும் போதனையும் புகட்டிப் பயிற்சியளிக்கவேண்டாமா?

அவ்வாறான பயிற்சியளித்தால்தான் மனம் என்ற அவ்வேட்டைப் பறவை தீனுல் இஸ்லாம் என்ற வேட்டைப் பொருளை எவ்விதமான பாதிப்புமின்றி, நம்பிக்கை மோசமின்றிப் பத்திரமாகக் கொண்டு சேர்ப்பிக்கும். இவ்வாறாகப் பயிற்சி கொடுக்காமல் மனத்துடன் நீங்கள் நெருங்கிப் பழகாதீர்கள். ஆனால், பயிற்சி பெற்று, பழக்கமடைந்து பண்படைந்துவிட்டதென்றால் தாராளமாக அதனுடன் நெருங்கிப் பழகுங்கள்; ஒரு போதும் அதைப் பிரிந்திருக்க நினையாதீர்கள்; அப்

போது அது தான் விரும்பிய திசைகளெல்லாம் தாராள மாகச் செல்லட்டும். ஏனெனில், பக்குவமும் பண்பும் பெற்ற அது விஷயமுணர்ந்ததாயும், சற்குணம் உடைய தாயும் ஆகிவிட்டது; தனக்குரிய பங்கைப் பொருந்தி சாந்தமுடன் ஏற்றுக்கொள்ளும் இயற்கையுடையதாகி விட்டது. இவ்வாறான உத்தம நிலைமையையெய்திய அதற்கு எதுவும் திருப்தியே யளிக்கும். மணிக்கோதுமை கொடுத்தாலும் சரியென்றிருக்கும்; பார்லி ரொட்டி கொடுத்தாலும் சரி என்றிருக்கும்; எந்தப் பாகுபாடும் பாராட்டாது. ஆனால், உங்களுக்கு அதிக நற்பேறுகள் என்னென்ன உண்டோ அவற்றிற்காக அதிக ஒத்துழைப் பளிக்கும். உங்களுக்கு அதிகமான நன்மைகளும், புண்ணியங்களும் உண்டாகவேண்டியதற்கனுசரணையாக அஃது ஒன்றுமே அருந்தாதிருப்பது நலம் என்றிருக்கும் மானால் அவ்வாறே எதுவும் அருந்தாதிருப்பதையே வெகுமகிழ்வுடன் வரவேற்கும். தன் நலனைவிட உங்கள் நலனே மேல் என்ற தியாகத்தன்மை அதற்குண்டாகி விடும்; தயாளமிகுந்த கொடையாளியாய் இருக்கும்; இவ்வுலக வாழ்வில் விருப்பற்று மறுமை வாழ்வில் ஆவல் கொண்டிருக்கும்; அப்பால் மறுமை வாழ்வின் இன்பத்தையும் மறந்து ஹக்குத் தஆலாவின் பேரின்ப ஆசையில் மூழ்கி அவனைத் தேடி உங்களையும் அவனது சந்நிதான வாசலில் கொண்டு சேர்ப்பித்து விடும். "இவ்வாறான பேறுகளைப் பெறுவதற்காக இதுகாறும் உணவருந்தாத ஆத்மாவே, இப்போது தாராளமாக உணவருந்து; இதுகாறும் தாகத்தோடிருந் தாயே, இப்போது தாராளமாகப் பானங்களைப் பருகு" என்று அப்போது எதிர்கொண்டழைத்து வரவேற்கப் படும். புத்திசாலியான வியாதியஸ்தன் வைத்தி யர் தருவதைத்தான் அருந்துவான்; வைத்தியர் கட் டளைப்படியே நடப்பான். வைத்தியர் தன் முன் இல்லாத நேரத்திலும், அவர் சொன்ன ஒழுங்குப்படியும், பத்தியப்

படியும்தான் நடப்பான்; அவர் சொல்வதை அங்கீகரித்து அவர் சொற்படியே பேணிவருவான். வீண் பேராசையான எண்ணங்களை யெல்லாம் அவன் விட்டொழித்திருப்பான். அவ்வாறிருக்காமல் பேராசையுடன் துடித்துத் திரிபவர்களே, உங்களுக்குரிய ரிஜ்க் ஏற்கனவேயே விதிக்கப்பட்டு விட்டதே! உங்களுக்கு விதிக்கப்பட்டதை வேறு எவராலும் அனுபவிக்க முடியாதே, உங்களுக்குரிய ஆடைகள், இல்லிடங்கள், வாகனங்கள், வாழ்க்கைத் துணைகள் எல்லாம் உங்களுக்கு ஏற்கனவேயே சித்தமாக்கப்பட்டு விட்டனவே! அவற்றை யெல்லாம் உங்களை யல்லாது வேறு யார்தான் அனுபவிக்கப் போகிறார்கள்? இதை யுணராது பித்துப்பிடித்துத் திரியும் உங்கள் அறியாமையை என்னென்பது! இவ்வாறு திரியும் உங்களுக்கு மனநிம்மதி இல்லை; புத்தியில்லை; ஈமானில் நம்பிக்கையில்லை; அல்லாஹ்வின் வார்த்தையில் விசுவாசமில்லை. அன்புடையீர், ஈகையுள்ள பெருந்தகையாளனிடம் நீங்கள் வேலை பார்த்து வரும்போது கண்ணியமுடனும் ஒழுக்கத்துடனும் நடந்துகொள்ளுங்கள். காசு பணம், கூலி தரவேண்டுமென்று வாய் திறக்காதீர்கள். ஏனெனில், அவ்வாறாக நீங்கள் கேட்காத நிலைமையில் மரியாதைக் குறைவாக நடவாத தன்மையில் நிச்சயம் உங்களுக்கு அவை கிடைக்கவே செய்யும். நீங்கள் வாய் திறவாமலும், பதட்டமடையாமலும், கண்ணியக் குறைவாய் நடவாமலும் இருந்து வந்தால், உங்கள் சகவேலைக்காரர்களைவிட விசேஷ அம்சத்தில் உங்களைத் தேர்ந்தெடுத்து உயர்ந்த பதவிகளையும், அதிக ஊதியங்களையும் உங்களுக்குத் தருவான். இத்தன்மையிலேயே, எஜமானருக்கெல்லாம் பெரிய எஜமானனை ஹக்குத் தஆலாவும் தன் விஷயத்தில் குறுக்கிட்டவர்களையும், பிணங்கிக்கொண்டவர்களைத் தள்ளிவிட்டுத் தன்னளவில் ஒழுக்க சீலமுடன் கண்ணியமாய் நடந்தவர்களையும், அகமும், புறமும்

பதட்டமின்றி நிம்மதியாகவும், தனது ஏற்பாடுகளுக்குப் பொருந்தியும் சதாவும் நேர்பட வாழ்ந்தவர்களையும் தன் அன்பர்களாகத் தேர்ந்தெடுத்துத் தனிப்பெரும் சிறப்புகளை அளித்தருள்கிறான். தனக்கு அல்லாஹுத் தஆலா அமைத்தது எதுவோ அதுவே போதும் என்று நிம்மதிகொண்டு எவர் பொருந்தி நேர்பட நடந்தாரோ அவருக்குச் சர்வ காலமும் அல்லாஹ்வின் தனிப்பெரும் அன்பு உண்டு. ஆத்ம ஞானி (ஆரிப்) அல்லாஹ்வை அறிந்தவராய் இருக்கிறார்; அல்லாஹ்வையே ஊன்றிப் பிடித்திருக்கிறார். அவனல்லாத வேறு யாரையும் அவர் நம்பியிருக்கவில்லை. அவன் திருவுளப் பொருத்தத்திற்கு இணங்கவே நடந்து வருகிறார்; அவனல்லாதவற்றைப் பற்றி அவர் கவலைப்படுவதில்லை. அவனைக்கொண்டே தன் ஜீவன் நிலைத்துள்ளது என்று உறுதியுடனிருக்கிறார்; மற்றவர்களால் ஒன்றும் செய்வதற்கில்லை என்று அவர்களை இறந்துபோன மையித்துகளாகவே காண்கிறார்.

அன்பர்களே, நீங்கள் வார்த்தையாடுகையிலும் நல்ல எண்ணத்துடன் வார்த்தையாடுங்கள்; வாய் மூடியிருந்தாலும் நல்ல எண்ணத்துடன் வாய் மூடியிருங்கள். அவ்வாறாக நல்ல நிர்ணயத்துடன் நீங்கள் செய்யும் எதுவும் நல்ல அமலாக ஆகிவிடுகிறது. எந்த அமலுக்கும் நிய்யத்து இல்லாமல் முடியாது. ஆகவே, அவ்வாறாக நீங்கள் நிய்யத்து வைக்காமல் பேசவோ அல்லது மௌனமாய் இருக்கவோ செய்வீர்களாயின் பாவத்திற்கு ஆளாகிறீர்கள். மௌனமாய் இருந்தாலும், வாய்திறந்து பேசினாலும் உங்கள் நிய்யத்தில் கோளாறு இருப்பதாலேயே நீங்கள் பாவத்துக்கு ஆளாகிறீர்கள். உங்கள் நிலைமை சற்று மாறினாலும், உணவு நெருக்கடியுண்டானாலும் ஒரு பிடி உணவுக்காக அல்லது கௌரவத்துக்காக இறைவனை

மறந்துவிடுகிறீர்கள்; ஏதாவது ஓர் இன்பசாதனம் பறி போனாலும் அத்தனை இன்பங்களையும் தந்ததையெல்லாம் மறந்து நன்றி கெட்டவர்களாகிறீர்கள். உங்கள் போக்கு 'இப்படிச் செய், அப்படிச் செய்யாதே, ஏன் இவ்வாறு செய்தாய்'' என்று இறைவன்மீது சர்வாதிகார ஆட்சி செலுத்துவதைப் போன்றல்லவா இருக்கிறது! வேண் டாம், வேண்டாம்! இம்மாதிரி விபரீதப் போக்கு வேண்டாம்! இறைவன் திருச் சந்நிதானத்தை விட்டுத் தூரத்தில் கொண்டு இழுத்துவிடும், இறைவனது வெறுப்பையும், அதிருப்தியையும் உண்டாக்கும், அவன் சமூகத்திலிருந்து தூரத்தப்படச் செய்யும் அத் தகைய போக்கு ஒருபோதும் வேண்டாம்! ஆத முடைய மைந்தனே, உன்னை எண்ணிப்பார்! கேவலமான இந்திரியத்திலிருந்து சிருஷ்டிக்கப்பட்டாய் நீ! என்ன பெருமை வேண்டிக்கிடக்கிறது உனக்கு மகத்துவமும் மாண்பும் மிக்க உன் ரட்சகனாகிய இறைவனுக்கு அடி பணி; பணிந்துநட! இறைபக்தி (தக்வா) உனக்கு உண் டாகவில்லையென்றால் அல்லாஹ்விடமோ அவன் நல்லடி யார்களான சான்றோர்களிடமோ உனக்கு எவ்விதக் கௌரவமுமில்லை.

சமூகத்தவர்களே, அல்லாஹ்வின் பொறுப்பில் முழு நம்பிக்கை வைத்து, உங்களை நீங்கள் நன்றாகக் கண் காணித்துப் பாருங்கள். உங்களிடம் பண்டம் இல்லையே! ஞான விவேகம் பெற்றவர்களாகி உங்கள் அகக்கண்களைத் திறவுங்கள். உங்கள் வீட்டிற்குள் ஜமாஅத்துக் கூட்டம் கூடியிருக்குங்கால் நீங்களே முதலில் பேச்சை ஆரம்பிக்க வேண்டுமென்று விரும்பாதீர்கள். வினவப் படும் விஷயத்திற்கு மாத்திரம் பதில் கூறுங்கள். தேவை யற்ற விஷயங்கள் குறித்து வினவாதீர்கள். தௌஹீது நிலைமை கடமையானது (பர்ளு) - ஹலாலைத்தேடுவது கடமை-தன் நிலைமைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்

பட்ட அளவு தேடுவது கடமை - அமல்கள் செய்வதில் பரிசுத்த எண்ணம் கொள்வது கடமை - நல்ல அமல்கள் செய்யும்போது பிரதிபலனை எதிர்பாராம விருப்பது கடமை - இந்த விதமான பர்ளுகளையெல்லாம் உணருங்கள். கெட்டவர்களையும் கள்ளமனக்கோளர்களான முனாபிக்குகளையும் விட்டுத் தூரவிலகுங்கள்; சத்தியவந்தர்களான சான்றோர்களுடன் அண்டிப் பழகுங்கள். சான்றோர் யார், முனாபிக்கு யார் என்று அறியும் விஷயத்தில் உங்களுக்குச் சங்கடமாயிருக்கிறதா? அதற்கு ஒரு மார்க்கம் சொல்லித்தருகிறேன். இரவு தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து இரண்டு ரக்அத்து (நபில்) தொழுதுவிட்டு "என்னிறைவா, உன் அடியார்களில் சான்றோர்களைப்பற்றி எனக்கு அறிவித்துக் கொடு! உன்னை யறியும் ஞானத்தை எனக்கு ஊட்டி, உன் பேரின்பப் போஜனத்தையும், ஞான அமுதத்தையும் எனக்குப் புகட்டி, உன் சந்நிதானச் சமீபத்துவம் என்ற பரஞ்சோதி சுர்மாவை என் கண்ணில் தீட்டி, பிறருடைய சொல்லை நம்பியதாய் இல்லாமல் மெய்க்காட்சியாகத் தான் கண்ட ஞான அத்தாட்சிகளை எனக்கு எடுத்தியம்பும் உத்தம அடியாரைப்பற்றி எனக்குத் தெரிவித்துத் தா!" என்று துஆக் கேளுக்கள். அல்லாஹ்வின் சொந்தமான மெய்யடியார்கள் அல்லாஹ்வின் அருள் என்ற ஆகாரத்தால்வயிறு நிரம்பினார்கள்; அல்லாஹ்வின் மருகுதல் என்ற பானத்தால் தகை தீர்ந்தார்கள்; அவன் சந்நிதானப் பேரின்ப வாசலைத் தரிசித்துக்கொண்டேயிருந்தார்கள். ஆனால், அத்துடன் சித்திபெற்றுவிட்டதாக நினைத்துச் சும்மா இருந்திடாமல் முஜாஹதா என்னும் சத்முயற்சியில் மகாபெரும் பொறுமையுடன் ஈடுபட்டுக்கொண்டேயிருந்தார்கள். சத்முயற்சியுடன் ஞான பாட்டையில் பிரயாணம் சென்ற அவர்கள் தங்களையும், சர்வ சிருஷ்டிகளையும் விட்டு சர்வத்திற்கும் மூலப்பொருளான அந்த ஒரு பொருள் அளவிலேயே

மீண்டு, கண்கண்ட காட்சியாய்ப் பேரின்ப முக்தியடைந்தனர்; தங்கள் எஜமானாகிய அல்லாஹுத் தஆலாவின் பால் அண்டிவிட்டனர். இந்த நல்லடியார்களை அவன் அன்போடு ஏற்று அவர்களைப் பரிசுத்தப் பக்குவப்படுத்தி, சர்வ ஞானங்களையும் அவர்களுக்கு அறிவித்தருளி, தனது ராஜாங்க அம்சங்களை எல்லாம் அவர்களுக்கு எடுத்துக்காண்பித்தான். வானத்திலோ பூமியிலோ எங்கும் தன்னையல்லாது வேறெதுவும் கிடையாது-எதையும் ஈவாரும், விலக்குவாரும் தன்னையல்லாது வேறில்லை. அணுவளவு அசைவதும், ஒடுங்குவதும் தன்னைக்கொண்டன்றி வேறு எதனாலுமில்லை-எவ்விஷயத்திற்கும் அமுல் நடத்தத் திட்டமிடுவதும் தீர்ப்பளிப்பதும் தன்னையல்லாது வேறு யாரும் கிடையாது-மேலாக்குவதும், கீழாக்குவதும் தன்னைக் கொண்டன்றி வேறு எவராலும் இல்லை. ஆளுவதும், வசப்படுத்துவதும், அடக்கியாளுவதும் தன்னைக் கொண்டல்லாது வேறு யாராலும் இல்லை என்ற இத்தியாதி அத்தாட்சிகளையெல்லாம் பிரத்தியட்சமாக அவர்களுக்கு அறிவித்தான். தன் திருஷ்டாந்தங்களை யெல்லாம் அவர்களுக்கு அவன் காண்பித்தான்; தங்கள் அகக்கண்களாலும், அகமியங்களாலும் அவற்றையெல்லாம் அவர்கள் நன்கு தரிசித்தார்கள். இத்தகைய மகத்தான பெரும் பதவி பெற்ற அவர்கள் இந்தத் துனியாவையும், இதன் ஆட்சியையும் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார்கள். அவற்றிற்கு ஒருவித மதிப்பும் அவர்கள் கொடுக்கமாட்டார்கள். ஆண்டவனே, எங்களுக்கு உன் மன்னிப்பையும், சுபீட்சத்தையும் ஈந்து அவர்களிடங் காட்டியது போன்று எங்களிடமும் கருணை காட்டியருள்! இவ்வுலகின் நற்பேறுகளையும், மறு உலகின் நற்பேறுகளையும் எங்களுக்கு அளித்தருள்! நரக வேதனையினின்றும் எங்களைக் காப்பாற்றியருள்!

சமூகத்தவர்களே, தக்வாவை இழந்திருந்தமைக்காகத் தௌபாச் செய்து மீளுங்கள். தக்வாவை இழந்திருத்தல் பெரிய வியாதியாகும். தக்வாவோ அருமையான சஞ்சீவி. நீங்கள் தௌபாச் செய்து மீளுங்கள். ஏனெனில், நிச்சயமாகத் தௌபா அற்புதமான ஔஷதமாகவும், பாபங்கள் நசலாகவும் உள்ளன. "உங்கள் வியாதி யாது, உங்கள் ஔஷதம் யாது என்று நான் உங்களுக்குச் சொல்லித் தரட்டுமா ?" என்று ஒரு நாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் ஸஹாபாக்களை நோக்கி வினவினார்கள். "அல்லாஹ்வின் ரஸூலே, சொல்லித் தாருங்கள்" என்று ஸஹாபாக்கள் கேட்டார்கள். அப்போது நாயகம் (ஸல்) அவர்கள், "உங்கள் வியாதி பாவங்கள்; உங்கள் ஔஷதம் தௌபா" என்று உரைத்தார்கள். தௌபா ஈமானுக்குகந்த அருந்துணையாகும். திக்று தியான மஜ்லீஸுகளுக்கு நேமமாகப் போய்வருதல், ஹக்குத் தஆலாவின் வழிபாடுகளில் ஈடுபடுதல் முதலியன இதயப் பிணிகளை நீக்கிச் சொஸ்தமுண்டாக்குபவை. சத்திய விசுவாஸ ஈமானுடைய நாவு கொண்டு நீங்கள் யதார்த்த முறையில் தௌபாச் செய்யுங்கள்; கட்டாயமாக உங்களுக்கு ஜெயமுண்டு. உண்மையான ஏகத்துவமும், நிஷ்களங்கமும் உடைய நாவு கொண்டு தௌபாச் செய்யுங்கள்; கட்டாயமாக உங்களுக்கு வெற்றியுண்டு. எத்தகைய துன்பங்கள், அபாயங்கள் நேரிடினும் ஈமானையே உங்களுக்குரிய ஆயுதமாக்கிக்கொள்ளுங்கள் ; அவை அல்லாஹ்வின் புறத்தால் உண்டாகுபவை.

இருபத்தேழாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 ஜமாத்துல் ஆகிர் மாதம், பிறை ஏழு, வெள்ளிக்கிழமை காலை, மத்ரஸாவில் ஹஜ்ரத் அவர்கள் நிகழ்த்தியது:

விவேகமுடன் நடந்து கொள். பொய்மொழி புகலாதே. அல்லாஹ் ஒருவனுக்கே அஞ்சுகிறேன் என்று மொழிகிறாய். ஆனால், அவனல்லாதவற்றிற் கெல்லாம் அஞ்சி நடுங்குகிறாய். ஜின்னுக்கோ, மனிதனுக்கோ, மலக்குகளுக்கோ அஞ்சாதே. பேசுகிற வர்க்கங்களுக்கோ, பேசாத வர்க்கங்களுக்கோ பயப்படாதே. இம்மையின் தண்டனைக்கோ மறுமையின் வேதனைக்கோ பயப்படாதே. ஆனால், நீ பயப்படவேண்டியது தண்டனைகளையும் வேதனைகளையும் அளிக்கக்கூடிய அல்லாஹ் ஒருவனுக்கேதான்.

தூற்றித் திரிபவர்களின் பழிச்சொற்களைப் பற்றிப் பயப்படாமல் இருப்பவனே விவேகமுடையவன். அவன் கவனமும், அச்சமும் அல்லாஹ்வின் புறத்திலேயே இருந்து கொண்டிருக்கும். அல்லாஹ் அல்லாத மற்றவர்களது இகழையோ, புகழையோ பொருட்படுத்தாது அவன் செவிடன்போல் சமைந்திடுவான். இத்தகைய பண்புடைய உத்தமனிடத்தில் ஜனங்களெல்லாம் வலுவிழந்து, தங்கள் பிணி தீர அவன் ஆதரவை நாடிச் செல்வார்கள். அவனைப் போன்ற பண்புடையவர்கள் தாம் உண்மையான ஞான அறிவுடைய உலமாக்களாவர். இவர்களின் அறிவு கொண்டு ஜனங்கள் பெரும் பயனை அடைவார்கள். இவர்கள் சன்மார்க்க ஷரீஅத்து ஞானமும், தன்னையறியும் பேரின்ப ஹகாயிகு ஞானமும் பெற்ற அறிவுக்களஞ்சியங்களான உலமாக்களாய் இருப்பார்கள். இவர்கள் தீனுல் இஸ்லாத்தின் வைத்தியசிகாமணிகளாவார்கள். அதில் ஏற்பட்டுள்ள பழுது, முறிவுகளைச் சீர்படுத்திப் பொருத்தி சிகிச்சை செய்வார்கள். தமது தீனில், மார்க்க ஒழுக்கத்தில் பழுதும் முறிவும் பெற்றிருப்பவர்களே, அத்தகைய வைத்தியர்களை நாடி விரைந்து செல்லுங்கள். உங்கள் முறிந்துபோன, பழுதான பாகங்களை அவர்கள் பொருந்தச் செய்து குண

முண்டாக்குவார்கள். சகல பிணிகளுக்கும் அல்லாஹ் மருந்தை அமைத்தேயுள்ளான். மற்றெவரையும்விட வியாதியையும் மருந்தையும் சிருஷ்டித்த அவனே அவ் விஷயங்களைப்பற்றி மிக மிக அறிந்தவன். ஆகவே, அல்லாஹ்வின் செயல்கள் குறித்து நீங்கள் அவன்மீது சந்தேகம் கொள்ளவேண்டாம். அப்படி நீங்கள் யாரை யாவது சந்தேகப்படவோ, பழிக்கவோ வேண்டுமென்றால் அதற்குப் பொருத்தமாக உள்ளது உங்கள் நப்ஸ் தான். அதன்மீது நன்றாகச் சந்தேகப்படுங்கள்; அதைப் பழியுங்கள். ஏவலுக்கு வழிபட்டு நடந்தால் சம்மானமும், மாறு செய்தால் தடியடியும்தான் கிடைக்குமென்று அதை எச்சரியுங்கள். எந்த அடியாரைக் கொண்டு அல்லாஹ் அதிக விசேஷமான நன்மைகளை நாடுகிறானோ அவரை-அவருக்கு எவ்விதச் சுயேச்சையுமில்லாதவராக்கித் தன்னளவில் இழுத்துக் கொள்கிறான். அதனைப் பொருந்தி அவர் பொறுமையுடனிருந்தால் மேலும் அவருக்கு உயர்ந்த அந்தஸ்தும், மகத்துவங்களும், நற்பரிசுகளும் அளித்துத் தன் தனிப் பெரும் சொந்த அடியாராக ஆக்கிக் கொள்கிறான்.

ஆண்டவனே, உன் சந்நிதானம் நாடும் எங்களைச் சோதனை செய்யாமல் உன் சந்நிதான சமீபத்துவத்தை எங்களுக்குத் தந்தருளும்படி உன்னிடம் இறைஞ்சுகிறோம். உனது கற்பனைக் கட்டளை, ஏற்பாடுகளில் எங்கள்மீது நல்லன்பு வைத்தருள்வாயாக. துஷ்டர்களின் பொல்லாங்கை விட்டும், கெட்டவர்களின் சூழ்ச்சிகளை விட்டும் எங்களைப் பாதுகாத்தருள்வாயாக. நீ விரும்பிய வகையில் நீ நாடிய பிரகாரம் எங்களைப் பேணிப் பாதுகாப்பாயாக. சன்மார்க்க ஒழுக்கத்திலும், உலக வாழ்விலும், மறுமை வாழ்விலும் உனது மன்னிப்பையும், நல்வாழ்வையும் கோருகிறோம். நற்செயல்களைப் புரிவதற்கனுசரணையான உனது நல்லுதவிக் கட்டளையையும், நற்

செயல்கள் புரிவதற்குரிய சித்த சுத்தியான நல்லெண்ணத்தையும் தந்தருளும்படி உன்னை வேண்டுகிறோம். எங்கள் கோரிக்கைகளை அங்கீகரிப்பாயாக. ஆமீன்.

அபூ யஸீது பிஸ்தாமீ (ரஹ்) அவர்களிடம் ஒரு மனிதன் வந்து வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் எதையோ நோட்டமிட்ட வண்ணமாய் இருந்தான். அவனைப் பார்த்து அபூ யஸீது, "என்ன விஷயம்?" என்று வினவினார்கள். "நான் தொழுவதற்காகப் பரிசுத்தமான இடமொன்றைப் பார்த்துத் தேடுகிறேன்" என்று அம்மனிதன் கூற, "உன் அகத்தைப் பரிசுத்தப்படுத்திக்கொண்டு உன் நாட்டம் போல எங்கு வேண்டுமானாலும் தொழுதுகொள்" என்று அவர்கள் மொழிந்தார்கள்.

சித்தசுத்திபெற்ற முக்லிஸீன்களைத் தவிர மற்றெவரும் முகஸ்துதியை விளங்கிக்கொள்ளமாட்டார்கள். முகஸ்துதிப் பிரியத்தை விட்டு அடியோடு அவர்கள் நீங்கி அவற்றிலிருந்து வெளியாகிவிட்டார்கள். முகஸ்துதி, மெய்யடியார்கள் செல்லும் செங்குத்தான பாதையிலுள்ள கணவாயாய் இருக்கிறது. அவர்கள் அவசியம் அதைக் கடந்து சென்றுதான் தங்களது மூலஸ்தானத்தை அடைய வேண்டும். முகஸ்துதி, அகப்பெருமை, உள்ளொன்றும் புறமொன்றுமாயிருக்குந் தன்மை முதலியனவெல்லாம் ஷைத்தானுடைய கொடிய அம்புகள். அவற்றை அவன் இதயங்களை நோக்கிக் குறிவைத்து எறிகிறான். ஆகவே, அக்கொடிய அம்புகளைப்பற்றி எச்சரிக்கையோடிருந்து கொள்ளுங்கள்.

குரு நாதர்களான ஷைகுமார்களைத் தேடிச்சென்று, ஹக்குத் தஆலாவை அறிந்து சேரும் ஞானபாட்டை (தரீக்கா) பற்றிய அறிவுஞானத்தை அவர்களிடம் கேட்டுப் படியுங்கள். ஏனெனில், அப்பாட்டையில் அவர்கள் நடந்து வெற்றியடைந்தவர்கள். நப்ஸின்

பயங்கரமான தீய சுபாவம், பேராசை ஆகியவைபற்றி யெல்லாம் அவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். அவற்றிற்கெல்லாம் அவர்கள் ஈடுசெலுத்திப் போராடி அவைகளை யெல்லாம் அடக்கியொடுக்கி அபாயமற்ற தன்மையிலாக்கி விட்டார்கள். அவற்றின் முழுமோசத்தனங்களையும், பைத்தியக்காரத் தன்மைகளையும், தீங்குகளையும் அவர்கள் நன்றாக உணர்ந்து அவற்றை, நல்வழிக்குக் கொண்டுவரும் சிகிச்சை முறைகளைப் பல்லாண்டு காலம் செய்து பழக்கப்பட்டவர்கள். இவ்வாறாக, அவர்கள் நப்ஸின் கொட்டத்தை அடியோடு அடக்கி அதைத் தங்களுக்குக் கட்டுப்படுத்தி, அடிமையாக்கி வெற்றி கண்டவர்கள். ஷைத்தான் செய்யும் சேட்டைகளால் நீங்கள் மதி மயங்கிப்போய் விடாதீர்கள். அவனுடைய கொடிய அம்புகளுக்கும் நீங்கள் இலக்காகிவிடாதீர்கள். தன் நயவஞ்சகத்தைப் பரப்புவதற்காக ஷைத்தான் பல மார்க்கங்களைக் கையாளுவான். ஜின் வர்க்க ஷைத் தானைப்பற்றியும், மனிதவர்க்க ஷைத்தானைப்பற்றியுமே நீங்கள் விளிப்புடனிருக்கவேண்டுவது அவசியமாகும். உங்கள் நப்ஸும் கெட்ட சிநேகிதர்களும்தாம் அவ்விரண்டும். அந்தச் சண்டாளப் பகைவர்களிடமிருந்து காப்பாற்றும்படியாக மகத்துவம் நிறைந்த அல்லாஹ்விடம் இரட்சிப்புத் தேடுங்கள். அந்த எதிரிகளிடமிருந்து பாதுகாக்கும்படியாக அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள். நிச்சயமாக அவன் உங்களைப் பாதுகாத்து ரட்சித்தருள்வான். இவ்வாறாக அல்லாஹ்வின் நல்லருளைப் பெற்று அவன் அருட்கொடைப் பெரும் பேறுகளையும் அடைந்து அவனது சந்நிதானக் காட்சிகளையும் அடைந்ததற்கப்பால் இனத்தார் ஜனத்தார் அளவில் மீண்டு அவர்களையும் அல்லாஹ்வின் பக்கம் கொண்டு செல்லுங்கள். “உங்கள் குடும்பத்திலுள்ள யாவரையும் நீங்கள் அழைத்துக்கொண்டு என்னிடம் வாருங்கள்” என்று அவர்

களிடம் சொல்லுங்கள். நபி யூசுபு (அலை) ராஜீய ஆட்சியையும், அகமிய ஆட்சியையும் ஜெயித்து வெற்றி சூடிய சமயம் தங்கள் இனத்தாரை நோக்கி, "உங்கள் குடும்பத்திலுள்ள யாவரையும் நீங்கள் அழைத்துக் கொண்டு என்னிடம் வாருங்கள்" என்று கூறினார்கள். (திரு குர்ஆன்)

துரதிர்ஷ்டம் பிடித்தவன் யார்? அல்லாஹ்வின் சந்நிதானச் சமீபப் பேறு பெறாதவனே இம்மையிலும் மறுமையிலும் துரதிர்ஷ்டம் பிடித்தவனாவான்.

"ஆதமின் மைந்தனே, என்னை நீ இழந்தால் எல்லாவற்றையும் இழந்தவனாவாய்" என்று ஆண்டவன் தனது வேதங்களிலொன்றில் கூறியுள்ளான். அல்லாஹ்வையும், அவனது நல்லடியார்களான உண்மை விசுவாசிகளையும் புறக்கணித்து உங்கள் சொல்லாலும், செயலாலும் அவர்களை நோவினை செய்து உள்ளும், புறமும் அவர்களைப் பற்றி அலட்சிய மனோபாவங் காட்டும் நீங்கள் அல்லாஹ்வை இழந்துவிடாமல் இருப்பதெப்படி?

"ஓர் உண்மை மூமினை நோகச் செய்வது, கஃபதுல்லாவையும், பைத்துல் மஃமூரையும் பதினைந்து முறை இடிக்கும் குற்றத்தைவிட அல்லாஹ்விடம் மகா பெரும் பயங்கரமான குற்றமாகும்" என நபி நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இருக்கிறார்களே! ஆகவே, கவனியுங்கள்! அல்லாஹ்வின் நல்லடியார்களான ஏழை, எளியார்களை நோவினை செய்பவர்களே, மோசம்போய்விடாதீர்கள். அந்த எளியார்கள்தாம் அல்லாஹ்வின் பரம பக்தர்கள். அவனைக் கொண்டு மெய்விசுவாசம் பூண்டுள்ளார்கள்; சான்றோர்களாயிருக்கிறார்கள்; அவனையறிந்த ஞானிகளாயிருக்கிறார்கள்; அவன்மீது பரிபூரண நம்பிக்கைகொண்டிருக்கிறார்கள். அவர்களை அலட்சியமாகக் கருதும் உங்களுக்கு என்ன துணிச்சல்! விரைவிலே இறந்து மையித்தாகப்

போகிறீர்கள்; மரணம் வந்து உங்கள் வீடு வாசல், யாவற்றையும் விட்டு இழுத்துப்பறித்து உங்களைக் கொண்டு சென்றுவிடும். இந்நிலையில் உங்களுக்கு என்ன பெருமை வேண்டிக்கிடக்கிறது! நீங்கள் கட்டிக் காத்துப் பெருமையடிக்கும் பணங்காசு சொத்தெல்லாம் மரணத்தைவிட்டும் உங்களைத் தடுத்து நிறுத்திவிட முடியுமா? நீங்கள் கண்மூடிய பின்பு அவற்றை யார் யாரெல்லாமோ அனுபவிக்கப் போகிறார்களே! அவை சூறையாடப்படலாம். ஆனால், உங்களுக்கு அவை ஒரு பயனையும் தரப்போவதில்லை.

இருபத்தெட்டாவது பிரசங்கம்

ஹிஜ்ரி 545 ஜமாத்துல் ஆகிர் மாதம், பிறை ஒன்பதில் ஜாவியாவில் ஹஜ்ரத் அவர்கள் நிகழ்த்தியது:

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சமூகம் ஒருவர் வந்து, "அல்லாஹ்வின் அருளன்பை நாடித் தங்களை நான் பெரிதும் நேசிக்கிறேன்" எனக் கூறினார். "அப்படியானால் பெரும் சோதனையையும் வறுமையையும் உமது அணிகலன்களாக்கிக் கொள்ளத் தயாராய் இரும். என்னை நேசிப்பதாகக் கூறும் நீர் என் குண லட்சணங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறாயின் எனது அன்பிற்குரியவராவீர்" என்று அவருக்கு 'நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். நேசத்திற்குரிய நிபந்தனை யாதெனில் நண்பனுக்கு நேர்பட ஒத்திருப்பதாகும். இவ்வாறேதான் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) உடைய நேசமிருந்தது. நாயகம் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய நட்பைப் பெற்றதும் அவர்கள் அந்த அருமை நாயகத்திற்காகத் தனது பொருட்களையெல்லாம் வாரி ஈந்தார்கள். அவ்வாறு ஈந்து நாயகம் (ஸல்) போன்று குணம் பெற்று அவர்கள் போன்று வறுமையில் பங்கெடுத்தார்கள். பெரும் சீமானாக வதிந்த அவர்கள்

பீய்த்தலுள்ள கம்பளியாடையை யணிந்துகொள்ளும் அளவுக்கு எளிமையை மகிழ்வுடன் ஏற்று ரஸூலுல்லாஹ் (ஸல்) உடைய நேசத்தையே உள்ளும், புறமும், அந்தரங்கத்திலும், பகிரங்கத்திலும் பெரிதாகக் கொண்டு அவர்களது போக்கிற்கொப்ப நேர்பாட்டுடன் நடந்தார்கள். நீங்களோ, சான்றோர்களின் நேசத்தைப் பெற்றிருப்பதாக வெறுமனே வாயளவில் சொல்லிக் கொள்கிறீர்கள். ஆனால், உங்கள் நேசர்களான அவர்களறியா வண்ணம் உங்கள் பணங்காசுகளைப் பதுக்கிவைத்திருக்கிறீர்கள். இப்படிச் செய்துகொண்டு அந்தச் சான்றோர்களின் நெருங்கிய தொடர்பும் நேசமும் வேண்டுமென்று ஆசைப்படுகிறீர்கள். இவ்வாறான நட்பில் நீங்கள் உண்மையுடையவர்களாயில்லை. புத்திகொண்டு நோக்கி விவேகமுடன் நடந்து கொள்ளுங்கள். உங்களுடைய இத்தகைய நேசம் பொய்யான நேசமே. உண்மை நண்பன் தனது நண்பனிடம் எதையும் மறைத்துப் பதுக்கமாட்டான். தன்னைப்போல அவனை நேசிப்பதென்றில்லாமல் தன்னைவிட மேலாக அவனை நேசிப்பான்; தனது தேவைகளைவிட நண்பனது தேவைகளையே பெரிதாகக் கருதுவான்.

வறுமை, நபி நாயகம் (ஸல்) அவர்களை விடாமல் பிடித்திருந்தது. "பள்ளத்தை நோக்கிப் பாய்ந்தோடிச் செல்லும் தண்ணீரைவிட அதிவேகமாக, என்னை நேசிக்கும் அன்பரளவில் வறுமை விரைந்தோடிச் செல்லக் கூடியது" என்று நாயகம் (ஸல்) கூறியிருப்பது இக்காரணத்திற்காகவே. "நாயகம் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஜீவித்திருந்த காலம் வரைக்கும் உலக வாழ்வு எங்களுக்கு மிக்க சங்கடமானதாகவும், வறுமை மிகுந்ததாகவும் இருந்தது. ஆனால், அவர்கள் மரணித்ததற்கப்பால் உலக வாழ்வு ஒரேயடியாகச் செழிப்போடு எங்கள்மீது வருஷிக்கப்பட்டது" என்று ஆயிஷா நாயகி (ரலி) கூறி

யுள்ளார்கள். எனவே, இவற்றால் நாம் உணர்வது யாதெனில்; ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நேசத்துக்கு நிபந்தனை வறுமை என்பதுவும், அல்லாஹ்வின் நேசத்துக்கு நிபந்தனை சோதனை என்பதுவுமே. "எல்லா விதமான சோதனைகளும் நேசர்களுக்கே வந்து சம்பவிக்கும்; காரணம், அவர்கள் அல்லாஹ்விடம் கொண்டுள்ள நேசத்தில் பொய், உள்ளொன்று புறமொன்றான சுபாவம், முகஸ்துதி முதலியன இன்றிச் சித்தசுத்தியுடனுள்ளார்களா என்று பரீட்சிக்கப்படுவார்கள் என்று பெரியோர்களுள் ஒருவர் கூறியுள்ளார்.

ஆகவே, பொய்யான நேசத்தை விடுத்து மெய்யான நேசத்தில் திரும்புங்கள். நெஞ்சத்தில் நேர்மையின்றி வாயளவில் மட்டும் நேச வார்த்தைகளைக் கூறிக்கொண்டு உங்களை அபாயத்திற்காளாக்கிக் கொள்ளாதீர்கள். நேசம் பூண்டால் உண்மையான முறையில் பூணுங்கள். இல்லாவிடில் நம்மை நீங்கள் தொடரவேண்டாம். கைதேர்ந்த தங்க வியாபாரியிடம் உங்களது கலப்பு லோகத்தைக் காட்டிப் பொன் என ஏமாற்றலாம் என்று எண்ணுகிறீர்களா? அது ஒரு போதும் நடக்காது. உங்களுக்கு அவமானமும் கேவலமும்தான் ஏற்படுமே தவிர வேறில்லை. பாம்பையும், சிங்கம், புலி, கரடி போன்ற துஷ்டப் பிராணியையும் பிடித்து வைத்து ஆத்திரமூட்ட நினைக்காதீர்கள். அப்படிச் செய்தால் அவை உங்களைக் கொன்று நாசமாக்கிவிடும். பாம்பையடக்கக்கூடிய வசிய சக்தி பெற்றவர்களாயிருந்தால் பாம்போடு சகவாசம் செய்யுங்கள்; துஷ்டப் பிராணிகளை அடக்கியொடுக்கக்கூடிய துணிச்சல் இருந்தால் அவற்றிடம் நெருங்குங்கள். ஹக்குத் 'தஆலாவின் அளவில் செல்லும் பாட்டை (தரீக்காவு)க்கு உண்மை சித்த சுத்தியும் அவனை அறியும் ஞான ஒளிப்பிரகாசமும் தேவை. உண்மையான நேசம் பூண்ட சத்தியவந்தர்

(ஸித்தீகீன்)களின் அகங்களில்தான் ஞான சூரியன் உதயமாகிறது. இரவு பகல் எவ்வேளையிலும் அஃது அஸ்தமியா வண்ணம் சுடர்வீசிப் பிரகாசித்துக் கொண்டே இருக்கிறது.

அன்பர்களே, அல்லாஹ்றவின் வெறுப்புக்கு இலக்கான சண்டாள நயவஞ்சகர்களின் தொடர்பை அடியோடு அறுத்துக்கொள்ளுங்கள். புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுங்கள். இக்காலத்திலுள்ள ஜனங்களில் பெரும்பாலானவர்களை நீங்கள் அண்டிப் பழகாம விருப்பதே நல்லது. ஏனெனில், அவர்கள் மனித உடையணிந்த ஓநாய்களாகவே இருக்கிறார்கள். உற்றுணர்ந்து நோக்கல் என்னும் கண்ணாடியைக்கொண்டு இவ்விஷயத்தை நோக்குங்கள்; புலப்படும். உங்களையும் அவர்களையும் பற்றிய யதார்த்தத் தன்மையைத் தரிசிக்கும் அத்தகைய மனோவலிமையைத் தரும்படியாக அல்லாஹ்றவிடம் கோருங்கள். சிருஷ்டிகளையும், சிருஷ்டிகர்த்தாவையும் நான் ஆழ்ந்து நோட்டமிட்டுப் பார்த்ததில் சிருஷ்டிகளிடம் தீமையும், சிருஷ்டிகர்த்தாவிடம் நன்மையும் இருக்கக் கண்டேன்.

ஆண்டவனே, தீயவர்களின் தீமைகளை விட்டும் எங்களை ஈடேற்றம் பெறச் செய்து இம்மையிலும் மறுமையிலும் எங்களுக்கு நன்மைகளைத் தந்தருள்.

அன்பர்களே, என் சுயநலத்திற்காக நான் உங்களை நேசிக்கவில்லை; உங்கள் நலனுக்காகவே உங்களை நேசிக்கிறேன். உங்களுக்காக உங்கள் கயிறுகளில் நூலை முறுக்குகிறேன். உங்களிடமிருந்து யாதொன்றையும் எனக்காகப் பெறவில்லை ; ஆனால், உங்களுக்காகவே தான். உங்களிடமிருந்து எனது அவசியத்திற்காக ஏதும் பெறவேண்டிய தேவையில்லை. எனக்கு வேண்டியவை என்னிடம் உள்ளன. உழைத்துச் சம்பாதிப்பது அல்லது அல்லாஹ்றவிடம் பாரஞ்சாட்டி நம்பிக்கையுடனிருப்பது இவற்றைத்

தவிர வேறெதுவும் என்னிடமில்லை. அல்லாஹுத் தஆலாவை மறந்து, உங்களை நம்பி உங்கள்மீது பாரஞ் சாட்டி முகஸ்துதி செய்து உள்ளொன்றும் புறமொன்று மாக நடக்கும் நயவஞ்சகனைப் போன்று நீங்கள் எதுவும் எனக்குத் தருவீர்களென்று உங்களிடம் எதிர்பார்ப்பதே கிடையாது. நான் உலகமாந்தர்களையெல்லாம் நன்குணரக் கூடிய உரைகல்லாய் இருக்கிறேன். ஆகையால் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுங்கள். கள்ள நாணயங்களையும், கலப்புத் தங்கத்தையும் காட்டி என்னை ஏமாற்றிவிட முடியாது. ஆண்டவன் எனக்குத் தந்த தனிச் சிறப்பையும், நல்லுதவியையுங் கொண்டு பார்த்த மாத்திரத்திலேயே நல்லது, கெட்டது, கலப்பற்றது, கலப்புள்ளது, இத்தனை மாற்றுள்ளது என்று சரியாகப் பிரித்துவிடுவேன். பசுந்தங்கமாய் நீங்கள் ஆகவேண்டு மானல் நமது பட்டரைக்கு வந்து அடிபடவேண்டும். அப்போது நாம் உங்கள் இதய மாசுகளை யெல்லாம் போக்கி, உங்களின் பேராசை, கெட்ட சுபாவம், ஷைத்தான், பகைவர்கள், தீய சிநேகிதர்கள் ஆகியவற் றின் மோசத்தனங்களையெல்லாம் நீக்கிப் பசுந்தங்கமெனப் புடம்போட்டு எடுத்துவிடுவோம். சண்டாளப் பகைவர் களை விட்டுப் பாதுகாக்கும்படியாக அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள். அப்பகைவர்களின் கொடுமைகளுக்குப் பொறுமை செய்பவர்களே இறைவனது சகாயத்தைப் பெற்றவர்களாவர். அப்பகைவர்களை நம்பி அவர்களை அண்டினவர்களே மோசம் போனவர்களாவர். ஆபத்துக் கள் ஏராளமாயுள்ளன; ஆனல், அவை சம்பவிக்கும் இடமோ ஒன்றுதான். வியாதிகள் ஏராளமாயுள்ளன; ஆனல், வைத்தியரோ ஒருவர்தான். இதய வியாதி பெற்றிருப்பவர்களே, உங்கள் இதயங்களைச் சிகிச்சை புரிவதற்காக அந்த வைத்தியரிடம் ஒப்படையுங்கள். உங்கள் வியாதியைப் போக்க அவர் கையாளும் சிகிச்சை யில் நீங்கள் அவர்மீது சந்தேகப்படாதீர்கள். உங்கள்

இதயங்கள்மீது நீங்கள் அன்பு கொண்டு கவனிப்பதை விடப் பன்மடங்கு மேலாக அன்புகொண்டு அவர் கவனிப்பார். ஒன்றும் பேசாமல் உங்களை அவரிடம் ஒப்படைத்து விடுங்கள். கண்ணியமுடன்-அவர் சமூகத்தில் பேணுதலுடன் இருங்கள். எவ்விஷயத்திலும் குறுக்கிடாதீர்கள். நிச்சயமாக இம்மையிலும் மறுமையிலும் சர்வ நன்மைகளையும் நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

தங்களுக்கு எவ்விதத் தத்துவமும் கிடையாது என்று முற்றிலும் வாய்மூடி இருப்பதிலும், முற்றாகத் தம்மை மறைத்திருப்பதிலும், அடங்கியொடுங்கிப் போவதிலுமே சமூகத்தார்களின் பக்குவ நிலை அமைந்துள்ளது. அத்தன்மை அவர்களுக்குச் சம்பூரணமாகி அதிலேயே நிலைத்திருப்பார்களாயின் அல்லாஹ்தான் அவர்களைச் சர்வத்திலும் இயக்கிவைப்பவனாய் இருக்கிறான் என்பதை நிதரிசனமாக உணர முடியும். மறுமை நாளில் அசேதனப் பொருட்களை அல்லாஹ் பேச வைப்பது போலவே அவர்களையும் பேச வைக்கிறான். அவர்களாகச் சுயமேஎதும் பேசாமல் அவன் பேசவைத்தால் பேசுகிறார்கள்; அவன் புறத்தால் கொடுக்கப்பட்டால் பெற்றுக்கொள்கிறார்கள்; மகிழ்ச்சியுறுமாறு செய்யப்படும்போது மகிழ்ச்சியுறுகிறார்கள். அவர்களது அகங்கள் அமரர்களின் அகங்களோடு சேர்ந்துபோய்விட்டன. "அல்லாஹ் அவர்களுக்கு ஏவியதில் ஒரு சிறிதும் மாறு செய்யார். தங்களுக்கிடப்பட்ட கட்டளைகளையே அவர்கள் செய்து வருவார்கள்'' என்று அல்லாஹ் திருகுர்ஆனில் கூறியுள்ளான். அமரர்களோடு சேர்ந்து அமரர்களைவிடவும் உயரிய அந்தஸ்தில் விருத்தி பெற்றவண்ணம் இருக்கிறார்கள்; அல்லாஹ்வை அறியும் ஞானப் பேரின்பம், அது பற்றிய அறிவு ஆகியவற்றால் அமரர்களைவிட மேலாகியுள்ளனர். இத்தன்மையில் அவர்களுக்கு அமரர்கள் தொண்டு புரிகிறார்கள்;

அவர்கள் மூலம் அமரர்கள் பெரும் பயனடைந்து அவர்களைப் பின்பற்றுகிறார்கள். ஏனெனில், அபூர்வ ஞான ஊற்றுக்கள் அவர்களது அகங்களில் பெருக்கெடுத்தோடும் வண்ணம் பொங்கிக்கொண்டிருக்கின்றன. அவர்களது அகங்கள் சர்வ நாசங்களை விட்டும் பாதுகாக்கப்பட்டுள்ளன. நீங்கள் வேண்டுமானால் அவர்கள் அவயவங்களின் பக்கம் வரலாம்; சரீரத்தின் பக்கம் வரலாம்; சாதாரண நப்ஸின் பக்கம் வரலாம்; ஆனால், அவர்களின் அகங்களின் பக்கம் நீங்கள் போக முடியாது. அவர்களின் ஸ்தலங்களுக்கு நீங்கள் செல்ல வேண்டுமென்ற ஆவலிருந்தால் இஸ்லாத்தைத் திடமுடன் செம்மைப்படுத்திக் கொள்ளுங்கள்; உள்ரங்க வெளிரங்கப் பாவங்களை யெல்லாம் விட்டுவிடுங்கள்; இதயத்திற்குச் சொஸ்தமளிக்கும் வண்ணம் சன்மார்க்கச் சட்டப் பிரகாரம் பேணி ஒழுகி வாருங்கள்; உலக வாழ்க்கையில் அனுமதிக்கப்பட்டவற்றிலும், ஹலாலானவற்றிலும்கூடப் பற்றற்ற தன்மையிலிருங்கள்; அல்லாஹ் அளித்த பாக்கியங்களைக் கொண்டு மகிழ்ந்து போதுமென்றிருங்கள்; பின்பு அப்பாக்கியங்களிலும்கூடப் பற்றற்ற தன்மையிலாகி இறைவனது சந்நிதான நெருக்க சமீபமே போதுமென்றிருங்கள். அவன் சந்நிதான சமீபங்கொண்டு நீங்கள் செம்மைப்பட்டுவிட்டீர்களானால், சர்வ பாக்கியங்களையும் அல்லாஹ் உங்கள்மீது சொரிந்தருள்வான்; இரண பாக்கிய வாசல்களையும் தன் அன்பு, கருணை, பேருபகாரம் முதலியவற்றின் வாசல்களையும் அல்லாஹ் உங்களுக்குத் திறந்தருள்வான். ஆரம்பத்தில் உலகம் உங்களுக்குத் தடுக்கப்பட்டிருந்தது; இப்போது உலகம் முழுவதும் உங்களுக்கு உரிமையாக்கப்பட்டுள்ளது. இம்மாதிரி உலகம் உரிமையோடு அளிக்கப்படுவது அவ்லியாக்கள், ஸித்தீக்கீன்களில் மிக மிக அபூர்வமான ஒரு சிலருக்கேதான். அத்தன்மையிலீடுபடினும் அல்லாஹ்வைப்பற்றிய தியானத்தில் சிறிதும் மாறுபடார்

என்று அல்லாஹ் அறிந்த பயபக்தி உள்ளவர்களுக்கே அவ்வாறு அளிக்கப்படும். பெரும்பான்மையாளர்களுக்கு உலகம் தடுக்கப்பட்டேயுள்ளது. அவர்கள் தன்னளவிலேயே பராக்காகித் தன்னிடமே நாட்டமுடையவர்களாய் இருக்க வேண்டுமென அல்லாஹ் நாடியுள்ளான். அவர்களுக்கு உலக சுபிட்சத்தைத் திறந்தளித்தால் அதிலேயே மூழ்கி இறைவனது தொண்டுகளை மறந்து அதிலேயே சிக்கிவிடக்கூடும். பெரும்பாலானவர்களின் தன்மை இவ்வாறானதாய் இருப்பதால்தான், உலகம் இவர்களுக்குத் தடுக்கப்பட்டிருந்தது; அபூர்வமாக உள்ள சிலருக்குத்தான் உலக வாழ்வு முற்றாய்த் திறந்து உரிமையாக்கப்பட்டது. அதில் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அம்சம் தனிப்பட விசேஷித்துள்ளது. உலகின் சகலமும் அவர்களுக்குப் பிரத்தியட்சமாகத் திறந்து கொடுக்கப்பட்டன. ஆனால், அவர்கள் இறைவனுக்கு வழிப்பட்டுச் சேவை செய்வதை விட்டு அவற்றில் ஆழ்ந்துவிடவில்லை. இரணவாசல்களெல்லாம் திறந்தருளப்பட்டன; ஆனால், சம்பூரணமான பற்றற்ற தன்மையிலிருந்து சிறிதும் அவர்கள் மாறவில்லை; எளிய வாழ்வை விட்டும் மாறவில்லை. பூலோகத்திலுள்ள பொக்கிஷங்களின் திறவுகோல்களெல்லாம் அவர்களுக்கு எடுத்துக் காட்டப்பட்டன; வேண்டவேவேண்டாம் என அவற்றை மறுத்து விட்டார்கள். "ஆண்டவனே, எளியவனாகவே என்னை வாழச் செய்! எளியவனாகவே என்னை மரணிக்கச் செய்! எளியவர்களின் கூட்டத்தில் சேர்த்தே என்னை எழுப்பியருள்" என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

பற்றற்றிருத்தல் நல்லதோர் வரப்பிரசாதமாகும். அவ்வாறில்லையெனில் தன்னிடமிருப்பதை யாரும் விட்டிருக்க முடியாது. அதன் மூலம், மூமின் பேராசையிலிருந்து விடுதலை பெற முடிகிறது. அள்ளிக்கட்டவேண்டும்

என்ற துடிதுடிப்போ, பதைபதைப்போ அவனுக்கிருப்ப தில்லை. பொருட்களை அவன் மனப்பூர்வமாகத் துறந்து பற்றற்றிருப்பின் தனக்கு ஏவப்பட்டதற்கிணங்கக் காரியம் புரிந்துகொண்டிருப்பான். ஏனெனில், தனக் குரியது கிடைக்கும் எங்கும் தப்பிப்போகாது என்று அவனுக்குத் தெரியும். எனவே, நிம்மதியோடிருப்பான். அவன் வேண்டாம் என வெறுத்தொதுக்கிய பொருட்கள் அவனைப் பின்தொடர்ந்தோடித் தம்மை ஏற்றுக்கொள்ளும்படி அவனிடம் அடிபணிந்து கெஞ்சும்.

அன்புடையவர்களே, ஹக்குத் தஆலாவின் சமூகத் தில் கொண்டுசேர்க்கும் பாதை (தரீக்கா) அளவில் உங் களுக்கு மிகுந்த நம்பிக்கையும், அதில் ஸ்திரப்படக்கூடிய முறையில் திடசங்கற்பமும் அத்தியாவசியமானவை யாகும். இப்பாதையில் நடந்து செல்லும் ஆரம்பத்தில் பணப்பையும், இறுதியில் ஈமான் நம்பிக்கையும் உங்களுக் குத் தேவையாகின்றன. ஆனால், மக்காவுக்குப் போகும் பாதையில் இவ்வாறன்று. மக்காவுக்குச் செல்லும் பாதை யில் ஈமானும், பணப்பையும் ஒருங்கே தேவைப்படுகின் றன என்று சிலர் கூறியுள்ளார்கள். நாம் குறிப்பிடுகிற இந்த (அகமியத்தான ஹக்களவில் செல்லும்) பிரயா ணப் பாதைக்கோ ஆரம்பநிலையில் பணப்பையும், அதற் கப்பால் திடசித்தத்துடன் கூடிய ஈமானும்தான் இன்றிய மையாத தேவைகளாகும்.

ஸுப்யானுத் தவ்ரீ (ரலீ) அவர்களைப் பற்றிக் கூறப் பட்டுள்ளது: அவர்கள் ஆரம்பக் கல்வி பயிலுங்கால், அவர்களின் இடுப்பில் ஒரு காசுப்பையைத் தொங்கவிட்டு ஐந்நூறு தீனார்களை அதில் வைத்து செலவு செய்து கொண்டிருந்தார்கள். படித்து வந்த அச்சமயத்தில் அடிக்கடி அதைத் தட்டிக் குலுக்கிக்கொண்டு, "நீ இல்லை யென்றால் நமக்கு யார்தான் தரப்போகிறார்கள்! எல்லோ

ரும் இறுகப் பூட்டித்தான் கொள்வார்கள்!'' என்று சொல்லிவந்தார்கள். ஆரம்பக் கல்வி பூர்த்தியாகி, அகத் தூய்மை யுண்டாக்கும் ஞானக் கல்விகளையும் அவர்கள் பெற்று ஹக்குத் தஆலாவையும் அறிந்ததற்கப்பால் தன்னிடமிருந்த மீதிப் பணங்காசுகள் அனைத்தையும் ஒரே நாளில் ஏழைகளுக்கு வாரி யீந்தார்கள். "வான மெல்லாம் இரும்பாகி மழை பொழியாவிடினும், பூமி யெல்லாம் கற்பாறைமயமாகி விளைச்சலற்றுப் போய்விட் டாலும்கூட அத்தன்மையில் இறைவனை மறந்து என் உணவுகாக நான் கவலைப்பட்டுப் பதறினால் நான் அவிசு வாசியாகவே (காபிராகவே) இருப்பேன்'' என்று அப் போது சொல்லலானார்கள்.

நீங்கள் உணவிற்காகப் பாடுபட்டு உழைக்கவேண்டி யதுதான். அதற்காகத் தொழில் துறை முதலிய கார ணங்களைக் கைக்கொண்டிருக்க வேண்டியதுதான். இவை யெல்லாம் உங்கள் நம்பிக்கை ஈமான் வலுவடைவதற் காகச் செய்துவரும் காரியங்கள். ஆனால், உங்கள் ஈமான் வலுப்பெற்றதற்கப்பால் காரண காரியங்களான ஸபபு களையெல்லாம் விடுத்துக் காரண கர்த்தாவாகிய - முஸப் பிபு ஆகிய - ஹக்குத் தஆலாவினளவில் பூரணமாகத் திரும்பிவிடுங்கள். நபிமார்கள் அனைவரும் அவர் களது ஆரம்ப நிலைமைகளில் வர்த்தகங்களும், கைத் தொழில்களும் புரிந்து பாடுபட்டு ஸபபுகளைக் கையாண் டார்கள். பின்னரோ ஹக்குத் தஆலாவின்மீது திடநம் பிக்கை (தவக்குல்) வைத்து அவனை நம்பினார்கள். ஆரம்ப நிலைமையில் ஷரீஅத்தைப் பேணிப் பாடுபடு வதையும், இறுதியில் ஹகீகத்தை உணர்ந்து தவக்குல் வைப்பதையும் அவர்கள் தங்களில் அமைத்துக் கொண் டார்கள்.

பேறு கெட்டவனே, பாடுபட்டுச் சம்பாதிப்பதை விடுத்துத் தவக்குல் என்ற பேரைச் சொல்லி ஜனங்களின்

பணங்காசுகளில் மோகங்கொண்டு அவர்கள் தருவார்கள் என்று கையைக் கட்டிக் கொண்டிருந்து விடாதே. ஜனங்கள் உன்னை நிந்தனை செய்து விரட்டுவார்கள்; அல்லாஹ் அமைத்த தக்தீருக்கு மாற்றமாக நடந்து அவன் அருட் கொடையை அனுபவியாதவனுமாவாய். மேலும், இறைவனின் வெறுப்புக்கும், கோபத்துக்கும் ஆளாகி, அவன் சந்நிதானத்தைவிட்டு நெடுந் தூரத்திலும் விலகிப்போய் விடுவாய். தன் கையால் பாடுபட்டு உண்ண முடியாதிருப்பதும், ஜனங்களிடம் வாயிழந்து அவர்கள் இல்லை என்று மறுத்து நிந்திப்பதும் அல்லாஹுத் தஆலா அளிக்கும் தண்டனையேதான். இம்மாதிரிச் சோதனை நபி ஸுலைமான் (அலை) அவர்களுக்கு உண்டாயிற்று. அவர்களை அரசாட்சியை விட்டு நீக்கி வைத்திருந்த சமயத்தில் அல்லாஹ் பலவிதமான சங்கடங்களைக் கொண்டு சோதித்தான். அவற்றில் ஒன்றுதான் ஜனங்களிடம் வாயிழந்து கேட்குமாறு செய்தது. அவர்கள் ஆட்சியின்போது கைத்தொழில்செய்து ஜீவனம் புரிந்து வந்தார்கள். ஹக்குத் தஆலா தன் சோதனைகளால் கஷ்டங் கொடுத்துப் பரீட்சிக்க விரும்பியபோது அரசாங்கத்தைவிட்டு வெளியேற்றி, ஜீவனத்துக்கு மிகவும் நெருக்கடியான சூழ்நிலையை யுண்டாக்கி ஜனங்களிடம் வாயிழந்து கேட்கும்படி செய்தான். இத்தகைய சோதனைக்குக் காரணம், அவர்கள் இல்லத்தில் ஒரு ஸ்திரீ நாற்பது நாட்களாக உருவ வழிபாடு செய்து வந்ததே. எனவே, அந்த நாற்பது தினங்களுக்குக் கணக்காக நாற்பது தினங்களாய் ஸுலைமான் (அலை) இக்கஷ்ட நிலையில் உழன்றார்கள்.

அல்லாஹ்வின் தாசர்களான மெய்யடியார்களுக்கு விமோசனம் எப்போது? அவர்களின் துயரமெல்லாம் நீங்கி மகிழ்ச்சி ஏற்படுவதும், அவர்களின் (பேரின்பம் என்ற) கர்ப்பச் சிசு பிரசவமாவதும், கண் குளிர்ந்த

சோபித வாழ்வுகிட்டுவதும், அவர்களின் சோதனை, பீடைகளெல்லாம் நீங்கி விமோசனமுண்டாவதும் அவர்கள் இறைவனைக் கண்ட பின்பன்றோ! அவர்களுக்கு இறை தரிசனம் இரு விதமாய்க் கிட்டும். அவர்களின் ஆத்மாக்களாலும், அகமியங்களாலும் உலகிலேயே இறைவனைத் தரிசிப்பது ஒருவகை; இஃது அபூர்வம். மறுமையில் இறைவனைத் தரிசிப்பது மறுவகை. இவ்வாறாக இறைவனைத் தரிசித்ததற்கப்பால்தான் அவர்களுக்குச் சர்வ மங்களமும் சுபிட்சமும் உண்டாகின்றன. அதுவரையில் அவர்களுக்குத் துன்பம், துயரம், கஷ்டம் இருந்து கொண்டே இருக்கும்.

[நப்ஸ்பற்றிப் பேசியதற்கப்பால் கௌதுல் அஃலம் (ரலி) கூறினார்கள்:]

அன்புடையவர்களே, இச்சைகளை விட்டும், இன்பங்களை விட்டும் நப்ஸை விலக்குங்கள். அசுத்தமான (நஜீஸான)தாய் இல்லாமல் பரிசுத்தமானதாய் உள்ள உணவையே உட்கொள்ளுங்கள். பரிசுத்தமானது என்றால் ஹலாலானது; அசுத்தமானது என்றால் ஹராமானது. ஹலாலான அந்த உணவையும் வரம்பு மீறாமல் கணக்காகவே எடுத்துக் கொள்ளுங்கள். அப்படிச் செய்து வந்தால்தான் நப்ஸ் கர்வங்கொள்ளாது; திமிரடையாது; தீய ஒழுக்கங் கொண்டதாயிராது.

இறைவனே, உன்னை அறியும் ஞானங்களை எங்களுக்குத் தந்தருள்வாயாக! ஆமீன்.

முப்பத்து மூன்றும் பிரசங்கம்

ஹிஜ்ரி 545 ஜமாத்துல் ஆகிர் மாதம் பிறை 23 ஞாயிற்றுக்கிழமை ஸுபுஹு நேரத்தில் ஹஜ்ரத் அவர்கள் நிகழ்த்தியது:

அல்லாஹ்வோடு நேசம் பூண்டு அவனைத் தரிசிப்பவன் சகலவற்றையும் கண்டுகொண்டவனாகிறான். தன் இதயத்தால் இறைவனைக் காண்பவன் தன் உள்ளத்தால் அவன் சந்நிதியுள் புகுந்தவனாகிறான். அல்லாஹ ஜல்ல ஜலாலுஹு என்றுமிருப்பவன். அவன் நம்மால் பார்க்கப்படவும் செய்கிறான். "நீங்கள் சூரியனையும் சந்திரனையும் இப்போது எப்படிக் காண்கிறீர்களோ அப்படியே இறைவனையும் சமீபத்திலேயே காணப்போகிறீர்கள்" என்று நமது நாயகம் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். அதாவது அவனைக் காண்பதில் நமக்கிடையில் நெருக்கடியோ போட்டியோ இருக்காது. அவனை இன்று அகக் கண்களால் காணமுடிகிறது. நாளை கியாம நாளில் புறக்கண்களாலும் பார்க்கலாம். ஆனால், அவனைப் பார்ப்பதன் மூலம் அவனுக்கு எதனையும் உவமை காட்ட முடியாது. அவன் சகலவற்றையும் கேட்பவனும் பார்ப்பவனுமாய் இருக்கிறான். தன்னிடம் நெருக்கமாய் இருப்பவர்களைக் கண்டு பூரிப்படைகிறான்; அவனை மறந்தவர்கள், பிறரிடம் உதவி தேடியவர்கள் போன்ற மற்றோரைக் கண்டு அவன் மனம் பூரிப்பதில்லை. மறுமையின் கசப்பு, அவனைத் தரிசிப்பவர்களுக்கு இனிப்பாக மாறிவிடுகிறது. அவர்கள் உலகத்திலே வறுமையாளர்கள்தாம்; ஆனால், தெய்வீகத் திருப்தியுள்ளவர்களாகவே வாழ்கிறார்கள். மேலும், இன்பம் பெறுவது அவர்களுக்கு நல்லதிர்ஷ்டமாகும். அவர்களின் வறுமையே அவர்களின் செல்வமாயும், அவர்களின் நோயே அவர்கள் இன்பமாயும்,

அவர்கள் இருமலே அவர்களின் தனிமையாயும் உள்ளன. அவர்கள் (ஜனங்களை விட்டு) ஒதுங்கியிருப்பதுதான் (இறைவனுடன்) நெருங்கியிருப்பதாகும்; கஷ்டப் படுவதே அவர்களின் சுகமாய் உள்ளது.

ஹே பொறுமையாளர்களே, திருப்தியாளர்களே, நப்ஸையே மரணிக்கச் செய்துகொண்டவர்களே, உங்க ளுக்குச் சுபச்சோபனம் உண்டாகட்டும். தோழர்களே, இறைவனுடைய தோழமையைப் பெறுங்கள். உங்களை யும் பிற சிருஷ்டிகளையும் இறைவன் நடத்தும் விதத்தை ஏற்று மனம் பொருந்திக் கொள்ளுங்கள். சிற்றறிவைக் கொண்ட நாம் மகத்தான அறிவுடையவனுன அவ னுடன் மோதிக்கொள்ளக் கூடாது. ஹக்குத் தஆலா சொல்கிருன், "சகல அறிவும் ஞானங்களும் அல்லாஹ் விடம் உள்ளன; நீங்கள் உங்களிடம் அத்தனை அறிவை யும் ஞானத்தையுமுடையவர்களாய் இல்லை" என்று. அவனுல் செய்யப்படும் காரியங்களைப் பொருத்தமில் லாதவை எனக் கூறுவது, நாம் அவனைவிடப் பெரிய அறிஞர்கள் என்று காட்டிக்கொள்வதாகும். உங்களுக் கருளப்பட்டுள்ள அறிவு உயரியதுதான். ஆனுல், அவன் முன் அதைத் தாழ்ந்ததாக்கி நில்லுங்கள். ஏனெ னில், அப்போதுதான் நீங்கள் அவனுடைய ஞானத்தின் பரிபூரணத்தைப் பெறுவீர்கள். அவனுடைய ஆட்டிப் படைக்கும் சக்தியைக் கண்டு மனம் குழம்பிவிடாதீர்கள்; இது அப்படித்தான், இப்படித்தான என்று தவருன முடிவுகளுக்கு வராதீர்கள்; அபிப்பிராயம் கூருதீர்கள். அவனுடைய அறிவைப்பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். அப்படியானுல்தான் அவனுடைய அறிவின் அந்தரங்க ரகசியத்தை உணர முடியும். அப்படி உணரும்போது நீங்கள் பிரமிப்படைவீர்கள். முதல் படித்தரத்தில் உங்களுக்கு ஏற்படும் இந்த வியப்பு நீங்கள் இரண்டா வது படித்தரத்தை அடைவதற்கு அவசியமான

ஞானத்தை அளிக்கும். இறுதியில் ஞானத்தின் மூன்றுவது படியைச் சென்றடைவீர்கள். முதலில் நாட்டம் வேண்டும்; அதன் மூலமே நாடப்பட்டதை அடையலாம். கேளுங்கள்; கேட்டு அதன்படி நடவுங்கள். நான் உங்களுடைய கயிற்றை உறுதியானதாக்கி, உங்களைப் பலமுள்ளவர்களாகவும், பலனை அனுபவிப்பவர்களாகவும் ஆக்குவதற்காக உங்களுடைய தளர்ந்துபோன கயிற்றுக்கு முறுக்கேற்றுகிறேன்; அதிலுள்ள அறுபட்டிருக்கும் இழைகளை ஒட்டி இணைக்கிறேன். எனக்கு உங்கள் நலனைப்பற்றிய எண்ணமன்றி வேறொன்றுமில்லை. உங்கள் நலனைப்பற்றிய கவலையுடையவனாகவே இருக்கிறேன். நான் இறைவனின் ஒரு பறவை; நான் கீத மிசைப்பதிடையிலும் (ஞான) மணிகளைப் பொறுக்குகிறேன். உங்களுக்கு இவ்வுலகச் சிந்தனைகள் ஏன்? அவன் தான் உங்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளானே !

ஹே எறியப்பட்ட கற்களாயுள்ளவர்களே, உச்சாணிக்கிளையில் அமர்ந்திருப்பவர்களே, பாரத்தால் அழுந்திக்கிடப்பவர்களே, நப்ஸ் எனும் சிறையுள் அடையுண்டு கிடப்பவர்களே, உலக ஆசாபாச பந்தங்களில் சிக்கிக் கிடப்பவர்களே, இப்போது உங்கள் இம்மையும் போய் விட்டது; மறுமையும் போய்விட்டது. இறைவனே, இவர்களுக்கும் எனக்கும் உன்னுடைய கிருபாகடாக்ஷத்தை அருளி ரக்ஷிப்பாயாக!

அடுத்த வெளியீடு

கஷ்புல் கஸ்ஸாலீ

மௌலவி எம். முகம்மது ஹஸன் ஆலிம்,

ஆர். பி. எம். கனி,

எழுதியது.

ஜமாலுல் இஸ்லாம் இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) அவர்களைப்பற்றிய ரசமான வாழ்க்கைச் சரிதையும், அவர்களின் நூற்களைப்பற்றிய விபரங்களும், அவர்கள் காட்டும் ஆத்மஞானப் பாதை பற்றிய விளக்கமும் அடங்கியது. முஸ்லிம்களிடையுள்ள பல்வேறு குறைபாடுகளை இமாமவர்கள் இடித்துக்காட்டி, உபமானங்களோடு உள்ள முருக்கும் வகையில் விளக்கிவைத்துப் பாதுகாப்புப் பெற்றவர்களாவதற்கான வழியைத் துலக்கித் தருகிறார்கள் "கஷ்புல் கஸ்ஸாலீ" என்ற இந்நூலில். அரபி மூலத்திலிருந்து சுவை குன்றாது தர்ஜுமாச் செய்யப் பட்டுள்ள இந்நூல் இன்று அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்படுவதாகும். சுமார் **225 பக்கங்கள்** கொண்டது.

இதைத் தொடர்ந்து, **"பாரஸீகக் கவிஞர்கள்"** என்ற அரிய நூல் (இன்ஷா அல்லாஹ்) விரைவில் வெளிவரவிருப்பதை அந்நூலுக்காக எழுதிக் கேட்டு வரும் நூற்றுக்கணக்கான அன்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆர். பி. எம். கனி, பி. ஏ., பி. எல்.,

128, மூர் தெரு, சென்னை-1.